


# யாழ் திருச்சபை வரலாறு

# யாழ். திருச்சபை வரலாறு

சுவாமி J. E. ஜெயசீலன்

வளன் ஆச்சிரமம்,
47, 6ம் குறுக்குத் தெரு, (102, பிரதான வீதி)
யாழ்ப்பாணம்.

*Imprimatur :*

✠ Thomas Soundranayagam
Bishop of Jaffna.

27-07-1997
Bishop's House
Jaffna.

## உள்ளே ..


பக்கம்

- ஆசிரியருரை iii
- அணிந்துரை iv
- நுழைவாயில் 1
- Iம் பாகம் ஆதிகாலம்
  - கிறிஸ்தவத்தின் நிழல்கள் 3
  - ஆயிரம் மௌன ஆண்டுகள் 10
- IIம் பாகம் – போர்த்துக்கேயர் காலம்
  - ஒரு நோக்கு 14
  - மிசனரிகள் 17
  - மனந் திரும்புதல் 19
  - வேதசாட்சிகள் 21
  - நான்கு வகைக் கிறிஸ்தவர்கள் 24
  - வாளும் மனமாற்றமும் 30
  - தாந்தரிகமும் மரியாளும் 36
  - பண்பாட்டு மயமாக்கல் 42
- IIIம் பாகம் ஒல்லாந்தர் காலம்
  - ஒரு கண்ணோட்டம் 49
  - யோசவ்வாஸ் முனிவர் 53
  - சாங்கோபாங்க சுவாமிகள் 64
  - வேத கலாபனையும் அறவழியும் 78
- IVம் பாகம் ஆங்கிலேயர் காலம்
  - ஒரு பார்வை 95
  - மத சுதந்திரமும் பிரச்சனைகளும் 97
  - வசந்தகாலம் I 110
  - வசந்தகாலம் II 121
- அடிக்குறிப்புகள் 162

# ஆசிரியருரை....

1988 செப்ரம்பரில் சுவீடன் நாட்டின் புகழ்மிக்க "உப்சலா" பல்கலைக்கழகத்தில் "யாழ் திருச்சபை வரலாறு" பற்றி உரையாற்ற அழைக்கப்பட்டேன். எனது உரை அந்நாட்டின் ஏடு ஒன்றில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

இவ்வுரையை, 1995ம் ஆண்டு. சுருக்கமாக. 3ம் மிலேனிய ஆயத்த உரையின் 2ம் பகுதியாக யாழ். ஆயர் இல்லத்தில். ஆற்றிய போது, நூல்வடிவத் தேவை உணரப்பட்டதன் முடிவே இவ் வெளியீடு ஆகும்.

1996 ஜனவரியில் யாழ் நகர் வெறிச்சோடி இருந்தவேளை. நானும் ஆசிரியர் திரு. பிலிப் நேரியும் ஒருங்கமர்ந்து. தமிழில இவ் வரலாற்றை எழுதினோம். சகோதரி J. A ஜஸ்மின் அவர்களது உதவியும் கிடைத்தது

1996 மத்தியில் மக்கள் மீண்டும் நகர் திரும்பிய பின், இந்நூலை சீர்திருத்தி, ஒழுங்கமைத்து, புதிய பிரதியை உருவாக்கிய திரு. திருமதி சாமுவேல் பெனடிக்ற் அவர்களது உதவி, ஒப்புநோக்கி, அச்சேற்றி, நூல் வெளிவருமளவும் நீண்டது.

தொடக்கம் தொட்டு, இறுதிவரை அச்சுக்கோர்த்தவர் S. ஷண்முகதாஸ் குருக்கள். மேல் அட்டையை வடிவமைத்து. நூலை அழகுற உருவாக்கிய வர்கள் அன்னை அச்சக உரிமையாளர் திரு. S. A, அழகராஜாவும் உடன் உழைப்பாளிகளும்.

இந் நூல் முழுவதையும் படித்துப் பார்த்து ஆலோசனைகள் அளித்த வர், அருள்திரு G. பிலேந்திரன் அடிகள். தமது பல ஆய்வு அலுவல்கள் மத்தியில், இந்நூலை ஆய்வு செய்து அணிந்துரை வழங்கியவர், யாழ் வளாக வரலாற்றுத்துறை முதுநிலை விரிவுரையாளர் திரு. செ. கிருஷ்ணராஜா அவர்கள். அச்சிட அனுமதி தந்தவர், யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

எல்லோருக்கும நன்றி.

இந் நூலை எம் ஆச்சிரமத்தில் துணை நின்று, கிறிஸ்துவின் தியாகிகளாய் வாழ்ந்து, தம் இளமையிலேயே இரத்த சாட்சிகளாகிய அறவழி வீரர் A. G மனோகரனுக்கும், ஏழைகளின் அன்பன் A. விமலதாசனுக்கும் அர்ப்பணிக்கின்றேன்,

15-08-1997
வளன் ஆச்சிரமம்
47, 6ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

யேசுக்கிறிஸ்து ஸ்துதிக்க
சுவாமி J. E. ஜெயசீலன்

# அணிந்துரை

யாழ். திருச்சபை வரலாறு என்ற இந்நூல், முதன் முதலாக தமிழ்மொழியில் வெளியிடப்படும் மிகத் தெளிவான விரிவான கத்தோலிகக வரலாற்று நூல் என்ற வகையில் இது பல் நிலைப் பட்ட முக்கியத்துவத்தினைக் கொண்டுள்ளது. இந்நூலின் பிரதான பொருளமைதி கத்தோலிக்க மதத்தின் ஈழத்துச் செல்வாக்கு நிலையினையும், அதனால் சமூகத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களையும் வரலாற்று ரீதியாக ஆவணப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஈழத்துக் கரையோர மாகாணங்களில் சிறப்பாக வட இலங்கையில் கத்தோலிக்க மதம் வேருன்றி – வளர்ச்சி பெற்ற காலத்திலிருந்து இற்றைவரைக்கும் அதன் பரிணாம வளர்ச்சி நிலைகளை ஆவணச்சான்றுகளுடன் இந்நூலில் எடுத்துக்காட்ட முயன்றுள்ளமையானது கிறீஸதவ நாகரீகத்தினை கற்கின்ற மாணவர்களுக்கு மட்டுமன்றி, நவீனகால இலங்கை வரலாற்றைக் கற்கின்ற மாணவர்களுக்கும், பிற ஆய்வாளர்கட்கும் பெரிதும் பயன்படக்கூடிய ஒரு முயற்சியாக அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பின்பு ஆங்கிலேயர் ஆகிய மேலைத்தேயத்தவர்களால் ஏற்படுத்தப்பட்ட மத – நிர்வாக நிறுவனங்களின் செல்வாக்கு நிலை, அவற்றின் பின்னணியில் தத்தம் மதக்கோட்பாடுகளை அவர்கள் முறையே எவ்வாறு, எவ்வெவ்வழிகளைக் கையாண்டு முன்னெடுத்துச் சென்றார்கள், சுதேசிகள் எவ்வாறு ஒழுகினார்கள் என்றெல்லாம் இருமுனைப்பட்ட நிலைகளில் நின்று. அறிக்கைகளையும் ஆவணங்களையும் அடிப்படையாகக்கொண்டு இந்நூலின் ஆசிரியர் விளக்கியிருப்பது இந்நூலை வெறுமனே ஒரு மதத்தின் வரலாறாக மட்டுமே சுட்டி நிற்காமல் ஒரு வரலாற்று ஆவணத் தொகுப்பாகவுமே கொள்ள வைக்கிறது. சிறப்பாக போர்த்துக்கீசர்கள், ஒல்லாந்தர்கள் மதநடவடிக்கைகளை யாழ்ப்பாணத்துடன் தொடர்புபடுத்தி ஆராய்வோருக்கு இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இவற்றிற்கும் மேலாக, இந்நூல் கொண்டுள்ள தனித்துவமான சிறப்பியல்பு ஒன்று கத்தோலிக்க மதமானது சுதேசிய வழக்காறுகளையும். வழிபாடுகளையும் உள்வாங்கிய வகையில் – சுதேச மொழிகள் – கலாச்சார சூழ்நிலைகளை விளங்கிக் கொண்ட வகையில், யாழ்ப்பாணத்தில் செல்வாக்குச் செலுத்திச் சென்றிருப்பதனை ஆசிரியர் மிகப் பொருத்தமாக எடுத்து விளங்க வைத்திருப்பது ஆகும். அவ்வகையில் தாந்தரிய/க மரபுகளுடன கத்தோலிக்க மதம் இணைக்கப்பட்டு வளர்ச்சி பெற்றுச் சென்றிருப்பத்னை ஆசிரியர் இந்நூலில் சுட்டிக்காட்டியுள்ளமை பிரதானமாகும். இது வரையில் கண்ணோக்

கப்படாத இவ்வம்சம் இப்பிராந்திய தாந்தரிய/க மரபுகளுடன்
பிணைக்கப்பட்டு கத்தோலிக்க மாதா (அல்லது) தேவமாதா வழி
பாட்டு முறைமையாக (மடுமாதா) வலுப்பெற்று – வளர்ச்சியடைந்து
சென்றமையை ஆசிரியர் ஆய்வுநோக்கில் எடுத்துக்கூறியிருப்பது
வரவேற்பிற்குரியதாகிறது.

தென்னாசிய நாடுகளின் வரலாற்றில் கிறிஸ்தவ சகாப்தத்தின்
முதல் நூற்றாண்டுகளிலிருந்தே திருப்புமுனையைக் குறிக்கின்ற சமூக–
சமய பொருளாதார மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. பௌத்தம்
தத்தில் மகாயானக் கோட்பாடுகள் வன்மை பெற்று புதிய சமூக
உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்யவாரம்பித்தமையைக் காண்கி
றோம். தென்னாட்டு இந்து – பக்தி முறைமையில் புதிய தோற்றப்
பாடு ஆரம்பிக்கப்பட்டு சமய – தத்துவக் கோட்பாட்டு வளர்ச்சி
அடையத்தொடங்கிய காலகட்டம் இது. 'லிங்காயத்' முறையில் புதிய
சமய சமூகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்ட காலகட்டம் இது.
விஷ்ணுவின் அலங்கார விக்கிரஹக்கால மரபின் பின்னணியில் கிரேக்க–
ரோமானிய கலைமரபுகள் செல்வாக்குச் செலுத்திய பிரதானமான
பருவம் இது. இக்கால சமூக – சமய பின்னணியிலேயே வாணிப
கணங்களினூடாக (Merchent Guilds) கிறிஸ்தவ சமயம் அறிமுக
மான நிகழ்வு நடைபெற்றது. இதனை இப்பிராந்தியத்தில் கிடைத்த
தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. இலங்கையில்
அநுராதபுரத்திலுள்ள நெஸ்ரோறிய கிறிஸ்தவ சிலுவையின் படைப்புச்
சிற்பம், கந்தரோடையில் கிடைத்த அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி
நாணய மொன்றில் (Punch - Marked Silver Coin) வாசகத்துடன்
பொறிக்கப்பட்டுள்ள நெஸ்ரோறிய சிலுவையின் வடிவம் ஆகியன
மேலே கூறப்பட்ட கருத்தினை உறுதி செய்துள்ளன. இந்நாணயத்தின்
கால வரையறை கி. பி. 4ம் நூற்றாண்டிற்கும் முற்பட்டது என்ற
நிலையில் இப்பிராந்தியத்திற்கு கிறிஸ்தவ வணிகக் கூட்டுக்கள் கி.பி.
நான்காம் நூற்றாண்டிற்கும் முன்னரேயே வந்து வாணிக நடவடிக்கை
களில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. எனவே
யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கிறிஸ்தவ வாணிகக் கூட்டுக்களினூடாக
கத்தோலிக்க மதம் தனது தொடக்க பண்பாட்டுச் செல்வாக்கினை
செலுத்த முற்பட்டிருக்க வேண்டும் எனக்கொள்ளலாம். இது
இலங்கைக்குப் போர்த்துக்கீசர் வருகை தருவதற்கு முன்னர் நிகழ்ந்த
கிறிஸ்தவ வாணிப முயற்சிகளின் பின்னணியில் உருவான பண்பாட்டுப்
பகைப்புலத்தினை கோடிட்டுக்காட்ட உதவும் வரலாற்று விளக்க
மாக அமையும். அநுராதபுர மன்னனான தாதுசேனன் அல்லது காசி
யப்பனுடன் கிறிஸ்தவ மதகுரு ஒருவரின் தொடர்பு இருந்திருக்க
வேண்டும் என்ற பரணவித்தானாவின் கருத்தும் இவ்வழியே உறுதிப்
படுத்தப்படுவதற்கும் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன எனலாம்.

இந்து சமுத்திர வர்த்தக நடவடிக்கைகளில் கிரேக்க உரோமானியருடன் இணைந்து சீரிய வர்த்தகர்களும் ஈடுபட்டிருந்தனர் என்பதையே கந்தரோடையில் கிடைத்த நெஸ்ரோறிய கிறிஸ்தவ சிலுவை பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயம் உறுதிப்படுத்தியுள்ளது. அந் நாணயத்தில் பொறிக்கப்பட்ட ''மாகிரேக்க காஸுஸ'' என்ற வாசகத்தினை கலாநிதி பொ. ரகுபதி மிகவும் ஆணித்தரமாக அடையாளம் கண்டு வாசித்து எமக்கு உதவியுள்ளமை மேலும் எமது கருத்தினை ருசுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. அநுராதபுரத்துடனும் இவ்வர்த்தகர்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதனை தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்தியுள்ளன. அவ்வாறாயின், சங்ககாலத் தமிழக மரபில் வந்த வாணிக நடைமுறைகளுடனும் சீரிய வர்த்தகர்கள் தொடர்பு கொண்டிருந்திருப்பார்கள் என்பது தெளிவாகின்றது. அப்பின்னணியில் கிறிஸ்தவ மதச் செல்வாக்கின் வெளிப்பாட்டினை சங்ககால வாணிப நகரங்களில் கண்டு கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படுமா என இனி ஆராய வேண்டும்.

ரோமானிய வணிகர்களுக்கு ஓர் அரிக்கமேடு போல் சீரிய வியாபாரிகளுக்கும் ஒரு மையம் இருந்திருக்குமோ? எதிர்காலத் தொல்லியல் ஆய்வுகளினூடேயே அக்கருத்து துலக்கம் பெறவேண்டும். கந்தரோடை அத்தகைய மையங்களுள் ஒன்றாகுமானால், ஈழத்துக் கத்தோலிக்க மத வரலாற்றின் தொன்மையும் வரலாறும் நிச்சயமாக மாற்றமடையும் என நம்பலாம். ஈழத்திற்கு கண்ணகையம்மன் வழிபாட்டு மரபின் அறிமுகம், தேவமாதா அல்லது சிலுவை மாதா வழிபாட்டு முறையின் அறிமுகம் மஹாயானக் கோட்பாட்டிற்குரிய 'அவலோக' ஈஸ்வரி அல்லது ஈஸ்வரர் போன்ற வழிபாட்டிற்குரிய, தாய்ப்படிமங்களின் அறிமுகம் ஆகியன, கிறிஸ்தவ சகாப்தத்தின் முதல் நான்கு நூற்றாண்டுகளுக்குள் நிகழ்ந்த அம்சங்களாகும். இவையனைத்தும் தாந்தரிய/க மரபின் செல்வாக்கு நிலையையே வெளிப்படுத்தியுள்ளன. 'மடுமாதா' வழிபாட்டு மரபின் தொன்மையும், பின்னணியும் இப்பின்னணியிலேயே ஆசிரியரால் நோக்கப்பட்டுள்ளமை, பாராட்டிற்குரியதே.

எனவே எனது நண்பரும் பல்கலைக்கழக கற்கை நெறிக்கால சகபாடியுமான சுவாமி ஜெயசீலன் அவர்களின் யாழ். திருச்சபை வரலாறு என்ற இந்நூல் பல்துறைப்பட்ட முக்கியத்துவத்தினை ஒருங்கே கொண்டுள்ளது. என்பதில் சந்தேகம் எழமுடியாது. ஒருபுறத்தே கத்தோலிக்க மதத்தின் கோட்பாடுகள் காலத்தினூடே இலங்கையின் கரையோர மாகாணங்களிலும், வன்னிப்பரப்பிலும் பரந்து கொண்ட வரலாறும், அதன் பின்னணியில் எழுச்சி பெற்ற குருத்துவ முறையின் பங்கும் – பணியும் பற்றியும் தமிழ்ச் சமூகம் எவ்வாறு – எவ்வெவ்வழிகளில் இம் மதத்துடன் தமது வாழ்வினை

இணைத்து வளர்ச்சி பெற்றுக்கொண்டது என்பது பற்றியும் அவர் ஆராய்ந்திருப்பது அவரது வரலாற்று அணுகுமுறையின் பயிற்சியையே தெளிவாக வெளிப்படுத்துகின்றது எனலாம். போர்த்துக்கீசர். ஒல்லாந்தர், ஆங்கிலேயர், ஆட்சிக்கால இலங்கையின் வரலாற்றுப் போக்கில் கத்தோலிக்க மதத்தின் செழிப்பு, அறுவடை. வசந்த காலம் என்பன குருத்துவ முறையின் பங்கு – பணிகளினூடாக இந் நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள முறை, அதனை ஒரு 'வரலாற்று நூல்' எனக்கொள்ள வைக்கின்றது. இது இலங்கை வரலாற்றைக் கற்கின்ற மாணவர்களுக்கும் ஆய்வாளருக்கும் சிறப்பாக ஒப்பீட்டியலில் மதவரலாற்றைக் கற்போருக்கும் மிகவும் பயன்தரக்கூடிய ஓர் ஆவணக்களஞ்சியமாக அமையும் எனக் குறிப்பிடலாம்.

ஆசிரியர் தொடர்ந்தும் விரிவான அடிப்படையில் ''தமிழர் வரலாறு'' துலங்கும் வண்ணம் ஆவணங்களினூடான ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டு அவற்றை நூல்வடிவில் வெளிக்கொணரவேண்டும் எனக்கேட்டுக் கொள்வதுடன் எமது 'இறை' அதற்கான வழிகாட்டுதலையும் அவருக்கு வழங்கி ஆசிர்வதிப்பார் என மன்றாடி இவ் வணிந்துரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி

30-07-1997
வரலாற்றுத்துறை.
யாழ். வளாகம்.

செ. கிருஷ்ணராஜா
முதுநிலை விரிவுரையாளர்

# வேண்டுதல்

ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே, இறைவனின் திருமகனே, எங்கள் ஆயனும், சகோதரனும், வழிகாட்டியும், எதிர்பார்ப்பும் நீரே.

நற்செய்தியின் தாரகையான இறை அன்னையுடன் சேர்ந்து, அன்பிலும் நம்பிக்கையிலும் உம் ஆவியை இரந்து வேண்டுகிறோம். இப்புதிய நற்செய்திப் பணிக்கு, அழைக்கப்பட்டிருக்கும் நாம் எல்லோரும் குறிப்பாக, பொதுநிலையினர். இளைஞர், யுவதிகளாகிய எம்மை முழுவதும் அர்ப்பணிக்க அருள்தாரும்.

உம்மைப்புகழ்ந்து பாடி, தொடரும் விசுவாச வாழ்வில் வளரவும் உம்மை அறியாத மக்களுக்கு, நற்செய்தியை அறிவிக்கவும், முழுமையான மானிட முன்னேற்றத்திற்கு பங்களிக்கவும், ஏழைகள் பக்கமாக சார்ந்து நின்று, வாழ்விற்கும் குடும்பத்திற்தும் கிறிஸ்துவின் நற்செய்தித் தளத்திலிருந்து உழைக்கவும் புதிய வல்லமையைத் தாரும்'

மண்மயமாக்கப்பட்ட நற்செய்தியுடன், எம் மக்களின் மானிட குழுமங்களுக்குள், நவீன ஏழ்மைச் சாதனங்களூடாக உட்புக உதவியருளும். ஆமென்.



# நூழைவாயில்

'யாழ். திருச்சபை வரலாறு' என்ற நூல் திரியுக வரவேற்புக்கு (2000 ம் ஆண்டு) ஆயத்தமாக வழங்கப்பட்ட (1994 — 96) மூன்று உரைகளில் 2 ம் உரையிலிருந்து பிறந்ததாகும். தலத்திருச்சபையின் வரலாற்றை, திருமறையினர் நன்கு அறிந்து ஆய்வுசெய்து - சிந்தித்துச் செயலாற்ற ஒரு மணித்தியால சொற்பொழிவு போதாதென்பதால், நூல் வடிவத் தேவை உணரப்பட்டது.

நம் சொந்த மண்ணில் திருமறை வித்திடப்பட்டு வேரூன்றி விருட்சமாகிய கடந்த காலப் பாதையை பின்னோக்கிப்பார்த்து, ஆண்டவனால் அளிக்கப்பட்ட அருள்வளங்கட்கு நன்றியும், எம் குறைபாடுகட்கு மன்னிப்பும் கேட்டலின் அவசியத்தை பாப்பிறை தமது '' 3 ம் மிலேனிய வருகை '' என்ற சுற்றுமடலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனாலேயே இது, நம் திருமறையின் நிகழ்வுகள், அமைப்புகள், அதிகாரிகளின் வரலாறுகளாக எழுதப்படாமல், முழுமையான மறை நிகழ்வுகளின் நிறைவான தொகுப்பாக இராமல், சில அடிப்படை உண்மைகளைக் கணிக்க உதவும் தெரிந்தெடுக்கப்பட்ட சில நிகழ்வுகளின் நிரைப்படுத்தலாகவே அமைகின்றது. மேல்மட்ட, பங்குமட்ட பதிவேட்டுக் குறிப்புகளில் மட்டும் முற்றாக சார்ந்திராது, சிறுபிரசுரங்கள், நினைவுக் குறிப்புகள், மறைந்துகொண்டிருக்கும் வரலாற்று ஞாபகங்கள், பாரம்பரிய நினைவலைகள். எங்கெங்கு காணப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் சீர்தூக்கி சமன்செய்து, பரவலான தேசிய, சமய, சமூக அரசியல் பாரம்பரிய பின்னணியில் ஆராயப்படுகிறது,

யாழ்ப்பாணம் என்றால் யாழ் மறைமாவட்டத்தைக் குறிக்கும். புவியியல் எல்லைகள் காலத்துக்குக் காலம் மாறி வந்ததனால் வரலாற்று விஸ்தரிப்பு, கட்டம் கட்டமாக மாறுதல், ஒரு தேவை ஆயிற்று. குழுக்கள் மட்ட பாரம்பரிய அதிகார பார்வைக்கு இருக்கும் தெளிவு, ஒடுக்கம், இதற்கு இல்லை.

இருப்பினும் இறை அரசென்னும் விரிந்த பார்வைக்குள் வைத்து நோக்கும் தன்மையில் மலரப்போகும் திரியுகத்திற்கு தேவையான ஓர் புதிய தரிசனத்தை எம்முன் வைக்க இந்நூலும் ஓர் அளவு உதவும் என நம்புகிறோம்.

யாழ். திருச்சபை வரலாறு 5 பாகங்களைக் கொண்டது,

1. ஆதிகாலம்.
2. போர்த்துக்கேயர் காலம்.
3. ஒல்லாந்தர் காலம்.
4. ஆங்கிலேயர் காலம்.
5. நவீன காலம்.

முதல் நான்கு பகுதிகளும் இப்போது நூல் வடிவில் உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. நவீன காலம் சிறிது தாமதித்தே வெளிவரும்.

# யாழ் திருச்சபை வரலாறு

## I - ம் பாகம்

## ஆதிகாலம்

## கிறிஸ்தவத்தின் நிழல்கள்

மிகத் தெளிவான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்காவிடினும், கிடைக்கும் சில சான்றுகளிலிருந்து முதலாம் சகாப்தத்தின் முதல் 500 ஆண்டுகளில் யூத, சீரிய கிரேக்க, ரோம வர்த்தகக் குழுமங்களினூடாக கிறிஸ்து, இம்மண்ணில் கால்கோள் கொண்டுவிட்டார் என்பதனை நிருபிப்பதற்கு புவியியல் இலக்கிய அகழ்வாராய்ச்சி சான்றுகள் சில உள எனலாம். இதுபற்றிப் பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் குறிப்பிடும்பொழுது;-

''போர்த்துக்கீசருடைய வருகையுடனேயே கிறிஸ்தவம் இந் நாட்டின் ஒரு நிலைபெற்ற மதமாகியது என்பதை எல்லோரும் அறிவர். ஆனால் போத்துக்கீசரின் வருகைக்கு முன்னேயே நம் நாட்டில் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள் என்பது பலருக்குத் தெரியாது. இதற்குச் சான்றாக இலக்கிய ஆதாரமும் தொல்பொருள் ஆதாரமும் எமக்குக் கிடைத்துள்ளது.''

தென் இந்தியாவிலே தோமாஸ் முனிவருடைய மத பிரசார நடவடிக்கைகளைப் பற்றிக் கூறப்பட்டு வரும் கதைகளைப் பல

கிறிஸ்தவர்கள் அறிந்திருப்பர். கிறிஸ்துவுக்கு சிறிது பிற்பட்ட நூற்றாண்டுகளிலே வர்த்தகர்கள் மூலமாகக் கிறிஸ்தவம் இந்தியாவை அடைந்திருந்தது என்பது அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஒரு கருத்தாகும். கி. பி. 1ம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் தோமாஸ் முனிவர் கேரளத்துக்கு, அதாவது பழைய சேர நாட்டிற்குச் சென்று கிறிஸ்தவத்தைப் போதித்து ஏழு (7) தேவாலயங்களை நிறுவினார் என்பதாக கிறிஸ்தவ மரபுக் கதைகள் கூறுகின்றன. கி. பி. 1ம் 2ம் நூற்றாண்டுகளிலே சேரநாட்டுக் கரையோரத்தில் கிரேக்க, உரோம வர்த்தகர்கள் அடிக்கடி வந்து வியாபாரம் செய்வதற்கு வசதியளித்த பிரசித்தி பெற்ற பழந்துறைமுகமான 'முசலி' என்ற துறை இருந்தது. அங்கு நடைபெற்ற பெரு வர்த்தகத்தின் மூலமாக மேலைத் தேசத்துடன் ஏற்பட்ட பிணைப்பின் காரணமாக கிறிஸ்தவம் தென் இந்தியாவிற்கும் அறிமுகமாகியது என்று கூறலாம். 1

மேலைத் தேச வர்த்தகர்கள் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளிலே இலங்கை நாட்டிற்கும் வந்து சென்றனர். பிற நாட்டு வணிகர் சந்தித்துச் சென்ற யாழ்ப்பாண வணிகநகர்களான, கந்தரோடை, காரைநகர், ஆனைக்கோட்டை, நவாலி, முதலியன ஆதிகாலத்திலே இங்கு வருகை தந்த வர்த்தகர்கள் மூலமாக கிறிஸ்தவமும் இந்நாட்டில் அறியப்பட்டிருந்தால் அதில் எதுவித ஆச்சரியமுமில்லை. 2 இதன் பின்னணியிலேதான் யாழ்ப்பாணத்தையும், மன்னாரையும் புனித தோமையாருடன் தொடர்புபடுத்தும் பின்வரும் இலக்கியக் குறிப்புக்கள் கவனிக்கப்படல் வேண்டும்.

'சிரியாக் மொழியில் எழுதப்பட்ட 2ம் நூற்றாண்டு ஏடு 'அப்போஸ்தலர் படிப்பினை' (The Doctrine of the Apostles) என்ற நூலாகும். அதில் இந்தியாவும், அதனை அடுத்த நாடுகளும், தூர கடல் பரப்புக்களும் அப்போஸ்தலரின் குருத்துவ கருத்தினை, யுடாஸ் தோமசிடம் இருந்து பெற்றனர் என்றுளது. 3ம் நூற்றாண்டில் 'புனித தோமையாரின் செயல்கள்' என்ற நூலில் வட இந்தியாவின் அரசனான கொண்ட பொரஸ் குறிப்பிடப்படுகின்றான். இம் மன்னன் புனித தோமையாரால் கிறிஸ்தவனாக்கப்பட்டான். இம் மன்னனுடைய முத்திரை பொறிக்கப்பட்ட பொன் நாணயங்கள் கி. பி. 1857ல் கண்டு பிடிக்கப்பட்டமையும் இம் மன்னனின், காலம் கி. பி. 1ம் நூற்றாண்டு என்பதனையும் பேராசிரியர் பீள்ட் குறிப்பிடுகின்றார். 3

4ம் நூற்றாண்டில் திருச்சபையின் பிதாப்பிதாக்கள் 'புனித தோமையாரை' இந்தியாவின் அப்போஸ்தலர். எனவே குறிப்பிடு

கின்றனர். அதுமட்டுமன்றி பல வேதசாட்சிகளின் பட்டியல்கள் புனித தோமையார் இந்தியாவில், மரித்தார் என ஐயத்திற்கிடமின்றி எடுத்துரைக்கின்றன. இவர்களில் புனிதர் எபிரேயிம் நசியான்சன், கிறகோரியார், அம்புறோசியார், ஜெறோம் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். [4]

''சொக்கோத்தராதீவு பழமை வாய்ந்த கிறிஸ்தவ சமூகமாக இருந்து வருகின்றது. எனவே சொக்கோத்தராவின் ஊடாக புனித தோமையார் இந்தியாவை வந்தடைந்தமைக்கு எதுவித தடையோ தடங்கல்களோ ஏற்பட்டிருக்க காரணங்கள் இருந்திட சாத்தியமில்லை. அத்தோடு மட்டுமல்லாமல் தென் இந்தியாவில் புனித தோமையார் வேதசாட்சியாக மரித்தார் என்பதே ஒரு அசைக்க முடியாத சான்று என பேராசிரியர் வின்சன்ற் சிமித் குறிப்பிடுகின்றார். [5] பிரான்சிஸ் சவேரியாரும் சொக்கோத்தரா வழியாகவே இந்தியா வந்தார்.

புனித தோமையாரின் வாழ்க்கைப் பின்னணியை சற்றுத் துல்லியமாக மனதில் கொள்ளும்போது புனிதர் சேர நாட்டில் பல புதுமைகளைச் செய்து நம்பூதிரிப் பிரிவு பிராமணர் உட்பட பல்லாயிரக் கணக்கானோரை கிறிஸ்தவர்களாக்கினார் என்பதனை கருத்தில் கொள்ளுதல் முக்கியமானது. அதுமட்டுமன்றி இவர்களின் வழி வந்தவர்கள் இன்றும் கேரளாவில் மூன்றில் ஒரு பகுதியினராக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களை புனித தோமையாரின் வழி வந்த கிறிஸ்தவர்கள் என அழைத்து வருகின்றனர். சேர நாட்டிலிருந்து, பாண்டிய நாட்டிலுள்ள மயிலாப்பூர் (சென்னைப் பட்டிணம்) சென்று ஏறக்குறைய $4\frac{1}{2}$ மாதங்கள் கிறிஸ்துவின் நற்செய்தியை போதித்தார். இதன் பின்னர் சீன நாட்டிற்குச் சென்று நற்செய்தியை எடுத்துரைத்தார். மீளவும் அங்கிருந்து மயிலாப்பூர் வந்து கடல் மார்க்கமாக கேரளாவிலுள்ள கிரங்கனூர் சென்றார். தென் இந்திய மேற்குக் கடற்கரைக்கும் கிழக்குக் கடற்கரைக்கும் இடையே பல தடவைகளில் கடல் மார்க்கமாக பிரயாணம் செய்த குறிப்புக்களும் உள்ளன. இதன் அடிப்படையைக் கொண்டு ஆராயும் பொழுது புனித தோமையார் மாதோட்டத்திலும், யாழ்ப்பாணத்திலும் சில பட்டினங்களில் வந்து தங்கியிருக்கக் கூடும் என ஊகிக்க இடமுண்டு. எனவேதான் ''தொமாஸ் பார்வம்' முதல் செய்யுள் 12ம் வரியில் ''தோமையார் வேறுநாடுகள் சென்றார். '' இலங்கைக்கும் மலாக்காவுக்கும்'' என்று குறிப்பிடுகின்றது. அதுமட்டுமன்றி ''இலங்கையில் நற்செய்தி போதித்தார்'' என புனிதர் நிசேபோறஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை என்றால் மேற்கூறப்பட்ட தமிழ் நாட்டுக்கு மேற்குக் கரை, கிழக்குக் கரை கடல்வழி மாதோட்டத்தை அல்லது யாழ்ப் பாணத்தை இடையே குறிக்கும் இடமாகக் கொண்டது. இது கார ணம் பற்றித்தானோ என்னவோ இரு பாரம்பரியக் கதைகள் 'ஈழம்' பற்றி காணப்படுகின்றன. 6

இன்று 'எருக்கலம்பிட்டி' என வழங்கிவரும் கிராமம் 'சான் தோமை' பட்டணமாக அழைக்கப்பட்டு வந்துள்ளது. கிறிஸ்து பெரு மானை பெத்தலேமில் காணவந்த மூன்று அரசர்களில் ஒருவர் யாழ்ப் பாணத்து கஸ்பார் பெரிய பெருமாள். இவர் ஆயராக அபிசேகம் பெற்றபின்னர் தோமையாருடன் வேதசாட்சியாக மரித்தார் எனவும் மைலாப்பூரில் உள்ள சமாதியில் அடக்கம் செய்யப்பட்டார் எனவும் பல்டேயஸ் குறிப்பிடுகின்றார். 7

வரலாற்றுத்துறையில் பெரிதும் மதிக்கப்படுபவரான நீலகண்ட சாஸ்திரி தமது கருத்தைக் குறிப்பிடுகையில்:-

''1ம் நூற்றாண்டு இந்திய கிறிஸ்தவம் பற்றி ஐயம் கொண்டா லும் அலெக்ஸ்சாண்டிரியாவின் கொஸ்மஸ் தென் இந்தியாவைத் தரி சித்த பொழுது கி. பி. 522ல் இரண்டு நெஸ்தோரிய கிறில்தவ சபைகள் கேரளத்திலுள்ள குயூலனிலும் இலங்கையிலும் இருந்ததாக குறிப்பிடுவதை ஏற்கலாம். கி. பி. 774ல் கண்டெடுக்கப்பட்ட செம்பு, தகடு சாசனம் இந்தியாவில் பல கிறிஸ்தவர்கள் இருந்தார் கள் என்ற உண்மையை குறிப்பிடுவதாலும் இவர்களுடன் பக்தர்கள் ஜெருசலேம் நினிவே முதலிய இடங்களிலிருந்து பெயர்ந்து வந்தே குடியேறினர் என்கிறார்.'' 8

மார்க்கோபோலோ கி. பி. 1293 'புனித தோமையார் மலை யையும் அங்கு அவர் வேதசாட்சியாய் மரணித்ததையும் குறிப்பிடுகின் றார். 9

கொஸ்மஸ் ஒரு துறவியான பின் லத்தீன் மொழியில் அவர் எழு திய நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்-

''தாம்ரபரணியிலும் (தாம்ரபரணி, இலங்கையை முன்னர் அழைத்த பெயர்) ஒரு தேவாலயம், அங்கு குடியேறிய பாரசீகக் கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமானதாய் அமைந்துள்ளது. அங்கு பார சீகத்திலிருந்து நியமிக்கப்பட்டுள்ள குரு ஒருவருடன் கிரிகைகளும் நடைபெறுகின்றன. 10

அநுரதபுரத்தில் (1912 / 13 ம் ஆண்டுகளில்) அகழ்வாராய்ச்சி நடைபெற்றபொழுது திரு. எட்வேட் எயர்ட்டன் என்பவர் ஒரு பழைய தூணின் உடைந்த பாகம் ஒன்றைக் கண்டுபிடித்தார். அதில் ஒரு கிறிஸ்தவ சிலுவை படைப்புச் சிற்பமாய் செதுக்கப்பட்டிருந்தது. இது அனுராதபுர இராசதானிக் காலத்தைச் சேர்ந்ததாகவும், இதன் காலம் 6 ம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனவும், எனவே இக்காலப் பகுதியிலே கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்களென்னும் கொஸ்மசின் கணிப்பை இச்சிலுவை நிரூபிக்கின்றது. அதுவுமன்றி தென் இந்தியாவில் தமிழ் நாட்டில் கண்டெடுக்கப்பட்ட சிலுவை அடையாளங்களும் எகிப்திலும், மேற்காசியாவிலுமுள்ள பழமை வாய்ந்த கொப்ரிக் தேவாலயங்களில் காணப்படும் சிலுவைகளும், அநுராதபுரத்தில் காணப்படும் சிலுவைக்கு ஒத்ததாக அமைந்துள்ளமையையும் கலாநிதி கே இந்திரபாலா 'நண்பன் ஏடு' கட்டுரையில் சுட்டிக் காட்டுகிறார். [11]

1972 ல் பேராசிரியர் பரணவிதாரண தாதுசேன அரசனின் மக்களான காசியப்ப, மெகலான என்போரின் இராணுவத்தில் (473 - 508) கேரள கிறிஸ்தவர்கள் உயர் அதிகாரிகளாக பதவி வகித்தனர் எனக் குறிப்பிடுகின்றார். இவர்கள் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டு பின்னர் மீளத் திரும்பிய பொழுது அமைக்கப்பட்ட இராணுவப் பிரிவில் மிகாரா என்ற கிறிஸ்தவ அதிகாரி இருந்தார் என்று தெரியவருகிறது. இச் சந்தர்ப்பத்தில் அரசன் மெகலானா கிறிஸ்தவனானான், இவனது ஆட்சியில் கிறிஸ்தவ சின்னங்கள் பொறித்த தங்கக்காசுகள் வழக்கத்திலிருந்தன எனவும் கூறினார். [12]

ஆனந்த சுரவீர என்னும் 15 ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிக்கு ஒருவர் எழுதிய சிகிரியாவின் கதை என்ற ஏட்டிலிருந்து எடுக்கப்பட்ட இத்தகவல் எவ்வளவு உண்மையானது என நிருபிக்க முடியாவிடினும், கேரள பல்லவ நாட்டிற்கும், இலங்கைக்கும் இருந்த பரஸ்பர தொடர்பை இது சுட்டிக் காட்டுகின்றது.

1994 ம் ஆண்டில் கந்தரோடையில், யாழ். பல்கலைக் கழகத்தின் தென்னாசிய புராதன வரலாறு, தொல்லியல் துறை விரிவுரையாளரான திரு. S. கிருஷ்ணராசா M.A. அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வுகளின் பொழுது ஒரு தொகுதி அச்சுக் குத்தப்பட்ட வெள்ளி நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றில் ஒன்று, நீள் சதுர வடிவிலமைந்தது. அதன் முற்பக்கத்தில் நெஸ்தோரிய சிலுவை வடிவமும் அதன் கீழ் பிராமி வடிவிலமைந்த வாசகமும் காணப்பட்டது. இதை மாலை தீவுகளில் வதியும் கலாநிதி. P. இரகுபதி அவர்கள் 'மாகிரேக்க காசுச' என வாசித்

தார். அவரது கருத்துப்படி இது கி. பி. 4 ம் நூற்றாண்டின் நாணயமாகும். பெரிய கிரேக்க நாணயமென்று, அர்த்தம் பெறும்.

காலத்தினூடாக வளர்ச்சி பெற்று வந்த வரிவடிவ இயல்பினடிப்படையில் 4 ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியாக அவர் இதனைக் காண்கிறார்.

கலாநிதி இரகுபதி அவர்களது கருத்துப்படி தென்னிந்தியாவில் கிறிஸ்தவ வணிக கலங்கள், வியாபாரத்திலீடுபட்டமைக்கு தொல்பொருட் சான்று இதுவாகும். மேலும் இதுபோன்ற நாணயங்கள் கேரளத்தில் கண்டுபிடிக்கப்பட்டதை அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

இச் சான்றின்படி இத்தீவில் கிறிஸ்தவர்கள் முதலில் வாழ்ந்த பகுதி யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணத்து வணிக நகரங்களில் முக்கியமான கந்தரோடையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்ததில் ஆச்சரியமேதுமில்லை.

மேற்காசியாவுடன் இலங்கை கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகளையும் தென் இந்தியாவிலே 10 ம் நூற்றாண்டுக்கு முன் கிறிஸ்தவம் அறியப்பட்டிருக்கின்றது என்பதையும் கருத்திற் கொண்டு கவனிக்குமிடத்து அநுராதபுரத்துச் சிலுவையும், கொஸ்மஸ் தரும் சான்றும் இலங்கையில் ஆதிகாலத்தில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்திருந்தனர் எனக் கொள்வது பிழையாகாது. இலங்கையில் வர்த்தகர்கள் மூலமே 'இஸ்லாம்' சமயமும் மேற்காசியாவிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் இங்கு பரவியது என்பது தெளிவு. அவ்வாறே ஏற்கனவே கிறிஸ்தவமும் பரவியிருக்க வேண்டும். போத்துக்கீசர் வருவதற்கு முன்னரே இலங்கையிலேயும், தமிழ்ப்பகுதிகளிலும் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதை சந்தேகமின்றி ஏற்றுக் கொள்ளலாம்.[13]

இதன் நிமித்தமே யாழ் ஆயர் இல்லத்தில் காணக்கிடக்கின்ற 1877 ல் எழுதப்பெற்ற வழிகாட்டியில் கி. பி. 189 ல் அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த புனித பன்ரேனாள் இந்தியாவில் கிறிஸ்தவத்தைப் போதித்தார் எனவும் புனித மத்தேயு சுவிஷேசத்தின் எபிரேய மூலப்பிரதியைக் கண்டார் எனவும் கி. பி. 871 ல் இங்கிலாந்து அரசன் பெரிய அல்பிறட் 'சித்ஷெல் எம்' என்றவரை புனித தோமையாரின் கல்லறையை சந்திக்க அனுப்பினார் என்றும் குறிப்பிடுகின்றது.

18 ம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற 'தேவதாழ்ச்சி உத்தியானம்' அல்லது திருச்சபைச் சரித்திரம் என்ற முகவுரையில் கீழ் குறிப்பிடப்படும் வாக்கியங்கள் காணப்படுகின்றன.

''சிந்துதேசத்தின் அப்போஸ்தலரான புனித தோமையாரால் வேத உபதேசம் பண்ணப்பட்டதென, நிசேபொருஸ் என்பவர்...'' என்றும் குறிப்பிடப்படுகின்றது. [14]

எனவே இது காறும் நாம் அறிந்தவற்றினூடாக கிறிஸ்தவம் இலங்கை நாட்டில் முதல் ஐந்து நூற்றாண்டுகளில் காலூன்றியிருந் தமை நிதர்சனமே.

புத்துணர்வுடனும் புதுமெருகுடனும் 2000 ம் யூபிலி ஆண்டை அண்மித்து நிற்கும் அனைத்துலக கத்தோலிக்க திருச்சபையின் ஒரு அங்கமான யாழ்ப்பாணத் திருச்சபையின் பாரம்பரியம் என்ன? அது ஏறக்குறைய கி. பி. 50 ம் ஆண்டிலிருந்து இம் மண்ணில் காலூன்றி யமை பற்றிய, ஓர் பின்னணி வரலாறு இல்லையா? என்ற வினா வுக்கு விடைகாண முற்படுவதே இந்த வரலாற்றுக் குறிப்புகளின் 1 ம் பகுதியான ஆதிகாலத்தின் நோக்கமாகும்.

வத்திக்கானிலிருந்து வெளியாகும் ''றோமன் அவதானி'' என்ற பாப்பரசரின் உத்தியோக பூர்வ ஆங்கில வார ஏட்டின் 25 – 9 – 96 திகதிய இதழில் ஆசிய ஆயர் அவைக்கு பாப்பிறை அனுப்பிய ''ஆசி யாவில் நற்செய்திப் பணி'' என்ற சுற்றுமடலின் இப்பகுதி, நாம் முன் கூறியவற்றை உறுதிப்படுத்துகிறது.

''பெந்திக்கோஸ்து விழாவைத் தொடர்ந்து ஜெருசலேமின் மறை பரப்புப்பணி ஆரம்பமாயிற்று, முதல் கிறிஸ்தவ சபை அங்கு உரு வாக்கப்பட்டது. இப் பணி ஜெருசலேமிலிருந்து அந்தியோக்காவிற் கும் அதன்பின் மேற்கு கிழக்கு நாடுகளுக்கும் பரவியது. திருச்சபை யின் ஆதிச் சங்கங்கள் ஆசியாவிலேயே நடைபெற்றன. திருச்சபை யின் பெரும் பிதாக்களில் பலர் ஆசிய நாட்டவர். ஆதித் திருச் சபையின் வழிபாட்டு மரபுகள், குழுமங்கள், பிதாப்பிதாக்களின் பீடங்கள் ஆசியாவிலேயே ஆரம்பமாயின. யேசுவின் அப்போஸ்தலர் களான பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் ஆசியாவிலேயே முதலில் போதித்து ஜெருசலேம், அந்தியோக்கா ஆகிய இடங்களில் தம் முதற் சபைகளை நிறுவினர்.''

''பாரம்பரிய வரலாறுகளுக்கிணங்க, அப்போஸ்தலர்களான பர்த்தலோமியுவும் தோமாவும் முதலில் மெசப்பத்தோமியாவையும், பாபிலோனியாவையும் கிறிஸ்துவின் பக்கமாகத் திருப்பினர். பின்பு பாபிலோனியாவிலிருந்து (கல்தேயா) பர்த்தலோமியு, தரைமார்க்க மாக வடமேற்கு இந்தியாவை அடைந்து யேசுவின் நற்செய்தியைப் போதிக்க, அப்போஸ்தலர் தோமா, கடல்மார்க்கமாக தென்னிந்தி

யாவுக்கு வந்து கி. பி. 50ம் ஆண்டளவில் மலபார் கரையோரமாக திருச்சபையை நிறுவினாரெனத் தெரிய வருகிறது,''

''திருத்தூதர் பர்த்தலோமியு பற்றிய மரபுக்கதைகளை விட திருத்தூதர் தோமா மலபார் கரையோரங்களில் திருச்சபையை நிறுவியமை பற்றிய சான்றுகள் கூடியளவு ஆதாரங்களைக் கொண்டுள்ளன. முழுமையான வரலாற்றுச் சான்றுகளைக் கண்டுபிடிப்பது கடினமெனினும் 1ம் நூற்றாண்டின் முடிவிலே அங்கு ஓர் கிறிஸ்தவ திருச்சபை காணப்பட்டது என்ற உண்மை முன்னைய வரலாற்றின் தன்மைக்குச் சாதகமாயுள்ளது. மேலும் அவர்களது வழிபாட்டு மொழி, திருச்சபை அமைப்பு, இறையியல், ஆன்மீகம் முதலியன பெரும்பாலும் சீரிய திருச்சபையின் வழிவந்ததாகவே கருதப்படலாம்.''[15]

★ ★ ★

# ஆயிரம் மௌன ஆண்டுகள்

யாழ்ப்பாண வரலாற்றின் நிகழ்வுகளை சற்று பின்நோக்கிப் பார்க்குமிடத்து, கிறிஸ்து சகாப்தத்தின் முதல் ஐந்து நூற்றாண்டுகளில் நிழல்போல பின்தொடர்ந்து வந்த கிறிஸ்தவ சமயம் பின் வந்த பத்து நூற்றாண்டுகளில் அறியப்படாமல். மறைந்துபட்ட நிலையில் ஒரு முற்றுப்புள்ளியைக் கொண்டதாக நிகழ்வதை அவதானிக்க முடிகின்றது.

கந்தரோடையை முக்கிய நகராகக் கொண்ட யாழ்ப்பாணத்து பழைய வரலாறு 5ம் நூற்றாண்டு ரோமசாம்ராச்சிய வீழ்ச்சியுடனும் அதன் வாணிபத் தொடர்புகள் அறுந்த நிலையில் தனது முக்கியத்துவத்தை இழந்து விடுகிறது. 6ம் நூற்றாண்டு காலப்பகுதியில் அநுராதபுரத்தை மையமாகவும், இராசதானியாகவும் கொண்ட ஓர் சிங்கள அரசு முக்கியத்துவம் பெறுவதை அறியமுடிகின்றது. இதன் பின்னணியில் பௌத்த சமயத்தின் செல்வாக்கு வளர்ச்சியடைகின்றது. இவ்வரசின் கடல்வழி நுழைவாயில்களான மாந்தையும், இயற்கைத் துறைமுகமான திருகோணமலையும் முக்கியத்துவம் பெறுகின்றன.

பின்னர் படிப்படியாக ஏற்பட்ட சைவசமய எழுச்சியுடன் இவை இரண்டும் பாடல் பெற்றவையாக புகழ் பூத்த திருத்தலங்களாக தேவாரங்களில் பாடப்பெற்றுள்ள இதே காலத்தை ஒட்டி, 'கருங்கல்லில் பொறித்த சிலுவை அனுராதபுரத்தில் கண்டெடுக்கப்பட்டமையும், அனுராதபுர அரசின் அக்காலத்திய முக்கியத்துவத்தை எடுத்தியம்புவதாக உள்ளது.[16]

இலங்கை நாட்டின் கேந்திர முக்கியத்துவமான இடமாக அநுராதபுரம் அமைந்துள்ளது. இங்கிருந்தே பௌத்த சமயத்தின் எழுச்சியும், வளர்ச்சியும், சிறப்புற்றதை 6ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கொள்ளப்படும் ''மகா வம்சம்'' என்ற ''வரலாற்று நூல்'' எடுத்தியம்புகின்றது. எனவே இத்தகைய ஒரு பின்னணியின் சூழலில் கிறிஸ்தவம் வளர்ச்சி பெற்றிருக்க முடியாது. அதுவுமல்லாமல் யாழ்ப்பாணத்தின் தனித்துவமும் இக்காலப்பகுதியில் மங்கிப் போயிற்று. சோழப் பேரரசின் படையெடுப்பால் அநுராதபுர, பொலனறுவை இராச்சியங்கள் வீழ்ச்சியடைய நல்லூர் இராசதானி முளைவிடத் தொடங்குகின்றது. யாழ்ப்பாணத்தின் சிறப்பு, சோழ, பாண்டிய மன்னர்களின் காலத்திலே மீண்டும் முக்கியத்துவம் பெறத் தொடங்குகின்றது. இக் காலப்பகுதியில் நிலவி வந்த பௌத்தம் சமணம் யாழ்ப்பாணத்தில் சைவசமயம் பெற்றிருந்த வளர்ச்சியினால், வீழ்ச்சியுறுவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்தில் ஐயனார் கோவில்களில் புத்தருடைய உருவச்சிலைகள் ஐயனாராக உருமாற்றம் பெற்றமையையும் அகழ்வாராய்ச்சி சான்றுகளினால் கலாநிதி இரகுபதி அவர்கள் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.[17]

வலுவிழந்த சிங்கள அரசு ஒருபுறமும், தளர்ச்சியடைந்த தென் இந்திய சோழ அரசும், பாண்டிய பேரரசும் மறுபுறத்தில் கோலோச்சிய 13ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஓர் 'தமிழ்ச்சைவ' அரசு உருவாவதற்குக் காரணிகளாயின. இந்த அரசின் கட்டுக்கோப்பை நிலை நிறுத்த சோழ மண்டல வேளாளர் யாழ்ப்பாணத்தில் குடியேறித் தமது பங்களிப்பை நல்கினர்.

இத்தகைய சரித்திர முக்கியத்துவமான நிகழ்வுகளே, ஒரு நீண்ட இடைவெளியில் கிறிஸ்தவம் தொக்கி நின்றுவிட ஏதுவாகின்றது. இதன் பின்னர் ஆட்சி புரிந்த ஆரிய மன்னர்களின் காலத்திலேயே அதாவது 16ம் நூற்றாண்டளவில் கிறிஸ்தவம் யாழ்ப்பாண மண்ணில் காலூன்றுவதையும், தளிர்விட்டு மேலோங்குவதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

எனினும் இங்கு ஏற்பட்ட மௌன இடைவெளிக் காலகட்ட நூற்றாண்டுகளில் இந்தியாவின் கேரளத்தில் திருச்சபை வளர்ந்ததையும், கி. பி. 635 இல் அலோப்பென் என்னும் கிறிஸ்தவ துறவி சக்கரவர்த்தி ரெயிட்சுங்கினால் சீனாவில் கௌரவத்துடன் வரவேற்கப்பட்டு அங்கு திருச்சபையை உருவாக்க அனுமதிக்கப்பட்டதையும், கவனத்தில் கொள்ளல் வேண்டும். இக் காலவேளையில் சீனா தேசம், பண்பாடு கலாச்சாரம் ஆகியவற்றில் மேலோங்கி நின்றமையும் வரலாற்று உண்மையாகும்.

கி. பி. 1309 ல் பிரான்சிஸ்கன் மிசனரி சபையைச் சேர்ந்த யோண்மென்டிகோர் வினோ என்ற துறவி பலஇடங்களில் திருச்சபையை நிறுவி வளர்த்ததும் அங்கு அவர் ஆயராக நியமிக்கப்பட்டமையும் சான்றுகளாகும். யாழ்ப்பாணத்தில் மௌனம் நிலவிய நூற்றாண்டுகளில் முக்கிய சனத்தொகையைக் கொண்டிருக்கும், சீன நாட்டில் அதன் மக்களிடையே கிறிஸ்தவத்தின் வலுவுடமை அறியப்படவும் வேரூன்றவும் தொடங்கியது 16 ம் நூற்றாண்டு போர்த்துக்கேயர் வருகையுடன் யாழ்ப்பாணத்திலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது. இதை உறுதி செய்ய ''றோமன் அவதானி'' 25 – 9 – 96 பக் 7 கூறுவது:

''சீரிய கிறிஸ்தவம் ஒரு மிசனரி இயக்கமாகவே வளர்ந்து தென்னாசியாவுக்கு மாத்திரமல்ல, மத்திய ஆசியாவினூடாக சீனா வரை பரவலாயிற்று, 4 ம் நூற்றாண்டுக்கும் 7 ம் நூற்றாண்டுக்குமிடையே அனேக புவியியல் அரசியல் தடைகளையும் தாண்டி கிறிஸ்தவ மிசனரிகளால் துருக்கிஸ்தான், மொங்கோலியா, சீனா முதலாய பெரு நிலப்பரப்பு நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது, அதன் மிசனரி ஆர்வம் திருச்சபையில் ஆவியின் அக்கினி பற்றிப் பரந்ததோன்றாக மாறிற்று. 1625 ல் வடசீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கற்றூண் ஒன்றில் (''Hsianfu tablet'') சீன சீரிய எழுத்துக்களில் சீனாவில் எவ்விதம் கிறிஸ்தவம், கிழக்கின் சீரிய மிசனரிகளால் பரப்பப்பட்டதென்பதை மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டுகிறது.''

''இவ்விதம் ஆதி மிசனரிகளாக தூதுரைத்தவர்களில் ஆயர்களும் துறவுச் சபையினரும் ஒருபுறமும். சாதாரண குருக்களும் வியாபாரி

களும் மறுபுறமுமாவார். அவர்கள் பொது மக்களுக்கு திருமறையை போதிக்க விவிலியத்தை பாவித்தனர். பௌத்த, கொன்பியூசியஸ் ராஒவிஸ்ற் குறியீடுகளை, கிறிஸ்தவ விசுவாசத்தை அறிக்கையிட உபயோகித்தனர். அந்தந்த மக்களின் கலாச்சாரச் சூழலில் கிறிஸ்து வின் நற்செய்திகளை விளங்க வைத்தனர்.''

13 ம் நூற்றாண்டில் பிரான்சீஸ்கன் துறவிகளும் ஆசியாவில் கிறிஸ்தவம் பரவுவதற்கு முயற்சியெடுத்தனர். இவர்களில் பிரபல்லிய மானவர் சீனாவில் பணி புரிந்த யோ ண் மெ ன் டி கோ ர் வி னோ என்பவர். இவரைத் தொடர்ந்து பணியாற்றிய ஜியோவான்னி மரிக் னோலி இந்தியாவினூடாகவும் பிரயாணம் செய்து சில சபைகளை நிறுவினார். இப் பிரான்சீஸ்கன் மிசனரிகள் உருவாக்கிய திருச்சபை கள் பின்னர் எழுந்த கலாபனைகளால் மறைந்து போனாலும் இந்த மிசனரிகளின் விசுவாசம் நிறைந்த வீரமும், இயேசுக்கிறிஸ்துவின் மேலிருந்த அன்பும் மக்கள் மேல் காட்டிய பரிவும் எல்லோராலும் வரவேற்றுப் பின் செல்லக்கூடிய சிறந்தவோர் எடுத்துக் காட்டாயிற்று. [18]

# யாழ் திருச்சபை வரலாறு
## II - ம் பாகம்
## போர்த்துக்கேயர் காலம்
## ( 16 ம், 17 ம் நூற்றாண்டுகள் )

### ஒரு நோக்கு

3 ம் மிலேனியத்தின் வருகையை அறைகூவும் பாப்பிறை, ஆசிய திருச்சபை தனது விசேட ஆயர்களின் ஒன்றுகூடலினூடாகச் சேர்ந்து சிந்திக்க, ''யேசுக்கிறிஸ்து எம் மீட்பர்'', ''ஆசியாவில் அவர் அன்பும் பணியும்,'' என்ற தலைப்பில் ஒரு சுற்றுமடலை அனுப்பியுள்ளார். அதன் 2 ம் அதிகாரம் ஆசியாவில் மறைபரப்புப் பணி – 10ம் இலக்கத்தில் காணக்கிடப்பது:-

13 ம் நூற்றாண்டில் கப்பலோட்டிகள், புதிய நாடுகளைக் கண்டு பிடிப்போர், அவர்களின் கூலிப் பட்டாளங்கள், வியாபாரிகள், வணிகர்கள், வாணிப நிறுவனங்கள் எனப் பல பணம் சம்பாதிக்கும் நோக்குடனும், புதிய கண்டுபிடிப்புகளால் உலகைப் பிரமிக்க வைக்கும் இலட்சியத்துடனும் புதிய அனுபவங்களைத் தேடிப் புறப்பட்டனர்.

முதலில் மார்க்கோபோலோவுடனும் தொடர்ந்து வாஸ்கொடகாமாவுடனும் ஆரம்பிக்கப்பட்டு ஒரு நீண்டகால காலனித்துவப் பரவலாக்கம், ஆசியாவின் பல நாடுகளையும், போத்துக்கேய, ஒல்லாந்த, ஸ்பானிய, பிரான்சிய, பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்குள் கொண்டுவந்தது. இதே காலகட்டம்தான் பாரிய மிசனரி செயற்பாடுகளின் காரணமாகவும் அமைந்தது காலனித்துவப் பரவ

லாக்கம், ஆசியாவில் நிறுவப்பட்ட வர்த்தக மையங்கள் என்பவற்றைத் தொடர்ந்து ஆசியாவின் பல பகுதிகளிலும் மிசனரிகள் வந்திறங்கத் தொடங்கினர்.

1510 க்கும் 1640 க்கும் இடையே பிரான்சீஸ்கன். டொமினிக்கன், கார்மேல், அகஸ்ரினியன், தியேற்றின், இயேசு சபையினர் ஆசியாவில் தங்கள் மடங்களை நிறுவியிருந்தனர்.

நவீன மிசனரிகளில் புனித பிரான்சீஸ்கு சவேரியார் முதன்மையானவராகக் கணிக்கப்பட வேண்டியவர் பத்து வருட குறுகிய காலகட்டத்துள் இந்தியாவின் மேற்குக் கரையோரமாக கோவா தொடக்கம் கன்னியாகுமரிவரையும் இலங்கை மலாக்கா உட்பட யப்பான் வரையும் பல சபைகளை அவர் நிறுவினார். ஒவ்வொரு இடத்திலும் அந்தந்த மக்களின் நிலைக்கும் தகுதிக்கும் அமைந்தபடி அவர் வெவ்வேறு முறைகளைக் கையாண்டார். இருந்தும் எந்நிலைக்கும் இடத்துக்கும் மாற்றமுறாது எதையும் ஊடுருவிப் பிரகாசிக்கும் அவரது பரிசுத்த தனம், ஜெபவாழ்வு, தளர்ந்து போகாத திருமறை அறிவிப்பு ஆற்றல் மிக்க ஆன்மீகப்பணி என்பன அவரது வெற்றிக்கு முக்கிய காரணிகளாக அமைந்தன.

ஆசியாவில் புனித பிரான்சீஸ் சவேரியார் ஆரம்பித்த மிசனரிப் பாதையில் 16 ம் நூற்றாண்டு வரை, அவர் போன்று அறிவாற்றல் மிக்க, பரிசுத்த தனமுடைய, திறமை வாய்ந்த பேரறிஞர்கள் பலர், அவரைப் பின்தொடர்ந்து பணியாற்றினர். அவர்களில் சீனாவிலும் யப்பானிலும் சேவை செய்த அலக்சாண்டர் வலிக்ஞானோ, மத்தேயோ றிச்சி, பேர்டினன்ட் வேர்பியஸ்ற், அடம்ஸ்கல், பென்ரோதே கோமஸ், வின்சென்ற்லெபி என்போர் அந்நாடுகளின் மதங்களோடும் கலாச்சார பண்பியல்களோடும் உறவாடி உரையாடி, நற்செய்தியையும் வழிபாட்டையும் இறையியல் மொழியையும் அந்தந்த நாடுகளின் விளங்கக்கூடிய வகையில் பண்பாட்டு மயமாக்கினர்.

இந்தியாவில் இதே அளவு முயற்சிகள் றொபேட் டி நோபிலி, கொன்ஸ்ரன்ற் பெச்சி, யோண் டி பிறிற்றோ முதலியோரால் இந்தியாவில் நிலவிவந்த சமூக அமைப்புகளுக்கேற்றபடி, எடுக்கப்பட்டன. வியட்னாமிலும் அலக்சாண்டர் றோட்ஸ் என்பவர் இதே பாணியில் அரும்பணியாற்றினார்.

சக்கரவர்த்தி அக்பரது மொகலாய அரண்மனையில் றுடோல்ப் அக்குவீவாவும் அவரது உடனுழைப்பாளிகளும் எடுத்துக்கொண்ட நற்செய்திப் பணிகள் வெற்றியளிக்கவில்லையெனினும் எதிர்கால மிசனரி அலுவல்களில் அவை ஏற்படுத்தியிருக்கக்கூடிய நல்ல தாக்கத்தை குறைத்துக் காட்ட முடியாது.

இப் பரந்த ஆசிய பின்னணியிலேயே யாழ்ப்பாணத்தில் 16ம் 17ம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ மிசனரிகளின் பணியை ஆய்வு செய்ய வேண்டும். இப்பணியினை சுருக்கமாகவும் விரிவாகவும் திருச்சபையின் வரலாற்றாசிரியர்களான சுவாமி ஞானப்பிரகாசர், **S. G.** பெரேரா அடிகள், ஆயர் எட்மண்ட் பீரிஸ், டொன் பீற்றர் அடிகள், **A. J. B.** அன்ரொனைனஸ் அடிகள் முதலியோர் திறம்பட எழுதியுள்ளனர்.

இன்றைய விமர்சனங்களின் கண்ணோட்டத்தின் சர்ச்சையாகத் தோன்றும் ஏழு தலைப்புகளிலேயே, யாழ் திருச்சபையின் போர்த்துக்கேயர் காலத்தை ஆய்வு செய்கிறோம்.

1. மிசனரிகள்
2. மனந்திரும்புதல்
3. வேதசாட்சிகள்
4. நான்கு வகைக் கிறிஸ்தவர்கள்
5. வாளும் மனமாற்றமும்
6. தாந்தரிகமும் மரியாளும்
7. பண்பாட்டு மயமாக்கல்

# மிசனரிகள்

**மிசனரிகள் வந்த பாதை:**

முன்கூறிய ஆயிரம் ஆண்டு மௌனத்தின்பின் யேசுகிறிஸ்துவின் இனிய நற்செய்தியை ஈழத்தின் கரைகளில் அறிவிக்க வந்தவர்கள், போர்த்துக்கேய நாட்டு மிசனரிகளே. அவர்கள் வந்ததோ போர்த்துக் கேய நாட்டு வணிகக் கப்பல்களில். இவ்விரண்டு முக்கிய அம்சங்களின் பின்னணி குறிப்பாக உற்றுநோக்கப்பட வேண்டியது அவசியம்.

ஆசியாவின் பெரும் மதங்கள், வணிகத் தொடர்புகளினூடேயே பரப்பப்பட்டன. முதல் மிசனரி மதம் பௌத்தம். அதன் மிசனரிகள், அசோக அரசனின் இரண்டாம் பௌத்த சங்கத்தின் பின் தரை மார்க்கமாக திபெத், மத்திய ஆசியா, அசாம், வங்காளம், பர்மா, சீனா, முதலியவற்றினுள் வியாபார குழுக்களின் பின்னேயே நுழைந் தனர். [1]

தொடர்ந்து ஆந்திரா, தமிழ்நாடுகளின் துறைமுகங்களிலிருந்து கடல் மார்க்கமாக கம்போடியா, தைலாந்து, யாவா, சுமத்திரா முதலிய நாடுகளுக்கு கடல் வணிகர் ஆதரவுடன் சென்றனர்.

பின் சைவ வைணவ எழுச்சியும், கடல் மார்க்க வணிகக் குழுக் களின் பின் சென்று, தம் மதக் கொள்கைகளை ஊன்றினர். வணி கத்தைப் பாதுகாக்க போர்ப்படைப் பலத்தின் பின்னணியில், அரசு கள் நிறுவப்பட்டன. அரசுகள் மதங்களை ஸ்திரப்படுத்த கோவில் களைக் கட்டுவித்து, மதச் சடங்குகளையும் செயலாக்க, குழுக்களை யும் நிறுவின.

தெற்காசிய, தென்கிழக்காசிய வரலாற்றில் சுதேசிகளின் ஆதி இயற்கை மதங்களின் மேல் பொருத்தி வளர்க்கப்பட்டிருக்கும் பௌத் தம், சமணம், சைவம், வைணவம், இஸ்லாம் முதலியவற்றுக்குப் பின்னணியாக இவ் வரலாற்று நியதி காணக்கிடக்கிறது.

மனித போக்குவரத்து அசைவுகள், வணிகத் தொடர்புகள், அர சுகளின் இராணுவ அசைவுகளே, ஈழத்திலும் தெற்காசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் கிறிஸ்தவம் பரவுவதற்கும் உதவின. [2]

**போர்த்துக்கேயரின் உத்வேகம்:**

போர்த்துக்கேயர் பின் வந்த ஒல்லாந்த ஆட்சி போன்று, வெறும் வியாபார அரசியல், ஆதிக்க நோக்கங்களுடன் ஆசியாவில் உட்புக வில்லை. பாரசீக வளைகுடா, கோவா தொடக்கம் மலாக்கா, யப்

பான் வரை அவர்களின் ஆதிக்கம், அவர்கள் கட்டிய கோட்டைகள், போர் அரண்கள் என்பன இவர்களை வெறும் ஆக்கிரமிப்பாளர்க ளாக அல்ல. ஓர் இலட்சிய உலகு தேடி அலையும் காவிய வீரர்க ளாக, சிலுவைப் போர் வீரர்களாக, புதுயுகம் படைக்கப் புறப்பட்ட நாயகர்களாக, நவீன உலக வணிகத்தின் முன்னோடிகளாக ஆக்கிற்று.

பின்வந்த பிரித்தானியரும் வெறும் வியாபாரச் செல்வத்தைப் பெருக்கி, இலாபத்தைப் பகிரும் பணப்பெருக்கிகளாகவே இருந்தனர்.

போர்த்துக்கேயரின் உத்வேகத்துக்கான முக்கிய காரணி 3ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டு வரை அவர்கள் வாழ்ந்த பெரிய குடாநாடு. இஸ்லாமியரின் படையெடுப்புக்கும், அவர்களின் ஆதிக்கத்துக்குள்ளும் வீழ்ச்சியுற இவர்கள் நடாத்திய மூவாயிரத்து எழுநூறு போர்களாகும். [3]

1492ல் தான் இறுதி இஸ்லாமியக் கோட்டையாகிய கிரனடா வீழ்ந்தது, வரலாற்று ஆசிரியர் ஆர்நோல்ட் ரொயின்பீயின் (Arnold Toynbee) ''அவர்களின் பிரமிக்கத்தக்க ஆழ்கடற் பிரயாணங்கள் ஆசிய தென்னமரிக்கப் போர்கள், உலகளாவிய இலட்சியக் கனவுகள் அபிலாசைகள் .. இக் கனவுகளை நனவாக்கும் அபாரத்துணிவு... அவர்கள் தம் மண்ணில் அடைந்த தேசிய வெற்றிகளின் விளைவு களே இப் புதிய உத்வேகமாகும்.'' என்ற கூற்று போர்த்துகேயரின் இயல்புக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இப் பதினாறாம் நூற்றாண்டு போர்த்துக்கேய ஸ்பானிய உத் வேகமே இருபதாம் நூற்றாண்டு மேற்கத்திய கிறிஸ்தவ சாம்ராச்சி யங்களின் வளர்ச்சிக்கும், உலக சமுகம் என்ற இன்றைய எண்ணக் கருவின் பரவலாக்கத்துக்கும் வித்திட்டது எனலாம்.

''இன்றைய மேற்கத்திய உலகின் நிகரற்ற, ஒப்பற்ற சாதனை யின் முன்னோடிகள் இஸ்பானிய போர்த்துக்கேயரே'' என்று வர லாற்று அறிஞர் ரொயின்பீ கூறுவது உற்றுநோக்கத்தக்கது. [4]

1498ம் ஆண்டு வாஸ்கொடிகாமா இந்தியாவின் கலிக்கட்துறை வந்து சேர்ந்தார். இந்து சமுத்திரத்தின் இஸ்லாமிய ஆதிக்கம் இதை ஒரு சவாலாகச் சந்தித்தது அவர்களின் வியாபாரச் சரக்குக் கப் பலை வழிமறிக்கும் முயற்சியில், 1505ல் லோறன்சோ டி அல் மெயிடா கொழும்புத் துறைமுகம் வந்து சேர்ந்தார். (முதலில் காலி) கோட்டை இராஜதானியில் புனித லவுரேன்சியாரின் பெயர் கொண்ட சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு அங்கு திருப்பலி நிறை வேற்றப்பட்டது. அன்று கல்லில் பொறிக்கப்பட்ட போர்த்துக்கேயச் சின்னம் இன்றும் காணப்படுகின்றது. [5]

# மனந் திரும்புதல்

யாழ் கிறிஸ்தவ விதைப்பு:

16 ம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்து கிறிஸ்தவ வரலாறு, மன்னாருடன் தொடங்குகிறது. கோட்டை இராச்சியத்தில் பிரான்சீஸ்கன் மிசனரிகள் வந்து இறங்கிய சில வருடங்களுக்குள்ளேயே (1540 ல்) பாழ்ப்பாணத்தில் பிரான்சீஸ்கன் மிசனரிகள் நற்செய்தி அறிவிப்பு வேலையை ஆரம்பித்தனர். ஆயின் அது பெரும் பயன் அளிக்கவில்லை.

புனித பிரான்சீஸ்கு சவேரியாரின் கடிதத்தை இங்கு கணிப்பில் எடுப்பது நல்லது, 1546 மார்ச் 18 ம் நாள் எழுதிய கடிதத்தில் இப்புனிதர் நம் மண்பற்றிக் கூறியவை:

''ஈழம் பெரும் அறுவடை செய்யப்படக்கூடிய ஒரு தீவு, என் பெயர் கொண்ட ஒருவரை, 1544 ல் ஈழத்து மண்ணுக்கு அனுப்பி, மன்னாரில் ஒக்டோபரில் பலருக்கு ஞானதீட்சை அளித்திட, நவம்பரில் சங்கிலி அரசன் தன் படையை அனுப்பி 500 க்கும் மேற்பட்டோரைக் கொன்றான்.'' [6]

பிரான்சீஸ்கன் குருக்கள்:

1543ம் ஆண்டில் கோட்டை இராச்சியத்தின் அரசனான புவனேகபாகுவின் அழைப்பின் பேரில் ஆறு பிரான்சீஸ்கன் குருக்கள் இலங்கைத் தீவு முழுவதிலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்க உத்தரவு பெற்று நற்செய்தியை அறிவிக்கத் தொடங்கினர். பின்வரும் ஏழு சத்தியங்களான, 1) இறைவன், 2) மோட்சம், 3) வானதூதர் 4) புனிதர்கள், 5) பிசாசு, 6) புண்ணியம், 7) பாவம் பற்றி விளக்கினர். அரசன் மனந்திரும்ப மறுத்தாலும், மக்கள் மத்தியில் போதிக்க அனுமதி அளித்தான். ஆயின் கிறிஸ்தவர்களாக மாறியவர்களில் விசேடமாகத் தன் அரண்மனையைச் சார்ந்தவர்களின் நில, புல உடமைகளைப் பறித்து கிறிஸ்தவர்கள் ஆகாமல் தடுத்தான். [7]

அணுகு முறைகள்:

கிறிஸ்தவ நற்செய்தி அறிவிப்பைப் பொறுத்தமட்டில் இருவகை அணுகுமுறைகள் கையாளப்பட்டன, அரசனையும் அரச குடும்பத்தினரையும் மனமாற்றம் செய்யும் முயற்சி; இதனைப் பிரான்சீஸ்கன் துறவிகள் புவனேகபாகுவின் அரண்மனைப் போதனையில் செய்ய முயற்சித்தனர்.

அரசன் மனம் மாறினால், இராச்சியம் முழுவதும் கிறிஸ்தவம் ஆகும். இது அசோகச் சக்கரவர்த்தி, தேவநம்பியதிஸ்ஸவை மனம் மாற்றிய காலந்தொட்டு வரலாற்றில் நிரூபிக்கப்பட்டு வந்துள்ளது.

அடுத்தது குடிமக்களை மனந்திருப்புதல். இதுவே புனித பிரான்சீஸ் சவேரியார் தமிழ்நாட்டில் செய்தது. பாமர மக்களையும், புத்தி ஜீவிகளையும், சாதாரண மக்கள் குழுமங்களின் தலைவர்களையும் மனம் மாற்றினார். திருவாங்கூர் முக்குவர், தூத்துக்குடிப் பரவர், இலங்கைக் கரையோரக் குடிமக்கள் ஆகியோர் தங்கள் சாதித் தலைவர்களுடன் மனம் மாறினர்.

**புனித சவேரியார்:**

இவர்களுக்குத் தொழில் செய்யும் வசதிகளையும், பாதுகாப்பையும் சுதேச அரசர்கள் அளிக்காதபோது, மிசனரிகள் போர்த்துக்கேயரின் உதவியுடன் அளிக்க முயற்சித்தனர். இதுவே புனித சவேரியார் 1544 டிசம்பர் 18 ல் எழுதிய கடிதத்தில்:

''கவர்ணரிடம் சென்று யாழ்ப்பாண அரசன், மன்னார்க் கிறிஸ்தவர்களை நூற்றுக் கணக்காகக் கொன்று குவிப்பதற்காகத் தண்டிக்கப்பட வேண்டும்.'' என ஊக்குவிப்பதற்கு முதல் முக்கிய காரணம்.

1536 ம் ஆண்டு முன்குறிப்பிட்டவர்கள் முகமதியர்களோடு தம் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த காலத்தில்தான் போர்த்துக்கேயர், அவர்களை விடுவித்து திருமறையிற் சேர்க்க உதவினர். முதலில் 85 பரதத்தலைவர்களும் பின் பெரும்பாலான ஆண்களும் 1536 ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் தூத்துக்குடியில் முத்துக்குளிப்புக்காகக் கூடிவந்திருந்தபோது முத்துச் சிலாப முகாம்களிலேயே அவர்களுக்கு ஞான தீட்சை வழங்கப்பட்டது. ஆனால் பெண்கள், முதியோர், குழந்தைகள் அனைவரும் மே முதல் ஒக்டோபர் வரை அவர்களது சொந்த ஊர்களிலும் வீடுகளிலும் திருநீராட்டுப் பெற்றனர். [8]

புதிதாக மனந்திரும்பிய பரதமக்களைத் திருமறையில் திடப்படுத்த சவேரியாரையும், மான்சிலாசையும் யேசுசபை அனுப்பியது. 1542 ல் சவேரியார் இந்தியா வந்தார். அதே ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் மணப்பாடு வந்தார். அவ்வூர் மக்களுக்கு முதன்முறையாகத் தமிழில் செபங்களையும், பக்திப்பாடல்களையும் கற்றுக் கொடுத்தார். தளர்வுற்றுக்கிடந்த அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்தினார். ஏழு ஆண்டுகளாக ஞானதீட்சை பெறாத சுமார் 10,000 குழந்தைகளுக்கும் இன்னும் சில பெரியோருக்கும் ஞானதீட்சை வழங்கினார். ஊர்கள் தோறும் ஓலை வேய்ந்த ஆலயங்களை எழுப்பி

னார். சிறுவர்களுக்காகப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார். ஆலயங்களில் செபவழிபாடு நடத்தவும், மறைக்கல்வி போதிக்கவும், கணக்கப்பிள்ளைகளை நியமித்தார்.

இதன் எதிரொலியே மன்னார் மக்கள், புனித சவேரியாரைத் தமக்கும் ஞானதீட்சை அளிக்கும்படி அழைக்கத் தூண்டியது. ஆகவே 1544 ஆவணி 21 ந் திகதிக் கடிதத்தில் ''நாகபட்டண கப்ரின் யாழ்ப்பாண அரசனுடன் நல்லுறவு கொண்டவனாதலால், மன்னார் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தவும் என மான்சிலால் சுவாமிக்கு எழுதினார். ஆனால் மன்னாருக்குப் புனிதரால் அனுப்பப்பட்ட பிரான்சீஸ் சவேரியார் என்ற பணிப்பாளர், குருவா? தியாக்கோனா? துறவுச்சகோதரரா? எனத் தீர்மானிக்கமுடியவில்லை. அவரும் 500 புதுக் கிறிஸ்தவர்களுடன் வேதசாட்சி முடிபெற்றார். 9

# வேதசாட்சிகள்

**சங்கிலி அரசன்:**

மன்னாரில் 1544 ஒக்ரோபரில் ஞானதீட்சை பெற்று கிறிஸ்தவர்களானோர், அதே வருடம் இறுதியில் சங்கிலி என அழைக்கப்படும் செகராசசேகரனால் கொல்லப்பட்டனர். புனித சவேரியாரின் கடிதம் (20 - 01 - 1545) யாழ்ப்பாண இராச்சியத்தை இலங்கை மன்னனின் அரசில் புறம்படுத்தி இருந்தது என்றும், இலங்கை அரசன் கிறிஸ்தவர்களை எதிர்க்கிறான் என்றும், மாறாக யாழ்ப்பாணத்தில் பெரும் ஆன்மீக அறுவடை 1545 ம் வருடம் முடிவதற்கு முன் காத்துக் கிடக்கிறதென்றும் குறிப்பிடுகின்றது. இதிலிருந்து போர்த்துக்கேயர் சங்கிலியை நீக்கி அவன் சகோதரனை அரியணை ஏற்றக்கூடும் என அவர் எதிர்பார்த்திருக்கலாம் என அறிய முடிகின்றது.

1545 தை 27 ல் புனித சவேரியார் எழுதிய கடிதத்தில் சங்கிலியன் கொலை செய்த கிறிஸ்தவர்களை வேதசாட்சிகளென்றும், சங்கிலியன் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் வேறொரு யாழ்ப்பாண இளவரசன் கிறிஸ்தவனாக மாற விரும்புவதைக் கேள்வியுற்ற சங்கிலி, அவனைக் கொல்லுவித்தான் என்றும், அவன் கொலையுண்ட இடத்தில் வானத்தில் ஒரு நெருப்புச் சிலுவை தோன்ற, நிலம் சிலுவை வடிவில் பிளந்தது என்றும், இது கண்டு பலர் கிறிஸ்தவர்கள் ஆனார்கள் என்றும் குறிப்பிடுகிறார். 10

யாழ்ப்பாண வைபவமாலை, சங்கிலியன் கொன்ற இளவரசனின் சகோதரன் பரநிருபசிங்கம் எனவும் (தன் சகோதரனின் மரணத்தின்போது நிகழ்ந்த புதுமைகளைக் கண்டு கிறிஸ்தவனாகினான்.) அவன் தென் இந்தியாவில் புகலிடம் புகுந்தான் எனவும் கூறுகின்றது. 11

சோற்றுக் (அன்னக்) கிறிஸ்தவர்கள்:

இம் மண்ணில் தமிழ் மக்கள் கிறிஸ்தவர்களாக மாறியதற்கான முக்கிய காரணங்கள், போர்த்துக்கேய அரசு நல்கிய சலுகைகள், பணம், உத்தியோகம் போன்றவை எனக்கொண்டு 19 ம் நூற்றாண்டு கிறிஸ்தவ எதிர்ப்புப் பிரசாரத்தில் ( Rice Ghristians ) சோற்றுக் கிறிஸ்தவர்கள் என்ற குற்றச்சாட்டை (சோற்றுக்காக மதம் மாறியவர்கள்) தமிழ், சிங்களப் பகுதிகளிலும் சிலர் முன் வைத்தார்கள்,

V. பேர்ணியோலா அடிகள் தமது நூலில் போர்த்துக்கேயர் காலம் பற்றிய முன்னுரையில் சிலர் அரசியல் இலாபத்துக்காக கிறிஸ்தவராக மாறினாலும், இலங்கையில் சோற்றுக் கிறிஸ்தவர் என்றோர் இருக்கவில்லை என எழுதியுள்ளார்.

உலக காரணங்களுக்காக கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் கூட விரைவில் தாங்கள் எதிர்பார்த்த நலன்களை விட, நட்டங்களே அதிகம் என உணரத் தொடங்கினர், தம் குலத்தவரால் அந்நியப்படுத்தப்பட்டனர்; போர்த்துக்கேயரால் அவமதிக்கப்பட்டனர். அரச ஊழியர்களால் ஏமாற்றப்பட்டனர்; சிலசமயங்களில் தம் சொந்தக் குழுக்களாலும் இவர்கள் கைவிடப்பட்டனர்.

இது மட்டுமல்ல, சங்கிலியனைத் தண்டிக்கும் போர் 1560 ம் ஆண்டுதான் தாமதித்து நடைபெற்றதும், அதன் பின்னும் போர்த்துக்கலின் நேரடி ஆட்சி நிலவவில்லை என்பதும் உற்று உணரப்பட வேண்டும். 1621 ம் ஆண்டில்தான் இறுதியாக போர்த்துக்கலின் நேரடி ஆட்சி ஆரம்பமாயிற்று. அதுவும் 36 வருடங்கள் மாத்திரமே நிலைத்தது என்பதையும் மறந்துவிடலாகாது. 12

எனவே ஆறுமுகநாவலர் அவர்கள் பதித கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பாவித்த ( Rice Chritians ) சோற்றுக் (அன்னக்) கிறிஸ்தவர்கள் என்ற சொற்பதம் இம்மண்ணின் கத்தோலிக்கருக்கு எதிராகப் பாவிப்பது பொருத்தமற்றதும் அர்த்தமற்றதுமாகும். 13

வேதசாட்சிகளின் இரத்தம்:

''வேதசாட்சிகளின் இரத்தம்' கிறிஸ்து பெருமானின் விலை மதிக்கப்பெறாத தூய இரத்தத்துடன் இரண்டறக் கலந்து கத்தோலிக்க மக்களை இரட்சணியப் பாதையில் வீறுநடை போடச் செய்தது என்பது இறையியல் உண்மையாகும். முதல் மூன்று நூற்றாண்டுகளில் வேதசாட்சிகளின் இரத்தச் சாட்சியமே உரோம சாம்ராச்சியத்தில் மாபெரும் மனமாற்றத்துக்கு அடியீட்டது. [14]

புனித பிரான்சீஸ் சவேரியாரின் கிறிஸ்தவத் தொண்டு இம் மண்ணிலும் இதைவிட யப்பானிலும் பெரும் ஆன்மீக அறுவடைக்கு வழிகோலியது. அவர் யப்பானில் நற்செய்தியை அறிவிக்கப் புறப்பட்டபோது, ஆயிரக்கணக்கானோர் மனந்திரும்பினர். அது காலப் போக்கில் 7000,000 கிறிஸ்தவர்களாகப் பெருகிற்று. அங்கு எழுந்த வேதகலாபனையினால் ஏறத்தாழ 50,000 யப்பானியக் கத்தோலிக்கர் வேதசாட்சிகளாயினர். பலர் கொடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டனர். நாகசாக்கியின் மலைச்சாரல்கள் அன்று சிலுவைக் காடுகளாகவே காட்சியளித்தன. [15]

இதுவே கோரியநாட்டுக் கிறிஸ்தவத்தின் வரலாறும், வியட்நாமிய கிறிஸ்தவத்தின் வரலாறும் ஆகும். அன்றுதொட்டு இன்று வரை ருசியா, போலாந்து, கங்கேரி முதலிய முன்னாள் பொதுவுடமை நாடுகளின் அடக்குமுறைக்குள் கிறிஸ்தவம் நீடித்து வளர்ச்சி கொண்டிருப்பது 20 ம் நூற்றாண்டின் சிறப்பான புதுமையெனக் கொள்ளலாம். [16]

1560 ம் ஆண்டில் தொடங்கி, 250 வருடங்கள் நீடித்த கொடூரமான யப்பானிய கத்தோலிக்க வேதகலாபனையின்போது, பல கத்தோலிக்கர் மலைக்காடுகளில் போய் ஓடி ஒளிந்துகொண்டனர். இவர்களின் மனந்தளரா விசுவாச வாழ்வை, 19 ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மிசனரிகள் வந்தபின்பே, வெளி உலகு அறிந்தது.

20 ம் நூற்றாண்டில் யப்பானின் புகழ் பூத்த நாவலாசிரியர் என்டோசுசுக்கி, [17] தன் முக்கிய நாவல்களான ''வெள்ளை மனிதர்கள்'' 'மௌனம்' போன்றவற்றிற்கு யப்பானில் நடந்த கத்தோலிக்க கலாபனையை பின்னணியாகக் கொண்டு படைத்துள்ளார். பொது மக்கள் மத்தியில் புதிய வேதத்தை (கத்தோலிக்கம்) கட்டாயத்தின் நிமித்தம் வாள் கொண்டு புகுத்தினர் என்று கூறுவோர், தம் கூற்றிலுள்ள உண்மைத்தன்மையைச் சற்று அலசி ஆராயவேண்டியது அவசியமாகும்.

# நான்குவகைக் கிறிஸ்தவர்கள்

முதலாம் வகையினர்:

16 ம் 17 ம் நூற்றாண்டில் நான்கு விதமான கிறிஸ்தவர்களை இனங்கண்டு கொள்ளலாம்.

முதலில் போர்த்துக்கேய குடும்பங்களும், அவர்கள் சுதேசிகளுடன் கலப்புமணம் புரிந்ததனால் ஏற்பட்ட பறங்கியர் குடும்பங்களுமாம். இவர்கள் மேற்கத்திய நடை உடை பாவனைகளை மேற்கொண்டு போர்த்துக்கேயராகவே மாறினர். இவர்கள் போர்த்துக்கேய மொழி பேசி பெயர்கள் வைத்து சுதேசிகளிடமிருந்து தம்மை அந்நியப் படுத்திபோர்த்துக்கேய ஆட்சியில் தங்கி நின்றனர். இலர்களுக்கு கிறிஸ்தவம் என்றால் போர்த்துக்கீசம்தான்.

போர்த்துக்கேய ஆட்சி முடிவுற்றதும் இவர்கள் பரதேசிகளாயினர். பலர் நிலபுலன், அந்தஸ்து, பணம் முதலியவைகளை இழந்து பரம ஏழைகளாயினர். சப்பாத்துத் தைத்தல், உடை தைத்தல் போன்ற தோழில்களைச் செய்து வாழ்ந்தனர். ஒல்லாந்தர் காலத்தில் இவர்கள் பரம ஏழைகளாக்கப்பட்டாலும், சிலர் பிரித்தானியர் காலத்தில் படித்து உத்தியோகம் பார்த்தனர். சிலர் வெளி நாடுகளில் குடியேறினர். சில குடும்பங்கள் இன்றும் யாழ்நகர், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு முதலிய தமிழ்ப் பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் சிலர் இன்றும் வீடுகளில் போர்த்துக்கேய மொழி பேசுகின்றனர். இவர்களது பாரம்பரிய நடனங்கள் பைலாக்களே நவீன சிங்கள தமிழ் இளைஞர்களின் மக்கள் பாடல் நடனங்களுக்கு அடித்தளமாயிற்று. [18]

இரண்டாம் வகையினர்:

இரண்டாம் தரப்பினர் சாதாரணப் பாமரமட்டத்தைச் சேர்ந்த தமிழர்கள். இவர்கள் பல கிராமங்களில் கிறிஸ்துவை அறிவித்த பிரான்சிஸ்கன், யேசுசபைத் துறவிகளின் போதனையைக் கேட்டு கிறிஸ்து பெருமானை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொண்டவர்கள். புனித பிரான்சீஸ் சவேரியார் இத்தரப்பினர் மத்தியிலே ஊழியம் செய்ய விரும்பி, தமிழ்மண்ணின் கரையோரத்தில் வாழ்ந்த மக்களிடையே 4 வருடங்களாக ஊழியம் செய்தார். கைமணியும், சிலுவையும், வெறுங்காலுமாக கிராமம் கிராமமாக அலைந்து திரிந்து அம்மக்களுக்குப் படிப்பிக்க தமிழ் தெரிந்த மிசனரிகள்

இல்லையென மனம் வருந்தி, தானே தமிழைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கற்று, விசுவாச மந்திரம், பரலோக மந்திரம், பிரியத்த மந்திரம் முதலியவற்றைத் தமிழிலே கற்பித்தார். அத்துடன் கற்பிக்கவும் வைத்தார்.[19]

என்றிக்கஸ் என்றிக்கஸ் என்ற குருவானவரை தமிழ் படிக்க வைத்து, முதல் கத்தோலிக்க மந்திரமாலையை எழுத வைத்துப் பதிப்பித்தார். இதுவே தம்பிரான் வணக்கம் என்ற தலைப்பில் முதலில் அச்சேறிய தமிழ் நூலாகும்.[20]

புனிதர் சாதாரண பாமர கத்தோலிக்க மக்கள் பற்றி தன் கடிதங்களில் உருக்கமாக விபரித்துள்ளார், சாதாரண படிப்பில்லாப் பாமர கத்தோலிக்கர் பறனாந்து, சந்தியோகு, சஞ்சோன் போன்ற தமிழ் மயப்படுத்தப்பட்ட போர்த்துக்கேய நாமங்களைத் தவிர வேறு போர்த்துக்கேய பெயர்களைத் தரிக்கவில்லை.

மன்னார் வாழ் கத்தோலிக்கருள் பரதகுலத்தவர் மாத்திரம் போர்த்துக்கேய பெயர்களைக் குடும்பப் பெயர்களாக வைத்திருப்பது இன்றும் உள்ள ஒரு வழக்கமாகும். வங்காலை, பேசாலை, தலைமன்னார் போன்ற இடங்களில் சில்வா, பல்டானோ, பெர்னான்டோ, மியாஸ், பீரிஸ், கூஞ்ஞ, குரூஸ், குலாஸ், மிராண்டா, பச்சேக்கு போன்ற பெயர்கள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இவை யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்க வழக்கில் அருகியே காணப்படுகிறது. இதை 1816 ல் தமிழில் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஞானஸ்நான (திருமுழுக்கு) பதிவேட்டிலிருந்து கண்டுகொள்ளலாம்.[21]

இவர்களது விசுவாசம், உணர்வுரீதியில் ஆழமாகவும், சிந்தனை ரீதியில் மேலோட்டமாகவுமே இருந்தது. இந்த விசுவாசம், திருச் செபமாலைப் பக்தியாலும், அந்தோனியார், சந்தியோகுமையோர் முதலிய பிரார்த்தனைகளாலும் (மன்றாட்டு மாலை) புனிதர்களின் வாழ்வை எடுத்தியம்பும், சந்தியோகு, அக்கினேஸ் முதலிய அம்மானைகளாலும், நாட்டுக் கூத்துக்கள் (எஸ்தாக்கியார், ஞான சௌந்தரி, எம்பிறதோர், செபஸ்தியார்...) போன்றவற்றோடு ஒப்பாரிகள், பள்ளுக்கள், உலாக்கள் முதலியவையாலும் வருத்த துன்பத்தின்போது நேர்த்தி வைத்தல், உபவாசம் அனுசரித்தல், கோவில் காத்தல், நூல் கட்டுதல், சத்துரு சங்காரமாலை ஓதுதல், முழங்காலால் செல்லுதல் போன்றவற்றாலும் வளர்க்கப்பட்டது.

இவற்றுடன் புனிதர்களின் கோவில் திருவிழாக்கள், அவற்றுள் இணைந்திருக்கும் கொடியேற்றம், நோவினை (நவநாள்) சுரூப சுற்

றுப்பிரகாரம், தேர்இழுப்பு, விருந்து போன்றவற்றால் குழும விசுவாசம் உறுதி கொண்டது, பாஸ்கா காலத்தில் (தவக்காலம்) உடக்கு (பொம்மை) பாஸ் (திருப்பாடுகளின் காட்சி) பசாம், ஆசந்தி, நடுத்தீர்வை உலா, ஒப்பாரி போன்றவை அருள்வாய்க்கால்கள் ஆகின. இவைபற்றி குவேரோஸ் அடிகளார் தெல்லிப்பளையில் கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்களும் யாழ்ப்பாணத்தில் வேதாகம நாடகங்களும் மேடையேற்றப்பட்டன என்கிறார். பிலிப்பல் டேயஸ் இதற்காக கோவில்களில் மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன என்றும் குறிப்பிடுகிறார். எனவேதான் இவர்களும் இவர்களது குழந்தைகளும், வேதகலாபனைக்கு முகம் கொடுத்து விசுவாசத்தில் நிலைத்து நின்றனர். 22

யாழ். இராச்சியத்தில் வேதசாட்சிகளின் பட்டியலை நோக்கும் போது இது புலனாகும். பட்டித்தோட்டத்து வேதசாட்சிகள் 500 பேரில் ஒரு குரு அல்லது தியாக்கோனைத் தவிர ஏனையோர் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆவர். இவர்கள் ஞானஸ்நானம் (திருமுழுக்கு) பெற்ற அடுத்த மாதமே (நவம்பர். 1544) கொல்லப்பட்டனர். கோப்பாயிலும், லிஸ்பன் நகரத்து பெல்க்கியோரும் யோவாலோவும் சாதாரண மக்களும் கொல்லப்பட்டனர். நல்லூரில் மேற்றிராணியார் டொம்யொஜ் மெமெனோர் தெய்வாதீனமாகத் தப்பினார். ஆனால் சில போர்த்துக்கேயரும் புதிதாக மனந்திரும்பிய கிராமக் கிறிஸ்தவர்களும் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவர்களை திரும்பவும் பௌத்த சைவ மதங்களுக்கு மாறச் செய்ய, சிங்கள தமிழ் மன்னர்கள் பலாத்காரத்தை உபயோகித்தனர். 23

பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள், கத்தோலிக்கர் 135 ஆண்டுகள் வேதகலாபனையின் ஊடாக, இன்றுவரையும் இம் மண்ணில் நிலைத்து, செழித்து நிற்பதற்கு, ஒருபெரும் சமூகவியல் காரணத்தையே சுட்டிக்காட்டுகிறார். ''சாதிக் குழுமங்களாக மனந்திரும்பியதனால்தான் கத்தோலிக்கராக நிலைத்து நிற்கின்றனர். 24 என்பது இவரது கூற்று. இது ஒரு அரைகுறை விளக்கமே.

ஏனெனில் மாதகலிலும் வேறு சில ஊர்களிலும் ஒரேசாதியினர் – அவ்வவ்வூர்களில் ஒரு பகுதியினர் கத்தோலிக்கராகவும் மறுபகுதியினர் சைவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்த அரைகுறைச் சமூகவியல் காரணம், மன்னார்ப்பகுதி மக்களைப் பொறுத்தமட்டில் ஓரளவு பொருந்துமெனலாம்.

**மண்ணின் மதம்:**

பாமர மக்களைக்கொண்ட திருச்சபைக்கு மனமாற்றம் பெற்று வந்த கத்தோலிக்கர்பற்றி வரலாற்று ஆசிரியர் பேர்ணியோலா குறிப்பிடும்பொழுது ''பிரான்சீஸ்கன் துறவிகள் வெறும் திருமுழுக்குச்

சடங்குகள் அற்புதமான மனமாற்றம் கொண்டுவரும் என்று நம்பினர். இதனால் திடீர்திடீர் திருமுழுக்குகளை ஊக்குவித்தனர்.''

''திருமுழுக்கின்பின் மறை அறிவைப் புகட்ட முயற்சித்தனர். சிலர் மறையறிவு இல்லாமலே வாழ்ந்தனர். மறை அறிவைப் பெற்றவர்கள் தாம் புதிதாக இணைந்துகொண்ட மறையில் பிரமாணிக்கமாக இருந்தனர்,'' என்று கூறியவர் போர்த்துக்கேயர் காலத்துக் கிறிஸ்தவ மனமாற்றத்துக்கான உண்மைக் காரணம் இன்னும் தெளிவாகக் கூறப்படவிலலை. திருப்தியாக ஆராயப்படவில்லை. ஒல்லாந்தர் காலத்து வேதகலாபனைகளின் மத்தியில் தங்கள் உடமைகள் பறிபோகும் நிலையிலும், தாம் நாடு கடத்தப்படும் ஆபத்தின் மத்தியிலும் எப்படி? ஏன்? தம் விசுவாசத்தில் நிலைத்து நின்றனர். என வினாக்கள் எழுப்புகின்றார். [25]

கத்தோலிக்கம் இம்மண்ணின் மக்கள் வாழ்வில் அகத்திலும் புறத்திலும் இரண்டறக் கலந்து, ஆழமாக வேரூன்றத் தொடங்கி, ஒரு மக்கள் மறையாகி, உயிர்த்துடிப்புள்ள ஒரு கிறிஸ்தவ வாழ்வை, தனியாகவும் சமூகமாகவும் தழைக்கப் பண்ணிற்று.

இதைப் போர்த்துக்கேயர் காலம் வித்திட்டு விதைக்க, யோசவ் வாஸ், கொன்சாலஸ் அடிகளார் காலம் அறுவடை செய்தது. இதனூடாகவே அந்நியநாட்டு மதமாகக் கருதப்பட்ட கத்தோலிக்கம், இம் மண்ணின் மக்கள் மதமாக, மண்ணின் கலை பண்பாட்டு இலக்கிய வாழ்க்கை வடிவங்களைக் கொண்ட மதமாக மாறிற்று என்பது ஆழமாக சிந்திப்போருக்குப் புலனாகும். [26]

மூன்றாம் வகையினர்:

16ம் 17ம் நூற்றாண்டுகளின் ஈழத்தமிழ் கத்தோலிக்கருள் மிக முக்கியமானவர்கள் இவர்களே இரண்டாம் வகையினருள் எழுந்த புத்திஜீவிகளே இவர்கள். இவ்வகையினர் இயற்கைமேல் காட்டும் பற்றினையும், இயற்கைக்கு மேற்பட்ட இறையருள் வாழ்வினையும் ஒட்டுப்போட்டு இணைத்து வளர்ப்போராவர்.

இம்மண்ணின் மக்களான கத்தோலிக்க சுதேச இல்லற புத்திஜீவிகள், மனந்திரும்பிய புலவர்கள், வைத்தியர்கள், கலைஞர்கள், மெய்யியலாளர், சித்தர்கள், பக்தர்கள், ஞானிகள் அனைவரும் இம்மூன்றாம் வகைக்குள் அடங்குவர். இவர்கள் இம்மண்ணின் அடிநாதத்துடன் அது எழுப்புகிற வெளிவடிவங்களான குறியீடுகள், உணர்வுகள், தேவைகள் என்பவற்றை நன்கு அறிந்தவராவர்.

இவர்கள் யேசுசபையின் பயிற்சிக்கூடங்களில், பிரான்சீஸ்கன் பாடசாலைகளில் கல்விபயின்றோர் அல்லது பிரபல ஆசிரியரான

என்றிக்கஸ் என்றிக்கஸ் அடிகளாருடன் அல்லது யாழ்ப்பாணத்தில் சிலகாலம் வாழ்ந்த தேநோபிலி (தத்துவ போதகர்), யுடன் தொடர்பு கொண்டோர் ஆவர். இவர்கள் வீரமாமுனிவரின் எழுத்தோவியங்களுடனும் தொடர்பு கொண்டிருந்தனர்.

இவர்களில் சிலர் வேதியராகவும், ஏனையோர் கத்தோலிக்க இலக்கியப் படைப்பாளிகளாகவும், கலைஞர்களாக, நாடக ஆசிரியர்களாக, சிற்பிகள், ஓவியர்களாகவும், மூலிகை வைத்தியர்களாக, கட்டிடக் கலைஞர்களாகவும், நோய்களை மிக்கேல் சத்துரு சங்கார மாலை, செப்புத்தகட்டு யந்திரம் முதலியன கொண்டு குணப்படுத்துபவர்களாகவும் தொண்டு புரிந்தனர்.

இவர்களது இச்செயற்பாடுகள் எல்லாம், மக்கள் சமூகத் தேவைக்கு ஏற்ப எழுந்த இல்லறக் கத்தோலிக்க பணிகளாகும். இவர்களாலேயே, மிசனரிக் குருக்களால் சாதிக்க முடியாதிருந்த மண்மயமாக்கல், பண்பாட்டு மயமாக்கல் என்பவை அன்றே வெற்றிகரமாகச் செயற்படத் தொடங்கின. ஒல்லாந்தர் காலத்து வேத கலாபனையின்போது, குருக்கள் நாடுகடத்தப்பட்ட நிலையில் இவர்களது செயற்பாடுகளே கத்தோலிக்கம் அழியாது நிலைக்க உதவியது.

அரச குடும்பத்தவர் சிலரும் மனந்திரும்பி கத்தோலிக்கர் ஆகினர். யாழ்ப்பாணத்தின் முதல் வேதசாட்சியான சங்கிலியனின் மகனின் சகோதரிகள், கோவாவில் துறவிகளாகியதுடன் அவர்களிலொருவர் பின்பு சாந்தமொணிக்கா துறவற மடத்தின் அதிபராகவும் பணி புரிந்தார். இன்னொரு சகோதரர் குருவானார். இவ்வரச பரம்பரையின் வாரீசுகள் மானிப்பாய், அச்சுவேலியில் வதிந்தனர் எனவும் இப் பரம்பரையைச் சேர்ந்தவரே சுவாமி ஞானப்பிரகாசர் எனவும் அவரிடம் இருந்த குடும்ப வரலாற்றுக் குறிப்புக் கூறுகின்றது.[27]

நான்காம் வகையினர்:

இவர்கள் அதிகமாக 1620ம் ஆண்டில் போர்த்துக்கேயர் முழு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் கிறிஸ்தவத்தில் சேர்ந்தவர்கள். யாழ்ப்பாணத்தில் செல்வம் செல்வாக்குமிக்க குடும்பத்தினர், அரச ஊழியர், நிலச்சுவாந்தார்கள், உலகீக புத்தி ஜீவிகள் ஆவர்.

இவர்கள் போர்த்துக்கேயரின் உத்தியோகங்கள், சலுகைகள், அதிகாரங்கள், பணவசதி பெறவே கிறிஸ்தவத்தில் சேர்ந்தவர்கள். போர்த்துக்கேய பிரமுகர்கள், தளபதிகள், அதிகாரிகளின் குடும்பப் பெயர்களை இவர்கள் தமக்கும் தம் குடும்பத்தினர்க்கும் சூடிக் கொண்டனர். அத்துடன் அவர்களைப் போலவே உடை உடுத்தி, உல்லாசமாக உலவி வந்தனர்.

தங்கள் பிள்ளைகளை அவர்களின் பள்ளிக்கூடங்களில் சேர்த்துப் படிப்பித்தனர். பல்லக்குத் தூக்கும் பாட்டாளிகளை அடக்கி ஆளும். அதிகாரிகளாக செயல்பட்டனர். வீதிகளில் வீறுநடை போட்டும், கோவிற் திருநாட்களில் பூசை பிரார்த்தனைகளில் முண்டியடித்து முன் நின்று பங்குகொண்டும் வெளிவேடதாரிகளாக வாழ்ந்தனர்.

1656 ம் ஆண்டு போர்த்துக்கேயர் ஆட்சி கிழக்கிந்திய கம்பனியிடம் வீழ்ச்சியுற இவர்கள் ஒல்லாந்தருடன் ஒட்டிக்கொண்டனர். கூட்டுறவில் குளிர் காய்ந்தனர். உள்வீட்டில் சைவமும் வீதியில் வேதமும் என இரட்டை வேடம் பூண்டு வாழ்ந்தனர். இப்படி வாழ்ந்தவர்களும், இவர்களோடு ஒட்டி வாழ்ந்த ஒட்டுண்ணிகளும் வேதகலாபனையின்போது வேதத்தை மறுதலித்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை.[28]

கோட்டையின் அரசன் தர்மபாலா, தொன்யுவான் என்ற போர்த்துக்கேய அரசனின் பெயரை, தன் பெயரோடு சேர்த்துக் கொண்டதுபோல, இங்கும் சில முக்கிய பிரமுகர்கள் சுயநலத்துக்காக இப் பெயரை சூடிக்கொண்டனர்.[29]

பணம், பதவி, பொருள் ஆசையால் தூண்டப்பட்டு மனம் மாறிய சில போலிக் கிறிஸ்தவர்களாலேயே, இம் மண்ணில் ஏறத்தாழ 50 வீதம் கிறிஸ்தவர்களாக மனம் மாறினர் என்று குவேரோஸ் என்ற ஆசிரியரைக் குறிப்பிட வைத்தது.[30]

வண. யோசவ்வாஸ் அடிகள் காலத்தில் இவர்கள் தொகை மிகச் சிறிது. இவர்களில் பலர் பெயரளவில் டச்சு சீர்திருத்தசபை அங்கத்தவர்களாயினர். பல வருடங்கள் ஊழியம் புரிந்த பல்டேயஸ் என்ற டச்சுப் பாதிரியார், இப் போலிக் கிறிஸ்தவர்களின் வெளிவேடப் போக்காலும் கம்பனியாரின் உலகாசையாலும் மனமுடைந்தார். பின்னர் வெளியேற்றப்பட்டார். இவர்களின் தொகையை இவர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[31]

இப் போலிக் கிறிஸ்தவர்களின் ஆதரவில் வாழ்ந்த ஒல்லாந்த சீர்திருத்த சபையின் அங்கத்தவர் ஒருவர் கூட இன்று இம் மண்ணில் இல்லாது போய்விட்டனர். இச்சபையின் கோயில்களே, வெறும் எச்சங்களாக, பிரித்தானியர் காலத்தில் இங்கு வந்த அமரிக்க ஆங்கில மிசனரிகளால் தங்கள் கோயில் தேவைக்காக பயன் படுத்தும் கட்டிடங்களாக மாற்றப்பட்டன.

# வாளும் மனமாற்றமும்

**சந்தியோகு:**

போர்த்துக்கேயர் கிறிஸ்தவ மதத்திற்கு மக்களை, துப்பாக்கியும் வாளும் கொண்டு பயமுறுத்தி, அடக்கி ஒடுக்கி, பலாத்கார முறைகளில் மதமாற்றம் செய்தனர் என்ற சிலரின் கூற்றில் எவ்வளவு உண்மை உள்ளது என்பது ஆராயத்தக்கது.

இக் குற்றச்சாட்டு சிங்கள வரலாற்று நூல்களான மகாவம்சத்திலோ, ராஜவலியவிலோ அல்லது போர்த்துக்கேய ஒல்லாந்த நூல்களிலோ வெளிவரவில்லை. இது முதன்முதலாக ஆங்கிலேயர் கால புரட்டஸ்தாந்த மிசனரிகளால் முன்வைக்கப்பட்டு எமர்சன்ரெனன்ற் என்ற பிரித்தானியரால் எடுத்தாளப்பட்டது. பாரீயா யே சூசா என்ற போர்த்துக்கேய ஸ்பானிய எழுத்தாளரின் கூற்றை தவறுதலாக கையாண்டதால் ஏற்பட்ட விளைவு இது. இதை 1930 களில் பேராசிரியர் டேவிற்ஹசியும், கலாநிதி மலசேகராவும் ஆதரித்தபோது S. G. பெரேரா அடிகளார் இக் கூற்று தவறென்பதை நிரூபித்துள்ளார். [32]

போர்வழி வந்து எம் மண்ணை ஆக்கிரமித்த போர்த்துக்கேயரின் போர் முறைகளையும், மதமாற்ற முறைகளையும் உற்று உணர்ந்து வேறுபடுத்தி இனங் கண்டுகொள்ளுதல் அவசியம். தமிழ் அரசனுடன் போர் பொருதி, அவன் படையினரைக் கொன்ற போர்த்துக்கேய இராணுவம் சிலுவைக்கொடி ஏந்தி, தம்போர்த் தாரக மந்திரமாக 'சந்தியோகு' என்று முழங்கியது.

எழுநூறு வருடங்களாக தம் மண்மீட்புப் போரில், ஆக்கிரமிப்பாளரின் போர்க் குரல்கட்கெதிராக பரிசுத்த தேவனே என்ற அர்த்தம் தொனிக்கும் (San Diaago) சந்தியோகு என்ற பதத்தையே ஒரு சுலோகமாக போர்த்துக்கேயர் பாவித்தனர் போரில் மடிந்த சிப்பாய்கட்கு இராணுவ பணிக் குருக்கள் (Millitary Chaplains) சிலுவை ஏந்தி, செபங்களைச் சொல்லி அவஸ்தை பூசுதல் அனுமானம் கொடுத்தனர்.

அதே வேளை போர்த்துக்கேய இராணுவம் தமிழ் அரசனின் அரண்மனையையும், அதன் காப்பரணான கோட்டையையும். அதனருகே இருந்த அரசன் வழிபடும் ஆலயங்களையும் தகர்த்தது. தமிழ்ப் பாரம்பரியங்களும் போர்த்துக்கேய ஆவணங்களும் குறிக்கும் இச் சம்பவங்கள் போர்க்கால நடவடிக்கைகளாகவே கணித்து மதிப்பிடப்படல் வேண்டும்.

தென்னிந்தியாவில் 6 ம் 7 ம் 8 ம் நூற்றாண்டுகளில் பல்லவ எழுச்சியின் போதும் 9 ம் 10 ம் 11 ம் நூற்றாண்டுகளில் சோழ எழுச்சியின்போதும் மாற்றுச் சமயங்களின் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்பட்டு அவற்றின் மேலே தமது வழிபாட்டுத் தலங்களைக் கட்டியெழுப்பினர் என்பது அகழ்வாராய்ச்சி மூலம் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். 8 ம் 9 ம் நூற்றாண்டுகளில் வட இந்தியாவில் இஸ்லாமியப் படை எழுச்சியில் புகழ் மிக்க இந்துக் கோவில்கள் தரை மட்டமாக்கப்பட்டு, அவற்றின் செல்வங்கள் சூறையாடப்பட்டு அவ்விடங்களில் தாஜ்மகால், செங்கோட்டை நிறுவப்பட்டன என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. [33]

இந் நூற்றாண்டில் எம்மண்ணில் அமைதி காக்க வந்த இந்துக்கள் நிறைந்த, இந்திய அமைதி காக்கும் படை அழித்த சகல மத ஆலயங்களும், அவற்றின் வளங்களும் எப்பெறுமானம் கொண்டவை என்பதையும் எண்ணிப்பார்ப்பது ஏற்புடையது. போர் என்ற வெறிககு ஆண்டவனும் ஆலயங்களும் விதிவிலக்காகினவா?

யாழ்ப்பாணத்து முதல் வேதசாட்சி, லிஸ்போனின் பெல்கியோர் அடிகளாரைப்பற்றி A. J. V. சந்திரகாந்தன் அவர்கள் தம் நூலில் அடிக்குறிப்பில் விமர்சனம் செய்துள்ளார். யாழ்ப்பாணத்து அரசனின் முன்னிலையில் அடிகளார் விசாரிக்கப்பட்டபோது, ''சிரஞ்சீவியரசன், இறைவனுக்கு கொடுக்கப்படவேண்டிய மகிமையை விக்கிரகங்கட்கு கொடுக்கலாகாது என்ற காரணத்தாலேயே, விக்கிரகங்களை உடைப்பித்தேன்'' என்று பகர்ந்தார். [34]

அடிகளும் அவருடன் கோப்பாய்க் கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதித்த ஐவரும் சாட்டையால் அடிக்கப்பட்டு நான்கு நாட்கள் பட்டினி போடப்பட்டு, சிரச்சேதம் செய்யப்பட்டனர். இவர்கள் கோப்பாய்க் கிராமத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலுமே வேதம் போதித்தனர். இவர்கள் போதனையால் மட்டுமே மக்கள் மனம் மாறவில்லை.

இவர்களின் ஏழ்மை, காருண்ணியம், அன்பு, பக்தி, விசுவாச வாழ்வு, வைராக்கியம் கண்டும் சிலர் மனம் திரும்பி மதம் மாறினர். மனம்மாறியவர்கள் ஊர்க்கோவில்களில், தாங்கள் முன்பு வழிபட்ட சிலைகளை என்ன செய்வதென அடிகளாரிடம் வினவினர். அவர் அவற்றை அழித்து விடுமாறு அறிவித்தார். அவர்களும் அப்படியே செய்தனர். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

பிசாசு வழிபாடு:

லிஸ்போனின் பெல்கியோர் அடிகள் கூறியவற்றை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தம் நூலில் ''இவை பிசாசானவனுக்கு

அர்ப்பணிக்கப்பட்டிருப்பதால், முழு உலகின் அரசனான இறைவனுக்கு மாத்திரமே உரிமையானவற்றை, அவனுக்கு அர்ப்பணிப்பது இறைமக்களுக்குச் செய்யும் துரோகம் ஆகும். பிசாசுக்கு இவைகளில் எவ்வித உரிமையும் இல்லை. ஆதலால் ஊழியனாகிய நான் அவைகளை அழித்(த)ேன்'' என்று கூறியதாக எழுதியுள்ளார். 34

உலக மதங்களின் தத்துவ நோக்கில், தீமையின் வடிவமான சாத்தானை அல்லது பிசாசை மூன்று முக்கிய இறையியல் பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

ஒன்று — தீயசக்தி – இறைசக்தி இரண்டுக்கும் வித்தியாசமில்லாத இறையியல் கொள்கை, வாழ்வு – சாவு; ஆக்கம் –அழிவு; நன்மை– தீமை; என்பவை ஓர் இறைவனின் வெளிப்பாடே என்னும் கொள்கையைக் கொண்டுள்ளன.

இரண்டு — தீமைக்கும் நன்மைக்கும் வரையறுக்கப்பட்ட வித்தியாசங்கள் உண்டு (தீமை அனுமதிக்கப்பட்டால், நன்மையின் நலன் நன்கு புரியும்) நன்மையும் தீமையும் இரு வெவ்வேறு தனித்தியங்கும் சக்திகள். நித்தியமாக ஒன்றோடு ஒன்று போர் புரிகின்றன.

மூன்று – இறைவனுக்கும் சாத்தானுக்கும் முற்றும் முழுதான முரண்பாடுகள் உண்டு. சாத்தான் இறைவனால் இறுதியில் தோற்கடிக்கப்படுவான். 35

பேய், பூதம் என்ற பதங்கள் தமிழ் இலக்கியங்களில் கடவுளுக்கும் பாவிக்கப்பட்டிருக்கின்றன. சிவனை பூதவராயன் என்றும், கொற்றவையைப் பேய்ச்சி, பிசாசுகளுடன் சுடலையில் நடமாடுபவள் என்றும், சங்க இலக்கியங்கள் சித்தரிக்கின்றன. சைவம் எழுச்சி பெற்று, புத்துயிரடைந்த 20ம் நூற்றாண்டு காலகட்டத்தில் சுவாமி ஞானப்பிரகாசர் இதை எழுதியதால். பெரும் எதிர்ப்பையும் சந்தித்தார். 36

இவருக்கு சற்றுமுன் வாழ்ந்த ஆறுமுகநாவலர் அவர்கள் பேய் பிசாசு வழிபாட்டுக்கும் இறைவழிபாட்டுக்கும் உள்ள வித்தியாசத்தை, தன் பிரசுரங்களில் விபரமாக விளக்கியுள்ளார். பேய் பிசாசுகளை வழிபடுதல் சைவர் வழி அல்ல, என்று எடுத்துரைத்தார். அவர் வழிபாட்டை ஆகம சைவம் என்றும், ஆகம முறைப்படி அனுசரிக்கப்படாத சைவம் என்றும் பிரித்தார்.

இதற்கு உதாரணமாக "'இந்தியாவில் பெரும்பான்மையோருக்கு காடன், மாடன், கறுப்பன், வீரன், பெரிய தம்பிரான் முதலிய

பிசாசுகளே குலதெய்வங்கள் என்று இந்தியாவின் சுயநிலையை சுட்டிக் காட்டியுள்ளார். யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற கண்ணகி வழிபாட்டைக் குறைகூறி, அதைக் கைவிடவேண்டுமென்று வலியுறுத்தினார். ''செட்டிச்சியும் பிற சமயத்தவளுமாகிய கண்ணகி, (பரம்பொருள் அல்ல.) தாழ்ந்த சாதியாளும் அந்நிய சமயத்தவளுமாயுள்ளவள்......'' என்றார்.[37]

இத் தெளிவு சங்கிலியன் காலத்தில் இருந்ததா?

யாழ்ப்பாணத்தில் சிறு பாரம்பரியத்தில் உள்ளவர்களைத்தான் கத்தோலிக்கர் மதமாற்றிக் கொண்டார்கள் என்று பேராசிரியர் சிவத்தம்பி சொல்லிவிட்டு தரும் சின்னப் பாரம்பரியத்து தெய்வங்கள் பெயர்ப் பட்டியலும், நாவலரின் பட்டியலும், சுவாமி ஞானப்பிரகாசரின் பட்டியலும் ஏறக்குறைய ஒன்றாகவிருப்பதாலும், பெல்கியோர் அடிகளின் கூற்றை பிழையாக எடுக்க முடியாது.[38]

எனவேதான் பெல்கியோர் அடிகளின் கூற்றும் செயலும் கிறிஸ்தவக் கொள்கைப்படி தவறாகக் கொள்ள முடியாது. 'பேய்' என்பது இறைவனுக்கு எதிராளி என்ற அடிகளின் நோக்கும் இருந்தபோது, அரசனின் நோக்கும் போக்கும் மறுதலையாகவே இருந்தன, இதனால் அரசன் ராச துரோக நிந்தனையை இவர்களில் சுமத்தி, சிரச்சேதம் செய்தான்.

இந்த வரலாற்று உண்மையை நன்கு புரிந்து கொண்டால். வீண் குரோதங்கள் நீங்கும். சர்வ சமய ஒப்புரவு உண்டாகும் என்பது திண்ணம்.

மனித உரிமைகள்:

தம் இரத்த சாட்சியத்தாலும், ஏழ்மை, காருண்ணிய வாழ்க்கை முறையாலும், இம் மண்ணின் மைந்தர்கள் சிலரை கிறிஸ்தவத்தில் சேர்க்க மிசனரிகள் தங்களை அர்ப்பணித்தனர். அதே வேளை போர்த்துக்கேய இராணுவத்தினர் சிலர், கோப்பாய்க் கிராமங்கட்குள் புகுந்து சூறையாடி மக்களைத் துன்புறுத்தினர் இம் மக்களைப் பாதுகாக்க மிசனரிகள் முன்வந்தனர் என்பது மனிதவரலாற்றில் மறக்கமுடியாத உண்மை.

மனித உரிமைகளைப் பொறுத்தவரையில் சோழர் காலத்து வரலாற்றுச் சான்றுகள், மிகமோசமான மனித உரிமை மீறல்களைக் கொண்டவை எனச் சுட்டிக் காட்டுகின்றன. அக்காலத்து இராணும் பிராமணர், பெண்கள், குழந்தைகள் உட்பட பல நிராயுதபாணிகளைக் கொன்று குவித்தபொழுது, அன்று மக்களுக்காகக் குரல்

கொடுக்க, ஆட்களோ, அமைப்புகளோ இருந்ததாகத் தெரிய வில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. [39]

மாறாக, போர்த்துக்கேய இராணுவ அட்டூழியங்களை, மிசனரிகள் நேரடியாகக் கண்டித்தும், உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும், அரசனுக்கு மனு அனுப்பியும், உலகம் எங்கும் தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இந்த மனித உரிமைக் குரலொலிக்கான சான்றுகளை லிஸ்பன், வத்திக்கான் நூல் நிலையங்களிலுள்ள பண்டைய ஏடுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். குறிப்பாக யேசுசபை எழுத்தாளர் குவேரோஸ், பிரான்சீஸ்கன் சபை எழுத்தாளர் பவுலே டிரிறினிடாட் ஆகியோரின் ஏடுகளிலும் இதற்கான சான்றுகள் நிரம்ப உள்ளன. [40]

அன்று போர்த்துக்கேய மிசனரிகள். மனித உரிமைக்காக குரல் கொடுத்த பாதையிலே, இன்றும் பல மூன்றாம் மண்டல நாடுகளிலும், மனித உரிமைக்காகக் குரல் கொடுக்க, மிசனரிகள் முன்வருவதைக் காண்கிறோம். எல் சல்வடோரின் ஒஸ்கார் ரோமேரோ இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். [41]

ஆசியாவைப் பொறுத்தமட்டில் சீனாவில் மனித உரிமை காத்தல், அன்று இந்தியாவை விட சிறப்பாக இருந்தது. பேராசிரியர் யோசவ் நீட்காம் ( Joseph Needham ) சீனாவின் தாவேஸ்ருக்கள், சமூக அரசியல் பொருளாதாரக் கெடுபிடிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்ததை சமூக விஞ்ஞான ரீதியில் விளக்கியுள்ளார். தாவேஸ்ருக்களின் பாடல்கள், நிலச்சுவாந்தார்கள், அரசர்கள், மந்திரிகள், மானிட நாகரிகத்தின் நிர்வாகிகள் ஆகியோரின் நசுக்கும் தலையீட்டை எதிர்த்தும் கண்டித்தும் ஒலித்த, ஒடுக்கப்பட்ட ஏழைகளுக்கான குரல்களாகவே இருக்கின்றன. [42]

அவர்கள் மக்களை பண்டைய கூட்டுக் குடும்ப வாழ்வுக்குத் திரும்பும்படி அறை கூவினர். சமூகம், வர்த்தகரீதியில் அமைக்கப்படுவதை எதிர்த்தனர். இதுபோலவே அன்று இந்தியாவில் ஆதி பௌத்தம், தனியுடைமையற்ற சம சகோதரத்துவத்தை அடைய சங்கத்தை நிறுவியது. [43]

தமிழ் மண்ணில் தனித்து உதிரிகளாக சித்தர்கள் மாத்திரமே விடுதலை, சமத்துவச் சிந்தனைகளை வளர்த்து, பிராமண ஆதிக்கம், சமய அனுஷ்டானங்களின் கெடுபிடி, பெண் அடிமைநிலை, சாதிக்கொடுமை போன்ற அடிமைத் தனங்களிலிருந்து மக்களை விடுவிக்க முனைந்தனர்.

புனித பிரான்சீஸ் அசிசியாரின் சீடர்கள், ஐரோப்பிய மத்திய காலப்போர்களில் வாள் ஏந்த மறுத்தனர். சொகுசு, இடாம்பீகம், செல்வச் செருக்குடன் தம்மை இணைக்காது, தரித்திரராய், காலணிகளின்றி வீதிகளில் வெறுங்காலலாய் நடந்து, இயற்கையுடன் இணைந்து, அச் சமூகத்துக்கே ஒரு சவாலாய் வாழ்ந்தனர்; சாத்வீக ரீதியில் மனித மாண்புக்காக உழைத்தனர். பணம் படைத்த, அதிகாரம் மிக்க திருச்சபை நிர்வாகத்தினருக்கு விளங்க முடியாத ஒரு புதிராக இருந்தனர்.

இவர்கள் 16ம் நூற்றாண்டில் தென் அமெரிக்கா வந்த பொழுது, வாளேந்தி பலத்தால் மக்களை அடக்கிய தீயவர்கள் பக்கம் சாய்ந்து விடவில்லை. அரசுகளினதும் இராணுவத்தினதும் கெடுபிடிகளை எதிர்த்து, மக்களைப் பாதுகாக்க, தலத்திலும், தலைநகர் லிஸ்பன், உரோம் முதலிய இடங்களிலும் தங்கள் எதிர்ப் பிரசாரங்களை நடத்தி, அயராது மக்கள் பணியே தம்பணியாக உழைத்தனர். இவர்களின் பணி வாழ்வு பற்றிய வரலாற்று வடிவங்களை ஐரோப்பிய தலைநகர்களிலுள்ள பெரும் நூல்நிலையங்களில் பாதுகாக்கப்படும் ஏட்டுச்சுவடிகளில் இன்றும் காணலாம்.[44]

6ம் நூற்றாண்டில் புனித ஆசீர்வாதப்பர் சபை கிராமங்களில் எல்லைக் காடுகளைத் தமது பணிக்களமாக்கிப் பணிபுரிந்தது போன்று 12ம் நூற்றாண்டில் பிரான்சீஸ்கன் சபையினர் நாகரிக மக்கள் நிறைந்த நகர்ப்புறங்களைத் தம் விளைநிலமாக்கி ஆன்மீக அறுவடைக்காக அயராது உழைத்தனர்.

ஏழ்மையும் எளிமையும் கொண்டு செபதப வாழ்வில் கிறிஸ்துவின் நற்செய்தியை வனாந்திரிகளாய்த் திரிந்து போதித்து வாழ்ந்த பிரான்சிஸ்கன் துறவிகள் 16ம் 17ம் நூற்றாண்டில் எம் மண்ணுக்கு ஆன்மீக விவசாயம் புரிய வந்தனர்.

ஆன்மீக உள்ளார்ந்த உந்துதலை, இம் மண்ணின் மக்கள் உள்ளத்தில் உழுது, வித்திட்டு, நீர்பாய்ச்சி இளம் கிறிஸ்தவ திருச்சபைக்கு வேண்டிய தாந்தரிக கத்தோலிக்க மரபினை, பிரான்சிஸ்கன் சபையினர் உருவாக்கினர். இவர்களுக்கு உற்றதுணையாக, தோளோடு தோள் கொடுத்து, சிந்தனை, செயல்களை, ஒழுங்குபட்ட நெறிப்படுத்தல்களை சேசு சபையினர் புரிந்தனர்.

# தாந்தரிகமும் மரியாளும்

தாந்தரிகம்:

மனிதன் பற்றியும் இப்பிரபஞ்சம் பற்றியும் உள்ள விஞ்ஞான ரீதியான, உள்ளார்ந்த ரீதியான செயற்கை விளக்கமே தாந்தரிகம். இதனை நன்கு அறிந்து அதன் நடைமுறைத் தத்துவங்களைக் கடைப்பிடித்தால், எம்முள் உறைந்திருக்கும் இயற்கையான தெய்வீகத் தன்மையை உற்று உணர்ந்து உண்மை நிலை எய்தலாம்.

திருமூலர் படைத்த 3000 செய்யுள்களை 9 தந்திரங்களாகப் பிரித்து தமிழ்மரபு திருமந்திரம் என அழைக்கப்படுவதைப் பார்க்கிறோம். காலப்போக்கில் இப்பதம் (தாந்தரிகம்), மந்திர தியான யோக நிலைகளையும் குறிக்கப் பயன்படலாயிற்று.

தாந்தரிக மரபில் பெண் தெய்வ வழிபாடே முக்கியமானது. வணங்கப்பெற்ற தெய்வத்தின், பெண் தெய்வ அம்சம் முக்கியத்துவம் பெறும். அதற்காகவே தாந்தரிகத்தில் மந்திரங்கள், தந்திரங்கள், உருவம், படம், ஓசை வடிவம் போன்றவை உடலியலுக்கு முக்கியத்துவம் அளித்தன. அத்துடன் உடலின் உண்மைத் தன்மையை உறுதி செய்து, அதன் நன்மைகளையும் எடுத்துரைக்க நாடிகள், சக்கரங்கள், குண்டலி போன்றவற்றின் அறிவையும் தந்தது. அத்துடன் மூலிகைகள், இரசாயன வைத்தியமுறைகள், தியான யோக ஆசனங்கள், விரதம், மௌனம் போன்றவற்றையும் ஊக்குவித்து வந்தது.

மானுடத்தின் உன்னத இரகசியங்களையும், வாழ்க்கை முழுமையையும் நன்கு புரிந்து, அதன் உள ஆன்ம வேதனைகளைக் களைந்தெடுக்க, போக்க, மருந்துகளையும், பேய் ஓட்டும் மந்திரங்களையும் பயன்படுத்துகிறது.

மானுடத்தின் அனைத்து அனுபவங்களிலும் பரவிப் படர்ந்து மருத்துவம், கலை, கலாச்சாரம் போன்ற சமூகவியல் உணர்வுகளிலும் ஊடுருவி, அனைத்தின் உயிராக அது விளங்குகிறது. எனவேதான் நம் மண்ணின் பண்டைய மதங்களான சைவம், வைணவம், பௌத்தம், என்பன தாந்தரிகத்தினை உள்வாங்கி, அதன் அம்சங்களை அணிந்தவையாக, தம் வழிபாடு, தியானம், சிந்தனை, வாழ்க்கை முறைகளை அமைத்தன. 45

கத்தோலிக்க தாந்தரிகம்:

இவ்வேளை தாந்தரிகத்திற்கும், கத்தோலிக்கத்திற்கும் என்ன தொடர்பு என்ற வினா எழுகிறது? கத்தோலிக்கம் 2000 ம் ஆண்டு

களாக உலகின் எட்டுத்திக்கும், பல கலாச்சாரப் பின்னணியில், நல்ல தாந்தரிக அம்சங்கள் கொண்டதாக மலர்ந்து கனி கொடுத்திருப்பதைக் காணலாம்.

'தாந்தரிகம்' என்ற வார்த்தையை கத்தோலிக்க மரபில், 'ஒப்புமை அர்த்தத்தில்' (Analogical Sense) தான் பயன்படுத்துகிறோம். கிறிஸ்து சகாப்தத்தின் முதல் நான்கு நூற்றாண்டுகளில், ஆபிரிக்க, ஆசிய திருச்சபைகளே, திருச்சபையின் வளர்ச்சியில் முக்கிய பங்களிப்புச் செய்தன. ''விருத்தசேதனத்திலிருந்து வந்த திருச்சபை'' என்ற நூலில் B. பகாட்டி என்ற பிரான்சீஸ்கன் சபைக் குரு பலஸ்தீன அகழ்வாரய்ச்சியிலிருந்து, யூதக் கிறிஸ்தவர்களின் பங்களிப்பினை நன்கு ஆராய்ந்துள்ளார்.

புதிய ஏற்பாட்டு நூல்களின் பின்னணி இத்தலத்திருச்சபை தானே. இவர்கள் வாழ்ந்த குழுவாழ்வு இயற்கையோடு இயைந்த ஏழ்மை, எளிமை ஆகியவையே யாகப்பரின் திருமடலுக்கும், எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமடலுக்கும் பின்னணியாகும்.[46]

புனித சூசையப்பர்:

தன் சொந்தப் பிரயாசையினாலேயே ஒருவன் உழைக்கவேண்டும் என்பதை புனித சூசையப்பரைக் கதா நாயகனாகக் கொண்டு எழுதிய ''யோசேப்பின் வரலாறு'', சுட்டிக்காட்டுகிறது. புனித சூசையப்பரின் ஏழ்மை, அமைச்சல், விரதத்துவம் என்ற பண்புகள் சிறப்பாக ஒளிர்விடும்வகையில் தேம்பாவணியில் பாடப்பட்டுள்ளன. புனித சூசையப்பரின் இப் பண்புகளையே அன்று பாலஸ்தீன, சீரிய, எகிப்திய பாலைவனங்களில் வாழ்ந்த தவசிகள் பின்பற்றினர். இன்றும் அப் பண்புகளே கத்தோலிக்க துறவிகளால் (ஆசீர்வாதப்பர், ராப்பிஸ்ற், செபமாலைத்தாசர்.) போற்றப்பட்டு பின்பற்றப்படுகின்றன.[47]

மரியாளின் மகிமை:

ஆதிப் பாலஸ்தீன திருச்சபைகளில் நற்கருணைப்பக்தியும், அன்னை மரியாளின் பக்தியும் சிறப்பாகப் பின்பற்றப்பட்டன. நசரேத்தில் மரியாளுக்கு வானதூதர் மங்கள வார்த்தை கூறிய இடத்திலிருந்த கோவிலில் நடத்திய அகழ்வாராய்ச்சியின் ஆய்விலிருந்து, மரியாளுக்கு ஆரம்பம் தொட்டு, மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை, வணக்கம் செலுத்தப்பட்டு வந்ததற்கான சான்றுகள் கிடைக்கப் பெற்றன.

அங்கு வந்த யாத்திரிகர்களில் ஒருவர், வானதூதரின் இடத்தில் தன்னை வைத்து, அதே வார்த்தைகளால் மரியாயை வாழ்த்தியுள்

ளார். ("Χe Mapia") "மரியே வாழ்க" என்று மாபிளில் பொறிக்கப்பட்டுள்ள வார்த்தையைத் தொடர்ந்து வரும் ஏனைய சொற்றொடர்களிலிருந்து அங்கு மரியாளின் உருவம் தாங்கிய ஓவியம் சீலையில் தீட்டப்பட்டு வைக்கப்பட்டிருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். [48]

ஆறாம் நூற்றாண்டுவரை பாலஸ்தீனத்தில் அன்னை மரியாள் பக்தி, கிறிஸ்தவ மரபாக இருந்தது. மனுவுரு எடுத்த இறைவார்த்தையின் ஊற்றும் உறைவிடமும் தேவதாயே என்ற காரணமே இப்பக்தியின் ஆணிவேராகும், தேவ அன்னையின் இப் பக்தியை 450 ம் ஆண்டின் எபேசு நகர் திருச்சங்கம் "இறைவனைத் தாங்கியவள்" என்ற நாமத்தைச் சூட்டமுன்னும், எம் மண்ணில் மாதாபக்தி பரவ முன்னும், பாலஸ்தீன ஆசிய திருச்சபைகளில் வேரோடி இருந்தது என்பது வரலாற்று உண்மையாகும். மரியாளின் "முப்பொழுதும் கன்னிகை" என்ற உண்மை, ஆசிய திருச்சபைகளில் 2 ம் நூற்றாண்டிலிருந்தே ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். அன்று தொடங்கி மரியாளின் மகிமையும் அருட்கொடைகளுடன் அவள் புகழும் போற்றப்பட்டு வருகிறது.

மரியாள் இறைவனின் தாய், மாந்தரின் மாதா, தாய்மையின் தூய்மை வடிவம், உலகம் பூமி பிரபஞ்ச பிராக்கிருதியின் தூய்மையின் குறியீடு, அடையாளமும் ஆவாள். அவளின் மன்றாட்டு மாலையில் கோர்க்கப்பட்ட வண்ண வடிவப் புகழ் பூக்கள் பல, ஆசிய திருச்சபையின் அனுபூதி பூங்காவில் இருந்து பெறப்பட்டவையே.

அன்னை மரியாளே, கத்தோலிக்க தாந்தரிக மரபின் மையக் கருவாகும். தேவதாயின் தாள் பணிந்து புகழ்பாடும் அன்னை வழிபாடு, ஆழ்ந்த இறையியல் இருப்பில் வேர்பரப்பி தொன்றுதொட்டு வளர்ந்து வந்துள்ளது. அன்னையின் அடிதொழுத ஆதித்திருச்சபை, மனித உழைப்பு, ஏழ்மை, எளிமை, தாழ்மை ஆகிய பண்புகளை சூசையில் கண்டு மகிழ்ந்தது. [49]

நாம ஒலி:

பெண்மை என்னும் மானுடத்தின் நிறைவுக்கு, முதலிடம் கொடுத்த தாந்தரிகம். அடுத்து நாமஒலி என்னும் அசைவின் அதிர்வுக்குள்ளாக மானுடத்தை நெறிப்படுத்தியது. எகிப்திய துறவறத்தின் தந்தை 'பக்கோமியஸ்' கிறிஸ்துவின் நாமத்தை தம்முள் மீண்டும் மீண்டும் அலை அலையாக வரும் பரிசுத்த சொற்களுக்கு ஒலிக்குறியீடுகள் கொடுத்தும், விளக்கியும் ஞான வாழ்வுக்கு ஓர் இலக்கியமாகத் திகழ்கிறார்.

போர்த்துக்கேய காலத்து மருத்துவம், பேய் துரத்தும் கத்தோலிக்க அட்சரங்கள், இன்றும் பாவிக்கப்படும் செப்பேட்டு யந்திரங்களின் கருவும் உருவும், எகிப்திய துறவறத்தின் இத் தந்தையிடம் பெற்றவையே. எகிப்திய மண்ணில் நிலவிய மிக்கேல் சம்மனசானவர் பக்தியே, 16 ம் நூற்றாண்டு மிக்கேல் மந்திரமாலையின் அடிவேராகும். 50

பாலஸ்தீன யூத கிறிஸ்தவ பின்னணியில் ஆசிய ஆபிரிக்க திருச்சபைகளில் இத் தாந்தரிக மரபு வேரூன்றி இருந்தது. இம்மரபானது இஸ்லாமிய ஆதிக்கத்தால் போர்த்துக்கேய இஸ்பானிய கத்தோலிக்கத்தில் புதைந்து கிடந்த, எம் மண்ணில் 16 ம் நூற்றாண்டில் முளைவிடலாயிற்று.

உடலின் மாண்பு:

தாந்தரிகம் மானுடத்தின் மாண்புமிக்கதொன்றாக, மனித உடலை மதிக்கிறது; போற்றுகிறது. மனித உடலே இப் பிரபஞ்சத்தின் இயல்புகளையும் அசைவுகளையும், தன்னுள் அடக்கிய கருவாகும் ( Microcosom ). இதனையே சித்தர்கள், அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் என்றனர். தம் சித்திகளால் உற்று உணர்ந்து, உன்னத அறிவால் உடலின் நாடி நரம்புகளின் உணர்வு நிலைகளைக் கண்டறிந்து ( பித்தம், வாதம், சிலேற்பம் ) உடலில் ஏற்படும் நோய்களுக்கான காரண காரியங்களை பகுத்தும். அதற்கான மருந்துகளுக்குரிய மூலிகைகளையும், அவற்றின் பதார்த்த குணங்களையும் தந்த சித்தர்களே, சிந்த வைத்தியத்தையும் தந்தனர்.

''தாந்தரிகம்'', ''காயமே இது பொய்யடா'' என்ற கூற்றுக்கு எதிர் மறையாக, ''உடலே உன்னதன் உறையும் ஆலயம்'' என்ற உண்மையை உலகுக்கு அளிக்கிறது. அதனால் தியானம், யோகம் மூலம், குண்டலினி சக்தியை எழுப்ப வழிவகுத்துள்ளது. உடலின் ஆறு சக்கரங்களையும் ஊடுருவி, சகாஸ்திரவை எட்ட உதவுகிறது. அதை அடைந்ததும் ஆனந்தமயமாகும் நிலையும் அட்டமாசித்திகளும், சாகாவரமும் அடைய முடிகிறது என்கிறது. 51

சமாதி:

தாந்தரிகம், உடலை உன்னதமானதாக உயிரோடு பேணியது போல், மனிதன் மாண்டபின்னும் அதனைக் காக்க சமாதி வைத்தது. ''பொன் உடல் பொய்க்காது'' என்ற ஞானிகள், சித்தர்கள் உடலை அக்கினிக்கு இரையாக்கிச் சாம்பலாக்காது சமாதி வைத்தனர். 52

கத்தோலிக்கமும் இந்தத் தாந்தரிக மரபைத் தக்கமுறையில் செவ்வனே செயலாக்கி சிறப்புற வளர்த்து வந்துள்ளது, யேசுவின் மனுவுருவாக்கத்தின் ஊடகமான, உயிர் காக்கும் பெட்டகமான, அன்புணர்வின் ஆலயமான மரியாள் மரபும், அவளின் கன்னித்தன்மையும், பரிசுத்த தனமும் 2ம் நூற்றாண்டு தொட்டு, மக்களால் பேணப்பட்டு வந்துள்ளமை, அகழ்வாராய்ச்சியின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன, சீரிய, எகிப்திய, எத்தியோப்பிய திருச்சபைகளிலும், கீழ்த்தேசசபைகளில் ருசிய திருச்சபைகளிலும் ''மாதா பக்தி'' மாண்புற்றுக் காணப்பட்டமைக்கு இம்மரபும் காரணமாகும். ''மாதா என்றால் இறைமகன் யேசுவுக்கு, தன் உடலை காப்பகமாகவும், ஊன் உணவூட்டும் உணவகமாகவும் கொடுத்தவள்'' என்பதாகும். மாதா பக்தி உடலின் உயர்வை உலகுக்கு உரைக்கும் பக்தியாகும்.

1854 இல் மரியாளின் மாசில்லா உற்பவத்தின் சத்தியம் உலகுக்குப் பிரகடனப்படுத்தமுன்பே, 1950 ல் மரியாளின் விண்ணேற்பு உண்மையைப் பிரகடனப்படுத்த முன்பே, போர்த்துக்கேய மிசனரிகள் இச் சத்தியங்களை நம் மக்கள் மத்தியில், ஊன்றி உரமிட்டு வளர்த்தனர். யாழ்ப்பாணத்தில் பெரியகோவில், ''கொஞ்சேஞ்சி மாதா கோவில் எனப்பட்டதும், இத்தீவின் பழமைமிக்க பல கோயில்கள் ஆரோகணத் தாயின் உருவங்களைக் கொண்டதாக உள்ளதும் இத் தாந்தரிக மரபுக்கு ஒரு சான்றாகும். 53

தெய்வீகத் தேகவாதம்:

கத்தோலிக்க தாந்தரிகம், ஒரு தெய்வீகத் தேகவாதத்தை உலகுக்கு அளித்து, ஆதரித்து வளர்த்தது. தேவதாயின் மந்திரமாலையான சக்திமிக்க செபமாலையை 15 தேவரகசியங்கள் ஊடாக, மன அலைகளின் அதிர்வுகளை இயக்கிவிடும் மனயந்திரமாக ஆக்கியது. அத்துடன் யந்திரத்தை இயக்கும் தியானக் கருவிகளான, ஊக்கிகளான. ஊடகங்களான மரச் சிற்பங்கள், செப்பேட்டு ஓவியங்கள், உடல் ஒறுத்தல்கள், விரதங்கள், விரதத்துவப் பண்பையும் பரிணமிக்கச் செய்தன. இதனாலேயே பரிசுத்த கன்னிமைக்குத் துறவறத்திலும் இல்லறத்திலும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது.

''உடல் தங்கமாகும்'' என்ற சித்தர்களின் கனவு, மரியாளின் மாணிக்க உடலின் மகிமையிலும், அவள் மகன் அன்பர் யேசுவின் ஒளிமிக்க உடலின் உயிர்த்தெழுகையிலும், ஒளிவீசியது; சித்தர்களின் ரசவாதம் தேவையற்றதாகியது. பிராணாயாமம், குண்டலினி முதலிய சக்தி அருள் மயமாகியது. ஞான, பக்தி, கர்மா வழிகள்

அனைத்தும், அன்னை ஈந்த ஈசன் ராஜயோகியில் சங்கமமாகின; அருளின் ஒளியாக எங்கும் பிரகாசித்தன.

இக் கலியுகத்தின் அரசியாகத் திகழும் அன்னையானவள், பூமி மாதாவின் புதல்வர்களில், சிறுவர்களுக்கே அதன் இரகசியங்களை இயம்பி வருகிறாள். லூர்து, பத்திமா என்னும் இடங்களில், தாம் கொடுத்த தரிசனங்களிலும், மற்றும் பல இடங்களிலும், இவ்வுல கில் மனித வீராப்புக்கும், மமதைக்கும் ஓர் எல்லை உண்டு என் பதைச் சுட்டிக்காட்டி, மனித நிறைவு இறை இரக்கமே என்று வலி யுறுத்தி வருகின்றாள். [54]

மனிதர்களில் அமிழ்ந்திருக்கும் குண்டலினி சக்தியானது, மனி தர்களை அசுரர்களாக ஆக்கவும், அமரர்களாக்கவும் வல்லது. அணு சக்தி கொண்டு இப் பிரபஞ்சத்தைச் சுடுகாடாக்கவும் முடியும்; சுதந்திர சுவர்க்கமாக்கவும் முடியும். இவ் இயற்கைச் சக்தியில் மறைந் துள்ள இருளின் அபாரத்தன்மையை அழிவின் உள்ளடக்கத்தைச் சரி வரப் புரிந்து கொள்ளாததினால், உணரத் தவறியதனால் தாந்தரி கள் பலர் பல்வேறு காலகட்டங்களில் பல பாரிய தவறுகளைப் புரிந் துள்ளனர்; அவற்றை மறைக்கவும், மறுக்கவும் முயற்சித்துள்ளனர். [55]

கத்தோலிக்கமோ தாந்தரிகத்தை இயற்கை நிலையிலிருந்து உயர்த்தி, வெறும் மனிதப் பலம், பலவீனங்களுக்குள் அடக்கிவிடாது இறை அன்னையில் மிளிரும் இறைக் கொடையாகவே எமக்கு அளிக் கிறது. அன்னையவள் எம் உள்ளும் புறமும் பீறிட்டெழும் தீயசக்தி களை தம் வலிமைமிக்க குதிக்காலால் அழுத்தி, அடக்கி வைக்கி றாள். பரலோக பாதையில் அவளின் பின் நாம் நடக்க வைக்கிறாள். உலகு எனும் கண்ணீர்க் கணவாயில் பிரலாபித்து அழும் ஏவையின் மக்களை ஏந்தி, அன்புடன் அரவணைத்து வழிகாட்டுகிறாள் என் பதை இந் நூற்றாண்டின் 60 க்கும் மேற்பட்ட காட்சிகளினூடாக அன்னை வெளிப்படுத்தியுள்ளாள்.

இக் காட்சிகளில் நவீன விஞ்ஞானத்தின் பயங்கர ஆயுதங்களின் அழிவிலிருந்து மானுடத்தைக் காக்க அன்னையவள், பாவப் பாதை யை விட்டு மனமாற்றம் பெறும்படி அழைப்பு விடுத்துள்ளாள். ''விழித் திருந்து செபியுங்கள், தபம் செய்யுங்கள், மன்னியுங்கள், விசுவா சத்தில் உறுதியாயிருங்கள், அன்பு செய்யுங்கள், இல்லையேல் மானு டத்தின் செருக்கினை மனுமகனும் மன்னியார். அதனால் அழிவும் அழுகுரலும்தான் இவ்வுலகில் மிஞ்சும்'' என எச்சரித்தவண்ணம் இருக்கிறாள். [56]

இம்மண்ணின் மரண ஓலத்தின் அதிர்வலைகள் விண்ணை எட்டாதிருக்குமோ? இந்தக் கலியுகத்தின் மரண ஓலங்களை நிறுத்தும் சக்தி படைத்த கலியுக வரதராக, மரியன்னை எம்மிடம் தோன்றி, இறைவனின் இரக்கத்தை, எம்மில் ஊற்றும் ஊறணியாகக் காட்சியளிக்கிறாள்.

# பண்பாட்டு மயமாக்கல்

ஒரு மனிதக்குழுமம் கற்றறிந்து கொண்டவற்றினதும், அது குறியீடுகளாகக் கொண்டவற்றினதும் தொகுதிதான் பண்பாடு. அது மொழிவழக்கு, பாரம்பரியம் என்பவற்றை உள்ளடக்கி இருக்கும்.

கத்தோலிக்க மிசனரிகளே பண்பாட்டு மயமாக்கும் ஊடகங்களாயினர்.

வந்த மிசனரிகளில் முதல் வகையினர் போர்த்துக்கேய அரச ராணுவ வீரர்களின் ஆன்மீகப் பணிக் குருக்களே. இவர்கள் இராணுவம் இருந்த கோட்டைகள், முகாம்களில் தங்கினர். இம் மண்ணின் மைந்தர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளாதவர்கள் இவர்கள். இவர்களுக்குத் தமிழ்மொழி தெரியாது. தெரிய வேண்டிய தேவையும் இருக்கவில்லை. இவர்கள் இராணுவ ஆன்மீகக் குருக்களாக மட்டுமே கடமையாற்றினர்.

இவர்களைத் தவிர, உண்மையான மிசனரிகளாக வந்தோர், மக்களோடு வாழ்ந்து பணியாற்றும் இலட்சியத்துடன் புறப்பட்ட பிரான்சீஸ்கன், யேசுசபை மிசனரிகளே, இவர்களில் சிலருக்கே தமிழ் நன்கு தெரிந்திருந்தது. வேறு சிலருக்கு கொச்சைத் தமிழும் மொழி பெயர்ப்பாளரின் உதவியும் இருந்தது. ஏழ்மையான வாழ்வு, பரிசுத்தமும் அன்பும் நிறைந்த செயற்பாடு, ஏழைகள் மேல் அன்பு நிறைந்த இரக்கம், நித்தியத்திற்கும் அழிந்துபோகா வண்ணம் இரட்சணியம் அளிக்கும் ஆன்மதாகம், பாவிகளின் ஈடேற்றத்தில் இருந்த தணியாத ஆன்மவாஞ்சை, மாறி மாறி வந்த பஞ்சம், பிணி, படை இவற்றின் மத்தியில், மாறாத கிறிஸ்துவின் அன்போடு தம் ஆடுகளுக்காக உயிர் கொடுத்த அன்புச் சாட்சிகள். மக்களின் பேச்சு, பழக்கவழக்கங்கள், மூட நம்பிக்கைகள் சரியாக உணர்ந்து புரிய முடியாது கண்டித்திருக்கலாம். ஆனால் பண ஆசை, அதிகார மோகம், இனவெறி, செருக்கு, காலணித்துவ

அடக்குமுறை இவற்றின் கெடுபிடியில் இருந்து விலகிநின்று, முன் ஆட்சியாளரும், பின்வந்த அந்நிய ஆளுநரும் ஈவாத இரக்கத்தை, மக்கள் இவர்களில் கண்டனர்.

இம் மண்ணின் சிறுபாரம்பரியத்தைச் சார்ந்த (Little Tradition) மக்களையே மதம் மாற்றிக் கொண்டனர் என்ற உண்மை அச்சிறு தெய்வ வழிபாடு நிலையில் இருந்தோரின் துர்ப்பாக்கிய நிலையை (சமூக. பொருளாதார, கலாச்சார, சமய) உயர்த்திய காருண்ய மூர்த்திகள் இவர்கள் என்பது மறக்கக்கூடாததொன்று. [57]

தத்துவ போதக சுவாமிகள், மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் அருகில் தன்ராஜ் ரிசி வாழ்க்கையின் தமிழ்ச் சமூகத்தின் மேற்படிகளுக்குச் சென்றார். உயர் குலத்தார் கிறிஸ்தவர்கள் ஆகினர் என்ற உண்மைக்கு ராஜ தத்துவத்தை வெளியே வாழாதோர்களாக. உள்ளரங்க சித்தர்களாக வாழ்ந்த இக் கிறிஸ்தவ அனுபூதிமான்களின் ராஜயோகம் யாழ்ப்பாணத்து அரசகுடும்பத்துள்ளே கிறிஸ்தவர்களாகும். விருப்பை ஏற்படுத்திற்று. [58]

யாழ்ப்பாணத்து இறுதி அரசனான பரராசசேகரபண்டார கொழும்பு அந்தோனியார் கோவிலில் ஞானதீட்சை பெற்றார். 1632 மாசி 4 ல் பிரான்சீஸ்கன் சபையில் சேர்ந்து அருட் சகோதரர் கொண்ஸ்ரன்டி கிறிஸ்ரோ ஆனார். அவருடன் ஞானதீட்சை பெற்ற அவரின் தாய் டோனாகிளாரா என்னும் நாமம் பூண்டாள். அவரின் சகோதரிகள் இருவர் யாழ். புதுமை மாதா கோயிலில் ஞானதீட்சை பெற்று டோனா இசபெல்லா, டோனா மரியா ஆனார்கள். [59]

ஆசியாவில் கிறிஸ்தவம் பரவியபோது பரவலாக ஏற்பட்ட அனுபவமே இங்கும் ஏற்பட்டது. பலர் வேதசாட்சி முடிபெற்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இல்லறக் கிறிஸ்தவர்களே. சிறிய குடிசைக் கோவில்களில் கிறிஸ்துவை அறிய வந்து, வழிபட்டு, வாழ்வில் சுமந்த சிறிய ஏழை மக்களே, பணச்செருக்கில் அல்ல, அன்னிய ஆதிக்கத்தின் அதிகாரத் திணிப்பில் அல்ல, வாள் துப்பாக்கி கொண்டு அல்ல, ''சிலுவையில் சிந்திய தம் குருதியினாலேயே'' கிறிஸ்து இவ்வற்புத மக்கள் கூட்டத்தைத் தோற்றுவித்து உருவாக்கினார். [60]

வழிபாட்டு முறைகளும், சடங்குகளும், லத்தீன் மொழியிலும், ரோம தோரணையிலும் நடந்து வந்தாலும் இம் மக்களின் உள்ளார்ந்த சமயமும் பண்பாடும் ஆக்கபூர்வமான வகையில் கைகோர்த்து வளர்ந்தது. இது இனித்தான் தொடங்க வேண்டிய தொன்றாகவே சிலர் கருதுகின்றனர். ஆயின் இது அன்றே ஆரம்

பிக்கப்பட்டு தன் 135 வருடகால துன்ப வரலாற்றில் வளர்ந்து பின் வந்த 2ம் ஐரோப்பிய மிசனரி காலத்தில் தேய்ந்து, இன்று மறுமலர்ச்சி காணத்துடிக்கின்றது. என்பதே எம் கூற்று. 2ம் வத்திக்கான் அறை கூவுவது இரண்டாவது வசந்தத்தை, கடந்தகால வசந்த அனுபவம் ஊக்குவித்தது, போர்த்துக்கேயர் காலத்து தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களில் காணக்கிடக்கிறது. எண்டிறிக்கஸ் எண்டிறிக்கஸ் அடிகளாரின் தம்பிரான் வணக்கம், கிறிஸ்தியானி வணக்கம், அடியார் வரலாறு தொடக்கம் சந்தியோகுமா யோர் அம்மானை, திருச்செல்வர் காவியம் ஈறாக பலவற்றைக் குறிப்பிடலாம். 61

ஆனால் இன்று சிலரினால் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் திருச்செல்வர் காவியத்தை இங்கு ஆராய்வது நல்லது. பண்டைய கதையின் இன்றைய சர்ச்சையையும் நவீன பண்பாட்டு மயமாக்கலின் சில பிரச்சனைகளையும் தீர்க்க இவ் ஆய்வு உதவும்.

திருச்செல்வர் காவியம்:

கத்தோலிக்க தாந்தரிக மரபின் ஆழ்ந்த தாற்பரியங்களை. அதன் சுதேச இலக்கியத்திலும், கலைகளிலும் (நாடக மரபுகளிலும், பாஸ், பசாம், உலா, விருத்தங்கள், அம்மானை, பள்ளு முதலியவைகளிலும்) மருத்துவம், மாந்திரீக மரபிலும், புகழ்பெற்ற மரியன்னை யாத்திரைத் தலங்களின் பக்தி முறையிலும் கிருத்தியங்களிலும் காணலாம்.

இவற்றுள் முதலில் போர்த்துக்கேயர் காலத்தில் தோன்றிய கத்தோலிக்க இலக்கியங்களுள் பெருமை வாய்ந்த திருச்செல்வர் காவியத்தை உற்றுநோக்குதல் நன்று. பூலோகசிங்க அருளப்ப நாவலர் எழுதிய திருச்செல்வர் காவியம் ஒரு பேரிலக்கியப் படைப்பென A. J. V. சந்திரகாந்தன் தன் பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் முகவுரையில் ''திருச்செல்வராயன் சரித்திரத்தை அர்ச்சிய சிஷ்ட தமசேனு அருளப்பர் கி. பி. 733ம் வருடத்திலே மகாத்மாக்கள் சொல்லக கேட்டதாய் எழுதி வைத்தனர்'' என எழுதப்பட்டுள்ளது. 62

இக் கதையின் கதாநாயகர்கள் பறலாமும், யோசேபாத்துமாவர். புத்நர் பெருமானுக்கும் இக் கதைக்குமிடையிலான தொடர்பு எவ்வளவு நெருக்கமானதென்றால், சில ஆய்வாளர் புத்தர் பெருமானைத் தமது ஆசிரியத்தினால், புனிதராகத் திருச்சபை கொண்டாடியது என அபிப்பிராயம் தெரிவிக்க வைத்தது.

வண. அலோய் பீரீஸ் அடிகளார் ''ஞானம் அன்பைச் சந்திக்கிறது'' என்ற நூலில் திருச்சபையின் புனிதர்களின் வழிபாட்டு நாளில் காணப்படும். ''இறை ஆசீர் பெற்று விளங்கிய புனிதர்களே, அழிந்துபோகக்கூடிய இவ்வுலக அரசுடமையை விடுத்து, நித்தியமும் நிலைக்கின்ற மகிழ்வைத் தெரிந்து கொண்டவர்களே, நீங்கள் முடிவற்றதும் வார்த்தையினால் வர்ணிக்க முடியாததுமான மகிழ்ச்சியில் அக மகிழ்வீர்களாக'', என்ற சபை மன்றாட்டைச் சுட்டிக் காட்டி, புத்தர் பெருமானை புனிதராக வணங்கிக் கொண்டு, எப்படி அம் மதத்தினரைச் சிலை வழிபாட்டினர் எனத் திருச்சபை குறிப்பிடலாம்? என வினா எழுப்பியுள்ளார்.[63]

புத்தர் பெருமான் போன்று இந்திய உபகண்டத்தில், பலருக்கு ஆன்மீகத்தேடல் அனுபவம் கிடைத்துள்ளது. அரசவாழ்வின் சுக போகங்களை வெறுத்து துறவறம் பூண்டவர் எத்தனைபேர்? இதே போன்று ஐரோப்பிய வரலாற்றிலும், அரச போகங்களை வெறுத்து, புனித பாதை நாடிய அரச அரசியர் பலர் உளர். புனிதர் பட்டியல் இதற்குச் சான்றாகும். புனிதர்களான என்றிக்கப்பர், பிரான்சுதேச லூயிஸ், கங்கேரி நாட்டு எலிசபெத் ஸ்தீபன், போலாந்து தேச இளவரசர், இளவரசிகள் அவர்களுள் சிலராகும்; சற்று முன்னர் நாம் குறிப்பிட்ட யாழ். அரச குடும்பத்திலிருந்து துறவிகளானோர் பட்டியலும் கவனிக்கப்பட வேண்டியதொன்று.[64]

யோசபாத் போன்று, அரச சுகபோகங்களை வெறுத்து புனிதத்துவம் அடைய, இந்திய அரசவம்சத்திலும் பலர் துறவறம் பூண்டதில் என்ன அதிசயம் உள்ளது? விசேடமாக வடமேற்கு இந்தியாவில் மகா அலக்சாந்தரின் படையெடுப்பின் பின், கிரேக்க ஆதிக்கம் கால் கொண்டது. இந்திய கிரேக்க கலாச்சாரப் பரிமாற்றம் ஏற்பட்டது. கண்டாறாவின் புத்த சிற்பங்கள், கிரேக்கத்தின் வான சாஸ்திரம், சோதிடம் இந்தியா புக, இந்திய மெல்லியல், இறை மானுடக் கொள்கைகள், ஆன்மாவின் மறுபிறப்பு முதலியனவும், நொஸ்ரிக் ஆன்மீகவாதமும் மேற்கே சென்றன.

இச் சூழலில் புத்தர் போன்று அனுபூதி நிலை பெற்ற, ஒரு கிறிஸ்தவ துறவியின் வாழ்வும் புனித யோண் டம்சினால், மேற்குலகுக்கு அளிக்கப்பட்டதில் தவறு இருக்க முடியாது. ''அதே வேளை திருச்செல்வர் காவியத்தின் கதாநாயகன், புத்தர் பெருமான் தான் என்று அறுதியிட்டுக் கூறவும் முடியாது.

கீழைத்தேச வாசனை கொண்ட ஓர் கதையையும், கதாபாத்திரங்களையும் கத்தோலிக்க புனிதர் பட்டியலில் இருந்து நம் மிசனரிகள் தெரிந்தெடுத்து, மக்கள் மனதை ஈர்க்கவல்ல, அவர்கள்

வாழ்வுடன் இணைந்து இழையோடும் காப்பியமாகத் திருச்செல்வர் காப்பியத்தை ஆக்கினர். மண்வாசனையின் பண்பாட்டு மயமாக்கலின் சிறப்புச் செயற்பாடு இங்கு மணம் வீசுகிறது. யேசுசபை மிசனரி மரபில் வந்த வீரமாமுனிவரின் வளன் வாழ்வில் மிளிர்ந்த, ஆன்மீக அனுபூதியின் வரையறுக்கப்பட்ட காவியப் போக்கும், தத்துவபோதகர் போன்றோரின் ஞான உபதேசம், தர்க்க சாஸ்திர அம்சங்கள் இணைந்து இழையோடிய இனிய காவியமாகத் திருச்செல்வர் காவியம் அமைந்துள்ளது. ஆன்மீகம், அனுபூதி நிலைக்கும், தர்க்கத்தினால் தெளிவாகும் மனத்தெளிவுக்குள்ளும் வந்து நிலைகொள்கிறது என்பதை தெல்லிப்பளை அருளப்பர்நாவலர் தன் காவியப் படைப்பால் ஒரு சாதனை படைத்துள்ளார் என்றால், மிகையாகாது.

அருளப்பர் நாவலர், தேநோபிலி அவர்களை யாழ்ப்பாணத்தில் யேசுசபைக் கல்விக்கூடத்தில் சந்தித்தார். தேம்பாவணி அனுபூதி நாயகனின் குணசித்திரக் குறியீடாக, அருளப்ப நாவலர், திருச்செல்வர் காவிய நாயகனைப் படைத்தார். வீரமாமுனிவரின் உன்னத படைப்பான ''தேம்பாவணி''யை வரலாற்று எழுத்தாண்மை கொண்டு சுவைக்காது, அதனை ஸ்பானிய நாட்டு அருள் நிலைத் தியானயோகி மேரி அக்கிறாடா எழுதிய ''இறைநகர்'' என்ற தியான ஏடுகளின் கசுவுகாளாக நோக்குதல் சிறப்புடையது. 65

தாந்தரிக கத்தோலிக்கம், தெய்வீக அனுபூதி நிலையைத் தன்னுள் கொண்டுள்ளது. தேம்பாவணி தரும் வளன் வாழ்வின் ஊடாக, நம்மையும் அந்த அனுபூதி நிலைக்கு அழைத்துச் செல்கிறது. செல்லும் பாதையில் வரும் இடையூறுகளான, மனத்தடைகளை, தெநோபில் தன் தர்க்க சாஸ்திரங்களினூடாக களைந்து விடுகிறார்.

பெஸ்கியும், தெநோபிலியும் தியானயோகிகளே. இவர்களின் பின் வந்த இவர்களின் சீடர்களும், மற்றவரும் இவ்விருவர் வகுத்த வழிகளிலேயே அம்மானைகள், பள்ளுகள், மந்திரங்கள், நாட்டுக்கூத்துகள், மருத்துவ ஏடுகள், யந்திரங்கள், பேய் துரத்தும் மந்திரங்கள் போன்றவற்றை வெளியிட்டார்கள். இத்துறை சார்ந்த ஆய்வுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

16 ம் 17 ம் நூற்றாண்டு நடுப்பகுதியில் உத்தியோக பூர்வமாக ஓர் மேற்கத்தேய கலாச்சார அம்சங்களே அரசமொழி, வழிபாடு, கட்டிடம், நிர்வாகம், பழக்கவழக்கம் முதலியவற்றில் மேலோங்கி நின்றதாகத் தோன்றினும், அதன் கீழே மாபெரும் மக்கள் மரபொன்று ஊன்றி வளர்ந்திருந்தது. இது ( Flos Saneton ) அடியார் வரலாற்றில் இருந்து ஊற்றெடுத்த கதைகள் பல கத்தோலிக்க

நாடக மரபிலும், திருச்செல்வர் காவியம் போன்ற இலக்கிய மரபிலும் வெளிவந்தன. கிறிஸ்தவ பண்பாடு வெறும் மனித ஞானம், அறிவில் ஊற்றெடுக்க முடியாதாகையால் அது சிலுவை ஏறி, அதன் ஞானத்தையும் அவ் ராஜயோகம் கொணரும் பேரானந்த அறிவையும் பெற்று உண்மையான கிறிஸ்தவ பண்பாடாக முதிர்ச்சி பெற, அடுத்து வரப்போகும் வரலாற்றுக் கட்டமே மக்கள் தொகுப்புணர்வாக உதவியது.

''அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் எல்லாவற்றையும் ஒப்புரவாக்கி மண்ணிலுள்ளவை, விண்ணிலுள்ளவை யாவற்றையுமே அவர் வழியாகத் தம்மோடு ஒப்புரவாக்க விரும்பினார்.

கொலோ 1 : 20

முடிவுரை:

இந்தியாவிலே, இலங்கையிலே கிடைக்காத ஆன்மீக அறுவடையை, கத்தோலிக்க மிசனரிகள், யாழ். குடாநாட்டில் பெற்றனர். இதற்கு மூன்று காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. வேதசாட்சிகளின் இரத்தம் மிசனரிகளின் நற்செய்தி வாழ்வும் வாஞ்சையும், சில போர்த்துக்கேய ஆளுநர்களினதும், உத்தியோகஸ்தர்களினதும் முன்மாதிரிகையும் உதவியும்,

போர்த்துக்கேய அதிகாரிகளுள் குறிப்பிடத்தக்கவர் 1621ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் யாழ்ப்பாண அரசன் தோற்கடிக்கப்பட்டபின், யாழ்ப்பாண ஆளுநரான பிலிப்டி ஒலிவேராவும் அவர் காட்டிய ஆன்மீக வாஞ்சையுமாகும்.

இதற்கு முன் நேரடியாக போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தை நிர்வகிக்காதபடியால், முதலிரண்டு காரணங்களே, அக்காலத்துக்குப் பொருத்தமானதாகும்.

1544 ல் சங்கிலி அரசன் பட்டித்தோட்டத்தில் கிறிஸ்தவர்களைக் கொலை செய்தது தொட்டு, இடையிடையே வேதசாட்சிகள் தோன்றினர், 1561 லும் 1563 லும் சங்கிலி மன்னாரைத் திரும்பவும் கைப்பற்ற எத்தனித்தபோதும் 1563 ல் 400 பேர் வாந்திபேதியால் இறந்தபோதும், 1570 ல் பஞ்சத்தால் பலர் மரித்தபோதும், மிசனரிகளின் தன்னலமற்ற சேவை, இரக்கம் முதலியவை கண்டு பலர் யேசுவின்பால் மனந்திரும்பிக் கொண்டேயிருந்தனர்.

1565 ல் சங்கிலி இறந்ததும் காசிநாயனார் என்பவன் சிம்மாசனத்தைக் கைப்பற்ற, மக்கள் அதிருப்தியடைந்து போர்த்துக்கேயர் உதவியை நாடினர். மன்னார் கப்பித்தானான ஜோர்ஜ் டி

மெல்லோ இங்கு வந்து அவனை அரியணையினின்று அகற்றி செகராச சேகரனை அரசனாக்கினான்.

1582ல் ஆண்ட பரராசசேகரன், கிறிஸ்தவர்களுக்குத் தொல்லை கொடுக்கவில்லை. 1591ல் இவன் மன்னாரைக் கைப்பற்ற, போர்த்துக்கேயருடன் தொடுத்த போரில் தோற்கடிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டான். இவ்விழுபறிகளே 1621ல் போர்த்துக்கேய நேரடி ஆட்சிக்கு இட்டுச் சென்றன.

1622ல் யேசுசபையினர் ஆன்ம ஊழியத்திற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். இதற்கு முன் மன்னாரையே தளமாக்கி என்றிக்கஸ் அடிகளாரை தம் பங்குக்குரவராக்கி இயங்கினர். இங்கு வந்த இயேசு சபையினர், குடாநாட்டின் உட்பகுதிகளுக்குள், கடலில் இருந்து ஒரு மைல் உள்ளேயே பணியாற்றினர்.

பளை, பண்டத்தரிப்பு, முகமாலை, தெல்லிப்பளை, அச்சுவேலி, சங்கானை, வட்டுக்கோட்டை, காரைதீவு முதலிய இடங்களில் 33.387 கத்தோலிக்கர்களுக்கும், மன்னார்த்தீவில் 5,450 கத்தோலிக்கருக்கும் ஆன்ம பணி செய்தனர்.

இவர்களுக்கு முன்வந்த பிரான்சீஸ்கன் சபையினர் கொழும்புத்துறை, மானிப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, புத்தூர், கோப்பாய், கட்டைவேலி, வல்லை, அல்லைப்பிட்டி முதலிய இடங்களில் சேவையாற்றினர்.

1621ல் ஆரம்பித்த நேரடி ஆட்சியும் பல முரண்பாடுகளைக் கொண்டிருந்தது. சில ஆளுநர்களும் அதிகாரிகளும் கத்தோலிக்கரை துன்புறுத்தி, அவர்கள் விசுவாசத்திற்குக் கூறு விளைவித்தனர். 1641ல் விசுவாசிகள் தமிழ் மண்ணில் இருந்த ஆளுநருக்கு எழுதிய முறையீட்டுக் கடிதங்களுக்கு மறுமொழி கிடைக்கவில்லை.

1654ம் ஆண்டில் மன்னார்க் கிறிஸ்தவர்கள், ஒடுக்குமுறை தாங்கவியலாது தம் வீடுகளை விட்டுப் புறப்பட எத்தனித்தனர். சில நல்ல குருக்கள் அவர்களைப் பொறுத்திருக்குமாறு வேண்டினர். ஆயின் இறைவனின் தீர்ப்பு நெருங்கிக்கொண்டிருந்தது. S·G. பெரேரா அடிகள் எழுதுவது போன்று, தண்டனை 1658ல் ஒல்லாந்தரின் வருகை ஊடாக வந்தது. 66



# யாழ் திருச்சபை வரலாறு

## III - ம் பாகம்

## ஒல்லாந்தர் காலம்

## ( 17 ம், 18 ம் நூற்றாண்டுகள் )

## ஒரு கண்ணோட்டம்

புதிய அறுவடை:

3 ம் மிலேனியத்தை நோக்கி நடந்துகொண்டிருக்கும் திருச்சபை, கிறிஸ்து யேசுவை அறிவிக்கும் புதிய விதைப்புக் காலத்தைத் தொடங்கியுள்ளது. தூய ஆவியின் பொழிவால் இன்று பெய்யும் அருள்மழை, இரத்த ஆறுகள் ஓடும் மூன்றாம் மண்டல நாடுகளில் இறையரசுக்கான சிறப்பு அறுவடையைப் பெறவேண்டும் என்பது பாப்பிறையின் எதிர்பார்ப்பு ஆகும்.

இப் புதிய ஆன்மீக அறுவடையை அடைவதில் இரு போக்குகள் திருச்சபையில் காணக் கிடக்கின்றன.

ஒன்று, ''இரண்டாயிரம் ஆண்டை நோக்கி'' என்ற தலைப்பில் மறை பரப்புப்பணிக் குழுவின் நேரடி மறை அறிவிப்புப் பிரகடனத்துக்கென எடுக்கப்படும் முயற்சிகள். 1

மற்றது, இவற்றுக்கு மாறுபட்ட முறையில் திஸ்ஸா பாலசூரியா போன்ற சில இறையியல் புத்திஜீவிகளின் முயற்சிகள் ஆகும்.

இவர்கள் நேரடி நற்செய்தி அறிவிப்பும், மதமாற்றமும் தேவையற்றதொன்று எனவும் இதனால் கிறிஸ்தவர் அல்லாத மக்களுடனான உறவுகள் சிதைக்கப்பட்டு, சர்ச்சைகள் எழுப்பப்பட்டு வீண் குழப்பமே மேலிடும் எனவும் வாதிக்கின்றனர்.

அத்துடன் இவை போர்த்துக்கேயர் காலத்து நினைவலைகளை எழுப்பிவிடுமென அஞ்சுகின்றனர். [2] போர்த்துக்கேயர் காலத்தை. இவர்கள் கடுமையாக விமர்சித்து, இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து வரும் காலத்தை. புகழ்ந்துரைக்கின்றனர். முன்னையதை இருண்ட காலமாகச் சித்திரித்து, பின்னையதை பொற்காலமாக வர்ணிக்கின்றனர்.

நற்செய்தி அறிவிப்பு, மத மாற்றம் போன்றவற்றில் அதிதீவிர போக்குடைய கிறிஸ்தவ சபைகளுக்கும், மிதவாதப் போக்குடைய இறையியல் புத்தி ஜீவிகளுக்குமிடையே, அன்னை திரேசா போன்றோர் உள்ளனர். அன்னை திரேசாவிடம் மதமாற்றம் பற்றி வினவியபோது, ''எண்ணிக்கைக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது. பணியாளர்கள் செபத்தை செயலாக்கி, மக்களுக்குச் சேவை செய்ய வருகின்றனர். எல்லா இடங்களிலும் மக்கள் உதவி செய்கின்றனர். பெரிய எடுப்பிலான மனமாற்றம் எதுவும் இல்லை. ஆனால் ஆன்மாவின் இரகசியங்களை யாரறிவார்... எம் அன்புச் செயல்களால் மக்கள் நல்ல இந்துக்களாக, முஸ்லிம்களாக, பௌத்தர்களாக மாறுகின்றனர் என்றால், அங்கே ஏதோ வளர்ச்சியுண்டு அல்லவா? அவர்கள் இறைவனுக்கு அருகே நெருங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் இறைவனை நெருங்கிவரின் ஏதோ ஒரு தேர்வு செய்யத்தானே வேண்டும்'' என அன்னை விடை பகர்ந்தார். [3]

ஆனால் கடந்த 500 ஆண்டு காலமாக திருச்சபையானது காத்திரமான நிலையானதொரு அடித்தளத்திலிருந்தே வளர்ந்தும், வளர்ச்சி பெற்றும் வருகிறது என்பதே உண்மையாகும். கடந்த காலத்தை, ஆழ்ந்த வரலாற்று விளக்கமின்றி, விமரிசனம் என்ற பெயரில் கண்டித்தல், திருச்சபையையே துண்டித்து விடுவதாக கருத இடமுண்டு.

அத்துடன் அக்காலகட்டத்தில் விசுவாசத்தின் வித்துக்களாக இந்த மண்ணில் புதையுண்டவர்களை, மூடர்களாகவும், மன்னிக்கப்பட வேண்டியவர்களாகவும், வில்லன்களாகவும் ஆக்கிவிடும். இதேவேளை நவீன புத்தி ஜீவிகளை, உயர்ந்தரக நாயகர்களாகவும், உத்தமர்களாகவும் உருமாற்றிவிடும் ஆபத்துள்ளது. அன்னை திரேசாவின் கூற்றை நன்கு உள்வாங்கி, உள்ளொளியில் ஆய்ந்தால், இத்தகைய போக்கிலிருந்து விடுபட வழிபிறக்கும்.

எல்லா மிசனரிகளுக்கும், அவர்கள் மானிடத்தின் மாண்புக்காக ஏற்ற சிலுவைப்பாடுகளும், இரட்சிப்பும், அவர்களது உரைகற்கள் என்பதை இனங் கண்டுகொள்ளலாம். நொறுங்குண்ட மனிதனே மிசனரிகளின் கவனத்தை ஈர்ப்பவன் என்பதை புனித சவேரியார், முத்திப்பேறு பெற்ற யோசவ்வாஸ் போன்றோரின் தியாக வாழ்விலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இத்தகையோரின் வாழ்வில் உள்ளோட்டமாக இழையோடி நிற்கும் சிலுவையின் இரகசிய இறைசக்தியை, கிறிஸ்து ஒருவரே விளக்க வல்லவர். அதை விளக்கி தெளிவுபடுத்தும் ஆற்றலும் உள்ளவர், சிலுவையிலிருந்து யேசு அருளிய பரிசுத்த ஆவியே, ''கடவுளுக்கே தெரிந்த முறையில் இந்தப் பாஸ்கா மறை நிகழ்ச்சியில் பங்கு கொள்ள அதே பரிசுத்த ஆவி எல்லோருக்கும் வாய்ப்பளிக்கிறார்'' என நாம் விசுவசிக்க வேண்டும்.

கிறிஸ்தவ வெளிப்பாட்டினால் விசுவாசிகளுக்குத் தெளிவாகும் மனிதனின் மறைபொருள், இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்தது. எனவே துன்பம், சாவு இவற்றின் புதிர், கிறிஸ்துவிலும் கிறிஸ்துவின் வழியேயும் விளக்கம் பெறுகிறது. அவருடைய நற்செய்தி இல்லாவிடில் இவை நம்மையே அழித்துவிடும். சாவைத் தம் சாவால் அழித்துக் கிறிஸ்து உயிர்த்துவிட்டார். தம்மில் நாமும் மக்களாக, 'அப்பா, பிதாவே' என்று பரிசுத்த ஆவியில் அழைக்கக் கூடிய வகையில் வாழ்வை நமக்கு இறைமகன் அருளியுள்ளார்'', என்று வந்திக்கான் சங்க ஏடு உரைப்பதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம். [4]

பரிசுத்த ஆவியின் பணி:

கத்தோலிக்க மிசனரிகளும் மனிதக் குறைபாடுகளுடன் வந்திருக்கலாம். ஆனால் அவர்களின் பணிகள், 'பரிசுத்த ஆவியின் பணிப் பாதையில் தடம் பதித்து, அவரின் உதவியுடன் ஒரு நீண்ட, தொடர்ச்சியான ஆன்மீக அனுபவமூடாக புனிதத்தின் வளர்ச்சியில் உச்சத்தை அடைந்தனர் என்பது உண்மை.

மனப்பாட்டு மணல்திடல் ஏழைகளின் குடிசைக்குள் குனிந்துகுறுகிப் புகுந்து பணிபுரிந்த புனித சவேரியாருக்கும், யப்பானின் மக்கள் வெள்ளம் வழிந்தோடும் நாகசாக்கி சந்தைகளுக்குள் புகுந்து பணி புரிந்தது மாத்திரமன்றி, சொகுசான ஆடம்பர மனிதர் வாழும் அரசமாளிகைகள் மற்றும் யப்பானின் பௌத்தமத உயர்பீடங்களுக்குள்ளும் பரிசுந்த ஆவியின் துணையுடன் பணியாற்றிய புனித சவேரியாருக்குமிடையே எத்தகைய வித்தியாசங்கள் உண்டு? என்

பதை எண்ணிப் பார்ப்பது ஏற்புடையதாகும்.

தனியார் மிசனரிகளும் திருச்சபையும் பாஸ்கா இரகசியத்துக்குள் ஆழமாக உட்புகுவது என்பது தரித்து நிற்கும் ஒன்றல்ல. மாறாக அது தொடரும் செயல்பாடாகும். திருச்சபையானவள் இதற்குள் தானும் புகுந்து, தன்னுடன் தன் விசுவாசிகளையும் அழைத்துச் செல்வதுடன் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களையும் அழைத்துச் செல்கிறாள் என்பதை மறக்கலாகாது. [5]

பாஸ்கா மறைபொருளின் உள்ளார்ந்த சக்தியின் உன்னதபணி, 135 வருடங்களாக எப்படி பரிசுத்த ஆவியின் உதவியுடன் நடைபெற்றதென்பதை ஒல்லாந்தர் காலம், என்ற பின்வரும் ஆய்வு தெளிவாக்கும்.

மூன்று காலகட்டங்கள்:

ஒல்லாந்தர் காலத்துத் திருச்சபையின் வரலாற்றை மூன்று கால கட்டங்களாகப் பிரித்து நோக்குவது, அதனை நன்கு புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

1ம் கட்டம்: 1658 தொடக்கம் 1711 வரை
2ம் கட்டம்: 1712 தொடக்கம் 1746 வரை
3ம் கட்டம்: 1747 தொடக்கம் 1795 வரை

1ம் கட்டம்: 1658 — 1711

இக்கட்டத்தின் நாயகன் யோசவ்வாஸ் முனீந்திரர். அவரது வருகைக்கு முன்னும் பின்னும், அவரது ஊக்குவிப்பாலும் திருச்சபையானது இம் மண்ணில் உள்ளரங்கமாகவும் வெளியரங்கமாகவும் தன்னை நன்கு ஊன்றி வேர்விட்ட கட்டமாகும். தளர்ந்த திருச்சபை மீண்டும் உயிர்த்தெழுந்த காலகட்டமுமாகும்.

2ம் கட்டம்: 1712 — 1746:

இரண்டாம் கட்டத்தின் நாயகன் யாக்கோமே கொன்சாலஸ் அடிகளாகும். உயிர் பெற்றெழுந்த திருச்சபைத் தாய்க்கு ஊட்டம் கொடுத்து, உறுதியாக்கி, முதிர்ச்சி பெறச் செய்த காலகட்டம் இதுவாகும். இக்காலத்தில் யாக்கோமே கொன்சாலஸ் அடிகளின் பெரும் முயற்சியால், தமிழ் சிங்கள கிறிஸ்தவ இலக்கியங்கள், கலைகள் நன்கு வளர்ச்சி பெற்றன. தமிழ் சிங்கள இலக்கியக் கலையின் பொற்காலமென இக்காலம் போற்றப்படுகிறது

3ம் கட்டம்: 1747 —1795

மூன்றாம் கட்டத்தின் நாயகன் கபிரியேல் பச்சேக் அடிகளாவர். இவர் எழுதிய யோசவ்வாஸ் முனிவரின் வரலாற்றையே, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தமிழாக்கம் செய்து வெளியிட்டார்.

முதிர்ச்சி பெற்ற சுவிசேஷ அறிவொளியில் தம் உரிமைகளை வென்றெடுக்க கத்தோலிக்கர் நடாத்திய அறவழிப் போராட்டம், இக்காலகட்டத்தின் சிறப்பு அம்சம் ஆகும்.

# யோசவ்வாஸ் முனிவர்

ஒல்லாந்த கம்பனி: (V O.C.)

யாழ் நகர் வீழ்ச்சியுடன் 1658ம் ஆண்டு போர்த்துக்கேய ஆட்சி இலங்கையில் முடிவுற்றது. ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனி (V.O.C.) கண்டி அரசன் ராஜசிங்கனோடு செய்துகொண்ட உடன் படிக்கையை உதறித்தள்ளிவிட்டு மகாஓயா தொட்டு வளவைகங்கை வரையும், யாழ் குடாநாடு தொட்டு மன்னார் வரையும் தன் நிர் வாகத்துக்குள் கொண்டுவந்து ஆட்சி புரிந்தது. கல்பிட்டி, திரு கோணமலை, மட்டக்களப்பு முதலிய துறைமுகங்களையும் தம தாக்கி, வெளிநாடுகளுடன் கண்டி அரசனுக்கிருந்த தொடர்புகளை யும் துண்டித்தது. [6]

கத்தோலிக்கத்தை வேரோடு பிடுங்கும் முயற்சியில் முழுமூச்சாக, ஒல்லாந்த கம்பனி ஈடுபட்டது. குருக்கள் அனைவரையும் நாடு கடத்தி யது. புதிய குருக்களை உட்புகவிடாது தடுத்தது. கத்தோலிக்கத்தை அனுசரித்த மக்களுக்கு சட்டத்தால் தடைமேல் தடையிட்டும், தொடர்ந்து அனுசரித்தோர்க்குத் தண்டனைகள் அளித்தும், அச் சுறுத்தியது,

அதுமாத்திரமல்ல, சிறப்புற்று வளர்ந்திருந்த கத்தோலிக்கத்தை கல்வினின் பதித திருச்சபையாக மாற்றிவிட, அக் கம்பனி இயலு மான வழிவகைகளைக் கையாண்டது. [7] இந்துக்கள், இஸ்லாமியர், பௌத்தர்கள் பற்றி இக் கம்பனி அதிகம் கவலை கொள்ளவில்லை. கம்பனியில் ஒல்லாந்த போதகர்கள் அதிகம் இல்லாதபடியால், மிச னரி வேலைகள் இம் மக்கள் மத்தியில் செய்யப்படவில்லை. அத்துடன் போதகர்களுக்கு தமிழோ சிங்களமோ சரியாகத் தெரிய வில்லை. பொறுக்கிய சொற்களே அதிகம்.

இந்நாளில் இங்கு நடந்த வேதகலாபனையின்போது, கத்தோலிக்கருள் சிலர் இந்துசமயத்திற்கும், பௌத்தத்திற்கும் மாறினார்கள். சிலர் வெளியே கல்வின் பதித கோவில்கள், பள்ளிக்கூடங்களுக்கு தம் பிள்ளைகளை அனுப்பிவிட்டு, வீட்டில் இரகசியமாக கத்தோலிக்கராக வாழ்ந்தனர். வேறுசிலர் கத்தோலிக்கத்தை விட்டு நிரந்தரமாகவே கல்வின் புரட்டஸ்தாந்த மதத்தில் சேர்ந்தனர். ४

கோவைக் குருக்கள்:

இதற்கிடையில் ஐரோப்பாவில் அவுஸ்திரிய சக்கரவர்த்தி, பாப்பிறை முதலியோர், ஒல்லாந்த அரசுடனும் கம்பனியுடனும் தொடர்பு கொண்டு, ராஜதந்திர வழிகளைக் கையாண்டு, கத்தோலிக்க குருக்களை இலங்கைக்கு அனுப்ப முயற்சித்தனர். ஆனால் அம் முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.

இது இவ்வாறிருக்க, ஒரு கோவைக்குரு ஏழை வேடம் பூண்டு ஒல்லாந்த கட்டுக்காவல்களைக் கடந்து, காவலர்களின் கண்ணில் படாமல், இம் மண்ணில் காலடி எடுத்து வைத்தார். கத்தோலிக்க திருச்சபையை தன் தியாகத்தால் கட்டி எழுப்பினார். கோவை மாநில சுதேச குருக்கள் புனித பிலிப்பு நேரியாரின் ஒழுங்குகளின்கீழ் ஒரு குழுமத்தை (ஒறேற்றோறியன் எனப்படும் அற்புதச் சிலுவைத் தியான சம்பிரதாய சபை) உருவாக்கி, 100 வருடங்களுக்கு அதிகமாக, இலங்கைக்கு வேண்டிய மிசனரிகளைத் தந்து கொண்டே இருந்தனர். யோசவ்வாஸ் இக் குழுமத்தில் 1685 ல் சேர்ந்தார்.

1687 மே மாதக்கடைசியில் யாழ்நகர் வந்தார். இங்கு அவர் வந்ததையறிந்த ஒல்லாந்தர் அவரை வேட்டையாட முயற்சித்தனர். அவரோ இதையறிந்து, கண்டிஅரசுள் நுழைந்து, 2 ம் விமலசூரியனின் நட்புப்பெற்று, அவ்விடத்தை தன் அப்போஸ்தக்க சேவைகளின் நடுநிலையம் ஆக்கினார்.

யோசவ்வாஸ் முனீந்திரரைத் தொடர்ந்து, யோசப் டி மென்சஸ், யோசவ்கர்வாலியோ என்ற இரு குருக்களும், 1696 முடிவில் இலங்கை வந்தனர். 1703 ல் பேதுரோடிசல்டானா என்ற குருவும், 1705 ல் யோசப்டியேசுமரியா, மனுவல்டிமிராண்டா, யாக்கோமே கொன்சாலஸ், மிகுவேல்டிமெலோவ் என்ற குருக்களும், 1708 ல் இக்னாசியோடிஅல்மெய்டா, பசிலியோ பறற்ரோல் ஆகிய குருக்களும் வந்தனர்.

ஏழு மாதங்களில் மிகுவேல் இறந்துபோனார். பெயர் குறிப்பிடாத வேறு சிலரும் இங்குவந்து ஆன்மீகப்பணியில் ஈடுபட்டனர். இவர்கள் அனைவரும் கொங்கணிப் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்

கள். 16 தை 1711 ல் யோசவ்வாஸ் இறைவனடி சேர்ந்தபொழுது, இக் குழுமத்தைச் சேர்ந்த ൮ குருக்கள் சேவையாற்றினர்.

மிசனரிகளின் பணி:

போர்த்துக்கேயர் கால மிசனரிகள் கரையோரங்களிலேயே பணி புரிந்தனர். போர்த்துக்கேய மொழியில் கல்விக்கூடங்களை நடாத்தி அதிகமாக அம்மொழியிலேயே போதித்தும், வழிபாடு களை நடத்தியும் வந்தனர். புனித பிரான்சீஸ் சவேரியார் மொழிக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய, என்றிக்கஸ் என்றிக்கஸ் அடிகளை தமிழ் பயிலத் தூண்டினார். ஒல்லாந்தர் காலத்தில் கண்டி இராச்சி யத்தையேமையமாக வைத்து, கிராமங்களையே தளமாக்கி இக் குருக்கள் சேவை செய்தனர்.

இவர்கள் போர்த்துக்கேய மொழிக்குப் பதிலாக தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளை உபயோகித்தனர். இவர்கள் கொங்கணிப் பிரா மணர்களாக இருந்தபடியால், சமஸ்கிருதம், கன்னடம், போர்த் துக்கேய மொழிகளுடன் தமிழ், சிங்கள மொழியையும் நன்கு கற்ற னர். யோசவ்வாஸ் முனீந்திரர் சமய நூல்களை தமிழில் எழுத ஆரம்பித்தார். இப் பணியைப் பின் யாக்கோமே கொன்சாலசி டம் ஒப்படைத்தார்.

ஒல்லாந்தரின் கடும் போக்கால் கத்தோலிக்க குருக்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. குருக்கள் வெளியரங்கமாக வழிபாடுகளை நடத்த முடியாத இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டனர். இதனால் இக் குருக்கள் ஒல்லாந்த நிர்வாகத்தின்கீழ் இருந்த இடங்களுக்குப் பகலில் பிச்சைக்காரர், அடிமைகள், மீன் வியாபாரிகள் போல, வேடமிட் டுத் திரிந்தனர் இரவில் தம் மக்களைச் சந்தித்து, ஆன்மீகப் பணியை ஆற்றினர். ஒவ்வொரு இரவும் வெவ்வேறு இடங்களில் மாறிமாறித் தங்கினர்.

இதேவேளை கண்டி அரசிலோ, இக்குருக்கள் மாறுபட்ட வேறு பல துன்பங்களை அனுபவித்தனர். இங்கு இவர்கள் சுதந்திரமாக உலாவினாலும், மலைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், காடுகள் போன்ற இடங்களை, கடும் வெயில் மழையூடே கடக்கவேண்டியிருந் தது. பாம்பு, பூச்சி, பயங்கர மிருகங்கங்களைச் சந்திக்க வேண்டி யிருந்தது.

போர்த்துக்கேயர் காலத்தில் போல, மனம் மாறி, மதம் மாற ஊக்கிகள் உதவிகள் முதலிய எதுவிதத் துணையுமின்றி, யோசவ் வாஸ் முனீந்திரரால் எங்ஙனம் கத்தோலிக்கத்துக்காக மாபெரும் அறுவடையைச் செய்ய முடிந்தது? ஊக்கிகள் உதவிகள் இல்லாத சூழலில், வாதைகளும் உபத்திரவங்களும், கத்தோலிக்கத்துக்கு

உச்சமாக இருந்தவேளை, ஆன்மீக அறுவடையோ அமோகமாக இருந்தது எப்படி?

ஒல்லாந்தர் பகுதியில் கத்தோலிக்கராக மாறிய மக்கள் பட்ட துன்பங்கள் பல. சிறையில் வாடினர். சித்திரவதை, சவுக்கடிக்குள்ளாகினர். தண்டம் விதிக்கப்பட்டனர். பட்டம் பதவிகள் பறிக்கப்பட்டு பாதைசாரியாக விடப்பட்டனர் கடும்ஊழியத்தால் உடல் உளம் சோர்ந்தனர். நாடு கடத்தப்பட்டனர். டோம் பெற்றோ போன்றோர் கொல்லப்பட்டனர்.

இதேவேளை கண்டி அரசுப் பகுதிகளில் பௌத்த மதத்தின் ஆதிக்கம், வலுப்பெற்றிருந்தது. இதனால் கிறிஸ்தவம், பௌத்த முன்னணிப் பெரியார்களின் கடும் எதிர்ப்பை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. இத்தகைய பெரும் சூறாவளிகளுக்கிடையேதான் இம் மண்ணின் மக்கள் கத்தோலிக்கத்தில், அதுவும் தாம் பரம்பரை பரம்பரையாகப் பின்பற்றிய மதங்களிலிருந்து, வந்து சேர்ந்தனர். பதித மதத்திற்குச் சென்றவர் கூட கத்தோலிக்கராக மாறினர்.

இதற்கான காரணங்கள் எவை?

காரணங்கள் [9]

முதலாவது சமூக காரணம். சாதிக்குழுக்களாக மனம் மாறியமை. திருமணம், மரணச்சடங்கு, பூப்பெய்தல் சடங்கு போன்ற சடங்குகளின்போது சொந்த பந்தம் என்று ஒரே சாதியினர் ஒன்று சேருவர். அப்பொழுது அச்சாதியினர் தம் அயலில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கரெனின், மற்றவர்களையும் கத்தோலிக்க சபையில் சேரும்படி ஊக்குவித்தனர். இவ்வாறாக வன்னிப்பகுதியில் யானை வேட்டையாடுவோர், யாழ்ப்பாணம், மன்னார் குருகுலத்தினர், பரவர், செட்டியார் போன்றவர், தம்மவர்களை கத்தோலிக்கத்துக்குத் திரும்பும்படி ஊக்குவித்தனர்.

இரண்டாவது கலாச்சார காரணம். [10] கத்தோலிக்க திருமறையின் அழகான வழிபாடுகள், ஆராதனைகள், சடங்குகள் ஆகும். கிறிஸ்மஸ், பாஸ்கா போன்ற உயர்விழாக்கள், புனிதர்களின் பெருவிழாக்கள், நவநாட்கள், பாடல்கள், நாடகங்கள், உடக்கு பாசுகள், ஊர்வலங்கள் ஆதியன மக்களைக் கவர்ந்து ஒன்றிணைத்தன. கத்தோலிக்க தாந்தரிக மரபில் இலக்கியம், நாடகம், மருத்துவம், தர்க்கம் போன்றவை சிறப்புற்று வளர்ந்திருந்தன. ஏனைய மதங்களுக்கு ஓரளவுக்கு ஈடுகொடுக்குமளவுக்கு செழிப்புற்றும் விளங்கின.

மூன்றாவது அரசியல் காரணம், கத்தோலிக்கம் அரச பரம்பரைக் குள்ளும் மனமாற்றத்தை ஏற்படுத்தியதாகும். சோழர் எழுச்சியும் வீழ்ச்சியும், முகமதியரின் எழுச்சியும் சிங்கள மன்னர்களின் எழுச்சியும் சைவசமயத்தின் வளர்ச்சிக்கு உதவவில்லை. தெற்கில் கோட்டை, தர்மபாலாவின் மதமாற்றம், கண்டியில் டொனா கத்தரினாவின் மனமாற்றம், யாழ்ப்பாணம் சங்கிலி அரசனின் வீழ்ச்சியும் அவனது அரசகுடும்பத்தவரின் மதமாற்றமும், வன்னி அரசின் அரசகுடும்பத்தினர் சிலரின் மதமாற்றம் என்பவை கத்தோலிக்க மறையின் செல்வாக்குக்கு ஒருசில எடுத்துக்காட்டுகளாகும். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.

இதேவேளை விஜய நகரப் பேரரசின் மறுமலர்ச்சியில் புத்துயிர் பெற்ற சைவம், வைணவம் போன்ற சமயங்களின் ஆதிக்கம், இங்கு இருந்த கத்தோலிக்க செழுமையால் அதிகம் தாக்கப்படவில்லை. பிரித்தானியர் காலத்தில் சைவம் புத்துயிர் பெற்றபொழுது பெரும்பாலான யாழ்ப்பாணத்துப் பக்தர்களும் சித்தர்களும் 19ம் 20ம் நூற்றாண்டுகளிலே தோன்றினர்.

நான்காவது ஆன்மீகக் காரணம்.[11] கத்தோலிக்க மிசனரிகளின் உண்மையான உழைப்பு. இவர்கள் உண்மையான கிறிஸ்துவின் பக்தர்களாகவும், சித்தர்களாகவும் திகழ்ந்தனர். இவர்கள் வெறும் வாய்ச்சொல் வீரர்கள் அல்லர். வெற்று வார்த்தையில் கவி புனையும் கவிஞர்களும் அல்லர். உள்ளத்துள் ஊறுவதைச் சொல்லாலும் செயலாலும், உருக்கொடுத்த உண்மையான வீரர்களாகும். குதிரை வண்டிகளில் வலம் வந்து, ஒல்லாந்த இராணுவ அரவணைப்புடன், டச்சுமொழியில் பிரசங்கித்துவிட்டு அரண்மனைக்குச் சென்ற, டச்சுப்போதகர்கள் போன்றவருமல்லர்.

கத்தோலிக்க மிசனரிகள் மக்களுடன் மக்களாய், ஏழைகளுடன் குடிசைகளிலே குரக்கன் கூழ் குடித்து. அவர்களின் இன்ப துன்பங்களிலே பங்கேற்றவர்கள்.

''மனையும் பிறவும் துறந்து
காடும் மலையும் புக்குக் கோடையில்
உடையை துறந்தும் உண்ணாது உழன்றும்
காயும் கிழங்கும் காற்றும் உதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருந்தியும்
கனலிலும் கல்லிலும் கண்படை கொண்டும்
தளர்வுறும் யாக்கையைத் தளர்வித்து ஆங்கவர்
அம்மை முத்தி அடைவதற்காகத்
தம்மைத்தாமே சாலவும் ஒறுப்பர்.'' [12]

என்ற பாடலைப் பாடி உருகியோர், கத்தோலிக்க குருக்களை நடமாடும் கிறிஸ்தவ முனிவர்களாகக் கண்டு அவர்கள்பால் ஈர்க்கப் பட்டனர். மிசனரிகள் செபதபம், விரதத்துவம், ஏழ்மை ஆகிய கிறிஸ்தவ பண்புகள் நிறைந்த கத்தோலிக்க வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தார்கள். விசேடமாக வாந்திபேதி கொலரா போன்ற கொடிய நோய்கள் மக்களை வாட்டி வதைத்தவேளை, உற்றார், உறவினர், நோயாளர்களை குடிசைகளில் தவிக்கவிட்டு ஓடியவேளை, கத்தோலிக்க மிசனரிமார்கள் நோயாளர்களுக்கு அன்புக்கரம் நீட்டி, தனித்து நின்று, மருந்து, உணவு, உடை கொடுத்துப் பராமரித்தனர்.

கண்டியில் 1698 ம் ஆண்டில் யோசவ்வாஸ் முனீந்திரரின், இத்தகைய தியாகம் நிறைந்த சேவையைக் கண்டு 2 ம் விமலதர்ம சூரியன் கத்தோலிக்க மிசனரிகள்மீது நன்மதிப்புக் கொண்டான். நோயுற்றோரைத் தவிக்கவிட்டோடிய பௌத்தபிக்குகள், நகர் திரும்பியபின் பலகுற்றச்சாட்டுகளை இவர்கள்மேல் சுமத்தினர். பிக்குகளின் முறைப்பாடுகளையும் குற்றச்சாட்டுகளையும் அரசன் செவியுற்றுச் சிரித்தான். அவர்களின் போக்னக எள்ளி நகையாடினான். 13

புத்தளத்தில் சின்னம்மை நோய் பரவியவேளை, கத்தோலிக்க மிசனரிகள் கரிசனையுடன் கடமை புரிந்தனர். தொற்றுநோய்த் தடுப்பில் அவர்கள் ஆற்றிய அற்புத செயலைக்கண்டு, முஸ்லிம் மக்கள் மனம் மாறினர்.

மாதாபக்தி, தபம், மந்திரம், வனப்பிரஸ்தம், ஏழ்மை, தூய்மை போன்ற அரும்பெரும் குண இயல்புகள், கத்தோலிக்க தாந்தரிகத்துக்கு உரம் ஊட்டின. யோசவ்வாஸ் முனிவரும், அவரின் சீடர்களும் இத் தாந்தரிக மரபின் ஊக்கிகளான சித்துக்கள் ஊடாக கத்தோலிக்க தாந்தரிகத்தை வளப்படுத்தினர்.

சித்தர்கள் தியானத்தால் மட்டுமல்ல. தபம், மந்திரம், மூலிகைகள் போன்றவற்றாலும் சித்துக்கள் செய்கின்றனர். அட்டமாசித்திகள் பற்றி திருமந்திரமும், வேறு சித்தர் பாடல்களும் சான்று பகர்கின்றன. ஆனால் யோசவ்வாஸ் முனிவரும் அவரது சீடர்களும், யேசுவின் நாமத்தால், அவரது ஆவியின் வல்லமையால் அற்புதங்களைச் செய்தனர். அவர்கள் தங்களைத் தாக்கவந்த யானைகளையும், பயங்கர மிருகங்களையும் அடிபணியச் செய்தனர்.

யோசவ்வாஸ் முனிவர் செய்த சில அற்புதச்செயல்களை, இங்கு நினைவு கூருதல் பொருத்தமாகும்.

அற்புத மழை: [14]

1696 ம் ஆண்டுக் கடிதம் கூறும் 'அற்புத மழை' கண்டியில் நிகழ்ந்தது.

கண்டியில் மழையின்றி பெரும் வரட்சி ஏற்பட்டது. வரட்சியைப் போக்கும்படி கண்டி அரசன் பௌத்த பீக்குகளிடமும், இந்துக் குருக்களிடமும் கேட்டுக்கொண்டான். அவர்கள் செய்த பிரித்துக்கள், யாகங்கள், மந்திரங்கள் எதுவும் வரட்சியைப் போக்கவில்லை. இதனால் கண்டி அரசன் அரண்மனைக் கிறிஸ்தவ ஏவலாளர் ஊடாக, வாஸ் முனிவரை வரட்சியைப் போக்க செபிக்கும்படி விண்ணப்பித்தான்.

யோசவ்வாஸ் முனிவர் மக்கள் கூடும் பகிரங்க இடம் ஒன்றில் சிலுவை ஒன்றை நாட்டி, ஒரு பீடமும் அமைத்தார். அங்கு கூடி நின்ற திரளான ஜனக்கும்பல் முன்பாக, அவர் சிலுவைமுன் முழந்தாளிட்டு செபிக்கலானார். சிறிது நேரத்தில் வானத்தில் கார்முகில் கூட்டங்கள் கூடின. குளிர் காற்று வீச, பெரும்மழை பெய்யத் தொடங்கியது.

யானை வேட்டை: [15]

1700 ம் ஆண்டு பெட்றோ பெரவோ அடிகள் எழுதிய கடிதம் கூறும் அற்புத யானைவேட்டைச் சம்பமாவது:

அலெக்சோ என்ற கிறிஸ்தவ யானைப்பாகன் பிடித்த யானைகள் ஒன்றும் உயிரோடு இருக்கவில்லை. இதனால் அலெக்சோ, வாஸ் முனிவரிடம் சென்று, தன் துன்பநிலையைப் பகர்ந்து, பரிகாரம் வேண்டினான். அவர் அவனை பாவசங்கீர்தனம் செய்து நற்கருணையும் பெறத் தூண்டினார். அவன் அதனால் உள்ளத் தூய்மை பெற்றான்.

மன உறுதியுடன் ''இதோ ஆண்டவருடைய சிலுவை, சத்துருக்களே ஓடிவிடுங்கள்'' என்ற மந்திரத்தை ஓதும்படி ஒருதாளில் எழுதிக் கொடுத்தார். அவனும் அவர் சொன்னபடி செய்தான். அன்று தொட்டு அவன் சிறந்த யானை வேட்டையாளன் ஆனான். இதையறிந்து, முன்பு மந்திரவாதிகளிடம் சென்ற யாவரும் வாஸ் முனிவரிடம் வரத்தொடங்கினர்.

இச் சம்பவத்தின் அறுவடையாக வன்னியில் பல்லாயிரம் மக்கள் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு, கிறிஸ்தவர்கள் ஆனார்கள்.

பெற்றோ அடிகள் செய்த புதுமை: 16

மாதோட்டத்திலும் கண்டி போல் ஒரு வரட்சி நிகழ்ச்சிபற்றி 1700 ம் ஆண்டுக் கடிதம் தருகிறது.

பாடுபட்டு உழுது, விதைத்து, பயிர் முளைத்து, வளர்ந்தவேளை வரட்சி வந்தது. பயிர்கள் வாடத்தொடங்கின. மக்கள் மந்திரவாதிகளை நாடினர். மந்திரவாதிகள் வரட்சிபோக்க மந்திரம் ஓதினர். பலி கொடுத்தனர். கண்ட பலன் ஒன்றுமில்லை.

கிறிஸ்தவர்கள் பேட்றோ பெராரோ அடிகளிடம் ஓடிச்சென்று உதவி கோரினர், அவரும் அவர்களின் துன்ப துயரம் போக்க, வரட்சி நீங்க, எல்லாம் வல்ல தேவனிடம் இரந்து வேண்டினார். வரட்சி நீங்கியது. வாடி நின்ற பயிர்கள் பசுமை பெற்றன. பயிரை அழித்த பூச்சிகளை அழிக்க அடிகளார் பூச்சிமருந்தும் கொடுத்தார். பயிரின் பலன்கள் பலமடங்காகின.

காவல் அரண்:

பயங்கர காட்டுமிருகங்கள் நிறைந்த கானக வாழ்வில் வாஸ் முனிவரும் அவர் சீடரும் அஞ்சாது வாழ, காப்பரணாக செபம் விளங்கியது. உதவியது. முதலைகள் நிறைந்த ஆறுகளில் வாஸ் முனிவர் முன்செல்ல, அவர் சீடர் தொடர்ந்து செல்வர். அவரைக் கண்ட மிருகங்கள் விலகிச் சென்றன. அவரின் பாத ஓசை கேட்ட பாம்புகள் பாதையை மாற்றின. முதலைகள் வேறு திசை நோக்கி விலகிச் சென்றன. இவ்வற்புத நிலை எப்படி வந்தது?

கானகத்திலும், காட்டாறுகளிலும், போகும் பாதைகளிலும் அவரும் அவர் சீடர்களும், இறைதுணை வேண்டி செபித்துக் கொண்டே சென்றனர். அவர் கானகத்தில் இரவில் காவல் காக்கும் போது, கண்விழித்துச் செபித்துக்கொண்டே இருப்பார். பொழுது விடிந்தவுடன் இளைப்புக் களைப்பின்றி, பயணத்தைத் தொடருவார். 17

உணவு கொடுத்தார்:

யோசவ்வாஸ் முனிவரும் அவரின் சீடர்களும் வன்னிக் காடுகள் ஊடே பயணம் செய்தனர். அடர்ந்த காட்டின் நடுவில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. இன்னும் இருநாள் பயணம் செய்யவேண்டியிருந்தது. கையிருப்பிலிருந்த உணவு ஒருவேளைக்கே போதுமானது. வாஸ் அடிகள் அதைச் சமைக்கச் சொன்னார். உணவு முற்றாகத் தீர்ந்துவிட்டது. அடுத்த நாளுக்கு என்ன செய்வது? சீடர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். அன்று இரவு காவல்காத்த

வாஸ் முனிவர் நெருப்புக்கருகிலிருந்து திருச்சபைப் புகழ்மாலையைச் செபித்துக் கொண்டிருந்தார். ஓர் அந்நிய மனிதன் அவ்விடம் வந்து, அவரை அணுகி அடுத்தநாளைய உணவு நிலையைப் பரிவுடன் விசாரித்தான். முனிவர் உண்மை நிலையை அவனுக்கு உணர்த்தினார். அவன் அவர்களுக்குப் போதுமான உணவைக் கொடுத்துவிட்டுச் சென்றான். [18]

ஆழமான ஆற்றைக் கடத்தல்:

பேதுரு ஓயாவை, மாயவன் ஆறு என்றும் அழைப்பர். இவ்வாறானது, இருந்தாற்போல் வற்றிப்போகும். திடீரெனப் பெருக்கெடுத்து கரைபுரண்டு ஓடும். இதனால் இவ்வாற்றுக்குப் பல உயிர்கள் பலியாகின.

ஒருமுறை வாஸ் முனிவரும் அவரின் சீடர்களும், மாயவன் ஆற்றைக் கடக்க வந்தனர். அப்பொழுது ஆற்றைக் கடக்க, பெரும் கூட்டம் காத்து நின்றது. அக்கூட்டத்தில் பலர் பிற மதத்தினர். ஆறு பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. காலத்தை வீணாக்க விரும்பாத வாஸ் முனிவர், ஒரு தடியை எடுத்து ஊன்றிக்கொண்டே யேசுநாமத்தை உச்சரித்த வண்ணம் ஆற்றில் நடந்தார். என்ன அதிசயம்? ஆற்றில் நீரின் அளவு, அவரின் முழங்காலுக்கு மேல் போகவில்லை. அவர் ஆற்றின் நடுவே நின்று யேசு நாமத்தைச் சொல்லிக்கொண்டு ஏனையோரும் ஆற்றைக் கடக்க உதவினார். [19]

ஆவிகளை ஓட்டுதல்:

யோசவ்வாஸ் முனிவரும் அவர் சீடர்களும் அசுத்த ஆவிகளை ஓட்டிய சம்பவங்கள் பல உள்ளன.

1698 ம் ஆண்டுக் கடிதத்தில் இருக்கும் சம்பவங்களில் இரண்டை இங்கு பார்ப்போம்.

பேய் பிடித்திருந்த ஒரு பெண்ணை, மக்கள் அவரிடம் கொண்டு வந்தனர். அவர் புனித மாற்கு நற்செய்தியிலிருந்து ஒரு பகுதியை வாசித்து, அப்பெண்ணை ஆசீர்வதித்தார். அப்பெண்ணைப் பிடித்திருந்த அசுத்த ஆவி அவளை விட்டு ஓடியது.

அடுத்த சம்பவம் மன்னாரில் நிகழ்ந்தது. யோசவ்வாஸ் அடிகளார் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருக்கும்பொழுது, திருப்பலிக்கு வந்திருந்த வேலைக்காரப் பெண்ணொருத்திக்கு பேய் கலை கொண்டு ஆடி, அவளை நினைவிழக்கச் செய்தது. அவள் தடால் என நிலத்தில் விழுந்தாள். திருப்பலி முடிந்தபின் அவர், அவளைத்

தம்மிடம் கொண்டுவரும்படி கட்டளையிட்டார். அவரிடம் அவளைக் கொண்டு சென்றதும், அவர் புனிதமாற்குவின் நற்செய்தியிலிருந்து ஒரு பகுதியை வாசித்து, ஆசிநீர் தெளித்து, அவளை ஆசீர்வதித்தார். அவளைப் பிடித்திருந்த அசுத்த ஆவி அகன்றுபோக, அவள் குணமானாள். 20

மழையில் நனையாத புதுமை:

புத்தளம் தொடக்கம் நீர்கொழும்பு வரை, வாஸ் முனிவர் தம் சீடர்களுடன் புனித பயணம் செய்தார். நான்கு நாட்கள், மழைவிடாது பெய்துகொண்டிருந்தது. புனித பயணத்தை அவர்கள் மழைக்கூடாக மேற்கொண்டபோது, அவர்கள் சென்ற பாதை மாத்திரம் நனையாது காணப்பட்டது. அவர்களின் இரு மருங்கிலும் மழைநீர் வெள்ளமாக ஓடியது. அவர்களுடன் பயணம் செய்த பிறமதத்தினர் இப்புதுமையைக் கண்டு மனம் மாறினர். 21

மிசனரிகளும் வைத்தியமும்:

இறைமகன் கிறிஸ்துவின் இறையரசைப் பரப்ப இம்மண்ணின் பல பகுதிகளுக்கும் மிசனரிகள், காடு, கரம்பை, ஆறு, மலைகள் கடந்து சென்றனர். போகும் இடங்களில் தாம் பெற்ற பட்டறிவால், மக்கள் நோய் தீர்க்கும் வைத்திய முறைகளையும் கற்றுக்கொண்டனர். ஓரிடத்தில் கண்டறிந்த மூலிகைகள், மரக்கறி வகைகள், கனிவகைகள் போன்ற பசுமைகளையும், ஏனைய இடங்களுக்கெல்லாம் கொண்டு சென்றனர். தாம் சென்ற இடங்களில் அவற்றைப் பயிரிட்டு வளர்த்தனர்.

எம் மண்ணில் முன்பிருக்காத தக்காளி, மிளகாய், அலெக்காடோ போன்றவற்றையும், பல மருத்துவ பயன்மிக்க மூலிகைகள், அவை பற்றிய விளக்க விபரங்கள் அடங்கிய வைத்திய ஏடுகளையும் மிசனரிமார் இங்கு கொண்டுவந்தனர். ஏழை மக்களின் வாழ்வை வளம்படுத்த தம்மாலான சேவையையும் நல்கினர். உடல், உள, ஆன்மீகக் குணமாக்கல்கள் ஒன்றுசேர இறை மகிமைக்காகத் தம்மை அர்ப்பணித்து, மிசனரிகள் அன்றும் இன்றும் சேவையாற்றிக் கொண்டே இருக்கின்றனர்.

அண்மையில் செஞ்சீனாவில் சிறைவாசம் அனுபவித்து, மரித்த சீனக் குருவானவர் சிறந்த மூலிகை வைத்தியர். இவரின் உடல் வைக்கப்பட்ட கல்லறையில் முளைக்கும் புல்பூண்டுகள் நோயைக் குணமாக்கும் சக்தி பெற்றவை. அங்குள்ள மக்கள் இப் புல்பூண்டுகளை கசாயமாக்கிக் குடித்தனர். 22 தீராத கடும்நோய்கள் கூட இக்கசாயத்தைப் பருகியதால் புதுமையாக குணமடைந்ததாக உறுதிப்படுத்தப்பட்ட செய்திகள் கூறுகின்றன.

20 ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் பிறமதத்தினரை வென்றெடுக்க மிசனரிகள் மாதோட்டத்தில் மூலிகை அறிவைப் பயன்படுத்தினர். அங்குள்ள மக்களின் உடல் நோயைக் குணமாக்கி, அவர்களின் உள்ளத்தை வென்றனர்.

கண்டி அரசன், அன்ரோனியா டாரவேராவையும் கிறிசோஸ்ரொம் பெர்னாண்டோ அடிகளாரையும் வரவேற்றவேளை, பெர்னாண்டோ அடிகளாரின் சிறந்த வைத்திய அறிவை அறிந்துகொண்டான். அதனால் அவரைத் தனது அரண்மனை வைத்தியனாக்கி, சகல வசதிகளும் செய்து கொடுத்தான். ஆயின் அவரை வெளியே மிசனரிவேலைகள் செய்ய அனுமதியளிக்கவில்லை. அதனால் அவரது ஆன்மீக வேலை, அரண்மனைக்குள் முடங்கிக் கிடந்தது.

கோவைக்குருக்கள் சுதேச வைத்தியத்தில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர். போர்த்துக்கேயர், அராபியா, தென் அமெரிக்கா, தென்கிழக்காசிய தீவு போன்ற இடங்களிலிருந்து இந்தியாவுக்கு அறிமுகஞ் செய்த மூலிகைகளில் இவர்கள் ஈடுபாடுடையவர்களாக இருந்தனர். கோவைக் குருக்கள் தம் வைத்திய வளத்தினை மக்களுக்குப் பயன்படுத்த, கோவா போன்ற பட்டணங்களில் மருத்துவமனைகளை நிறுவினர். இத்துடன் நிறுத்திவிடாது, சுதேசிகள் மத்தியில் (கிராமங்கள், நகரங்கள் தோறும்) சுதேச வைத்திய மாண்பினை ஊட்டி ஊக்குவித்தனர்.

இவ் அளப்பரிய செயலால் சுதேச கத்தோலிக்க மக்களிடையே, சுதேச வைத்திய அறிவு சுவறத் தொடங்கியது. அதிலிருந்து சுதேச வைத்தியர் பலர் சுடர்விடத் தொடங்கினர். ஒல்லாந்தர் காலத்தில், கத்தோலிக்கர் மூடுவாழ்க்கை வாழ்ந்த வேளையில், உள்ளாக ஊடுருவி, தெல்லிப்பளை, பச்சிலைப்பள்ளி, கரவெட்டி, அச்சுவேலி, இளவாலை, பண்டத்தரிப்பு, சில்லாலை ஒட்டகப்புலம் போன்ற கிராமங்களில் சுதேச வைத்தியர்கள் தம் சேவையை மக்களுக்கு அளித்தனர்.

இவர்களின் வைத்திய வழிமுறைகளுக்கான ஏடுகளில் வீரமாமுனிவரின் நாசகாண்டம் இடம் பெற்றது. சுதேச வைத்திய ஏடுகள் பல, இன்னும் கத்தோலிக்க பரம்பரைக்குள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன. வெளிவந்த சிற்சில ஏடுகளிலிருந்து மேற்கூறப்பட்ட உண்மைகள் தெரிய வருகின்றன.

கத்தோக்க மக்களிடையே, கத்தோலிக்க மாந்திரீக மரபு ஒன்று, வேர்விட்டு வளர்ந்திருக்கிறது. இம் மரபுக்கு சுதேச வைத்தியச் சுவறல் உள்ளோட்டமாக உதவி வந்தது. இம் மரபு கிளாலி, நாவாந்துறை, கொழும்புத்துறை, பாசையூர், கரையூர், மாதோட்டம், போன்ற இடங்களில் காணப்பட்டது.[23]

# சாங்கோபாங்க சுவாமிகள்

இந்தியாவில் இத்தாலி நாட்டைச் சேர்ந்த கான்ஸ்டன்டைன் பெஸ்கி என்னும் இயற்பெயர் கொண்ட, வீரமாமுனிவர் என்ற தமிழ்ப் பெயர் பூண்டவர், செய்த அளப்பரிய சேவைபோல், இம் மண்ணில் யாக்கோமே கொன்சாலஸ் எனப்படும் சாங்கோபாங்கு சுவாமிகளும் சேவையாற்றினார்.

1705 நவம்பர் 22, கடிதம் தரும் செய்தியின்படி, இலங்கை மண்ணில் பணிபுரிய பலர் விண்ணப்பித்தனர். அவர்களில் நால்வர் மட்டும் தெரிவாகினர். அவர்களுள் ஒருவர் கொன்சலாஸ் சுவாமிகள். [24] இவர்கள் நால்வரும் கோவாவில் இருந்து மே மாதம் 9 ந் திகதி வள்ளம் ஒன்றில் புறப்பட்டனர். தமிழ் நாட்டில் இரண்டு மாதங்கள் தங்கியிருந்து தமிழ் கற்றனர். அங்கிருந்து யூலை 14 ல் புறப்பட்டு, எட்டு நாட்களில் கன்னியாகுமரி வந்துசேர்ந்தனர். நான்கு நாட்களில் தூத்துக்குடிக்கு வந்தனர் அங்கு இருபத்தாறு நாட்கள் தங்கினர், அங்கிருந்து ஆவணி 26 ல் புறப்பட்டு நான்கு நாட்களில் தலைமன்னார் வந்து சேர்ந்தனர்.

ஒல்லாந்தரின் அடக்கு முறைகளும் அழுத்தங்களும் நிறைந்த காலகட்டத்தில் வந்த இவர்கள், இரவுப் பறவைகளாக தம் பயணத்தைத் தொடர வேண்டியதாயிற்று. இரவோடு இரவாக, இரகசியமாக, மாதோட்டத்தில் இருந்து வள்ளத்தில் மன்னார் வந்தனர். ஒல்லாந்தரின் கெடுபிடிகள் நிறைந்த வேளையில், மக்கள் துணிவுடன் ஒல்லாந்தருக்கு அஞ்சாது குருக்களை முழந்தாட்படியிட்டு வரவேற்றனர். இறைபணிக்காக இங்கு வந்த இவர்கள், யோசவ்வாஸ் முனிவரைச் சந்திக்க வன்னிக்குச் சென்றனர். இவர்களின் வருகையோடு இலங்கையில் இறைபணி செய்யும் குருக்கள் தொகை ஒன்பதாயிற்று.

பயணப்பாதையில் ஏற்பட்ட தடைகளை வெற்றிகொள்ள, இவர்கள் இறையருளில் இறுக்கமாக நின்றனர். அத்துடன் கிறிஸ்துநாதர் அனுசாரம் என்ற தியான நூலின் 3 ம் காண்டத்தில்,

இதயத்து ஆசைகளை ஆராய்ந்து மட்டுப்படுத்தல். (11 ம் அதி.)

பொறுமை காப்பதும் உடல் ஆசைகளை எதிர்த்துப் போராடுவதும். (12 ம் அதி.)

ஒரு பொருளை விரும்பும் நிலையில் எவ்விதம் ஒழுக வேண்டும்? அதை எவ்விதம் கேட்க வேண்டும்? (15 ம் அதி.)

எல்லாக் கவலைகளையும் இறைவனில் வைக்க வேண்டும். (17 ம் அதி)

என்ற அதிகாரங்களை (11, 12, 15, 17.) வாசித்து அவ்வாசகங்களை தம்பெரும் காப்புக் கவசமாகக் கையாண்டனர்.[25]

மூன்று முனைப்புகள்:

ஒல்லாந்தர் ஆட்சியில், திருச்சபை வரலாற்றின் 2ம் கட்டம் மூன்று முனைப்புகளைத் திருச்சபையின் வாழ்வில் வளர்த்தது. முதலாவது கத்தோலிக்க இலக்கியத்தின் வளர்ச்சி. இரண்டாவது யோசவ்வாஸ் முனிவர் கத்தோலிக்க மக்களிடையே இழையோடச் செய்த கத்தோலிக்க தாந்தரிக மரபும் சித்திகளும் பரவலாக்கப் பட்டமை. இதனால் மக்கள் குருக்களைக் கிறிஸ்தவ சித்தர்களாக, முனிவர்களாக தம் மனங்களில் வைத்துப் பூசித்தனர்; பணிவிடை செய்தனர்; பராமரித்தனர். மன்னனும் அவர்களை சித்தர்களாக, முனிவர்களாகவே நோக்கினான்.

மூன்றாவது ஒல்லாந்தரின் கெடுபிடி போக்கின் வேகரம் குறையத் தொடங்கியமை. இதற்குக் காரணம் கத்தோலிக்க மக்களின் தாந்தரிக நெறிப்படுத்தலால் முன்னெடுக்கப்பட்ட சாத்வீகப் போராட்டங்களாகும். 1713 தொடக்கம் 1744 வரை, வரையப்பட்ட கடிதங்கள் இதற்குச் சான்றாகும். அத்துடன் ஒல்லாந்தில் இருந்த பெரும் புள்ளிகள் ஒன்றுபட்டு இருக்காது, தங்களுக்குள் கத்தோலிக்கத்தின் மட்டில் இருந்த கடும்போக்கினை விரும்பாததும், கத்தோலிக்கத்துக் கெதிரான கடும்போக்கு தங்கள் வியாபாரத்தைப் பாதிக்கக்கூடும் என்ற அச்ச உணர்வுமே இதற்குக் காரணங்களாகு மென்பதும் அவர்களது கூட்ட அறிக்கைமூலம் அறிய முடிகிறது.

ஆட்சியாளர் மக்கள்மீது மிதவாதமும், கோவைக் குருக்கள்மீது தீவிர போக்கும் கொண்ட இரட்டை வேடக் கொள்கையைக் கைக் கொண்டனர். இதேவேளை கண்டி அரசனின் ஆதரவு மிசனரிகளுக்கு இருந்தது. இதனால் மிசனரிகளின் ஆன்மீகத் தாகம் அதிகரித்தது. கத்தோலிக்க விசுவாசம் சுடர்விடத் தொடங்கியது.

இதனால் இக்காலம் கத்தோலிக்கத்தின் பொற்காலம் எனப் போற்றப்பட்டது. ஒல்லாந்தர் கத்தோலிக்கத்தின் மலர்ச்சி கண்டு மலைத்தனர். போதகர்களும் அவர்களின் அடிவருடிகளும் இவ் வெழுச்சி கண்டு, வேகரம் கொண்டு கொதித்தனர். கத்தோலிக்க குருக்களுக்கும் இல்லத் தலைவர்களுக்கும் எதிராக, கடும் சட்டங்கள் போடப்படவேண்டுமென்று கோரினர்.[26]

கத்தோலிக்க தமிழ் இலக்கிய மரபு:

இலக்கியங்கள், நாகரிகங்களின் பொற்காலத்திலா! அல்லது அதன் சிதைவுகளிலா எழுந்தன என்பது, வரலாற்று ஆசிரியர்களின் சர்ச்சைக்குரிய கேள்வியாக மாறி வருகிறது. [27] இருந்தும் கத்தோலிக்க தமிழ் சிங்கள இலக்கியம், யோசவ்வாஸ் முனிவரின் உள்ளார்ந்த ஊக்குவித்தலுடன் யாக்கோமே கொன்சாலஸ் சுவாமிகள் காலத்திலே மலர்ந்தது எனலாம். அவர் படைப்புகள் 18ம் நூற்றாண்டில் இத்தீவின் கத்தோலிக்கத்தின் சிலுவைப் பாதையின் எழுத்து வடிவங்களாக, சிலுவைச் சாவின் பாடுகளின் விழுமியங்களாகவே காட்சியளித்தன. [28]

அவர் படைத்த சுவிசேச விரித்துரைகள், பசாம், சுகிர்தக்குறள் விபரம் பற்றியெல்லாம் பல வித்தகர்கள் விரிவாக எழுதியும் உரைத்தும் உள்ளனர். யேசுசபை S. G. பெரேரா அடிகள், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், ஆயர் எட்மன்ட் பீரீஸ் ஆண்டகை, அண்மையில் பிலேந்திரன் அடிகள் தம் கலை ஆய்வுக்காக யக்கோமே கொன்சலாசின் பசாம் பற்றியும் எழுதியுள்ளனர். கொன்சலாஸ் சுவாமியின் படைப்புகளும் அவைபற்றி எழுதப்பட்ட எழுத்துகளும் ஊன்றி ஆய்வு செய்யுமிடத்து, கத்தோலிக்க தாந்தரிக மரபு, புத்துணர்வு பெற இடமுண்டு.

இதுவரையும் விமர்சனங்களின் ஆய்வுக்குள் அகப்படாத கொன்சலாஸ் அடிகளின் பழைய புதிய ஏற்பாட்டுச் சரித்திரத்தின் ஆய்வை இங்கு சுருக்கமாக நோக்குவாம்,

பழைய புதிய ஏற்பாட்டுச் சரித்திரம் [29] (தேவ அருள் வேத புராணம்)

கொன்சலாஸ் அடிகளாரின் பழைய புதிய ஏற்பாட்டுச் சரித்திரத்தின் இரண்டாம் பதிப்பு 1914ம் ஆண்டு சென்னையில் தென்னூர் ஆ. சூசை அண்ணாத்துரை அவர்களால் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தது. 'சங். இராஜரிஷி சாங்கோபாங்கநாத சுவாமிகள் அருளிச் செய்த' என்று மாத்திரம் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நூல் இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது, (1) புராந்திம காண்டம் (2) பச்சிம காண்டம்.

புராந்திம காண்டம் ஏழு யுகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. அனாதியுகம்
2. ஆதாமின் யுகம்
3. நோவேயின் யுகம்
4. ஆபிரகாமின் யுகம்
5. மோயீசனின் யுகம்
6. சலமோனின் யுகம்
7. திவ்ய சிருஷ்டிகரின் யுகம்

சருவேஸ்வராய நம என்று ஆரம்ப மந்திரத்தைக் கொண்டு இந்நூல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆதியந்தமற்ற கடவுளின் தற்சுபாவ மகிமை அறிவித்தலுடன் தொடங்கி, 4 சங்கைகளில் ஒரே கடவுள் உள்ளார் என்று நிருபிக்கிறது. 2 ம் அதிகாரம் அவரின் ஆறு இலட்சணங்களை சுலோகங்களாக முன்வைத்து விளக்குகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| சுயம்பு | — | அனாதி | — | அசரீரி |
| சமஸ்த | — | சுருப | — | லஷித்தா |
| சுக்கிரா | — | சர்வ | — | வியாபித்தா |
| மூலஞ் | — | சர்வ | — | நிமித்தா நம. |

அத்தியாய முடிவில் அது ஸ்தோத்திர செபமாக்கப்படுகிறது.
அச்செபம்:-

சுயம் சுபாவா...... நமோ
அனாதி யனந்தா...... நமோ
அசரீரி ரூபா...... நமோ
சமஸ்த சுப சவுந்தரா...... நமோ
சர்வவியாபேஸ்வரா ... நமோ
சர்வ மூல முதலானே...... நமோ நம.

அநாதியுகம் - ஆதாமின் யுகம். 3 ம் அதிகாரம் - ''அரூபிகளின் சிருஷ்டிப்பு காண்பிக்கப்படும்'' என்று ஆரம்பிக்கிறது.

''இது காரும் புவன விலாசமும் நிமித்திகரிக்கப்பட்ட ஜெனனப் பிரகாரங்களும் சொல்லப்படும் என்று மாத்திரம் எழுதப்பட்டுள்ளது.

அச்சு யந்திரப் புரட்சி யாழ்ப்பாணத்துக்கு எட்டாத காலகட்டம்; போர்த்துக்கேய காலப் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்ட நிலை; ஒல்லாந்த போதகர் (பிரடிக்கன்ஸ்) சிறுதொகையினர் போதித்த வேளை; இவர்களின் கீழ் கடமையாற்றிய பறங்கித் தமிழ் பேசும் சுதேச ஆசிரியர்கள் பதித கொள்கை விளக்கங்கள் செய்த நேரம்; கத்தோலிக்க எதிர்ப்பு பிரசார பதிதநூல்கள் மாத்திரமே பரவலாக விநியோகிக்கப்பட்டு வந்த சூழ்நிலையில், பணபலமற்ற கோவைக் குருக்கள் தாம் பரிணமித்த சமஸ்கிருத புராணப் பின்னணியில், சமஸ்கிருதம் கலந்த பிரவாக நடைத் தமிழில், அதுவும் மராத்திய ஆந்திரா மாநிலங்களில், ஆலயங்களில் ஆடிவந்த உயர்தர பொம்மலாட்ட கலையைக் கையாண்டு யேசுவின் பாடுகளை மக்கள் மனதில் நிலைநிறுத்த, தியானிக்க பசாமாகவும், வியாகுலப் பிரசங்கங்களாகவும் 30 எழுதினார்கள்.

கோவைக் குருக்களின் எழுத்தால், கலைநெறிப்படுத்தலால் கண்டு, கேட்டு, உணர்ந்து, உருகி, கிறிஸ்துவின் வரலாற்று வடிவங்களை காட்சியாக, இசையாக உற்று உணர்ந்த மக்கள் மனதில், அவை ஆழப்பதிந்து, அவர்களின் இதயத்தை இறைவனைத் தேடித் துடிக்கச் செய்தன; சிந்தனையும் செயலும் பக்திக் கடலில் மூழ்கிப் பரவசமாகி ஆன்மீகத்தாகங் கொண்டு ஆண்டவனை நாடச் செய்தன. மக்கள் மனம் மாறச் செய்தன. இவை ஏற்படுத்திய மனமாற்றம் பற்றி 1771 ம் ஆண்டு அறிக்கையில் அறியக் கிடக்கிறது. [31]

கொன்சலாஸ் சுவாமிகள் எழுதிய மேற்குறிப்பிட்ட இரண்டு காண்டங்கள் விசுவாச அறிவிலும், கலை வடிவிலும் இன்னும் ஒருபடி உயர்ந்து செல்கிறது. கத்தோலிக்க தாந்தரிகம், இந்திய சீன தாந்தரிகம் போன்று எல்லா மனிதப் படைப்புக்களையும், வாழ்நிலைகளையும் ஊடுருவிச் சென்று அவற்றை உயர்த்தும் புளிக்காரமாகத் திகழ்கிறது. ஐரோப்பாவில் கோப்புஸ் கிறிஸ்ரி திருவிழாக்களில் முழு வேதாகமமும், நாடகமாகச் சித்தரிக்கப்பட்டதே கிறிஸ்தவக் கலை வளர்ச்சியின் மத்திய காலச்சாதனையாகும். இதனை அடியொட்டி சேக்ஸ்பியர், மார்லோ போன்றோரின் நாடக வடிவங்கள் மறுமலர்ச்சி யுகத்திலெழுந்தன. ( Mystery Morality Plays ) மறை இரகசிய நாடகங்கள், மறைநெறி நாடகங்கள் (பெருமேடைகள் மூலம்) ஐரோப்பா முழுவதும் பிரபல்யமாயின.

இதேபாணியில் யாக்கோமே கொன்சாலஸ் சுவாமிகள் இந்நூலை பொம்மை பாசுகளுக்கு ஏற்றவாறு எழுதினார். 1771 இன் அறிக்கையின் படி, முதியோரில் மனம்மாற்றம் பெறுவோரின் தொகை அதிகரித்ததாக அறிய முடிகிறது. இந்த அதிகரிப்புக்கு உரமாகவும் ஊக்கிகளாகவும் இருந்தவை, மிசனரிகளின் தியாகம் நிறைந்த ஆன்மீகப் பணியும், அவர்கள் சிங்களத்திலும் தமிழிலும் எழுத்தாலும் கலைவடிவ ஊடகங்களாலும் செய்த சேவையுமாகும்.

கொன்சலாஸ் சுவாமிகளால் எழுதப்பட்ட நூல்கள், மக்கள் மனதில் பதியும்படியாக எம்மறையின் உண்மைகளை தர்க்க சாஸ்திர முறைமைகளின்படி, தெளிவும் கவர்ச்சிகரமான மொழிநடையும் கொண்டனவாக அமைந்தன. அவரின் நூல்களைப் படித்தவர், தம் பாதையைச் சீர்தூக்கிப் பார்க்கத் தவறமாட்டார். அதனால் அவர் தம் வாழ்வில் பயன்பெறாது போகவில்லை. கொன்சலாஸ் சுவாமிகளின் எழுத்துக்கள், பல பக்தர்களையும் சீர்திருத்த புரட்டஸ்தாந்த சபையினரையும் தம் தப்பறைகளை உணரச் செய்ததுடன் தாமாகவே குருக்களை அணுகி ஞானதீட்சை பெறச் செய்தன.

கொன்சலாஸ் சுவாமிகளின் பன்மொழி ஆற்றலைக் கண்ட இந் நாட்டு மொழிவல்லுநர்கள், மனந்திறந்து பாராட்டினர். இம் மண் ணுக்கே உரித்தில்லாத ஒரு அயல்நாட்டவருக்கு எப்படி இத்தகைய ஆற்றல் வந்தது என ஆச்சரியப்பட்டனர், அவரைக் காணவும், அவ ருடன் உரையாடவும் ஆசித்தனர். சுவாமிகளின் மொழி ஆளுமை யையும், இன்னிசை இராகங்களையும் கேட்க வந்தவர்கள் ''சால மோன் ஞானத்தை உற்று உணரவந்த சீபாவின் அரசிபோன்று'', முழுத்திருப்தியுடன் மௌனமாக, மானசீகமாக வாழ்த்துக் கூறி ''அவர்கள் உமது ஞானத்தைப்பற்றிப் பாதிகூடச் சொல்லவில்லை'' என்று கூறிக்கொண்டு வீடு சென்றனர்.[32]

சுவாமிகளின் தர்க்க வாதத்திறனையும், திருவிவிலியத்தில் அவ ரது நுண்ணறிவையும் ஞானத்தையுமெடுத்துக்காட்ட, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய ''சாங்கோபாங்க சுவாமிகள்'' என்ற நூலிலிருந்து ஒரு பகுதியை அவரது நடையிலேயே தரு கிறோம்.

இராச சமுகத்திற் தர்க்கம்:

அங்குறாங்கட்டை அரண்மனையில் கத்தோலிக்கருக்கும் பதித ருக்குமிடையே அடிக்கடி சமய தர்க்கம் நடந்து வந்தது. 1714ம் ஆண்டின் எழுந்தேற்றத் திருநாள் அட்டகத்துள் ஒருநாள், அரசர், சுவாமிகள் இருந்த கோவிலுக்கு அரண்மனையார் இருவரை அனுப்பி, அவர் பிராஞ்சிய பதிதனோடு தர்க்கமாட விரும்பினால் வரலாம் என அறிவித்தார்,

சுவாமிகள் விவிலியம் எனும் வேதாகம நூலையும் வேறுசில புத் தகங்களையும் எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச் சென்றார். சுவாமிகளை அரசர் தமது அருகில் இருக்கப்பண்ணி பதிதன் தனது தடைகளை சொல்லக் கட்டளையிட்டார்.

சுவாமிகள் பதிதன் வாயை அடைத்தது;

அப்போது பதிதன் தனது பிராஞ்சுப்பாஷை விவிலியத்தைத் திறந்து, புறப்பட்டாகமத்தின் இருபதாம் அதிகாரத்தில் பத்துக் கற்பனையிருக்கிற இடத்தை வாசித்து சிங்களப்படுத்திக்கொண்டு, பின்வரும் வசனங்களை எடுத்தான்,

''எகிப்து தேசத்திலிருந்து உன்னை அழைத்துக்கொண்டு வந்த உன் தேவனாகிய கர்த்தர் நானே; எனக்கு முன்பாக நீ அன்னிய தேவர்களை வைத்திருக்க வேண்டாம். உனக்கு எந்த உருவத்தை யாவது, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண் ணீரிலும் உள்ள யாதினும் சாயலையாவது உண்டாக்கிக் கொள்ள

வேண்டாம். அவைகளை ஆராதிக்கவும் வேண்டாம். அவைகளுக்கு ஊழியஞ் செய்யவும் வேண்டாம் என்று வாசித்தான்.

சுவாமிகள் பதிதனை நோக்கி, ''மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ் தண்ணீரிலும் என்ற வாக்கியங்களின் பொருள் என்ன? சர்வேசுரன் அவ்வார்த்தைகளால் விளக்கியிருப்பதென்ன? என்று கேட்க, அவன்; அந்த வாக்கியங்கள் உரோமானு கத்தோலிக்கர் வணங்கும் எல்லாச் சுரூபங்களையும் விலக்குகின்றன என்று பதில் சொன்னான். அதற்கு சுவாமிகள் அவன் சொல்லிய கருத்து பிழை என்று கூறி, அந்த வேத வாக்கியங்களால் விலக்கப்பட்டது. சத்தியவேதச் சுரூபங்களல்ல என்று காண்பிப்பதற்குச் சருவேசுரன் தாமே மோசேசின் வாயால் அவ் வாக்கியங்களுக்குக் கொடுத்திருக்கிற வெளிப்படையை உபாகமத்தின் நாலாம் அதிகாரத்தில் 15ம் வசனம் முதலாக எடுத்துப் பார்க்கச் சொன்னார். அவன் அந்த வசனங்களை வாசித்து இவ்விதம் மொழிபெயர்த்தான்.

''கர்த்தராகிய தேவன் உன்னோடு ஓறேப்பிலே அக்கினியின் நடுவிலே பேசிய அன்று, நீ ஒரு உருவத்தையும் கண்டதில்லை. கண்டிருந்தால், ஓர்வேளை நீ ஏமாந்துபோய், உனக்கு ஒரு உருவத்தை, அல்லது ஆண் பெண் சாயலையோ பூமியில் உள்ள மிருகங்களின் அல்லது வானத்தின் கீழ்ப் பறக்கிற பட்சிகளின் அல்லது நிலத்தின் மேல் நடமாடுகிற ஊரும் செந்துகளின் சாயலையோ உண்டாக்கியிருப்பாய். வானத்தை நோக்கி உன் கண்களை ஏறெடுத்து சூரியனையும் சந்திரனையும் ஆகாசத்தின் சகல நட்சத்திரங்களையும் கண்டு ஏமாந்துபோய், கர்த்தராகிய உன் தேவன் சிருட்டித்த அந்தப் பொருட்களை ஆராதித்து அவைகளுக்கு ஊழியம் பண்ணத் தூண்டப்படுவாய்'' என்று வாசித்தான்.

சுவாமிகள் சொல்லுவார்; ''சருவேசுவரன் ஆராதிக்க வேண்டாமென்று கற்பித்தவைகளை இதோ கண்டோம். பூமியின் மிருகங்களையும் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்தின் பறவைகளையும் வானத்தின் வெள்ளிகளையும் ஆராதிக்கப்படாது, அவைகளையும் அவைகளைப்போன்ற வேறு படைப்புக்களையும் வணங்கும் படியாக உருவங்களைச் செய்யப்படாது. ஏனெனில், அவைகள் மனுஷனுடைய ஊழியத்துக்காகப் படைக்கப்பட்டவைகளேயன்றி, மனுஷன் அவைகளை வழிபட்டு ஆராதிப்பதற்காக உண்டாக்கப்பட்டனவல்ல. சருவேசுரனையும் அவருடைய அர்ச்சியசிஷ்டர்களையும் குறிக்கிற உருவங்களோ அந்த வாக்கியத்தினாலாவது வேறெந்த வாக்கியத்தினாலாவது விலக்கப்பட்டில்லை'' என்றார்.

பதிதன் அதற்குச் சொல்லுவான்; சருவேசுரன் சுத்த அரூபியாயிருப்பதனால் அவருக்குச் சரீரமும் உருவமும் இல்லை. அவரை

உருவமாய்க் காண்பிப்பது எப்படி? அவருக்கு உருவஞ் செய்வது பாப்பியருடைய ஒரு வைப்புக்கட்டு. அவர் இப்படி உருவம் வைக்கக் கட்டளையிடவுமில்லை. அவைகளைப்பற்றி யாதொரு வாக்குப் பண்ணவுமில்லை. செய்ய முடியாத காரியங்களை அவர் கட்டளை பண்ணுவாரா? என்றான். சுவாமிகள் மாறுத்தாரமாக ''சருவேசுரனுக்குச் சரீரமும் உருவமுமில்லாதபடியால் அவருக்கு ஒரு சாயலை உண்டாக்கக்கூடாது என்பது மெய்தான். ஆயினும் அவருடைய இலட்சணங்களைக் குறிப்பதற்கு நாம் மனுஷ அறிவுக்கு ஏற்ற அடையாளங்களை வழங்கலாம். இவ்விதமான குறிப்புகள் அவருடைய உண்மையான சாயல் அல்லாவிட்டாலும், அவைகளை ஒப்பனைகள் என்று சொல்லலாம். அவைகள் உரோமானு திருச்சபை எடுத்துக் காட்டியவை அல்ல. சருவேசுரன் தாமே ஏற்படுத்தியவை என்று வேதாகமத்திற் காண்கிறோம்.

தானியேல் ஆகமத்தின் ஏழாம் அதிகாரம் ஒன்பதாம் வசனத்தை எடுத்துப் பார். அதில் தானியேல் தீர்க்கதரிசி பரிசுத்த பரம திரித்துவத்தின் முதலாம் ஆளாகிய பிதாவாகிய சருவேசுரனை மூடுபனிபோல வெண்மையான உடை தரித்த ஒரு ஆசாரத்துக்குரிய வயோதிபராகக் கண்டார் என்று எழுதியிருக்கிறது.

''புறச்சாதிகளின் அப்போஸ்தலராகிய பாவுலு ஆனவர் கொலோசியருக்குத் தாம் எழுதிய நிருபத்தின் முதலாம் அதிகாரம் பதினைந்தாம் வசனத்திலே, தேவ வார்த்தை எனும் இரண்டாமாளாகிய சருவேசுரனை ''காணப்படாத சருவேசுரனின் சுரூபம்'' என்கிறார். இந்தத் தேவ வார்த்தையானவர் மனுஷரூபமாய் அவதரித்தபடியால் அவருக்கு ஒரு சரீரமும் உருவமும் உண்டென்பதில் எவ்வித தர்க்கத்துக்கும் இடமில்லை. ஆகையால், அவருடைய உருவத்தை வெட்ட அல்லது படத்திலே எழுதக்கூடும் என்பதை மறுக்கலாமா? அர்ச்சியசிஷ்ட திரித்துவத்தின் மூன்றாம் ஆளான இஸ்பிரித்து சாந்துவும் கிறிஸ்துநாதர் யோர்தான் நதியில் ஸ்நாபிக்கப்பட்ட வேளையிலே ஒரு புறாவின் வடிவமாய் அவர்மேல் எழுந்தருளி வந்தார் என்று சுவிசேஷகர் மாற்கு முதலாம் அதிகாரத்திலும் யுவானியார் முதலாம் அதிகாரத்தின் முப்பத்திரண்டாம் வசனத்திலும் சாட்சியிடுகிறார்'' என்றார்.

பதிதன் விடை சொல்ல மாட்டாமல் விழிக்கவே, பக்கத்தில் நின்றவர்களெல்லோரும் அவனை நையாண்டி பண்ணிப் பேசத் தலைப்பட்டார்கள். அரசரும் அவனைத் தான் படித்த புத்தகங்களின் கருத்தை அறியமாட்டாத புத்தியற்ற மூடன் என்றும், தன் தப்பறைகளைக் கைவிடாமலிருந்த மூர்க்கன் என்றும் அழைத்தார்.

பதிதன் வெட்கிப்போய், விவிலியப் புத்தகத்தை விட்டிட்டு, ஞானோபதேசத்தை எடுத்து அதிலிருந்து, ''ஒரே சருவேசுரனை யல்லாது வேறொருவரையும் ஆராதியாதே என்ற வார்த்தைகளை வாசித்துப் பின்வருமாறு நியாயம் பேசினான். சருவேசுரனுடைய உருவங்கள் சருவேசுரனல்ல, சருவேசுரனை ஆராதித்து வணங்க வேணுமேயொழிய அவருடைய உருவங்களை அல்லவே என்றான்.

அதற்குச் சுவாமிகள் சொல்லுவார். ''திருச்சபையானது சருவேசுரனுடைய உருவங்கள் தேவத்தன்மையுள்ளவைகள் என்றாவது, அவைகள்தாம் சருவேசுரன் என்றாவது, ஏற்றுக்கொள்வதில்லை. இதற்கு மாறாக ஒரே சருவேசுரன் மாத்திரம் உண்டு என்று அது போதிக்கிறது. ஆயினும், அவ்ருடைய சாயல் சுரூபங்களுக்கும் குறிப்புகளுக்கும் அவருக்கு உரிய வணக்கத்தைச் செலுத்தும்போது, அவருக்குச் செல்ல வேண்டிய தேவ உபசாரத்தை எவ்விதத்திலும் குறைப்பதாயிராது, கூட்டுவதாயும் அவரை மேலும் மகிமைப் படுத்துவதாயுமே இருக்கும்.

இப்படியே ஒரு அரசனுடைய கொடி, குடை முதலிய இலாஞ்சனைகளுக்கு அல்லது படங்களுக்குப் பண்ணும் சங்கை அந்த அரசனையே அல்லாமல், அந்தந்த இலாஞ்சனை அல்லது படம் செய்திருக்கிற மரத்தை கல்லை மகிமைப்படுத்திப் போற்றமாட்டாது; அவ்விதமாகத்தானே, சருவேசுரனுடைய சாயல் சுருபங்களுக்குக் கத்தோலிக்கர் பண்ணுகிற சங்கை வணக்கங்கள், அவைகளைச் செய்த மரத்துக்கும் கல்லுக்கும் படத்தின் பூச்சுக்கும் அல்ல, அவைகளால் குறிக்கப்படும் சருவேசுரனுக்கே செய்யப்படுகின்றன. இவைகளால் அவருக்கே துதியும் மகிமையும் உண்டாகிறது'' என்றார்.

''இந்த உதாரணம் அங்குள்ளோருக்கெல்லாம் நன்றாகப் பிடிபட்டதனால், அவர்கள் பிறமதத்தவராயிருந்தபோதிலும், சுவாமிகள் எடுத்துச்சொன்ன நியாயமே சரி என்று காட்ட அவரவர் இன்னும் வேறு உதாரணங்களை எடுத்து வைத்துத் தங்களுக்குள்ளே நியாயம் பேசிக்கொண்டார்கள்.

அரசரும் பதிதனைப் பார்த்து; ''ஒல்லாந்த தானாபதிகள் எனது கொலு மண்டபத்துக்கு வரும்வேளை, நான் அங்கு இல்லாவிட்டாலும், வழக்கத்தின்படியே, எனது சிங்காசனத்துக்கு ஆசாரம் செய்கிறார்கள். அவர்கள் சங்கை பண்ணுவது சிங்காசனத்தின் மரத்தையும் கல்லையும் கம்பளத்தையுமா? என்று கேட்க, பதிதன் ''இல்லை ஐயனே, சகல சங்கை மரியாதைகளுக்குமுரிய தேவரீரது இராசமகத்துவத்தைத்தான், சங்கை பண்ணுகிறார்கள் என்றான். அப்போது அரசர் இவ்விதமாகவே கடவுளுடைய உருவத்துக்குச் செய்

யும் சங்கையும், அந்த உருவங்கள் பண்ணியிருக்கும், மரத்துக்கோ கல்லுக்கோ வேறொன்றுக்கோ அல்ல, கடவுளுக்கு மாத்திரஞ் செய்யப்படுகிறது'' என்றார்.

''பதிதனோ இன்னும் தன் சொற்போரைக் கைவிட மனமில்லாமல், வேறொரு நியாயம் கொண்டுவந்தான். அதாவது சருவேசுரன் கட்டளை பண்ணாத ஒன்றையும் நாங்கள் செய்யப்படாது. அவரோ தமக்கு உருவங்களைச் செய்ய ஒருபோதும் கட்டளை பண்ணியிருக்கவில்லை'' என்றான். சுவாமிகள் அவனைப் பார்த்து ''உனது விவிலியப் புத்தகத்தைத் திறந்து புறப்பட்டாகமம் 25ம் அதிகாரத்திலே 18ம் வசனத்தை வாசி. அதிலே கர்த்தர், கெருபீன்களின் உருவங்களை உண்டாக்கி வைக்கச் சொல்லியிருக்கிறார். எண்களின் ஆகமத்திலே 21ம் அதிகாரத்திலே 8ம் வசனத்தில் ஒரு சர்ப்பத்தின் உருவத்தை வெண்கலத்தாற் செய்து, தம்முடைய குமாரனாகிய கிறிஸ்து என்னும் உலகரட்சகருக்குக் குறிப்பாக வைக்கக் கற்பித்தார். இது ஞான ஆகமத்தின் 16ம் அதிகாரம் 7ம் வசனத்தில் நன்றாக விளக்கியிருக்கிறது. அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தவன், தான் கண்ட அதினாலல்ல, சகலருடையவும் மீட்பராகிய உம்மாலேயே குணமாக்கப்பட்டான்'' என்று எழுதியிருக்கிறது.

இன்னும் விபரமாய், கிறிஸ்துநாதர்தாமே அர்ச். யுவானியார் சுவிசேஷத்தின் 3ம் அதிகாரம் 14ம் வசனத்தில் அதே வெண்கலச் சர்ப்பம் தமக்கு உருவமும் குறிப்புமாயிருந்தது என்று திருவுளம் பற்றியிருக்கிறார். ''மோசேஸ் கானகத்திலே சர்ப்பத்தை உயர்த்தியது போலவே, மனித குமாரனும் உயர்த்தப்படுவார்'' என்பது அவருடைய திருவசனம். இதற்குப் பதிதன் சொல்லப்போகிற மறுமொழி என்ன? என்றார். அவன் முழுதும் மதியிழந்துபோய் உரக்கப் பேசிக் கலகலத்தானேயன்றிக் கேட்டதற்கு விடை சொல்ல மாட்டாமல் நின்றான். பின்னும் பல சொற்களையடுக்கி வெறும் சத்தம் போட்டபின் மூடத்தனமாய் சருவேசுரன் உருவங்களைச் செய்யக் கட்டளையிடவில்லையென்று தான் முதற் சாதித்ததை மாற்றிப்பேசி, அவர் உருவங்களைச் செய்யக் கட்டளையிட்டாலும் நாங்கள் அவைகளை வணங்கக் கட்டளையிட்டதற்கு வேதவாக்கியம் இல்லை என்றான்.

எனவே சுவாமிகள் உனது விவிலியத்தைத் திறந்து 98ம் சங்கீதத்தை வாசி ''வாக்குத்தத்தப் பேழை பரிசுத்தமானது. ஆகையால் அதை வணங்கக் கடவீர்கள்'' என்பதைக் கவனி. இராசாக்

களின் முதலாம் ஆகமத்தை வாசி. அதில் பத்தாம் அதிகாரத்தில், கர்த்தருடைய பரிசுத்த பேழைக்கு மரியாதை செய்யாததற்காக பிலிஸ்தியர் அடைந்த கடுந்தண்டனை வரையப்பட்டுள்ளது. இராசாக்களின் இரண்டாம் ஆகமத்திலே, அந்தத் திருப்பேழையின் நிமித்தம் ஒபேடேடொன் வீட்டாருக்கு அவர் அளித்த ஆசீர்வாதத்தைப் பற்றி வாசிக்கிறோம். அந்த வாக்குத்தத்தப்பேழை மரத்தாற் செய்த ஒரு பெட்டியேயானாலும், அது சிறிஸ்துநாதருடைய மகா பரிசுத்தமான மனுஷீகத்துக்குக் குறிப்பாயிருந்தபடியினாலேதான், அதை ஆராதிக்கும்படி சருவேசுரன் கட்டளையிட்டார் அல்லவா? அதைச் சங்கித்து வணங்குவது சருவேசுரனுக்குப் பிரியமாயிராவிட்டால், ஒபேடெடொன் அவரிடம் விசேஷ தயவுகளை அடையப் பாத்திரமானது எப்படி? என்றார்.

இவைகளைக் கேட்டு அரசரும் அரண்மனையாளரும் சுவாமிகளுடைய பேரறிவையும் வாய்ச் சாலத்தையும் பற்றி அதிசயப்பட்டு, அவர் தம்முடைய மேற்கோள்கள் இன்ன அதிகாரத்திலே இன்ன வசனம் என்று தடக்கில்லாமல் எடுத்துச் சொல்லியதினால் விவிலிய நூல் முழுவதையும் கரைத்துக் குடித்திருக்கிறார் என்று நினைத்து அவரை மெச்சினார்கள்.

யாழ், மன்னார், வன்னி மாவட்டங்களில் யாக்கோமே கொன்சலாஸ் அடிகளாரின் பணியில் அவருக்கு உற்றதுணையாக, பக்கபலமாக சேவையாற்றியவர் பெட்றோ பெற'ஆஓ அடிகளார் ஆவர். யோசவ்வாஸ் முனிவரின் இறையியலிலிருந்து தாந்தரிக வழிமுறையால் ஊற்றெடுத்த ஞானமும் வல்லமையும் அவரின் மரணத்தின் பின் அவரது குரு பரம்பரையில் முகிழ்ந்த கொன்சலாஸ் அடிகளிடம் வெளிவந்தன.

இங்ஙனம் வாழையடி வாழையாக ஒரு கத்தோலிக்க ஞான பரம்பரை, இம்மண்ணில் பற்றிப்படரத் தொடங்கிற்று. இக் குரு பரம்பரையில் முதல் வந்தவர் யோசவ்வாஸ் முனிவர். அவரின்பின் இப்பரம்பரையில் தோன்றியவர் பெறாஆஓ முனிவர். அவரின் வழி வந்தவர் கொன்சலாஸ் அடிகள் ஆவர்.

பெறாஆஓ முனிவர்:

கோவாவின் மால்கோவா நகரில் 1651ம் ஆண்டில் கொங்கணி பிராமண குடும்பத்தில் பெறாஆஓ பிறந்தார். இவர் தம் வாழ்வில் 12 வருடங்கள் அயலிலுள்ள டிவாரி என்ற கிராமத்தில் கடும் தவம் மேற்கொண்டார். இக்கிராமம் ஆபத்தான இரு ஆறுகளிடையே இருக்கிறது. அங்கு வியாகுல அன்னை ஆலயத்தின் அருகில் குடிசை கட்டி. தவவாழ்வை அனுசரித்து, குருத்துவப் பணியை மேற்கொண்டார்.

இந்நாளில் இலங்கைவாழ் கத்தோலிக்க மக்களையும் விசேடமாக வடபுல மக்கள் பற்றியும் கேள்வியுற்று இங்குவர ஆவல் கொண்டார். மேற்றிராசனக் குருவாக இருந்ததனால். பிரயாணத் தாமதம் ஏற்படுவது இயல்பானது. இதனால் இவர் யோசவ்வாஸ் முனிவரின் சபையில் சேர விரும்பினார். இச்சபையில் சேர ஒரு வருடமாகிலும் ஆகும். ஆயின் ஆன்மீகதாகம் இவருள் பிறிட்டு ஏழ, சிலுவையில் அறையுண்ட யேசுவின் முன் பெரும் பாரத்தோடு முழந்தாழ் படியிட்டுச் செபித்தார். அப்பொழுது யேசு அவர் முன் தோன்றி மறுப்புத் தெரிவித்த ஆயர்களிடம் பயப்படாது சென்று சந்திக்கும்படி கூறி மறைந்தார். அடிகளார் திரும்பவும் ஆயர்களை அணுகினார். வெற்றியுடன் தம் குடிசைக்குத் திரும்பினார்.

அடிகளார் 1696 ம் ஆண்டு முடிவடைகையில் இலங்கை வந்தார். இங்கு தமிழ் மண்ணில் 25 வருடங்கள் இறைபணியாற்றினார்,

இவர் பணிகள் பலதரப்பட்டவை. தமிழ் மண்ணில் தமிழ் கத்தோலிக்க சபைகளை (குழுமங்களை) உருவாக்கினார். மக்களின் ஆன்மீக ஆவலுக்கு ஆறுதலும் தேறுதலும் அளிக்க, பல கோவில்களைக் கட்டுவித்தார். இன்றும் இம்மண்ணில் ஆன்மீக அலையை அள்ளி வீசிவரும் மருதமடு மாதாவை, அன்று நமக்கு அன்னையாக்கியவர் அவரே. முதலில் சிலேனமடு என்ற இடத்தில் இவர் தேவ தாய்க்கு ஒரு கோவில் கட்டினார். அன்னையின் புகழ் இம் மண் எங்கும் பரவ, பெருவிழா வாக திருவிழாவைத் தொடக்கி வைத்தார். 33

அன்னையின் புகழ் பரப்ப தன்னை அர்ப்பணித்த அடிகளார், தாந்தரிக மரபை தமிழ் மக்கள் மத்தியில் இழையோட வைத்து நன்கு வேர்விட்டுத் தழைக்க வைத்தார். அவரின் பக்தியும் சித்தியுமே மருதமடுத் திருப்பதியின் புகழை நாற்றிசையெங்கும் பரப்பிக் கொண்டிருக்கிறது.

மாதோட்டம், வன்னி போன்ற இடங்களில் இவரின் ஆன்மீக உழைப்பு, இறையரசுக்கு பெரும் அறுவடையைத் தந்தது. இவரது தாந்தரிக ஆன்மீக பலத்தால் பரப்பாங்கண்டல், துவரங்கேணி, வன்னிக் கிராமங்களில் சாத்தான் கெடிகலங்கி ஓடினான். இரவு பகலாக செபத்தில் இருப்பவரின் ஆன்மீக பலத்துக்கு ஈடாக எதைச் சொல்ல முடியும்?

யாழ்ப்பாணப் பட்டணம், மன்னார். பூநகரி மற்றும் பல இடங்களுக்கும் அடிகளார் பாதயாத்திரை செய்தார். திருகோணமலையிலும் வன்னியிலும் ஒல்லாந்த இராணுவத்தின் கையில் சிக்கிய

பொழுது, இறையருளால் அவர் விடுவிக்கப்பட்டார் அஞ்சாது அவர் தம் பணியைத் தொடர்ந்தார்.

பெறாஆூ அடிகள். வைத்தியர்களால் கைவிடப்பட்ட, யாழ்ப் பாணத்து தியோகுவின் தீராத நோயைக் குணமாக்கினார். மன்னாரில் அறிவு மயங்கி மரணிக்கும் நிலையிலிருந்த பதினெட்டு வயது இளைஞனை, மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றினார்.

சித்தர்களின் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற மகுட வார்த்தையை இறையேசுவில் இணைத்து இயக்கினார். சாதி வேறு பாடுகளைக் கண்டித்தார். ''சாதியாவதேதடா?'' என சிவவாக்கியரும், ''சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம்'' எனப் பாம்பாட்டிச் சித்தரும் பாடிய பாடல்களுக்கு அடிகளார் செயல்வடிவம் கொடுத்தார். வன்னி, மாதோட்ட ஆலயங்களில் சாதிக்கு சாவுமணி அடித்தார். சாதிமுறை பாரம்பரியம் என்று வாதிட்ட சில கத்தோலிக்கருக்கு, கலாத்தியர் 4ம் அதிகாரப்படி சாதி கத்தோலிக்க விழுமியம் அல்ல என்பதைத் தெட்டத்தெளிவாகச் சுட்டிக்காட்டினார்.

பெறாஆூ முனிவர் மடுத்திருப்பதியில் பல புதுமைகள் செய்தார். மடுவிலும் அதன் அயற்கிராமங்களிலும் பாம்புக்கடியால் பலர் மாண்டனர். முனிவர் சித்தவைத்தியத்தில் கைதேர்ந்தவர். கோவாவிலிருந்து சித்த வைத்திய விஷகடி மருந்துகளை வருவித்து, பாம்புக்கடியால் வேதனைப்பட்டவர்களை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றினார். பாம்புக் கடியால் பாதிக்கப்பட்டோர் தொகை அதிகமாக, பரவலாக பல இடங்களிலும் இருந்தமையால் அவரால் அனைவரையும் கவனிப்பது கடினமாகியது.

அதனால்அவர் பலநாட்கள் உபவாசம் இருந்து, செபத்தில் மூழ்கி, இறை வலிமையுடன் ஆசிநீர் கொண்டு மடுப்பகுதியை ஆசீர்வதித்தார். அங்குள்ள சர்ப்பங்கள் முனிவரின் ஆசீர்வதிப்பால் நச்சுத்தன்மையை இழந்தன. பாம்புப் பயமற்ற பிரதேசமாக மடுப் பகுதி மாறியது மட்டுமல்ல, அயற்கிராமங்களில் பாம்பால் கடியுண்டவர் மடுவுக்கு ஓடிவந்தனர். மடுவுக்குள் வந்ததும். சர்ப்பத்தின் நஞ்சு அவர்களை விட்டு அகன்றுவிட, அவர்கள் குணமடைந்தனர்.

இன்றும் பாம்புக்கடியால் பாதிக்கப்பட்டவர்கள் மடுத் திருப்பதிக்குக் கொண்டு வரப்பட்டு சுகமடைந்து வீடு செல்வதைக் காணலாம். அதுமட்டுமல்ல மடுக்குளத்து மண் ஆசீர்வதிக்கப்பட்டு விஷக்கடிக்கு, புண்களுக்கு மக்கள் பூசுவர். அதனை வீட்டுக்கு எடுத்துவந்து நோய்க்கு மருந்தாகவும் பயன்படுத்துவர். இத்தகைய சக்தியை தாந்தரிக வழியில் மண்ணுக்கூட்டி மக்களுக்கு மருந்தாக்கிய காரணகர்த்தா பெறாஆூ முனிவரே. 34

பெறாஆஓ முனிவர் மீனவ மக்களின் வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்திருந்தார். கடலில் கரையில் திருக்கையால் அடிக்கப்பட்டு, விஷம் நிறைந்த முள் ஏறிய மீனவர்களுக்கு, தேவதாயிடம் இரந்து வேண்டி, செபித்து, நூல் கட்டி விஷத்தை இறக்கி, வைத்தியம் செய்து குணமாக்கினார். அத்துடன் திருக்கை முள் குத்தாமலும், நச்சுப்பூச்சிகள் தீண்டாமலும் இருப்பதற்கு அவர் நூல் கட்டினார். நூல் கட்டும் கத்தோலிக்க தாந்தரிகத்தின் தந்தையும் இவரே.

கொள்ளிவாற்பேய் என்ற பம்மாத்து பொய்யை, மன்னாரில் இருந்து அகற்றியவரும் இவரே. கடல் நிறையச் சொறி என்னும் உயிரினம் மிதந்து வந்து, கடற்றொழிலைக் கலங்கடித்துக் கெடுத்தபோது, அவற்றில் ஒன்றை எடுத்து, பிசாசு ஓட்டும் செபம் ஓதி, கடலில் எறிந்து, அவற்றின் ஆதிக்கத்தை அங்கிருந்து அகற்றியவரும் இவரே.

மாதோட்டத்தில் வரட்சியால் வாடிநின்ற பயிர்களுக்கும் தாகத்தால் தவித்திருந்த மக்களுக்கும் உயிரினங்களுக்கும் அம்மண்ணை ஆசீர் நீர் தெளித்து ஆசீர்வதித்து, மாதோட்ட வரட்சி போக்கி, கிணற்றில் நீர் ஊற்றெடுக்கச் செய்து புதுவாழ்வு அளித்தவரும் இவரே.

உண்மை இறைதந்யையின் இரக்கமிகு மைந்தன் யேசுவின் இறையரசுக்காக, தாந்தரிக மரபில் நன்கு வேர்விட்டு, தமிழ் மக்கள் மத்தியில் கிறிஸ்தவ சித்தராகப் பணிபுரிந்து போற்றப்பட்டவர் பெறாஆஓ முனிவர். இறைதந்தையின் தியாகச் செம்மல் யேசுவிடமும், மடுப்பதியில் அன்னை மரியாளிடமும் நிறைபக்தியை, மக்கள் மனதில் நிறைத்து, கத்தோலிக்கத்தில் நிலைத்து நிற்கச் செய்தவர் பெறாஆஓ முனிவர் ஆவார். இப்பெரும் கத்தோலிக்க முனிவர் 1721 யூன் 23 ல் சமாதி அடைந்தார்.

தமிழ் மண்ணின் மக்கள் ஒவ்வொருவரும், அவர் தந்த கத்தோலிக்க தாந்தரிக நெறிவாழ்வையும் அவரையும் ஒருபோதும் மறக்க முடியாது. மறக்கவும் கூடாது.

**தாந்தரிகம்:**

தாந்தரிகம் என்றால் என்ன? என்ற வினா இதைப் படிப்போர் உள்ளத்தில் அடிக்கடி எழச்செய்யும். கத்தோலிக்கத்தில், கோவைப் பிராமணக் கத்தோலிக்கக் குருக்கள் தந்த மரபின் அம்சங்களை மீண்டும் இங்கு தருவது பயன் உடையதாக இருக்கும்.

'தாந்' என்றால் பரவுதல், மீட்பு, விடுதலை, முக்திநிலை போன்ற ஆன்மீக ஞானத்தைப் பரப்புதல் எனப் பொருள்படும். முக்திநிலை உள்ளரங்கமாக ஊறி, சுவறிப்படர, மனம் ஆழ் அனுபவத்தில் ஊறித் தோயவேண்டும். அந்தப் பட்டறிவானது தனி மனித அனுபவமாக இல்லாது, அம் மனிதன், அவன் சூழல், சமூகம், சமூகக்கலை இலக்கியம், மருத்துவம். வழிபாட்டுத்தலம், கிரியை ஆகியவையின் இழையோட்டமாக பரவித் தேக்க வேண்டும்.

இந்நிலையை அடைய அவர்கள் கையாண்ட சாதனங்கள் தபம், மந்திரம், செபம், தியானம் அதன் வழிவந்த சித்துக்கள் ஆகும். 35 18ம் நூற்றாண்டு கத்தோலிக்கத்துள் நிலைகொள்ளச் செய்தவர்கள் இவர்களே. கத்தோலிக்க தாந்தரிக மரபின் ஒன்று திரண்ட சின்னமாக இன்றும் இருப்பது மடுப்பதியாகும்.

# வேதகலாபனையும் அறவழியும்

வேர்விட்டு, கிளைபரப்பி வளர்ந்திருந்த கத்தோலிக்க திருச்சபை 3ம் கட்டத்தில் கண்டியில் இருந்து விரட்டப்பட்டது. இக்கட்டான இக்காலத்தில் அறவழிக் கொள்கையைக் கடைப்பிடித்துத் தன் உரிமைகளை, படிப்படியாக ஒல்லாந்தரிடமிருந்து வென்றெடுத்த வரலாற்று வழியினை நோக்குவது நல்லது.

1734ம் ஆண்டு பிரான்சீஸ்கோ கொன்சாலஸ் அடிகள் கொழும்பிலிருந்து கண்டிக்குப் போகும் வழியில் ஒல்லாந்தரால் கைது செய்யப்பட்டு, சிறையிலிடப்பட்டார். தபசு காலமாக இருந்தபடியால், முனிவர் சிறையில் மாமிசம் உண்ண மறுத்தார் கவர்ணர் இதைக் கேள்வியுற்று இரகசியமாக, அவருக்குகந்த உணவு கொடுக்கும்படி ஒரு கத்தோலிக்க வைத்தியரை அனுப்பினார். 36 கண்டி அரசன் முனிவரின் சிறைவாசம் பற்றி அறிந்து, ஒல்லாந்தரை மூன்று முறை பயமுறுத்தினான்.

கண்டி அரசனுக்கு அஞ்சி, ஒல்லாந்தர் அடிகளாரை விடுதலை செய்தனர். அவரைக் காட்டிக்கொடுத்த பதித பாதிரி நாணிப் போனார். அடிகளாரில் அன்பும் பாசமும் கொண்ட இந்த நல்ல மன்னன் நரேந்திரசிங் 1739 மே 24ல் நோயுற்று மரணமானார்.

தேவதாயில் பக்தியுள்ள மன்னன் தன் மரணவேளையில், தேவ தாய்க்கு மெழுகுவர்த்திகள் ஏற்றிடக் கோரினான்.

புதிதாக அரசகொலு ஏறிய அரசன் தென்னிந்திய மதுரை நாயக்க வம்சத்தைச் சேர்ந்த விஜயராசசிங்க ஆவான். புதிய அரச னின் ஆளுகையில் புத்தபிக்கு ஒருவர் அரசவையில் அடியெடுத்து வைத்தார். அவர் அரசவையில் கொல்லாமை பற்றி வாதாடி, உணவுக்காக மிருகங்களைக் கொல்லுதல் ஆகாது என்று வலியுறுத் தினார். அவர் கத்தோலிக்க குருக்களுக்கெதிராகவும் பொய்ப்பிர சாரஞ் செய்தார்.

இவர் அரசவைக்குச் சென்றவேளை, யக்கோமே கொன்சாலஸ் அடிகளார் அரசனுக்கு அனுப்பிய இன்சுவை உணவுவகைகள் கொழும்பிலிருந்து வந்துசேர்ந்தன. அரசன் மனமகிழ்வோடு பெற் றுக் கொண்டான். அடிகளாரின் அன்புப் பரிசுக்குப் பதிலாக, பல தங்கநாணயங்களை அரசன் அனுப்பினான்.

மன்னனின் மதிப்புமிக்க பரிசை, முனிவர் முதலில் ஏற்க மறுத் தார். அரசன் அவற்றை அன்பளிப்பாக ஏற்கும்படி வேண்டிக் கொண்டான். முனிவர் அவற்றை ஏற்று, ஏழைகளின் துயர் துடைக்கச் செலவழித்தார். ஏழை மக்களின் பாசத்தையும் பற்றுத லையும் அவர் பெற்றுக்கொண்டார். கத்தோலிக்கருக்கு வரவிருந்த கவாபனையையும் முனிவர் இதனால் தடுக்க முடிந்தது.

1729ம் ஆண்டிலே கொழும்பு டச்சுக்கவர்ணர். கத்தோலிக் கரைச் சிரச்சேதம் செய்தான்; தூக்கிவிட்டான். இதுவும் போதாதென்று கண்டி அரசனுக்குப் பொய்யான. அரசியல் சூது நிறைந்த செய்தியை எழுதி அனுப்பினான். அதில் கோவைக் குருக் கள், போர்த்துக்கேயரை கண்டி அரசனுக்கெதிராக உடனடியாக படையெடுக்கத் தூண்டுகிறார்கள் என எழுதப்பட்டிருந்தது. ஆயின் முனிவர் இச்செய்தியைப் பொய்யென நிரூபித்து அரசனை மனம் மாற வைத்தார். இது ஒரு அற்புதச் செயலாகவே இருந்தது.

முனிவர் பௌத்த கொள்கைகளுக்கு எதிராகத் தர்க்கம் பண்ணி [37] ''அஞ்ஞான அசுத்தைய'' என்ற ஒரு சிங்கள நூலை எழுதினார். இதை எதிர்த்து, சில பிக்குகள் முனிவரைத் தண்டிக்க வேண்டுமென அரசனிடம் ஆவேசமாகக் கோரிக்கை விடுத்தனர். இது 'ராஜதுரோகம்', 'தெய்வ நிந்தனை' என்று கொதித்தனர்.

இதேவேளை அடிகளாரின் உற்ற நண்பனாக விளங்கிய கண்டி அதிகாரி பொட்றோ காஸ்கோ, பொய்க் குற்றம் சுமத்தப்பட்டு, கொலை செய்யப்பட்டார். அரசனின் செல்வங்களை, காஸ்கோ

கையாடல் செய்து, அடிகளாரிடம் கொடுத்துக் கோவிலில் பதுக்கி வைத்துள்ளார் எனக் குற்றும் சுமத்தினர். அரசன் கொன்சாலஸ் அடிகளாரையும் அவர் குடியிருந்த ஆலயத்தையும் சுற்றி வளைக்கக் கட்டளையிட்டான்.

அரசனின் காவலர் அவ்விடத்தைச் சுற்றி வளைத்து, அடிகளாரைக் கைதியாக அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். அரச விசாரணையில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைக் கேள்வியுற்ற அடிகளார் தனது நூலில் உள்ளவை, ஏனைய கத்தோலிக்க நூல்களில் உள்ளவையே என்றும் உண்மையை உள்ளபடி உரைப்பது தம் கடமையென்றும் விளக்கினார்.

பொட்றோ காஸ்கோவின் பெருந்தொகைப்பணம் பற்றிய குற்றச்சாட்டுக்கு ''இதோ கோவில் திறப்பு. நீங்களே சென்று தேடுதல் நடத்துங்கள்'' என்று கூறினார், அடிகளாரின் அச்சமற்ற பதில் கேட்டு அவர் குற்றமற்றவர் என அரசன் புரிந்து கொண்டான். எனினும் அடிகளாரின் எதிரிகள் அவரைத் தண்டிக்குமாறு இடைவிடாது நச்சரித்துக்கொண்டே இருந்தனர்.

அரசன் வேறுவழியின்றி அடிகளாளரைச் சாட்டையால் அடித்து, அவரின் உடற்சதையைக் கிழிக்கும்படியும் பின் சிரச்சேதம் செய்யும்படியும் ஆணையிட்டான். அரசனின் தீர்ப்பைக் கேட்ட அடிகளார் ஆனந்த பரவசம் அடைந்தார். அவரது முகம் தெய்வீக ஒளியால் சூழ்ந்து ஆழ்ந்த அமைதியுடன் ஒளிர்வதைக் கண்ட அரசன் தன்னுள் அவரது மாசற்ற தனத்தை உணர்ந்தவனாகி, தனது தீர்ப்பை மாற்றி முனிவரை விடுதலை செய்தான்.

கண்டி அரசில் கத்தோலிக்கருக்கு எதிராக ஒல்லாந்த சங்கத்தார் பல வகைத் தொந்தரவுகளைக் கொடுத்தனர். கத்தோலிக்கத்தைத் தடைசெய்யக் கோரினர். தங்கள் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் கத்தோலிக்க மறையை மட்டும் நசுக்க கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக, கடும் சட்டங்களை இயக்கிய பிலக்காட்டுகள் மூலம் பிரகடனப்படுத்தி கொடுமை செய்தனர்.

ஏனைய மதங்களுக்கு எதிராக எவ்வித சட்டமும் இயற்றாமல் கத்தோலிக்கத்தை நசுக்குவதில் முனைப்பாக இருந்தனர். தங்கள் ஆளுகைக்குட்படாத கண்டி இராச்சியத்தில் கத்தோலிக்க எதிர்ப்பு நூல்களைப் பரப்பினர். இவர்களின் இச்செயலுக்கு எதிராக கொன்சலாஸ் அடிகள் முனைந்து செயல்பட்டார். அடிகளார் பல நூல்களை வெளியிட்டு, ஒல்லாந்தரின் செயலை செயலிழக்கச் செய்தார்.

தம் திட்டம் பலிக்காதது கண்ட ஒல்லாந்தர், கண்டி அரசிடம் ஒட்டி உறவாடி, பல ராசதுரோக குற்றங்களைச் சோடித்து கத்தோலிக்கர் மேல் சுமத்தினர். இதுவும் பிசுபிசுத்துப்போனது கண்டு தம் யுக்தியை மாற்றினர். புத்த பிக்குகளை தம் கைக்குள் போட்டனர். பொன்னும் பொருளும் கொடுத்து அவர்களைக் கத்தோலிக்க திருச்சபைக்கெதிராக தூண்டிவிட்டனர். அதன் விளைவாக அவர்களை கண்டி இராச்சியத்திலிருந்து கலைத்து விட்டனர்.

1746 ம் ஆண்டு அறிக்கைப்படி 39 மார்ச் மாதத்தில் மிசனரிகளை சிறையிலிடவும். சொத்துக்களை பறிமுதல் செய்யவும். கோவில் பொருட்களை சூறையாடி அவசங்கை செய்யவும் கண்டி அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவ்வாணை தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சதி பற்றி எதுவும் அறியாதிருந்த குருக்கள் அனைவரும் பாஸ்காத் திருவிழாவுக்கெனப் பற்பல இடங்களிலும் ஆயத்தஞ் செய்து கொண்டிருந்தனர். போதிய அவகாசமின்றி, அறிவிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட இக் கொடூரக் கட்டளை மிசனரிகளையும் மக்களையும் கதிகலங்க வைத்தது.

சில குருக்கள் கோவா சென்றனர். ஏனையோர் வன்னி இராச்சியத்தில் தஞ்சம் புகுந்தனர். இக்கட்டளையின் கொடூரத்தால் ஏது நடக்குமோ! என்ன நடக்குமோ!! என்று கத்தோலிக்க மக்கள் கலங்கி நின்றவேளை, ''வல்லதேவன் எம்மை வருத்துவது கொல்லவல்ல, கொல்லவல்ல''... என்ற மூதாதையின் வாக்கு வரப்பிரசாதமாக அவர்களுக்கு மாறியது.

அறவழிப் போராட்டம்:

கத்தோலிக்கர் அதிகமாக ஒல்லாந்தர் ஆட்சிக்குள்ளான பகுதிகளில் வாழ்ந்தனர். அவர்கள், ஒல்லாந்தரின் அடக்குமுறைகளையும் அழுத்தங்களையும் இறைவழியில் எதிர்கொண்டே தம் உரிமைகளைப் பெறவேண்டியிருந்தது. எனவே குருக்களும் இல்லறத்தாரும் தம் உரிமைகளை வென்றெடுக்க அறவழிப் போராட்டங்களை நடத்தினர். 1762 தொடக்கம் 1774 வரை இப் போராட்டங்கள் நடந்தன. உண்மைக்காக உறுதியாக நின்று போராடிய அவர்கள் இறுதியில் வெற்றி பெற்றனர்.

ஒரு நூற்றாண்டளவாக ஒல்லாந்தர் தம் சாதுரியமான, சாணக்கிய நிறை நடவடிக்கையால் கண்டி இராச்சியத்துடன் வர்த்தகத் தொடர்புகளை வளர்த்து வந்தனர். ஆனால் எதிர்பாராமல் இவ்வுறவு திடீரென முறிந்தது; போர் மூண்டது. போருக்காக

டச்சு அரசு இந்தோனீசிய, ஐரோப்பிய கூலிப்படைகளை போர்க் களத்துக்கு அனுப்பியது. போருக்குத் தேவையான பொருள் பண்டங்களை காவிச் செல்லவும், வீதிகளைப் போடவும், பாலம் கட்டவும், காடுகளைத் துப்பரவாக்கவும் சுதேச கத்தோலிக்கரை அவ்வரசு அமர்த்தியது. அங்ஙனம் கடும் உழைப்புக்காக அழைக்கப்பட்ட கத்தோலிக்க தொழிலாளர், தம் ஆன்ம நலனுக்காக கத்தோலிக்க குரு தேவையெனக் கூறினர். அவர்களது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தம், அரசுக்கு ஏற்பட்டது. ஏனெனில் கத்தோலிக்க குரு வராவிடில், வேலைக்கு வர அவர்கள் மறுத்தனர். இந்நிலையில் அரசு சட்டரீதியாக, பி. மகால் என்ற யேசுசபைக் குருவை, ஐரோப்பிய படைவீரர் ஆன்மநலன் காக்க அனுமதித்தது. கண்டிக் கெதிரான ஒல்லாந்த படையெடுப்பில் இக்குரு கொல்லப்பட்டார். 40 டச்சுக் கம்பனியின் பொருள் தேடும் அவாவும், அதேவேளை ஆன்மீகத்தில் அக்கறையின்மையும், கம்பனியின் பிரபலிய மிசனரியாகிய பல்டேயஸ் அவர்களை, மனம் உடைய வைத்தது. இதனால் அவர் ஊழியத்தை விட்டு நீங்கினார். பெருகிவரும் கத்தோலிக்கர் தொகையும் அவர்களின் ஆர்வமும் அலை போல் எழுந்து கம்பனியின் நிலைப்பாட்டை மீள் பரிசீலனை செய்ய வைத்தது.

நீர்கொழும்பில் ஆரம்பித்த அறவழிப் போராட்டம்:

1750 செப்டம்பர் 23 ன் அறிக்கையின்படி, நீர்கொழும்பு கத்தோலிக்க திருச்சபையின் சத்தியங்கள் அம் மக்கள் மனதில் ஆழமாக வேரோடியிருந்தன. அதனால் எவ்வித அழுத்தங்களும் அலுப்புகளும் அச்சத்தியங்களை வேரறுக்க முடியாதிருந்தன. குழந்தைகளுக்கு பதித ஞானஸ்நானம் கொடுக்க பதிதசபை முனைந்தபோது, ''எங்கள் குழந்தைகளுக்கு முதலில் எம் குருக்களால் திருமுழுக்குக் கொடுக்கப்பட வேண்டும். அதன்பின்தான் உங்களிடம் வருவோம்'' என அம்மக்கள் உறுதியுடன் உரைத்தனர்.

''நற்கருணையில் நம் நாயகன் யேசு, மகிமையுடன் பிரசன்னமாயிருக்கிறார். நீங்கள் எங்கள் குழந்தைகளுக்கு, நற்கருணை வெறும் அப்பம் என்றும், இயேசுவின் திரு உதிரத்தை வெறும் இரசம் என்றும் கற்பிப்பதை நாம் ஏற்க முடியாது'' என்று வாதாடினர். ''உத்தரிக்கும் இடம் உண்டு. தேவனின் அன்னையான புனித கன்னிமரியாள் முப்பொழுதும் கன்னி, யேசு எமக்காகப் பாடுபட்ட புனித சிலுவையையும், புனிதர்களின் சுருவங்களையும் வணங்குகிறோம்'' என்ற சத்தியங்களை அஞ்சாநெஞ்சுடன் சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தினர்.

இங்ஙனம் உறுதியுடன் உரைத்த நீர்கொழும்பு கத்தோலிக்க மக்கள் ஆண்களும் பெண்களுமாக ஆயிரம் பேருக்கு மேல், ஒரு வாரத்தின் பின் ஒன்று திரண்டனர். இரவு எட்டு மணியளவில் டச்சுக் கோவிலின் முன் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். சத்திய மறையை நித்தியம் வழிபட, வாழத் தடை போடாதீர். எவ்வித அடக்குமுறைகளுக்கும், அழுத்தங்கட்கும் பயந்து, பணிந்து எம் மறையை விட்டுவிடமாட்டோம். எம் குழந்தைகட்கும் வேறு மறையினர் ஞானஸ்நானம் கொடுக்க விடமாட்டோம். அவர்கட்குப் பொய்ச்சத்தியங்களைப் போதிக்க அனுமதியோம்'' என்று குரல் கொடுத்தனர். குழந்தைகளை வீட்டுக்குக் கூட்டிச் சென்றனர். [41]

2 நவம்பர் 1750ல் டச்சு சபை கூடியது. எதிர்ப்பு அறிக்கை அளித்தவர்களைத், தண்டித்து அடக்க வேண்டும் என்றும். 25 பெப்ரவரி 1745, 16 ஒக்டோபர் 1748 ஆகிய காலங்களில் பிரகடனப்படுத்தப்பட்ட பிலக்காட்ஸ்களை மீண்டும் வெளியிட வேண்டும் என்றும் இச்சபை தீர்மானம் எடுத்தது. [42]

1751 ஜனவரி 9 இன் மிசன் அறிக்கை தரும் தகவல்கள்; களுத்துறையில் கத்தோலிக்கரை டச்சு அரசு சிறைப்படுத்தி, பின் ஆறாம் நாள் விடுதலை செய்தது. களுத்துறை, கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள கத்தோலிக்க மக்களின் உறுதியான, வைராக்கியம் மிக்க கத்தோலிக்க விசுவாச வாழ்வைக் கண்டு, டச்சு அரசு தன் கெடுபிடிகளை மீண்டும் தளர்த்தியது.

1752 – 53 அறிக்கையானது கத்தோலிக்க மக்களின் எதிர்ப்பு, அறவழிப் பாதையில் எத்தகையதென்பதை விளக்கியுள்ளது. [43]

டச்சுப் போதகர் மக்களைத் தம் செல்வாக்கைக் கொண்டு அரச இயந்திரங்கள் ஊடாக, கூட்டத்துக்கு அழைத்துச் செல்வர். மக்கள் நிறைந்திருக்கும் அவ்விடத்தில் இருமல் செருமல் இடையிடையே ஒலிக்கும். தம் நேச அன்னை புனித மரியாள் பற்றி அலதூறாகப் போதகர் கூறும் வேளையும், நற்கருணை, குருத்துவம் பற்றித் தாக்கிப் பேசும்போதும் விளக்குகளை அணைத்து விடுவர். கூட்டம் இருளில் கூக்குரல் இடும்.; அல்லோலகல்லோலப்படும்.; பின் அதற்குள்ளும் அமைதி நிலவும்,

சத்திய மறையின் சத்தியங்களைச் சாடிய ஒரு போதகரை நோக்கி, ஒரு விதவைப் பெண் வீராவேசத்துடன் ''எம் சத்தியங்கள் புனிதமானவை; உண்மையானவை; உன் போதனையை நிறுத்து. போதும் உன் போதனை'' என்று கூறி அவ்விடத்தைவிட்டு வெளியேற, அவளைத் தொடர்ந்து, ஒருவர் பின் ஒருவராக வெளியேறினர். கூட்ட மண்டபம் வெறிச்சோடியது. கூட்டத்தை மேற்

பார்வை செய்ய வந்த பெரிய டச்சு ஆணையாளர் வெறிச்சோடிய மண்டபத்தில் சட்டம்பி ஒருவர் மட்டும் குந்திக்கொண்டிருப்பதைக் கண்டு சீற்றங் கொண்டார்.

**யாழ் மாவட்டப் பணிநிலைக் கெடுபிடிகள்:**

20 ஜனவரி 1757 ன் அறிக்கை தருவது. யாழ்ப்பாணத்தில் டச்சுக்காரர் கத்தோலிக்க மக்களை தம் ஆலயம் வந்து, தம் போதனைகளைக் கேட்கும்படி வற்புறுத்தினர். கத்தோலிக்கர் பலர் இவர்களின் வற்புறுத்தலுக்கு வளைந்து கொடுக்கவில்லை. இதனால் கிராமங்களிலிருந்த ஆண்கள், பெண்கள் கைதுசெய்யப்பட்டனர். தம் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்த குற்றத்திற்காக, பெருந் தண்டம் செலுத்த வேண்டும் எனத் தீர்ப்பிட்டனர். தண்டத்தைச் செலுத்தி முடியும்வரை காவலில் வைத்தனர்.

பருத்தித்துறையில் 2 ஆண்கள் தாம் கத்தோலிக்கர் என பகிரங்கமாக அறிக்கையிட்டனர். இதனால் இவர்கள் இருவரும் அரசால் பிடித்துச் செல்லப்பட்டனர். இருவரும் பின் வீடு திரும்பவில்லை.

திருமணத் திருச்சடங்குகள் தம் மத ஆசாரப்படியே நடைபெற வேண்டுமென்றும் அப்படிச் செய்யத் தவறின் அவர்களின் பிள்ளைகளுக்கு சொத்துரிமை கிடையாது எனவும் அரசு சட்டமியற்றியது.

**வன்னித் தலைவன் வாழ்வில் மாற்றம்:**

இதேவேளை வன்னியான் என்பவன் மிசனரிகளுக்கு உபத்திரவம் கொடுத்தான். மடுவுக்கு வெளியே மறைபரப்பு, மற்றும் பணிகள் செய்யக்கூடாது என்று தடை போட்டான். ஆனால் அவனது மனைவியோ குருக்களில் பக்தி. பாசம் கொண்டவள். கணவனின் கடும்பிடியை அவள் கண்டித்தாள். தேவதாயில் பக்தி மிக்கவள் அவள். ''தேவதாய் பெருக்கெடுத்தோடிய தம்பனைக்குளத்தாறை அடக்கி மக்களைக் காப்பாற்றிய நிகழ்வை'' எடுத்துச் சொல்லி, அவன் மனதில், தேவ அன்னையின் மகிமையை விதைத்து விட்டாள். கத்தோலிக்கர் தம் நிலங்களை உழுது பயிரிடத்தவறினால் நாடு காடாகிவிடும் என்று எச்சரித்தாள். வன்னி நிலங்கள் மனைவியின் பரம்பரைச் சொத்தாக இருந்தபடியால் வன்னியான் அவளது வார்த்தைக்கு வளைந்து கொடுத்தான். 44 குருக்களை வன்னிக்கு அழைத்து வரும்படி வன்னியான் தன் வேலையாட்களுக்குக் கட்டளையிட்டான். இக்கால கட்டத்தில் இலங்கையில் 14 குருக்கள் ஊழியம் செய்தனர்.

**குருக்களின் பணி வாழ்வு:**

*1758* டிசம்பர் 13 யோ சே பா ர் ட் டி லா சே ர் டா அ டி க ள் பச்சிலைப்பள்ளி, வடமராட்சி, தென்மராட்சி முதலிய இடங்களில் 30 வளர்ந்தோருக்கும், 200 குழந்தைகளுக்கும் ஞா ன ஸ் நா ன ம் கொடுத்தார்.

அளம்பிலில் ஐந்து வருடங்களாக மீன்பிடித் தொழில் மி க வு ம் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அதனால் மீனவ சமூகத்தினர் பஞ்சத்தால் உணவின்றித் தவித்தனர். யோஆ ஒடிசில்வேரியா அடிகள், பயறு மற்றும் தானிய உணவுகளை வாங்கிவந்து, மக்கள் பசியைப் போக்கினார். பின் மக்களை ஒன்று கூட்டி மன்னிப்பு வழிபாடு நடத்தினார். பாவமன்னிப்பு ஊர்வலங்கள் நடத்தி, மக்கள் மனதில் இறைபக்தியை ஊட்டி உரமிட்டு, வளர்த்து விட்டார். அதனைத் தொடர்ந்து, பேய் துரத்தும் மந்திரம் ஓதி கடலை ஆசீர்வதித்தார். கடலில் இருந்த தடை அகல, மீன்பாடு அமோகமாகப் பலன் கொடுத்தது. பஞ்சநிலை அங்கிருந்து அகன்றது. மக்கள் பாவசங்கீர்த்தனம் செய்து தம் உள்ளங்களை இறை இல்லங்களாக மாற்றி நற்கருணை பெற்று மகிழ்ந்தனர்.

ஊர்காவற்றுறையில் மக்களை வாந்திபேதி ஆட்டிப்படைத்தது. பலர் துடியாய்த் துடித்து மாண்டனர். அவ்வேளை யோசவ்வாஸ் முனிவர் கண்டியில் ஆற்றிய பணிபோல் தனிமனிதனாக இறை சக்தியில் இறுகி நின்று, இரவுபகலாக லோபோ அடிகளார் பணி புரிந்தார். மக்கள் மனதை வென்ற லோபோ அடிகள் அன்புவழியில் அவர்களை வழி நடத்தினார்.

மாதகலில் பணிபுரிந்த அன்ரோனியோ கயித்தானோ அடிகள் 150 பேருக்கு ஞானதீட்சை அளித்தார். [45]

டச்சுக் கல்வின் மதத்தினர், கத்தோலிக்க குருக்கள் பூசை, உத்தரிப்புத்தலக்கொள்கை போன்றவற்றின் மூலம் மக்களைமயக்கி, அவர்களிடமிருந்து பணம் வசூலித்து தம் பைகளை நிரப்புகின்றனர் எனக் குற்றம் சாட்டினர். இத்தகைய குற்றப்பழிகள் தம்மீது படியாவண்ணம் கோவைக் குருக்கள் பணத்தைத் தூசென மதித்துப் பணியாற்றினர். பூசை மூலமும் மற்றும் அன்புக் கொடைகள் மூலமும் கிடைக்கும் பணத்தையும் பொருட்களையும் தம் மேலதிகாரிகளிடமே ஒப்படைத்தனர். மேலதிகாரிகள் தேவைக்கேற்றபடி பகிர்ந்தளித்தனர். [46]

குருக்கள் தமக்கு மேலதிகாரிகளால் கொடுக்கப்படுபவற்றைக் கொண்டு, தம் உடை, உணவு, உறைவிடச் செலவுகளைச் செய்த

னர். தம்கீழ் பணியாற்றும் உபதேசிமார், உதவியாளர்கட்கும் கொடுத்தனர். ஏழைகட்கு உதவினர். அநாதைகளை ஆதரித்தனர் அநாதைப் பெண்களுக்கு திருமண சீதனம் தந்து வாழ்வளித்தனர். அவர்களின் சபை, பூசைக்கு வேண்டிய அத்தனை பொருட்களையும் அனுப்பியது. செபமாலைகள், வரவணிக்கங்கள், படங்கள், சுரூபங்கள் முதலிய பொருட்களையும் சபை அவர்களுக்கு அனுப்பியது.

செபஸ்தியா ஓடி நெரோனா யாழ்ப்பாணத்தில் 15 பெரியோர்களுக்கும் 325 குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார்.

சேவியர் முத்து என்ற கிறிஸ்தவர் தான் கட்டிய சிறுவீட்டில் வாழ்ந்துவரும்போது, சூழலில் இருந்த இந்துக்கள் இவருக்குத் துன்பம் கொடுத்தனர். அபசகுனம் நிறைந்த அவ்வீட்டை இடித்து நொருக்கி எரித்து விடும்படி சேவியர் முத்துவுக்கு நெருக்குதல் கொடுத்தனர். ஒருபுறம் மனிதரின் அடியும், மறுபுறம் பசாசின் சேட்டையும் முத்துவைப் போட்டு வதைத்தன.

இதையறிந்த செபஸ்தியா அடிகளார் ஒருதாளில் ''வாக்கு மனுவுருவாகி எம்முடனே குடிகொண்டார். இதோ ஆண்டவருடைய திருச்சிலுவை, சத்துருக்களே ஓடிவிடுங்கள்'' என்ற வாக்கியங்களை எழுதிக் கொடுத்தார். அத்தாளை சேவியர் முத்து வீட்டுக்குக் கொண்டு சென்றதிலிருந்து பசாசின் சேட்டை நின்றது. அயலவர் தொல்லையும் அகன்றது. 47

உறவில் திருப்பம்:

1762 ம் ஆண்டின் அறிக்கையின்படி டச்சுக் கம்பனி – கத்தோலிக்க திருச்சபை உறவில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. ஒல்லாந்தர் – கண்டி இராச்சியப் போர் மூண்டது. இரு பகுதியினரும் கத்தோலிக்கரைத் தம்பக்கம் சேர்க்க முனைந்தனர்.

செபஸ்ரியோ யோசே மரித்தபொழுது (1760) சாந்தலூசியா பேராலயத்தில் அவர் உடலை அடக்கம் செய்ய டச்சுக் கம்பனி அனுமதி வழங்கியது. ஒரு கத்தோலிக்க பூதவுடலை சட்டபூர்வமாக அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

1762 யூலை 31 ம் நாள் முழு இலங்கையிலுமுள்ள கத்தோலிக்கர்கள், டச்சுக் கவர்ணர் லூபட்யான்வான் ஏக்கு ஒரு மனு சமர்ப்பித்தனர். அம்மனுவில் இருந்த 10 விடயங்களில் தாம் கம்பனிக்கு பிரமாணிக்கமாக சேவை செய்ததாகவும் குறிப்பிட்டிருந்தனர். கண்டி அர

சனுக்கும் கம்பனிக்கும் இடையே நடந்த போரில் சிங்களப் பகுதியில் உள்ளோரில் கத்தோலிக்கர் மாத்திரமே கம்பனியின் பக்கம் சார்ந்து நின்றனர் எனவும் ஏனையோர் கண்டி அரசனைச் சார்ந்திருந்ததாக வும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டினர். அத்தனகலைப் போரில் நரேந்திரசிங்க அரசன், யக்கோமே கொன்சாலஸ் அடிகளாரின் அறிவுரை கேட்டு, கம்பனியுடன் போர் செய்யாது விட்டான் என்றும் எழுதி யிருந்தனர். இப்போரின் ஆரம்பத்தில் கண்டி அரசன் கத்தோலிக்க குருக்களிடமும் மக்களிடமும் உதவி கோரியபொழுது, கத்தோலிக்கர் தாம் ஏன் கம்பனியை எதிர்க்க முடியாது இருக்கிறது என்பதை, அரசனுக்கு விளக்கமாகக் கூறினர்.

கொச்சின், தூத்துக்குடி, நாகபட்டணம் போன்ற இடங்களில் கத்தோலிக்கருக்குள்ள மதசுதந்திரம் போன்றும், இங்குள்ள இஸ்லாமிய, இந்து, புத்தமதங்களுக்குள்ள சுதந்திரம் போன்றும் தமக்கும் தரப்படல் வேண்டுமென்று கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில் பட்டாவியாவில் உள்ள டச்சு அரசும், கம்பனியும் கத்தோலிக்கர் சார்பாக கடமையாற்றத் தொடங்கின, [48] அத்துடன் கண்டிப் போரில் இறந்த மகால் அடிகளாருக்கும் பாராட்டுத் தெரிவித்தும் இருந்தனர் என்றும் அவ்வறிக்கையில் எழுதப்பட்டுள்ளது.

1763 ம் ஆண்டு அறிக்கை தருவது:- கோவைக் குருக்கள் அரசின் அழுத்தங்களிலிருந்தும் அடக்கு முறைகளிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள, சாதாரண சிங்கள மக்கள் போல உடை உடுத்தினர். இனி அங்ஙனம் உடை உடுத்தத் தேவை இல்லை என்ற நிலை ஏற்பட்டது. அதனால் குருக்களுக்குரிய நீண்ட அங்கியை அணிந்து மக்கள் மத்தியில் நடமாடலாம் என்று அவ்வறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1774 ஏப்ரல் 9 ல் டச்சு அரசியல் குழு, கத்தோலிக்க குருக்கள் அரசுக்குப் பிரமாணிக்க வாக்குத்தத்தம் அளிப்பின் சுதந்திரம் அளிக்கப்படும் என வாக்குப் பண்ணியது. இதற்கமைய 39 குருக்கள், தமிழில் எழுதப்பட்ட பிரமாணிக்க வாக்குறுதியில் லத்தீன் மொழியில் கையொப்பம் இட்டனர். சிலரின் வாக்குறுதிப் படிவங்கள் தவறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஒல்லாந்த தலைநகரில் 1769 யூன் 15 ல் அரசினால் வெளியிடப்பட்ட சமாதானப் பிரகடனமானது இங்கு நடைமுறைப்படுத்தப்படாமல், இங்குள்ள ஆட்கியாளரால் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டது. இச்செயலால்தான் 1777ம் ஆண்டு அறிக்கையில்

திருச்சபையில் சமாதானம் நிலவுகிறது எனக் குறிப்பிடப்பட வேண்டியதாயிற்று.

கோவைக் குருக்களின், நீண்டகால பணிபற்றிய அறிக்கை:- 1784 ன் அறிக்கையானது ஒல்லாந்தர் காலத்துத் திருச்சபை வரலாற்றைச் சுருக்கமாக 22 பந்திகளில் தருகிறது. இலங்கையின் புவியியல், அரசியல் நிலமைகள் பற்றி விபரித்துவிட்டு, 7 ம் பந்தியில் கொச்சி ஆண்டகையின் கீழ் இலங்கைக் குருக்கள் இருந்தனர் எனக் குறிப்பிடுகிறது. சில நாட்களாக ஆயர் வேறு ஒரு இடத்தில் வசிக்கிறார் என்றும், விசுவாசப் பரப்புதல் சபை வளர்ச்சி பெற்றுள்ளது என்றும் எழுதுகிறது. அத்துடன் பின் வரப்போகும் காலத்தில் உரோமாபுரியில் உள்ள விசுவாசப் பரப்புதல் சபையுடன் ஏற்படப்போகும், கோவைக் குருக்கள் சிலரின் இழுபறி பற்றியும் அவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

9 ம் பந்தியில் ஒல்லாந்த வேதகலாபனைகளின் ஆரம்பம் 1645 எனக் குறிப்பிடப்பட்டாலும் உண்மையில் 1638 ல் ஆரம்பமாகி 1669 ல் தான் இப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்பது கவனிக்கத் தக்கது.

10 ம் பந்தியில் யோசவ்வாஸ் முனிவர் பணமின்றி வெறுங் கையுடன் கூலியாகவே 1687 ல் வந்ததாகக் கூறப்படுகிறது. கண்டி அரசனின் நன்மைத்தனமும், அவனின் வரவேற்புப் பண்பும் செழிப்புற்ற திருச்சபையின் பல்வேறு பகுதிகளில் திருப்பலி, பசாம், திருப்பாடுகளின் காட்சிகள் (பாஸ்) பற்றிய விபரங்களும் இப் பந்தியில் அடங்கியுள்ளன.

50 வருடங்கள் கண்டியில் பணியாற்றிய மிசனரிகள் அங்கிருந்து கண்டி அரசால் வெளியேற்றப்பட்டார்கள். வெளியேறிய மிசனரிகளைக் கண்டி அரசன் பல தடவைகள் திரும்ப வரும்படி அழைப்புகள் விடுத்தும் அவர்கள் அதனை ஏற்கவில்லை. 49

கபிரியேல் பச்சேக்கே அடிகளார் தலைமையில் 13 குருக்கள் பணிபுரிந்தார்கள் எனவும் அவர் தமிழில் பல நூல்களை எழுதினார் எனவும் அறிக்கையின் 14 ம் பந்தி குறிப்பிடுகிறது.

திருகோணமலைத் துறைமுகத்தை ஆங்கிலேயர் கைப்பற்றியிருந்தனர். இராணுவத்திடமிருந்து தம்மைக் காப்பாற்றும்படி பாஸ்கல் பெரோ அடிகளிடம் ஓடிவந்தனர். பாஸ்கல் அடிகள் அவர்களை கோவிலில் மறைத்து வைத்துக் காப்பாற்றினார். இச் செயலால் சினங்கொண்ட இராணுவத்தினர் அடிகளாரை நையப்புடைத்தனர். விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். விசாரணையின்போது

அடிகளார் காட்டிய தாழ்மை, பொறுமை போன்ற நற்பண்புகளைக் கண்ட நீதிபதிகள் பிரமித்துப் போயினர்.

கத்தோலிக்கம் சோதனை வேதனைகளுக்கூடாகத் தழைத் தோங்கக் காரணம் [50] குருக்கள் ஊடாக வெளிப்பட்ட இறைவல் லமை என்பது வெள்ளிடைமலை இவ் இறைவல்லமை, பலவகை யான புதுமைகள் ஊடாக வெளிவந்தது. மக்களின் உடல்நோய், மனநோய், ஆன்மநோய், பசாசின் தொல்லை போன்றவற்றின் தாக் கத்திலிருந்து. உடல், உள, ஆன்மீக சுகமளிக்க, குருக்களுக்கு இறை வல்லமை உதவியது. வரட்சி, வெள்ளம், பூமி நடுக்கம், பயிர் அழிவு, கால்நடை தொற்று நோய் போன்ற இயற்கையின் இயக் கத்தால் ஏற்பட்ட பேரழிவுகட்கும், இக் குருக்களின் இறை வல்லமை கொண்ட ஆசீர்வாதமே, சிரஞ்சீவியாக அமைந்தது.

குருக்கள் அனைவரும் தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்றவ ரென்று கூறமுடியாது. யாக்கோமே கொன்சலாஸ் அடிகளுக்குப் பின் வந்தவர்களுள் பச்சேக்கோ அடிகளுக்கு தமிழ் நன்கு தெரியும். ஆதலால் அவரது அருள்மொழி கேட்க, டச்சுப் பதித புத்திஜீவிகள் கூடவருவர். அவர் டச்சு மொழியில் கூட திறம்பட உரையாற்று வார். இவர் எழுதிய நூல்களும் மக்களால் விரும்பி வாசிக்கப்பட் டன.

இச் செயற்பாடுகளால் மக்கள் ஈர்க்கப்பட, மனமாற்றம் என்ற இயக்கம் இங்கு ஆரம்பமாகியது. அத்துடன் மிசனரிகளுக்கு பதித ரால் ஏற்பட்ட தொல்லைகள் தொடர்ந்து கொண்டேயிருந்தன. இத் தொல்லைகள் இப்போது போதகர்களாலேயே வெளிவந்தன. கத்தோலிக்கரைப் போதகர்கள் முழுமூச்சாக. மூர்க்கமாக எதிர்த்த னர். பள்ளிக்கூடச் சிறார்களை, கத்தோலிக்க பாடசாலைகளி லிருந்து பலவந்தமாக வெளியேற்றித் தம் பாடசாலைகளில் சேர்த்த னர். திருமண உத்தரவுகள் உரோமாபுரியிலிருந்து வரத் தாமதமா கும்போது, போதகர்கள் தாம் உதவி செய்வதாகக் கூறி, தம் கோயில்களுக்கு கத்தோலிக்கரை அழைத்துச் சென்றனர். [51]

1790 ம் ஆண்டு அறிக்கையின்படி, கோவைக் குருக்கள் இவ் அழகிய தீவில் கடந்த 100 வருடங்களாக ஊழியம் புரிந்துள்ளனர் என அறிய முடிகிறது. அவர்களது ஊழியக் காலங்களில் இம் மண் ணில் யோசவ்வாஸ் முனீந்திரரின் பணி ஒப்பற்ற சக்தியுடையது. ஆகவே யோசவ்வாஸ் முனிவரின் ஆவி, இன்றும் இங்கு இயங்கி, எம்மை இயக்கி வருகிறது எனத் துணிந்து கூறலாம்.

இம்மண்ணில் ஜனவரி 1995 ல், தலைநகரில் நடைபெற்ற அவரது முத்திப்பேறு பெற்ற வைபவம் இதற்குச் சான்றாக அமைகிறது. இப் பெருவிழாவுடன் எம் கடமை முடிந்து விடவில்லை. மாறாக நம் ஒவ்வொருவருக்கும் அவர் காட்டிய கத்தோலிக்க நெறியில் வாழ அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து, புதிய அர்ப்பணத்துடன் பணிபுரியப் புறப்படவேண்டும்.

சாத்தான் ஒருபோதும் தூங்குவதில்லை. அதிலும் திருச்சபையுடன் பொருதும்போது, அதுதன் முழுச்சக்தி கொண்டே பொருதும் என்பது வரலாற்று உண்மை.

வரலாற்றுச் சக்தி படைத்த அமைப்புகளிலும், இயக்கங்களிலும், உறங்கிக் கிடக்கும் முரண்பாடுகள் முண்டியடித்து கிளர்ந்தெழும்போது அங்கே குழப்பங்கள் உண்டாகி, அவற்றை ஆட்டங்காணச் செய்துவிடுகின்றன. இதற்கமைவாகவே ௳காவைக் குருக்களின் நிர்வாகத்திலும் 1760 ம் ஆண்டுக்குப் பின் குழப்பங்கள் உருவாகியதைக் காண்கிறோம். அத்துடன் சில உட்காரணங்களும் புறக்காரணங்களும் இவர்களின் சரிவுக்கு ஊக்கிகளாயின.

1787 மார்ச் 4 ல் கொச்சினில் இருந்து, ஆயர் அவர்கள், கோவைக் குருக்களின் அதிபருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக் காட்டிய விடயங்கள் வருமாறு;-

காலப்போக்கில் கோவைக் குருக்களின் தொகை குறைந்து சென்றது. அத்துடன் அவர்களின் பணியாற்றும் சக்தியும், படிப்படியாகக் குறைந்து சென்றது. குருக்களுக்குள் உட்பூசல்கள் உருவாகின. இதன் விளைவாக பச்சேக்கோ அடிகளார் ஒருமாதச் சிறையனுபவம் பெறவேண்டி வந்தது. இவரின் சிறைவாசத்திற்கு, பிரான்சீஸ்கோ றொட்றிகஸ்கன் என்ற வேறொரு குரு அனுப்பிய மனு காரணமாக இருந்திருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.

பச்சேக்கோ அடிகளார் கொச்சின் ஆயருக்கு எழுதிய கடிதத்தில் பிரஞ்சு அரசுடன் தனக்கு உறவு உள்ளது என சந்தேகித்து டச்சு அரசு தூத்துக்குடிச் சிறையில் தன்னை அடைத்ததாகக் குறிப்பிட்டிருத்தார். அத்துடன் தன்னை நிரபராதி என்று அறிந்து விடுதலை செய்தனர் எனவும் எழுதியிருந்தார். 52

தலத் திருச்சபைக்குக் கிடைத்த வரையறுக்கப்பட்ட சுதந்திரம் சில குருக்களை பதவிமோகம், கௌரவப்பிரியம், பணஆசை கொள்ளச் செய்தது. இதன் விளைவாக அவர்களின் உள்ளரங்க பரிசுத்தத்தனம், தபம் ஏழ்மை போன்றவற்றில் இருந்த பற்றுறுதி என்பன குன்றிப்போயின.

கொச்சின் ஆயர் தாஸ் 1791ம் ஆண்டு யூலை 2ல் எழுதிய கடிதத்தில் மிசனரிக் குருக்களில் இருக்க வேண்டிய சமாதானம் அற்றுப் போனமைக்கான காரணங்கள், சில குருக்களின் அதிகாரப் போக்கும், முதியோர் இளையோரை அடக்கியாளும் தன்மையும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார். அத்துடன் அவர்களில் சிலர், சொகுசு விரும்பி, சலுகைகள், வசதிகள், போன்றவற்றை அனுபவிக்கத் தங்களுக்கு உரிமையுண்டு என்று குரல் எழுப்பியும் வந்துள்ளார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சொல்லாலும் செயலாலும் உள சுத்தியோடு முதியோர்கள் தம் நன்னெறி வாழ்வால், இளையோருக்கு ஓர் எடுத்துக்காட்டாக வாழவேண்டும். வழிகாட்டவேண்டும். அங்ஙனம் செய்யாது வெறும் போதனைகளைச் செய்துவிட்டு, பெரியவர்கள் தங்கள் வேலையாட்களை தம் சொந்த வசதிகளுக்காக – சுகபோக சௌகரியங்களுக்காக உழைக்கும் மனித மாக்களாக உபயோகப்படுத்தினால், ஏழை மக்களின் மனக்கொதிப்புக்கு உள்ளாகவேண்டி வரும். வளர்ச்சியுற்ற மிசனரிகளை இப்போக்கு ஆட்கொண்டது.[52] இது ஒரு சாபக்கேடாக அமைந்தது. பிரான்சிஸ்கன் மிசனரிகளின் வீழ்ச்சிக்கு இப்போக்கே காரணமாக அமைந்தது. இத்தகைய போக்கு தமது சபைக்குள் உட்புகாது விழிப்பாக இருக்கவேண்டி இவ்வித எச்சரிக்கையை விடுத்தார்.

''இந்தியாவிலும் இங்கும் மக்கள் புதுமுகங்களையே விரும்புவர். நீண்ட காலம் ஓர் இடத்தில் இருந்தால், தம் கடமைகளை கைநெகிழ்ந்து தன் சொந்த நலன்களையே கூடக் கவனிக்கத் தொடங்குவர்.'' என்பது அவரின் அனுபவக் கூற்றாகும்.

'குருக்கள் ஒரு மாதம் ஞான ஒடுக்க இல்லத்தில் தங்கியிருந்து, ஆன்மீக தேடுதலும், உடல் உள ஆறுதலும் பெற வருவர். ஆனால் சிலர் இரண்டு மூன்று மாதங்கள் தங்கிவிடுவர். ஒரு குரு, ஒரு வருடத்தில் மூன்று மாதங்கள் தம் பங்குத்தளத்தில் இல்லாவிட்டால், அப்பங்கு மக்கள், ஆயன் இல்லா ஆடுகளாக, ஆன்மீக சீர்கேடுகளைச் சந்திக்க நேரிடும்'' என்பதை அறிந்த ஆயர் இதுபற்றிக் கவனம் எடுக்கும்படி அறிவுறுத்தினார்.

கொழும்பிலிருந்து மாதோட்டத்தில் உள்ள குருக்கள் இல்லத்துக்குப் போய்வர 10 நாட்கள் செல்லும். அத்துடன் பயணத்தின் போது சிலரைக் காவவேண்டியும் இருந்தது. காவும் வேலைக்குத் தேவையான வேலையாட்கள் கிடைப்பது கிடையாது. இதனால் மாதோட்டத்தில் இருக்கும் குருக்கள் தவிர்ந்த ஏனைய வடபகுதிக் குருக்கள் யாழ்ப்பாணத்திலும், தென்பகுதிக் குருக்கள் கொழும்பிலும் கூடித் தியானங்கள் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இவை 1796ம் ஆண்டு அறிக்கையின் முக்கிய அம்சங்களாகும். அதே ஆண்டில் புத்தளத்தில் சின்னம்மை பரவி, பல ஆயிரம் பேர்களைப் பலிகொண்டது. மன்னாரில் இதே காலத்தில் காய்ச்சல் பரவி, பல ஆயிரம் மக்களை அழித்தது. இத் துன்பச் சூழலில் மக்கள் மத்தியில் குருட்டுப் பக்திகளும், பில்லி சூனியமும் விரைந்து பரவின. இந் நிலையிலேயே ஒல்லாந்தர் காலம் 1796ல் முடிவுற்றது.

முடிவுரை:

யாழ் திருச்சபை வரலாற்றின் ஒல்லாந்தர் கால ஒன்றரை நூற்றாண்டுகளை, நம் கத்தோலிக்க மறைவரலாற்று நல்லுணர்வுடன் ஆய்வு செய்துள்ளோம். வரலாற்றுப் பாதையில் தேசங்கள், சமூகங்கள், குழுமங்கள் என்பவற்றின் எழுச்சி வீழ்ச்சிகளும் சாதாரண நிகழ்வசைவுகளும், கத்தோலிக்கத்துக்கு மட்டும் விதிவிலக்கல்ல. அருள், நம் மானிடத்தின் சாதாரண தன்மையில்தான் தெய்வீகத்தைக் கட்டி எழுப்புகிறது.

எழுச்சிக்கான காரணங்களை, மூன்று கட்டமாக நோக்கினோம். யோசவ்வாஸ் முனீந்திரரின் வருகை, மழைக்காகக் காத்து நின்ற வரண்ட நிலம் போன்று, ஈழத்துக் கத்தோலிக்க வயலுக்கு விளைச்சலைத் தந்தது. அடுத்துக் கத்தோலிக்க இலக்கிய கலைகள் வளர்ந்த கட்டம். அறுவடைக்கு ஆயத்தமான பொன்மணிகள், சாங்கோபாங்க சுவாமிகளின் வாழ்வுச் சாதனைகளில் மிளிர்வதையும், கண்டி அரசின் வெளியேற்றத்திற்கு தயார் நிலையையும் ஏற்படுத்தி, ஒல்லாந்த வர்த்தக அரசு இயந்திரத்தை அறவழியில் எதிர்கொள்ளப் புறப்படும் வலுவடைந்த கத்தோலிக்கத்தையும் காண்கிறோம்.

மூன்றாம் கட்ட தளர்ச்சி நிலைக்கு உட்புறக் காரணிகள் உண்டு. ''சாத்தான் தூங்குவதில்லை.'' ''விழிப்பாயிருந்து செபம் பண்ணுங்கள்.'' என்ற யேசுவின் கூற்று வரலாறு பூராக அர்த்தமுள்ளது; அனுசரிக்கப்பட வேண்டியது. ஒல்லாந்தா கம்பெனியின் கடும் போக்கு தளர்ச்சி அடைய. போர்த்துக்கல் நாட்டின் அரசியலில், ஏற்பட்ட மாற்றங்களில், ஒரு நாஸ்திக அரசியல் வாதிகள் குழு, ஆட்சியைக் கைப்பற்றி துறவற சபைகளைத் தடை செய்கிறது. கோவாவும் போர்த்துக்கல் நாட்டின் ஓர் அங்கமாக இருந்ததனால் அற்புத தியான யோக சபை, தடை செய்யப்படுகிறது. இனி இங்கு வரும் மிசனரிகள், தரமற்ற கோவை மேற்றிராசனக் குருக்கள். இத நிமித்தம் அவர்களில் சிலரின் சொகுசு, பண ஆசை, அதிகார போக்குகளை விளங்க முடிகிறது.

150 வருட முடிவில், வரலாற்று நியதி ஈழத் திருச்சபையையும் வாட வைக்கிறது. இந்நிலையில் யோசவ்வாஸ், யக்கோமே கொன்

சாலஸ், பெட்ரோ பெறாறோ, பச்சேக் முதலிய திருச்சபைத் தூண்களுக்கு நன்றி சொல்வோமாக.

நம் தாந்தரிக கத்தோலிக்கத்துக்கு அடிகோலிய கோவைக் குருக்களதும், சிறப்பாக பெட்ரோ பெறாறோ அடிகளாரதும் பங்களிப்பை மீளாய்வு செய்வோமாக. இதை ''யேசுக்கிறிஸ்து, பரமபிதாவின் வாக்கு'' என்ற 3ம் மிலேனிய ஏடு (பக் 41 - 42) இப்படி வரையறுக்கிறது. இதற்கு அது பாவிக்கும் பதம் ''பொது மக்கள் மத உணர்வு'' (Popular Religiosity) என்பதாம்.

''கத்தோலிக்கரில் பெரும்பாலானோர் சிறுவரோ, வளர்ந்தோரோ; படித்தோரோ பாமரரோ; இவர்கள் எல்லோரும் இப்பொதுமக்கள், அருள் இறை உணர்வுகளில் அமிழ்ந்தோரே. மக்கள் தம் விசுவாசத்தை ஏற்று விளங்கி, அறிவிப்பது இறையியல் சிந்தனை வடிவங்களில் அல்ல. குறியீடுகள் செறிந்த உயிருள்ள மறை உணர்வு நிலைகளினூடாகவே. இதனால்தான் இதை மூடப் பழக்க வழக்கமென்றோ, நவீன யுகத்திற்கு பொருந்தாதெனவோ நிராகரிக்க முடியாது.'' இதை ஓர் கிறிஸ்தவ சமய விழுமியமாக்க முயல வேண்டும். (6ம் சின்னப்ப பாப்பிறை, 1975, 2ம் அருள் சின்னப்பர், 1979 மெக்சிக்கோ நாட்டு லத்தின் அமெரிக்க ஆயர் அவை அறிக்கையும் இதைச் சுட்டிக் காட்டியுள்ளது.) (43, 44)

இம் மக்களின் மறையுணர்வு பிரமாணிக்கமுள்ள பரமபிதாவிலும், செபத்திலும் நம்புகிறது. தன்னிடத்தே தோன்றும் ஒப்புரவாக்கும், ஒன்றிணைக்கும் தன்மையில் இறைத்தன்மையை மனிதத்துடனும், கிறிஸ்துவை மரியாளுடனும், உடலை ஆன்மாவுடனும் அமைப்பை அன்னியோன்னியத்துடனும், தனி ஆளை மானிட குழுவினுடனும், விசுவாசத்தை நாட்டுடனும், மனதை இதயத்துடனும் இணைக்கிறது.

இது பாவத்தின் சர்வ வியாபிப்பையும், பரிகாரத்துக்கான தேவையையும் உணர்ந்து கிறிஸ்துவின் மறைபொருளை அவரின் மானுடமான மறைபொருளிலும், அவர் சிலுவை மரணம், உயிர்ப்பு, நற்கருணையிலும், இவைமூலம் கிறிஸ்துவை அறியும் அறிவிலும், கிறிஸ்தவன் ஒவ்வொருவனிலும் இயங்கும் பரிசுத்த ஆவியிலும், இறைவனின் அன்னை மரியாளிலும், மரணமட்டும் செல்லும் வேதசாட்சியத்திலும் விசுவாசத்தை பாதுகாக்க துணிகிறது.

இஃது உள்ளரங்கமாக விழுமியங்களை வேறு இடங்களில் அருமையாக காணக்கிடக்கிற பொறுமை, நாளாந்த பரித்தியாகங்கள், பற்றற்ற நிலை முதலியவற்றையும் திருச்சபைக்கு உண்மையான அன்பையும், பாப்பிறைக்கு பிரமாணிக்கத்தையும் காட்டுகிறது.

ஒவ்வொரு மனிதனின் மாண்பையும், சகோதரத்துவத்தையும், மிகவும் கடினமான வாழ்க்கை நிலைகளில் கூட, மகிழ்ச்சியையும் தொழிலின் மகத்துவத்தையும் சிரிப்பையும் காண விளைகிறது.

இதில் அரும்பும் ''ஆபத்துகளை'', புறக்கணிக்க முடியாது. மூடப் பழக்கவழக்கங்கள், மந்திரமாயம், விதி, குருட்டுப்பக்தி, சிலை வழிபாடு, மிருக வழிபாடு, வெறும் கிருத்தியங்களில் நம்பிக்கை என்பவற்றுடன் அருட்சியற்ற பழமைவாதம், அறிவீனம், கலப்படம் நிறைந்த கிறிஸ்தவ சத்தியங்கள், எம்மதமும் சம்மதம் என்ற போக்கு, மிகைப்படுத்தப்பட்ட புனிதர் பக்தி என்பன. யேசுவை ஓரம் போகப் பண்ணும்.

இன்று உலகபொருள் ஆசை, மோகம், நுகர்வுப் பேராசை, பொதுசனத் தொடர்பு சாதனங்கள், அரசியல் மெசியாக்கள், இடப் பெயர்வு, போர், கிறிஸ்தவ அடிப்படை வாத குழுக்கள், என்பன மக்களது அருள்மறை உணர்வுகளை அழிக்கும் நவீன சக்திகள் என்பதையும் மறக்கக்கூடாது.

மக்கள் அருள் உணர்வு வாழ்வின் பெரிய கேள்விகளுக்கு, கிறிஸ்தவ ஞானத்திலிருந்து விடைகாண விழைகிறது. இவ்வுணர்வு பரிசுத்தம் பற்றிய உணர்வுள்ளது. இறைதாகமும், ஏழ்மையும் எளிமையும் கொண்டோருக்குள் காணப்படும் மனத்தூய்மையும் ஆர்வமும் உள்ளது. இறைவாக்கை ஏற்கும் தயார்நிலை, திரியேக சர்வேசுரனின் பிரசன்னத்தில் மூழ்கிக் கிடக்கிறது. இறை பராமரிப்பில் நம்பிக்கை வைக்கிறது.''

எனவே கோவைக் குருக்கள் வளர்த்தெடுத்த மக்கள் அருள் மறை உணர்வை மங்காது வளர்ப்போமாக. அவர்கள் காலத்திலேயே அந்நிய பணத்தண்டல், உலகசொகுசு, விசுவாச கோழைத்தனம் என்பன கொணர்ந்த வீழ்ச்சிக்கு, இன்றுவரை பல புதுப்பித்தல் முயற்சிகளிடையே ஈழப்போர்ச் சூழலில் எமக்கு ஏற்பட்ட விசுவாச சரிவுக்கு மன்னிப்பு கேட்போம்.

முத்திப்பேறு பெற்ற யோசவ்வாஸ் உருவாக்கிய வாழும் விசுவாச பரம்பரைக்கு, யாக்கோமே கொன்சாலஸின் இலக்கிய கலை வடிவங்கள் அழகு மெருகூட்டிய அதே விசுவாசத்துக்கு, தன் சிறைவாசத்தினால் பச்சேக்கு அடிகளார் போட்ட எதிர்நீச்சலுக்கு நன்றி கூறி, 3 ம் மிலேனியம் அறைகூவும் வேதசாட்சிகளின் யுகத்திற்குள் காலடி வைப்போமாக. யேசுக்கிறிஸ்து ஸ்துதிக்க'' என்று சாங்கோபாங்கர் சொல்லித்தந்த தாரக மந்திரத்தை எம்மவர்க்கிடையே ஏற்பட்டிருக்கும் பிளவுகளையும், பிரிவினைகளையும் சரிப்படுத்த பாவிப்போமாக.

# யாழ் திருச்சபை வரலாறு

## IVம் - பாகம்

## ஆங்கிலேயர் காலம்

## ( 18 ம், 19 ம், 20 ம் நூற்றாண்டுகள் )

## ஒரு பார்வை

ஏறத்தாழ 150 ஆண்டுகள் நிலவிய பிரித்தானியாவின் ஆங்கில ஆட்சியிலேயே திருச்சபையின் நவீன மயமாக்கும் தன்மைகள் உருவாகின. அக புற சக்திகள் ஒன்று சேர்ந்து உருவாக்க, திருச்சபை கடந்த 300 ஆண்டுகளின், ஏன் 2000 ஆண்டுகளின் பெறுபேறுகளையெல்லாம் ஒன்று திரட்டி, யேசு சொன்ன ''விண்ணரசு பற்றிக் கற்றுக்கொண்ட *(மத். 13 : 51)* எல்லா மறைநூல் அறிஞரும் தம் கருவூலத்திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும் வீட்டு உரிமையாளரைப்போல இருக்கின்றனர்.'' என்ற கூற்றுக்கு உடைத்தானவர் ஆயினர்.

கத்தோலிக்கர்கள் இங்கிலாந்தில் மத சுதந்திரம் பெற, பல ஆண்டுகளுக்கு முன்னரே, இலங்கைக் கத்தோலிக்கர்களுக்கு மத சுதந்திரம் கிடைத்தது. ( Catholic Emancitation Act. ) இப்புதிய மதசுதந்திரம் ஏனைய பௌத்த, சைவ, இஸ்லாமிய மதங்களுக்கும் கிடைத்தது. ஆயின் மத சலுகைகள் கிறிஸ்தவ சபையினருக்கு மட்டுமே கிட்டியது எனலாம், இந்த அளவில்தான் பிரித்தானியர் கால புரட்டஸ்தாந்து சபையினர், தம் மதப் பிரசாரங்களை ஆரம்பித்து பௌத்த, சைவ, இஸ்லாமிய எதிர்ப்பைச் சம்பாதித்தனர். பாணந்துறை, களுத்துறை, பத்தேகம முதலிய இடங்களில் மெதடிஸ்த போதகர்கட்கும் புத்த பிக்குகளுக்குமிடையே நடைபெற்ற

பகிரங்க மேடைத் தர்க்கங்கள் என்றாலென்ன? ஆறுமுகநாவலர், செந்தில்நாதையர் போன்றோருக்கும், வட்டுக்கோட்டை, யாழ்நகர் புரட்டஸ்தாந்த போதகர்கட்குமிடையேயும், அவர்களது பத்திரிகைகளிடையேயும் நடைபெற்ற தர்க்கங்களென்றாலென்ன? இவற்றின் விளைவுகள் தெற்கின் சர்ச்சைகள், கேணல் ஒல்கொட், பிலவற்ஸ்கி அம்மையார் முதலியோரை இங்கு வரவழைத்து சிங்கள பௌத்த தேசிய வாதத்தற்கும் வித்திட்டதுமாகும்.

தமிழ்ப் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்டதோர் சைவத் தமிழ் தேசியம் – சமய கலாச்சார – இலக்கிய மறுமலர்ச்சியை ஆரம்பித்தது. இதன் பின்னணியில்தான் பெற்றக்கினி தொடக்கம் அல்பிரட்கியோமார் வரையிலான, யாழ் திருச்சபையின் சப்தரிசிகள், ஏழுஆயர்களின் பணிக்காலம் பொற்காலமாக மிளிரத் தொடங்கிற்று.

''செழுமையான பொன்னிறமான ஏழு கதிர்கள் ஒரே தாளில் காய்த்திருந்தன.'' (தொட. 41 : 5)

முதல் ஆறு ஆயர்களை மையமாக வைத்தே முதல் நூற்றிருபத்தைந்து ஆண்டுகளும் ஆய்வு செய்யப்பட வேண்டும். இறுதி இருபத்தைந்து ஆண்டுகளின் மௌனகுரு அல்பிரட் கியோமார் அவர்கள். அவரது ஆண்டுகள் வருகிற, விடுதலை சகாப்தங்களின் ஆயத்தமாக மாசில்லா இருதய நாயகியின் இரககியங்களுள் அமிழ்ந்த காலங்கள்.

அமைதி நிறைந்த அக்காலத்தில் ஆயரைச் சுற்றி நின்று ஊழியம் புரிந்த ஒன்பது கோள்களுள் முக்கியமாக முதல் ஆறு சுதேச குருக்களின் சிறப்புக் காலமுமாகும்.

1. கிப்பொலிற் அடிகளார்
2. ஞானப்பிரகாசர் அடிகளார்
3. மருசலின் அடிகளார்
4. சூ. ஆசீவாதம் அடிகளார்
5. பிரான்சிஸ் அடிகளார்
6. தோமஸ் அடிகளார்
7. மத்தியூஸ், லோங் அடிகள்
8. குருசோ சகோதரர்
9. பிலசோ சகோதரர்

யாழ், திருச்சபையின் பிரித்தானியர் காலம் 1800 தொடக்கம் 1950 வரையிலாகும். இக்காலகட்டத்தைப் பல வரலாற்று ஆசிரியர்கள் ஆய்வு செய்துள்ளனர். மூன்று கட்டங்களாக இக்காலத்தை ஆராய்வது நல்லது,

முதலாவது கட்டம்:

கோவைக் குருக்கள் பற்றாமை, செயற்பாட்டில் வலுக் குன்றியமை, என்பவற்றின் காரணமாக விசுவாசப் பரம்புதல் சபையினர்

ஐரோப்பிய குருக்களை இலங்கைக்கு வரவழைத்தமையால் இரு பகுதியினருக்குமிடையே ஏற்பட்ட மோதல்கள் ஆகும். விசுவாசப் பரம்புதல் அமைப்பின் சர்ச்சைக்கால கதாநாயகன் ஓராசியா பெற்றக்கினி ஆயராவார். இக் காலகட்டம் 1800 தொடக்கம் 1850 வரையிலாகும்.

**இரண்டாவது கட்டம்:**

ஆயர் சமேரியா முதல் ஆயர் மெலிசன் வரை நீடித்த அமலமரித் தியாகிகளின் முதல் வசந்தகாலம், இரண்டாவது கட்டம் ஆகும். 1850 தொடக்கம் 1893 வரை இக்கட்டம் செல்கிறது.

**மூன்றாவது கட்டம்:**

ஆயர் யூலன், ஆயர் கியோமார் ஆகியோரின் அமலமரித்தியாகிகளின் இரண்டாம் வசந்தகாலம், மூன்றாவதுகட்டம் ஆகும். இக் காலகட்டம் 1894 தொடக்கம் 1950 வரையிலாகும்.

## மதசுதந்திரமும் பிரச்சனைகளும்

**ஆன்மீகம் அருகியது:**

1796 ல் ஒல்லாந்தக் கம்பனி இலங்கைத்தீவை பிரித்தானியரிடம் ஒப்படைத்தது. எமியன்ஸ் ஒப்பந்தப்படி, சட்டபூர்வமாக இலங்கை 1802 ல் பிரித்தானியர் வசமாயது. கோவைக் குருக்களும் அதே ஆண்டில் தம் தலைமைப் பீடத்தை புத்தளத்திலிருந்து கொழும்பு கொட்டாஞ்சேனைக்கு மாற்றினர். கொழும்பிலிருந்த ஆளுநர் ( கவர்ணர் ) பிரட்ரிக் நோர்த்திடமிருந்து, மெய்விவாகம் மரணச்சடங்குகளுக்கு கத்தோலிக்கருக்கு விதிக்கப்பட்ட வரியிலிருந்து விலக்குப் பெற்றனர்.[1]

1801 லிருந்து கோவைக்குருக்கள் பள்ளிக்கூடங்களை நடாத்தத் தொடங்கினர். 1806 ல் ஆளுநர் மெயிற்லன்ட், கத்தோலிக்க மக்களுக்கு, மதசுதந்திரம் அளிக்கும் கொள்கையைப் பிரகடனப்படுத்தினார். ஆயினும் முழுத் தடைகளும் உடனடியாக நீக்கப்படவில்லை. 1929 ல் தான் முழுத் தடைகளும் நீக்கப்பட்டன.

இதுவரையும் அழுத்தங்களிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளும் நிலையிலிருந்த கத்தோலிக்க மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கத் தொடங்கியதும், தம் வளர்ச்சி பற்றிச் சிந்தித்துச் செயற்படத் தொடங்கினர். பெருகிவந்த கத்தோலிக்க சமூகத்திற்கு ஆரம்பத்தில் சேவையாற்றப் போதிய குருக்கள் இருக்கவில்லை.

1809 ல் 66,830 ஆகவிருந்த கத்தோலிக்க மக்கள் தொகை 1827 ல் 83,595 ஆக அதிகரித்தது. 1826 ல் இம் மக்களுக்குச் சேவையாற்ற 12 குருக்களும், 1832 ல் 14 குருக்களும் மாத்திரமே இருந்தனர். இவர்களது ஆன்மீகப் பொறுப்பாளரான கொச்சின் ஆயர், தென்னிந்தியாவில் வாழ்ந்தார். அவர் அக்கறையின்றி, 1802 க்கும் 1834 க்கும் இடையே தம் பொறுப்பில் இருந்தவர்களை சந்திக்காதிருந்தார். இத்தகைய பொறுப்பற்ற போக்கால் இங்கிருந்த கோவைக்குருக்களின் ஆன்மீக தாகம் குறையத் தொடங்கியது. குருக்களின் கடமையுணர்வு குன்றத் தொடங்கியது. இவர்கள் தம் மந்தைகளைத் தரிசிக்க ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறை மட்டுமே சென்று வந்தனர். 2 அதுவும் கோவிற் திருவிழாவுக்கும், பாஸ்கா பெருவிழாவுக்கும், விழாக் கொண்டாடச் சென்று வந்தனர். இதேவேளை மக்களின் விசுவாசம் வலுவிழந்து, வெறும் விழாப் பிரியராக மாறத் தொடங்கினர்.

கத்தோலிக்க மக்களின் விசுவாசம் வலுவிழந்து வரும் வேளையில், புதுவகையான, விவிலியம் ஏந்திய, மேலைநாட்டு விசேட மருத்துவ அறிவோடு, மிசனரி அமைப்புகளின் பணபலத்தோடு, மேலை நாட்டிலிருந்து மிசனரிகள், அலை அலையாக வந்தனர்.

1801 ல் ரன்கோபாரிலிருந்து குறிஸ்ரின் டேவில் யாழ் வந்து சேர்ந்தார். இவர் கத்தோலிக்கத்திலிருந்து 89 பேரை மீட்டதாகவும், 119 பேருக்கு ஞானதீட்சை கொடுத்து தம் மறையில் சேர்த்ததாகவும் கூறியுள்ளார். 1812 ல் பப்ரிஸ்ற் சபையிலிருந்து யேம்ஸ் கார்ட்சர் வந்து சேர்ந்தார். 1815 ல் மெதடிஸ்ற் மிசனரிகள் அறுவர் வந்தனர். 1828 ல் இலங்கையில் இச்சபை 54 பாடசாலைகளை நிறுவியது. 1816 ல் அமெரிக்க மிசனரிகள் வந்து சேர்ந்தனர். 3

இச்சபைகள் வேதாகமம், மருத்துவம், ஆங்கிலம் போன்ற முக்கிய துறைகளில் மக்களுக்கு அறிவு புகட்டத் தொடங்கின. இவர்களது இத் துரிதமான தூண்டுதல் முயற்சிகள் கத்தோலிக்க மக்களுக்கும் குருக்களுக்கும் பெருஞ் சவாலாக அமைந்தன. அதனால் கத்தோலிக்க சமூகம் திக்குமுக்காடியது. இதற்கிடையில் பிரித்தானிய அரசால் கத்தோலிக்கரிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகள், கட்டிடங்கள் போன்றவற்றிற்கு அரசு ஈடு வழங்கவில்லை.

அபகரிக்கப்பட்ட கோவில்களையும், காணிகளையும் புரட்டஸ்தாந்த மிசனரிகளுக்கு அரசு இனாமாகக் கொடுத்தது.

உதாரணமாக புத்தூர், கட்டைவேலி, தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, அச்சுவேலி, கோட்டை, நல்லூர், கோப்பாய் முதலிய இடங்களிலிருந்த சொத்துகள் கொடுக்கப்பட்டன. சொத்துகளை இழந்த நிலையில் கத்தோலிக்கர், குழுக்களாக, உரோமாபுரிக்குத் தம் குறைகளைத் தீர்த்து வைக்குமாறு விண்ணப்பங்கள் அனுப்பத் தொடங்கினர்.

உரோமை நிர்வாகம் விண்ணப்பங்களுக்கேற்ப அதிக அக்கறை காட்டத் தொடங்கியது. 1832 க்கும் 1836 க்குமிடையில் நான்கு மறைமாவட்டங்களை உரோமை நிர்வாகம் உருவாக்கியது. இம்மறை மாவட்டங்கள் சென்னை, கல்கத்தா, இலங்கை, கொரமொன்ன டால் என்பன. [4]

கத்தோலிக்க இலங்கை, மறைமாவட்டப் பொறுப்பாளராக பிரான்சீஸ் அடிகளார் நியமிக்கப்பட்டார், நியமனக் கடிதம், அடிகளார் கையில் கிடைக்குமுன்பே, அவர் இறைவனடி சேர்ந்து விட்டார். இலங்கையைத் தனி மறைமாவட்டமாக்கக் கூடாது என வாதிட்டுத் கோற்ற குருக்களில் ஒருவரான வின்சற்டோ ரொசாய்ரோ அடிகளாரையே, இறந்தவர் இடத்திற்கு. 1836 ல் நிர்வாகம் நியமித்தது.

கோவாவின் ஆளுகையில் இருந்து பிரிந்த இலங்கை மறை மாவட்டத்திற்குப் புதிதாக ஒரு பிரச்சனை தோன்றியது. டாக்டர் மிச்சோ. யோசே மரியாடி சில்வா, குருயோவா ஓ போன்ற அடிப்படை வாதிகள் உருவாக்கிய ''கோவைக் குருக்களே போதும். ஐரோப்பிய குருக்கள் வேண்டாம்'' என்ற சர்ச்சையே அப் பிரச்சனை.

கோவாவின் கட்டுப்பாட்டில் இலங்கை இருந்தபோது கடமையாற்றிய குருக்கள் ஒருமுனையிலும் புதிதாக உரோமை அனுப்பிய ஐரோப்பிய குருக்கள் மறுமுனையிலும் நின்று, கோவை உரோமை கயிற்றிழுப்பைச் செய்தனர். [5]

சீர்திருத்த மனு:

கொழும்பில் இருந்த பறங்கி இனக் கத்தோலிக்கர் 1837 ஆவணியில் ஒன்றுகூடி, கோவைக் குருக்களுக்கு ஓர் சீர்திருத்தம் வேண்டி. ஒரு மனுவைச் சமர்ப்பித்தனர். அம் மனுவில்:-

1. இளைஞருக்கு மறைக்கல்வி, ஆங்கிலக் கல்விப் போதனை, அளித்தல்.

2, எல்லா நோயாளருக்கும், விசேடமாக வாந்திபேதி நோய் பீடித்தவர்க்கும் நோயில் பூசுதல் வழங்குதல்.

3. பாரபட்சமின்றி குறிக்கப்பட்ட நாட்களில் ஞானதீட்சை வழங்குதல்.

4. பூசைப்பலி வேளைகளில் ஆங்கிலம், போர்த்துக்கேயம், சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரசங்கம்.

5. மிசனரிச் செலவுகளைக் கண்காணிக்க ஆறு இல்லறத்தோர் கொண்ட குழு, குருக்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.

என்ற கோரிக்கைகள் இருந்தன.

இக் கோரிக்கைகளுக்கு முகங் கொடுக்கக் கோவைக் குருக்கள் பின்வாங்கினர். இவர்களின் இச் செயல், இக் குருக்களின் ஆன்மீக சேவைகளில் ஏற்பட்ட தளர்ச்சியையும், அக்கறையின்மையையும் சுட்டிக் காட்டுகிறது,

கோவைக் குருக்களின் அசமந்தப் போக்கினைக் கண்டு 30,000க்கும் மேற்பட்ட கத்தோலிக்கர் கைச்சாத்திட்டு 1842ல் உரோமைக்கு ஒரு முறைப்பாட்டு விண்ணப்பத்தை அனுப்பினர். அதில் கோவைக் குருக்களுக்குப் பதிலாக ஐரோப்பிய குருக்களை அனுப்பும் படியும் கோரியிருந்தனர்.[6]

பெற்றக்கீனி அடிகளார் வருகை:

இவ்விரு தரப்பினரையும் ஒப்புரவாக்க கோவைக் குருக்கள் சம்பிரதாயச் சபையைச் சேர்ந்த, அதேவேளை ஐரோப்பிய (இத்தாலி) குருவான ஒராசியோ பெற்றக்கீனி 1842 நவம்பரில் இத்தீவுக்கு அனுப்பப்பட்டார்.

பெற்றக்கீனி அடிகளார் 1843ல் கண்டி, கம்பளை, நுவரெலியா, வகாக்கோட்டை ஆகிய இடங்களில் பணியாற்றியதுடன் பல பௌத்தர்களின் மனமாற்றத்துக்கும் காரணரானார். இவர் கத்தோலிக்க கல்விக் கூடத்தின் அவசியத்தை உணர்ந்து கண்டியில் கத்தோலிக்க கல்விக்கூடமொன்றை நிறுவினார். இங்கு கற்பிக்கும் பணியைச் செய்ய 1844ல் பவுஸ் ஸ்தேயான் பூரீ என்பவரை நியமித்தார். பூரீ முன்னாள் ஆங்கில அரச ஊழியராவார். இவர் பின்பு அ. ம. தி. சபையிற் சேர்ந்து குருவானார். இலங்கையின் முதல் அ. ம. தி. குருவும் இவரே.

அடிகள் தம் பங்கு மனையையே கல்விக்கூடமாக்கினார். இரு அறைகள் கொண்ட இக் கூடத்தில் ஆரம்பத்தில் 50 மாணவர் கற்றனர். இங்கு ஆங்கிலம், தமிழ், சிங்களம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. சிறுக ஆரம்பிக்கப்பட்ட இக் கூடம் இன்று புகழ்மிகு கண்டி, கட்டுகாஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியாகத் திகழ்கிறது.[7]

ஆயர் பெற்றக்கீனி:

அடிப்படை வாதிகளின் முதல் எதிர்ப்பலை டாக்டர் மிச்சோவின் தலைமையின் கீழ் எழுப்பப்பட்டது. ஆயர் கயத்தானோ அன்ரோனியோவுக்கு உதவி ஆயராக பெற்றக்கீனி அடிகளார் பாப்பரசரால் நியமிக்கப்பட்டார். 1846 பெப்ரவரி 11 ல் கொழும்பு புனித லூசியா ஆலயத்தில் அடிகளாரின் ஆயர் அபிசேகத் திருச்சடங்கு நடைபெற்றது.

1845 ம் ஆண்டுத் தீர்மானத்தின்படி இலங்கை வடக்கு தெற்கு என இரு மறை மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது, ஆயர் பெற்றக்கீனி ஆண்டகை உரோமை சென்று மீளும்போது தன்னுடன் நான்கு அமலமரித் தியாகிகளையும் அழைத்து வந்தார். அவர்கள் யோண் எற்றீன் சமேரியா, லூயிஸ் கீற்றின், பிரான்சுவாசியாழின், சுஸ்பார் ஸ்ரீபாணிஸ் என்போராவர்.[8]

1848 ம் ஆண்டில், ஐரோப்பிய குருக்கள் வடபகுதிக்கு வந்த பின் இங்கிருந்த கோவைக் குருக்கள் அறுவரில் மஸ்கரினஸ் அடிகளார் மட்டுமே இங்கு தங்கியிருந்தார். ஏனைய ஐவரும் தெற்கு மறைமாவட்டத்துக்குச் சென்றனர். தமிழ்மொழி தெரிந்த குருக்கள் இவ்வேளை வடபகுதிக்குத் தேவைப்பட்டனர், இதனால் ஆயர் அவர்கள் சமேரியா அடிகளாரை, தமிழ் தெரிந்த குருக்களை அழைத்து வருமாறு, நாகப்பட்டினத்துக்கு அனுப்பினார். 1849 ம் ஆண்டில் நான்கு யேசுசபைக் குருக்கள் ஊர்காவற்றுறை, மன்னாரில் ஆன்மீகப்பணி புரிந்தனர்.

ஆயர் பெற்றக்கீனி அவர்கள் தமது ஐந்து வருட ஆன்மீகப் பணி வாழ்வில், ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று, தம் மந்தைகளைத் தரிசித்தார். வன்னி, அனுராதபுரம் ஆகிய மறைமாவட்டங்களில் அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது, மறைமாவட்டங்களுக்கு ஆயர் எழுதிய கடிதங்களும் சுற்றுநிருபங்களும் கைதவறிய போதும் ஒரேயொரு கடிதம் மட்டுமே பாதுகாக்கப்பட்டது. இக் கடிதம் 22 ஆகஸ்ட் 1849 ல் எழுதப்பட்ட கடிதமாகும் இக் கடிதத்தில தமது ஆன்மீக யாத்திரையில், மறைமாவட்டங்களில் நேரில் கண்டறிந்த இரு குறைகளை ஆயர் சுட்டிக் காட்டியுள்ளார்.

1. மறையறிவு அருகி, கிறிஸ்துவையே யார் என்று கேட்கும் நிலைக்கு, மக்கள் கிறிஸ்துவை அறியாதிருந்த அறிவீனம் காணப்பட்டது.

2. வீண் ஆடம்பரங்கள், வெளிச்சடங்குகளுக்கு மட்டுக்கு மீறிய முக்கியத்துவம்; ஆன்மீக விடுதலையில் அக்கறையற்ற தன்மை; தம் இரட்சிப்பிலும் அக்கறையின்மை.

இக்கடிதத்தில் மிசனரிகள் பாவசங்கீர்த்தன திருவருட்சாதனத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் என்றும். ஏனைய அருட்சாதனங்களைப் பற்றிய அறிவை, மக்களுக்கு போதியளவு கற்பிக்கத் தவறினர் எனவும் அவர் எழுதியுள்ளார். நற்கருணைப் பக்தி, மக்களிடம் அறவே இல்லையெனவும், புனிதர் வழிபாடுகள் வெளி ஆடம்பரங்களுடன் கொண்டாடப்பட்டன எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். ஆடம்பர கொடியேற்றம், மேளதான ஒலி, கோவில் மணிகளின் பலத்த ஆர்ப்பரிப்பு, பட்டாஸ்வெடி முழக்கம் முதலியவை திருவிழாக்களில் அர்த்தமற்றவை எனவும் தீங்கு விளைவிப்பவை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயர் தம் கடிதத்தில் சுட்டிக்காட்டிய குறைகளை வண. கலாநிதி N. M. சவிரிமுத்து அவர்கள் தம் நூலில் விமர்சனம் செய்துள்ளார். [9] ஐரோப்பியரான ஆயர் அவர்கள், மண்ணின் மக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாது. மக்களைத் தரம் குறைத்து எடைபோட்டுள்ளதாக தம் விமர்சனத்தில் எழுதியுள்ளார். கோவைக் குருக்களுக்குள்ள புரிந்துணர்வுப் போக்கு, ஐரோப்பிய குருக்களுக்கு இருக்கவில்லை என்றும், ஐரோப்பியக் குருக்கள் வெளிக்கிரிகைகளின் ஆழமான அர்த்தம் புரியாது. மக்களின் மத உணர்வின் வெளிப்பாடாகக் கிரிகைகளைக் கருதாது கண்டிப்பதாக விமர்சித்துள்ளார். கீழைத்தேய கலை கலாச்சாரப் பண்புகளை மேற்கத்திய அளவுகோல் கொண்டு அளவிடுவது நியாயமற்றது என்பது அவர் வாதமாகும்.

சிலுவையும் மற்றும் சின்னங்களும் கொண்டுள்ள உள்ளார்ந்த அர்த்தத்தைப் போர்த்துக்கேயர் காலத்து கத்தோலிக்க மக்களும் ஒல்லாந்தர் காலத்துக் கத்தோலிக்க மக்களும் தமக்குள் வாங்கி வாழ்ந்த வரலாற்றை மீண்டும் ஒருமுறை மீட்டுப் பார்த்தால் ஆயர் சுட்டிக்காட்டிய குறைகள் சரியானவைகளா? தவறானவைகளா? எனக் கூறமுடியும்.

கத்தோலிக்க மக்கள் பக்தி மரபில் தேவதாயின் கொடிகள், சிலைகள், பிரார்த்தனைகள், கொடிமரம் என்பவற்றைப் பாவித்தனர். வானம் பூமியை இணைக்கும் ஏணி என்று, கொடிமரம் அர்த்தம் கொள்ளப்படுகிறது. மேளம், விருத்தம், வாசாப்பு, திருச்சுருபப்பவனி போன்றவை அன்று அம்மக்களை ஆழ்ந்த விசுவாசத்தில்

வேர்விட்டு, தம்முயிரையும் கிறிஸ்துவுக்காக அர்ப்பணிக்கத் தூண்டிய வரலாற்று நிகழ்வுகளுடன், ஆயர் பெற்றக்கீனி கால களநிலையுடன் ஒப்பிட முடியாது. ஆயர் அவர்கள் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் மாறுபட்ட சூழ்நிலையில் இன்றும் தொடர்ந்து இருப்பதை மறுக்க முடியாது.

சிலுவைப்பாடுகள், வேதகலாபனைகள் இக் காலகட்டத்தில் வரவரக் குறைந்துகொண்டே சென்றன. கத்தோலிக்கத்தின் மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே சென்றது. கோவைக் குருக்கள் மத்தியில் போட்டி, பொறாமை, உட்பூசல் போன்ற உலகியல் நோய்கள் தொற்றிக் கொண்டன. பிரித்தானிய ஆளுகையில் வசதிகள் பெருக உல்லாச சுயநல ஊன் உடல் ஆட்சிக்குள் திருச்சபையும் சிக்கிக்கொண்டது. நவீன காலப் பொருள் முதல் வாதத்தின் முதல் அலைகளும் இந்தக்காலத்தில் எழும்பி, சிலரை அள்ளிச் சென்றன. ஆங்கிலக் கல்வி, பணம். அந்தஸ்து என்பன, ''நான்'' என்ற மமதையைப் பலரிடம் கிளறிவிட்டது. அன்றும் இன்றும் இத்தனை தாக்கங்களும் படிப்படியாகச் சீரான வேகத்துடன் செம்மையாகத் தாக்கிய தாக்கத்திலிருந்து யாழ் திருச்சபை தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது திணறுகின்றதென்பது உண்மை.

கத்தோலிக்கத்துக்குச் சவாலாக மூலைமுடுக்கெல்லாம் எழுச்சியுற்று வரும் புதிய கிறிஸ்தவ மிசனரி சபைகளின் பார்வைக்கு எம் ஆடம்பர வெளிக் கொண்டாட்டங்கள் எல்லாம் எப்படித் தோன்றுகின்றன? ஆயர் பெற்றக்கீனி சுட்டிக் காட்டியது முற்றிலும் சரியானது எனப் புரியும்.

1850 ல் வாந்திபேதி என்ற தொற்றுநோய் யாழ்நகர் மக்களைப் பலிகொள்ளத் தொடங்கியது. அந்நோய் குடும்பத்தில் இருவரையாவது பற்றிக்கொண்டு மூன்று மாதங்களுக்குள் குடும்பத்தையே அழித்துவிட்டது. இத்தகைய பயங்கரமான, உயிர்க்கொல்லி நோய்க்குள்ளான மக்களைக் காக்க, காக்கும் கரங்களை நீட்டியவர் ஆயர் பெற்றக்கீனியே

ஏழைகளின் குறை தீர்த்த அன்பர் யேசுவின், அடியார்களான ஆயரும் அவர்கீழ் பணிபுரிந்த ஐரோப்பிய குருக்களும் வீடுவீடாகச் சென்றனர். காலை தொடங்கி மாலை வரை வீட்டில் உள்ளவர்களின் உடல் வாதைகளைப் போக்கி கஞ்சி பருக்கி உதவியதுடன், ஆண்டவரின் அருள்மிகு வார்த்தைகளை ஊட்டி உளஉறுதியும் கொடுத்தனர். இரவு வேளைகளில் உபதேசிமாரின் துணையுடன் மணி அடித்த வண்ணம் வீதிகளில் சென்று, அவசர தேவைகளில் உதவியதுடன் ஆறுதலளித்து, உரமூட்டும் கிறிஸ்துவின் நற்செய்திகளை அறி

வித்தனர்.[10] பிற மத மிசனரிகள் சிலர் வசதிபடைத்தவர்களாயிருந்தும் பெருந் தொற்றுநோயிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள, பகலில் கூட வெளியில் வராது வீட்டினுள் முடங்கிக் கிடந்தனர். மக்களை மற்றவர்கள் கைவிட்ட வேளையில், தம்முயிரையும் துச்சமென மதித்து, அவர்களுயிரைக் காத்து நற்செய்தி ஒளியில் பணிபுரிந்தார் ஆயர் பெற்றக்கினி.

பருத்தித்துறையில் வாந்திபேதி நோய் கண்டவர்கள் மத்தியில் பணியாற்றியவர் 30 வயதான அ. ம. தி. லெடியார் அடிகள் ஆவர். இவர் 16 யூன் 1851 ல் நோய்க்குள்ளாகி வதிரியில் இறைவனடி சேர்ந்தார்.[11]

**பிரிவினைப் புயல்:**

இவ்வித வீரம் செறிந்த அன்புருவான குருக்களின் பணி வாழ்க்கையால் கவரப்பட்டு பிறமதத்தோர் சிலர் மதம் மாறியதில் வியப்பேதுமில்லை. வளர்ந்து வரும் இறையரசுப் பணியில் தன் கைவரிசையைக் காட்ட இரு குருக்களை சாத்தான் தெரிந்தெடுத்தான். யாழ்ப்பாணத்தில் பிரான்சிஸ்கோவும், மாதோட்டத்தில் மஸ்கரனசும், தூங்காத சாத்தானின் துணை நின்று திருச்சபைக்குள் பிளவை உண்டாக்கச் சதி செய்தனர்.

ஆயர் பெற்றக்கினிக்கு தலையிடிகளாக எழுந்த அம்சங்கள் வருமாறு:–

1. கோவைக் குருக்களின் எதிர்ப்பு.
2. யாழ்ப்பாணத்துக்குள்ளும் இக் குருக்களின் எதிர்ப்பு ஊடுருவத் தொடங்கியமை.
3. அமல மரித் தியாகிகளுக்கும் ஏனைய சபைக் குருக்களுக்குமிடையே தோன்றிய முரண்பாடுகள்.
4. தென் மறைமாவட்ட எல்லைத் தகராறு.

முதலிரண்டு பிரச்சனைகளும் ஆயருக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தன. வடக்கு, தெற்கு என்று மறைமாவட்டங்கள் பிரிக்கப்படும்பொழுது வடக்கில் ஒரேயொரு கோவைக்குரு மட்டுமே இருந்தார். இவர்தான் மனுவேல் பிலிப்பு மஸ்கரனஸ், இவர் 1843 ல் கொழும்பு ஆயர் கயத்தானோ அன்ரனியோவால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 1849ம் ஆண்டு வரை ஆயர் பெற்றக்கினியின் பணிப்புரைகட்கு கீழ்ப்படியும் நல்லதொரு குருவாக விளங்கினார். இதன் பின் இவரின் போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. ஐரோப்பிய குருக்களை எதிர்க்கும் புரட்சிப் போக்கை இவர் கடைப்பிடித்தார். குடிப்

பழக்கத்துக்கும் இவர் அடிமையானார். இதனால் 1850 ல் மாதோட்டத்திலிருந்து மாற்றம் செய்யப்பட்டார். ஆயின் இவர் அங்கிருந்து செல்ல மறுத்தார். ஆயர் அங்கு சென்றபோது பரப்பாங்கண்டல் கோவிலினுள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டார். வெளிவர மறுத்தார். [12] தன் ஆதரவாளரைக் கொண்டு வன்முறை வழியில் எதிர்ப்புத் தெரிவிக்கச் செய்தார்.

கோவைக் குருவுக்கு உரம் ஊட்ட கொழும்பிலிருந்து பிரான் சீஸ்கோ கியோவன்னி என்ற கோவைக்குரு 1851 ல் பலருடன் மடுப் பதிக்கு வந்தார். வந்தவர் தம் ஆட்பலம் கொண்டு மடுப்பதியைச் சில நாட்களுக்கு தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். பின் தம் கட்டுப்பாட்டை விட்ட குரு, தொடர்ந்தும் பல தொல்லைகள் கொடுத்தார். மடுப்பதியின் இழுபறிக்கான இறுதித்தீர்ப்பு 1875 ல் நீதிபதி குரோபோட்டால் அளிக்கப்பட்டது. இத் தீர்ப்பின்படி கத்தோலிக்க ஆயருக்கு ஆதன உரிமை அளிக்கப்பட்டது. [13]

ஆயருக்குத் தலையிடி கொடுத்த அடுத்த குரு பிரான்சீஸ்கோ யோவாஓ என்பவர். 1850 ல் ஊர்காவற்றுறைக் கோவில் பிரச்சனையின் போது, எதிர்த்தரப்பினர் இவரைத் தம் துணைக்கு அழைத்தனர். 1851 ல் அவர் துறைக்கு வந்தபோது 90 பேர்கள் மட்டுமே அவரை வரவேற்றனர். கரம்பன் புனித செபஸ்தியார் கோவில் வளாகத்தில் ஒரு கொட்டிலில் இவருக்குத் தங்க இடம் அளித்தனர். அத்துமீறி ஆலயத்துள் நுழைவதற்கு, இவர் கூட்டத்தை, பங்குக் குரு அனுமதிக்கவில்லை. கத்தோலிக்க ஆலயத்துள் ஆயரின் உத்தரவின்றி எந்தக் குருவும் பிரவேசிக்க முடியாது என்ற பங்குக்குருவர் லோறென்ற் அவர்களின் விண்ணப்பத்திற் கிசைவாக நீதிபதி தீர்ப்பளித்தார்.

பிரிவினைக் குருவாக விளங்கிய இவர் 1851 ல் சில ஆதரவாளர்களுடன் பாஷையூர் அந்தோனியார் ஆலயத்துள் அத்துமீறி நுழைய முயன்றார். இக் கோவிலின் பங்குக்குரு லெபஸ்கு அடிகளார் இவ்வேளையில் கொழும்புத்துறை செபமாலை மாதா கோவிலில் நவநாள் வழிபாட்டை நிறைவேற்றிக் கொண்டிருந்தார். இதனைக் கேள்வியுற்றதும் பங்குக்குரு பணிமனைக்கு விரைந்து சென்றார். இதனால் இக் குழுவால் ஒன்றும் செய்ய முடியாது போய்விட்டது. [14]

1852 செப்டம்பர் 8 ல் வதிரி, புலோலி, கரவெட்டிப் பங்குகளில் பிரிவினைக் குரு உட்புகுந்தார். இவரின் பிரிவினைப் புயல் இங்கு உக்கிரமாக நீடித்து வீசியது.

ஆக்கிரமிப்பும் அத்துமீறல்களும் ஒரு குறுகிய காலத்துக்கு இவருக்கு வெற்றியளித்தது. 22 டிசம்பர் 1852 லிருந்து யாழ் அடைக்கலநாயகி ஆலயம் இவரது ஆக்கிரமிப்பு மையமானது; குறுகிய காலத்துக்கு நீடித்தது. இங்கிருந்து கொண்டே கொஞ்சேஞ்சி மாதா (பெரிய கோவில்) கோவிலைக் கைப்பற்றத் திட்டம் தீட்டினார். இவரின் திட்டத்தை அறிந்து கொண்ட யாழ் சந்தியோகுமையோர் கிறிஸ்தவர்களும் சில அடைக்கலநாயகி ஆலயக் கிறிஸ்தவர்களும் இணைந்து பெரியகோவிலை இரவு பகலாக காவல் காத்தனர். இவர்களுக்கு புதுவருடமும் (1 ஜனவரி 1853) காவல் பணியுடன் விடிந்தது. [15]

பிரிவினைவாதம் மக்களிடையே தன் செல்வாக்கை இழக்கத் தொடங்கியது. 1853 ம் ஆண்டு மீண்டும் யாழ்நகரில் தொற்று நோய் மக்களைப் படாத பாடுபடுத்தியது. பிரிவினைக் குருவுக்கெதிரான நீதிமன்ற விசாரணையும் நான்கு வருடங்களில் முடிவுக்கு வந்தது. நீதிபதி பிரிவினைக் குருவைக் குற்றவாளியாகக் கண்டு ஆலய வளாகத்தை விட்டு வெளியேறுமாறு தீர்ப்பளித்தார். வாந்திபேதி நோய் கண்ட யாழ் மக்களை கத்தோலிக்க குருக்கள்தம் அளப்பரிய சேவையால் தேற்றி வந்தனர். இவர்களது அன்புச்சேவையின் அலைகள், பிரிவினை வாதிகளின் இதயங்களை இழகச் செய்தது. பிரிவினைவாதிகளின் மனமாற்றத்தால், பிரிவினைவாதம் தன் இறுதி மூச்சையும் இழந்தது. பிரிவினைக்குரு வீதியால் செல்லும் போதெல்லாம், சிறுவர் குழந்தைகள் ''ஒநாய், ஒநாய்'' எனக் கூக்குரலிட்டு கேலி செய்தனர். [16]

ஆயர் பெற்றக்கீனி 1853 செப்டம்பரில் உரோம் சென்றார். 1854 ஒக்டோபரில் இலங்கை திரும்பினார். அவர் இலங்கை வந்த போது சுகவீனமுற்றதால் நேரே யாழ்ப்பாணம் செல்லாது, போளவத்தைக்குச் சென்று தங்கினார்.

1854 ம் ஆண்டு இறுதியில் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளில் வாந்திபேதி பரவத் தொடங்கியது. ஊர்காவற்றுறையில் இந்நோயால் 400 க்கும் அதிகமான கத்தோலிக்கர்கள் இறந்தனர். நோய்க்கு அஞ்சிய மக்கள் இரவு பகலாக ஆலயங்களிலே அடைக்கலம் புகுந்தனர். சமேரியா அடிகளும், ஏனைய குருக்களும் உடல், உள, ஆன்மீக சேவை செய்தனர். பணியில் தம்மை அர்ப்பணித்த லக்கோம் அடிகளார் நோய்க்குள்ளாகி 1855 ல் மாதகலில் இறைவனடி சேர்ந்தார்.

யாழ்நகர் இந்நோய்க்கு அஞ்சி நடுங்கியது. அந்தரித்து அவலப்பட்ட யாழ் மக்களை, அமல உற்பவ அன்னைக்கு, மூன்று நாள் பரிகார வழிபாடு செய்யும்படி சமேரியா அடிகள் ஆயரின் பேரால்

அழைத்தார். இவ்வழிபாடு 1855 மார்ச் மாதத்தில் நடைபெற்றது. தினசரி வழிபாடுகளில் பாடற்பூசையும் மறையுரையும் விசேட இடம் பெற்றன. மூன்றாம் நாள் திருச்சுரூப பவனியின்போது பெருமழை பொழிந்தது. ஆயின் திருச்சுரூப பவனியை அது பாதிக்க வில்லை. இவ்வழிபாடுகளில் கத்தோலிக்கரல்லாதாரும் பங்குபற்றி னர். இப்பக்திப் பரிகார வழிபாட்டுடன் வாந்திபேதி நோய் அகன் றது. அன்னையின் அருளால் இறுதி வழிபாட்டைத் தொடர்ந்து நாற்பது பேர் குணமடைந்ததைக் கண்டு மனம்மாறியவர்களில் பிற மதத்தோர் பலர். இதனால் பிரிவினைக் குருவின் தத்துவம் வீழ்ச்சி கண்டது. அடைக்கலநாயகியின் ஆலயத்தை ஒரு உலுப்பு உலுக் கிய ஓநாய் யோவாவேயும் ஆலயத்தை விட்டு அகன்றார். [17]

பிரிவினைக்கு வித்திட்ட மஸ்கரன்கஸ் அடிகளாரின் செல்வாக்கும் மாதோட்டத்தில் சரியத்தொடங்கியது. அங்கு லெய்டியார் அடி களின் கை ஓங்கியது. இவர் 120 குடும்பங்களைத் தாய்த் திருச் சபைக்குச் சேர்த்திருந்தார். பிரிவினைவாதிகள் கைப்பற்றி வைத் திருந்த 6 கோவில்களையும் திருச்சபை மீண்டும் பெற்றுக்கொண் டது. [18]

ஆயர் பெற்றக்கீனி 1855 ஆவணியில் யாழ்ப்பாணம் திரும் பினார். இரண்டு வருட காலத்துள் ஆயரின் ஆளுமையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. புயலாக இயங்கிய ஆயர் தென்றலாக மாறி மற்றவர் கருத்துக்களை உள்வாங்கி இயங்கும் உயர்மனிதனாக மாறி யிருந்தார். ஆயருடன் 11 அமலமரித் தியாகிகளும் 4 வேறுசபைக் குருக்களும் பணிபுரிந்தனர்.

தன் ஆடுகளுக்காக அயராது உழைத்த ஆயர் மீண்டும் நோய் வாய்ப்பட்டார். சமேரியா அடிகளிடம் யாழ் மறைமாவட்டப் பொறுப்பைக் கையளித்துவிட்டு போளவத்தைக்குச் சென்று சிகிச்சை பெற்று ஓய்வெடுத்தார். யாழ் மறைமாவட்ட முதற்குரவரான பிரான்சீஸ் சவிரிமுத்து அடிகளார், ஆயரின் அருகிலிருந்து அவருக குப் பணிவிடை செய்தார். 26 யூன் 1875 ல் சவரிமுத்து அடிகளார் தலைவில்லு புனித சந்தானமாதா கோவிலுக்குச் சென்றபோது, ஆயர் பெற்றக்கீனி ஆண்டகை தமது ஆவியை இறைவன் கரங்களில் ஒப்படைத்தார்.

''தன் ஆடுகளுக்காகத் தன்னுயிரைக் கொடுத்த உண்மையான ஆயன்'' என பெற்றக்கீனி ஆண்டகை பற்றி சவிரிமுத்து அடிகளார் எழுதிவைத்த வார்த்தைகள் என்றும் நினைவு கூரப்படும். [19]

ஒரு புதுயுகம் பிறக்க, அதன் பேறுகால வேதனையாக இந்த 50 ஆண்டுகள் (அரை நூற்றாண்டு) கணிக்கப்பட வேண்டும். பார்று

வாடோ குழு, விசுவாசப் பரப்புதற்குழு ஆகியவற்றுக்கிடையேயுள்ள மோதல் கொடுத்த தாக்கத்துடன், கோவைக் குருக்கள், ஐரோப்பியக் குருக்கள் ஆகியோருக்கிடையே உண்டான முரன்பாடுகள் ஏற்படுத்திய அதிர்வுகள் முக்கியமானவை.

கழிந்த யுகத்தின் கதிர்களாக ஒளிவீசிய கோவைக் குருக்கள், புதிய யுகத்தின் நகர்வில் ஒளியிழந்து நின்றனர். பணியாற்றல் அற்று இயக்கமின்றி நின்ற பல கோவைக் குருக்கள், கோவை நோக்கிப் பயணம் செய்தனர். புதிய யுகத்தை நோக்கித் திருச்சபையை வழிநடத்த உரோமாபுரி அனுப்பிய ஐரோப்பிய குருக்களுக்கு, எஞ்சி நின்ற கோவைக் குருக்கள் பல பிரச்சனைகளைக் கொடுத்தனர். மந்தைகள் மத்தியிலும் இக்குருக்கள் பிளவை ஏற்படுத்தினர். இக்குருக்களின் வேகர போக்கால் விசுவாசக் கத்தோலிக்கர் இவர்களை ஓநாய்கள் என அழைத்தனர். கத்தோலிக்கத் திருச்சபையைக் கடித்துக் குதற நினைத்த இவர்களின் செயற்பாட்டால் திருச்சபையின் வளர்ச்சி தடைபட்டுத் தளர்ச்சி கண்டது. இவர்களால் கத்தோலிக்க மக்களில் சிலர், புதிய பிரிவினைச் சபைகட்குச் சென்றனர். வேறு சிலர் ஆதிமதங்களுக்குத் திரும்பினர். 1787 ம் ஆண்டு அறிக்கையில் 19 ம் நூற்றாண்டினுள் புகும் கத்தோலிக்கர் முகம் கொடுக்க வேண்டிய சவால்கள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன

கத்தோலிக்க விசுவாசம் இரட்சணியத்துக்கு முக்கியமல்ல. மற்றவர்க்கு இடறலின்றி இருப்பது இரட்சணியத்துக்குப் போதுமானது என்ற போதனை மக்களை, எம் மதமும் சம்மதம் என்ற பாதையில் நடக்கச் செய்தது. கத்தோலிக்க மக்கள் பிரிவினைச் சபைகளுடன் தாராளமாகப் பழகி, அவர்கள் பாதைக்கு இலகுவில் இட்டுச் செல்லப்பட்டதனால் கத்தோலிக்கம் சிறுகத் தொடங்கியது. பிறமதங்களிலிருந்து கத்தோலிக்கத்தில் சேர்வோர் தொகை குறைந்து விட்டது.

பிரிவினைச் சபையாரின் தப்பறையான போதனைகளுக்குக் கத்தோலிக்க மக்கள் இலகுவாகச் செவி சாய்த்தனர், ''எம் மதமும் சம்மதம்'', ''அவசரத்துக்குப் பாவமில்லை'' என்ற கொள்கைகள், மக்களை வழி மாற வைத்தன; இறைவனின் கட்டளைகளை உதாசீனப்படுத்தச் செய்தன. பில்லிசூனியம், சாத்திரம், எதற்கெடுத்தாலும் பேய், பிசாசு என்ற மூடப்பழக்கங்கள் முதலியன மக்களைப் பற்றிக் கொண்டன. மக்களின் இத்தகைய போக்கிற்கு, டச்சுக் கம்பனி நேரடியாகவும் மறைமுகமாகவும் சட்டரீதியாகவும் முன் உற்சாகமாகமுட்டி ஊக்குவித்திருந்தது. 20

பிரித்தானியரின் வருகை திருச்சபையில் இவ்வுள்ளரங்கப் பிரச்சனைகளைத் தீர்க்கவில்லை. மாறாக சில சமயங்களில் அதிகரிக்கச் செய்தது.

1800 ம் ஆண்டு அறிக்கைகளில் சுட்டிக்காட்டியவை போலவே ஆளுநர் நோர்த் தமது அறிக்கையில் ''ஏனைய கிறிஸ்தவ சபைகளை விட கத்தோலிக்கத் திருச்சபை பரிதாபத்துக்குரிய நிலையிலேயே உள்ளது'' எனக் குறிப்பிட்டுள்ளார். யேம்ஸ் கோர்டினர் கத்தோலிக்கரையும் அவர்கள் குருக்களையும் சற்றுப் புகழ்ந்தாலும் ''அவர்கள் விசுவாசம் அற்றவர்கள், வெறும் பெயரளவிலேயே கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள்'' எனத் தம் அறிக்கையில் சாடியுள்ளார். நீதியரசர் சேர். அலக்சாந்தர் யோண்ஸ்ரன், கத்தோலிக்கர் பற்றி நல்லபிப்பிராயம் தெரிவித்துள்ளார். அவர், கத்தோலிக்க மக்கள் தமக்குள்ள பல வரையறுக்கப்பட்ட நிலைகள் அரசியல் தடைகள் போன்றவற்றின் மத்தியிலும், தம்முடைய நிர்வாகத்தைச் சுதந்திரமாக நடத்துகின்றனர்'' எனவும், ''தம் உலக ஆன்மீக அலுவல்களுக்குப் பாரிய குழுக்களாகவும், சிறிய குழுக்களாகவும் இயங்கினர்'' எனவும், ''மூப்பு, சங்கிலித்தாம் போன்ற குழுத்தலைவர்களின் அனுசரணையுடன் குருக்கள் மக்களை ஊர் ஊராகத் தரிசித்து ஆன்மீகப்பணி புரிந்தனர்.'' எனவும் எழுதியுள்ளார். 21

இக் காலகட்டத்தில் கத்தோலிக்கர் பற்றிய கண்ணோட்டம் இரு தரப்பட்டவையாக அமைந்துள்ளன. அவை சாதகமாகவும் பாதகமாகவும் இருக்கின்றன. இதே போலவே கத்தோலிக்க மக்களை வழிநடத்திய குருக்கள் பற்றிய கண்ணோட்டமும் அமைந்துள்ளது. கோவைக் குருக்களின் அறிக்கைகள், குருக்கள் பற்றி சாதகமாகவே எழுதப்பட்டுள்ளன. இதேவேளை வெளியார் அறிக்கைகளும் உள்நிலை அறிந்து உரோமாபுரிக்கு எழுதப்பட்ட அறிக்கைகளும் பாதகமாகவே உள்ளன.

பல விசுவாசப் பூக்கள் பூத்துக் காய்த்து கனிந்து நின்ற கத்தோலிக்கப் பெருவிருட்சம் 1770 இன் பின் இலையுதிர்ந்து பட்ட மரம் போல் நின்றது. உயிர் ஊட்டம் பெற்று ஆபரணப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டு செழித்து நின்ற விருட்சம், வெறும் ஆடம்பர வெளிச் சோடை முட்களால் மூடிநின்றது; மூடி நின்ற முட்களைப் பூக்கள் என்றே கோவைக் குருக்கள் கூறினர். முட்கள் என ஏற்க மறுத்தனர்.

ஆயர் பெற்றக்கீனியும் விசுவாசத் தலைவர்களும், கத்தோலிக்க விருட்சத்தை மூடியிருந்த முட்களை அகற்றி, பட்டுப்போயிருந்த கிளைகளை வெட்டி, மரத்தைச் சுற்றி கொத்திப் புரட்டி, உரமிட்டு

தீர்ப்பாய்ச்சினர். கத்தோலிக்க விருட்சத்துக்குப் புத்துயிருட்டப் பாடு பட்டனர். இவர்களின் உழைப்பே அடுத்து வரும் வருடங்களுக்கு விசுவாச எரிபொருளாகவும் ஊக்கியாகவும் இருந்து இயங்கியது என்பதை மறக்கவோ மறுக்கவோ முடியாது.

# வசந்த காலம் I

**அ. ம. தி. யுகம் :**

அரை நூற்றாண்டுகளைக் கொண்ட இக்காலகட்டம் யாழ் திருச்சபையில் தம்மை இணைத்துக்கொண்ட அ. ம. தி. களின் வரலாற்று வடிவமாகும். அமலமரித் தியாகிகள் இந்நவீன யுகத்தின் சக்திமிக்க செயல் வீரர்களாக இயங்கி கத்தோலிக்கத்தின் நவீன பொற்காலத்தை ஆக்கித் தந்தவர்கள்; யாழ் திருச்சபையின் மீள் மலர்வுக்கான இயக்கச் சக்தியுமாக விளங்கினார்கள்.

ஆயர் பெற்றக்கீனி தன் சிந்தனையில் உருவாக்கிய சிறந்த திட்டங்கள் அ. ம. தி. களால் ஆக்கம் பெற்றன. ஆயர் பெற்றககீனியை தொடர்ந்து யாழ் மறைமாவட்டப் பொறுப்பையேற்ற அ. ம, தி. ஆயர்களின் திறமைமிக்க நிர்வாகத்தில் இணைந்து இசைந்து, இத்திட்டங்களை செயலாக்கிய தளபதிகளும் பலர் உண்டு. இவர்களும் யாழ் திருச்சபையின் வரலாற்றில் தம் பணிவாழ்வால் முக்கித்துவம் பெறுகின்றனர்.

**ஆயர் சமேரியா:**

ஆயர் பெற்றக்கீனியால் ஆன்மீக உருவாக்கம் பெற்று அவரது உதவியாளராகவும், ஆயர் மறைமாவட்டத்தில் இல்லாத காலங்களில் யாழ் மறைமாவட்டப் பரிபாலகராகவும் பணிபுரிந்து ஆளுகை அனுபவமும் ஆளுமையும் பெற்ற சமேரியா அடிகளே, ஆயர் பெற்றக்கீனியின் பின், யாழ் ஆயராக நியமிக்கப்பட்டார்.

ஆயர் பெற்றக்கீனியின் எண்ணக்கருவில் உருவாகி ஆன்மீகத்தின் மெருகூட்டலுக்கு ஊக்கிகளாக அமைந்தவை ''மகாஞானவொடுக்கங்கள்'' ஆகும். பிரான்ஸ், இங்கிலாந்து, அமரிக்கா போன்ற நாடுகளில் மகாஞானவொடுக்கங்கள் பெரு வெற்றியளித்த வேளையில் இங்கும் அவைமூலம் இறைமக்களின் உள்ளச் சுத்திகரிப்பை எதிர்பார்த்த ஆயர் பெற்றக்கீனியின் எண்ணத்தைச் செயலாக்கியவர் ஆயர் சமேரியாவே.

1857 ம் ஆண்டில் ஆன்மீக ஈடுபாடு கொண்ட சிறுகுழுக்களைக் கொண்டு ஆயர் அவர்கள் 'மகாஞான ஒடுக்கங்களை' ஆரம்பித்தார். ஊர்காவற்றுறையில் இம் மகாஞானவொடுக்கம் அடியிடப்பட்டது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வலிகாமம், மாதோட்டம், சிலாபம், போளவத்தை போன்ற இடங்களுக்கு ஞானவொடுக்க செயற்பாடுகள் கொண்டு செல்லப்பட்டன. ஞானவொடுக்க அமைப்பாளர்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு குழுக்களாகச் சென்று அங்கு சிலவாரங்கள் அல்லது சிலமாதங்கள் தங்கியிருந்து திட்டமிட்ட செயற்பாடுகளை செயற்படுத்தினர். [22]

இந்த மகாஞான ஒடுக்கங்களின் திட்டங்கள் பின்னர், காலத்துக்கும், தலத்திருச்சபைக்கும் ஏற்றபடி விஸ்தரிக்கப்பட்டன. இவ்விதம் தொடர்ந்து வந்த மகாஞான ஒடுக்கங்களது மறையுரைகளின் பிரதான உண்மைகள் பதிவேடுகளில் பாதுகாக்கப்பட்டு பின்வந்த தலைமுறைகளால் நவீன மயப்படுத்தப்பட்டு செயலாக்கம் பெற்றன. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரினதும் அவரது நண்பர்களினதும் அயரா முயற்சியால் அச்சு வாகனமேறி துண்டுப் பிரசுரங்களாகவும் வெளிவந்தன.

மக்கள் மனதில் விசுவாச வித்தை விதைக்கும் பணியையும் புதுப்பித்து இறைவனோடு ஒப்புரவாக்கும் பணியையும் இந்த மகாஞான ஒடுக்கங்கள் செய்தன. பல இடங்களில் ஞானவொடுக்கச் சிலுவைகள் நாட்டப்பட்டன. ஞாபகார்த்த வார்த்தைகள் கற்களில் பொறிக்கப்பட்டன. பிற்காலத்திய இக் கற்களில், சில இன்றும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயம், யாழ் அடைக்கல அன்னை ஆலயக்கெபியிலும் சிலுவை அடியிலும் காணலாம்

ஆயர் சமேரியாவின் அடுத்த சாதனை கத்தோலிக்க கல்விப் பணியாகும். மேற்குலக நாடுகளில் வளர்ச்சி பெற்றுவந்த சமூக விஞ்ஞான அரசியல் அறிவியல் அறிவினை, யாழ் மண்ணில் கத்தோலிக்க மக்களிடையே வித்திட விரும்பிய ஆயர் அவர்கள் ஆண்களுக்கென ஒரு ஆங்கிலக் கல்விக்கூடத்தை ஆரம்பித்தார். பெண்களின் கல்வியை முன்னேற்ற போர்டோவின் (பிரான்ஸ்) திருக்குடும்பக் கன்னியர் சபையை இங்கு வரவழைத்தார். அவர்களது அனுசரணையோடு கன்னிர்மட ஆங்கில கல்விக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்மொழிக் கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் பொறுப்பு புனித இராயப்பர் சபைக் கன்னியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. [23]

24 ஜனவரி 1865 ல் கொழும்புத்துறையில் தமிழ்மொழிக் கல்விக்கூடம் ஒன்று தொடங்கப்பட்டது. தொடர்ந்து புனித சூசையப்பர்

சகோதரர் சபையும் அடியீடப்பட்டு கொழும்புத்துறைச் செயற்பாடு கள் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. 24

**புனித பத்திரிசியார் கல்லூரி:**

ஆயர் பெற்றக்கீனியின் சிந்தனையில் உருவாகி, வித்திடப்பட்டு முளை அரும்பிய புனித பத்திரிசியார் கல்லூரி ஆயர் சமேரியாவால் நல்ல முறையில் உரமிடப்பட்டு நீர் பாய்ச்சப்பட்டு ஓர் உன்னத விருட்சமாக வளர்ந்தது. மக்களின் அன்பளிப்பாகக் கிடைத்த ஏழா யிரத்து ஐநூறு ரூபாவுடன் ஆயரவர்கள் ஒரு ஆங்கிலக் கல்விக் கூடமாக இதனை ஆரம்பித்தார். கல்லூரியை இயக்குவதில் யோண் யோசவ், பிரவுன் பைரன் என்ற இரு சகோதரர்களும் அயராது உழைத்தனர்.

1859 ல் இங்கிலாந்துச் சபையின் உதவியும் இக் கல்விக்கூடத் துக்குக் கிடைத்தது. 1860 ல் புரட்டஸ்தாந்த பாடசாலைகட்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள், கத்தோலிக்க பாடசாலைகட்கும் வழங் கப்பட்டமையால் இக் கல்விக்கூடமும் பயனடைந்தது.

1881 ஜனவரி 10 ம் நாளில் இக் கல்விக்கூடம் புனித பத்திரிசி யார் கல்லூரி என்ற நாமத்தைப் பெற்றது. கல்லூரியின் மகுட வாக்கியம் ''இறை பற்றும் உழைப்பும்'' என்பதாகும். நல்லறிவை வளர்ப்பதும் கத்தோலிக்க திருச்சபையின் சத்தியங்களைப் பரப்பு வதுமே இக் கல்லூரியின் உயர்குறிக்கோளாகும்.

1855 ம் ஆண்டுக்கும் 1886 ம் ஆண்டுக்கும் இடையில் யூல்ஸ் கொலின்ஸ் அடிகளார் நான்கு புலமைப்பரிசில் திட்டங்களைத் தொடங்கினார். ஆறாம் வகுப்புத் தொடக்கம் திறமை அடிப்படை யில் வகுப்புவாரியாக இது வழங்கப்பட்டது. இத்திட்டம் டன் அடி கள் காலத்தில் உச்சப்பயன் கொடுத்தது.

டன் அடிகளார் தமது அயராத உழைப்பால் முதன் முதலில், தமிழ் மொழிக்குச் சுருக்கெழுத்து முறையை அறிமுகஞ் செய்தார். அத்துடன் தமிழ் ஆங்கில கையடக்க அகராதியையும் 1900 ம் ஆண் டில் தொகுத்தார்.

புனித பத்திரிசியார் கல்லூரியின் வரலாற்று வளர்ச்சியையும் அதன் மாண்பினையும் அக் கல்லூரியின் 125 வது ஆண்டுமலரில் விளக்கமாக அறிந்து கொள்ளலாம். 25

கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் கல்விப்பணிக்கு முக் கிய இடம் அளிக்கப்பட்டது. யாழ் நகரில் புனித பத்திரிசியார் கல் லூரியை ஆரம்பித்து சிறப்பாக நிர்வகித்ததுடன் நின்றுவிடாது,

ஊர்காவற்றுறை, இளவாலை, வதிரி, களதகல், அனுராதபுரம், முல்லைத்தீவு, மன்னார் போன்ற இடங்களிலும் ஆயர் பொஞ்சீன் காலத்தில் ஆங்கிலக் கல்விக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு, கிராமங்களின் கல்வி வளர்ச்சிக்கும் வழிகோலப்பட்டது.

திருக்குடும்பக் கன்னியர் மடம்:

பெண் கல்வியின் அவசியத்தை உணர்ந்த திருமதி மேரி ஆன் பிலகன், தன் மகளின் உதவியுடனும் ஆயர் பெற்றக்கினியின் ஆசியுடனும் பெண்களுக்கான ஆங்கில கல்விக்கூடம் ஒன்றை 1845 ல் ஆரம்பித்தார். இன்று இடிந்து கிடக்கும் நீதிமன்றக் கட்டடத்தின் அருகே இருந்த வாடிவீடு ( Rest House ) இருந்த இடத்தில் அம்மையாரின் கல்விக்கூடம் இயங்கியது.

1862 ல் ஆயர் சமேரியா ஐரோப்பாவிலிருந்து 6 திருக்குடும்பக் கன்னியரை அழைத்து வந்தார். இக் கன்னியர்கள் இக் கல்விக்கூடத்தில் பணியாற்றத் தொடங்கினர். இவர்களது அயராத உழைப்பினால் கல்வித்தரம் உயரத் தொடங்கியது. யாழ் மண்ணில் பெண்ணினம் மறுமலர்ச்சி பெறத் தொடங்கியது. ஆங்கில அறிவூட்ட மட்டுமல்ல, பெண் விடுதலைக்கு பலமான அடித்தளமாகவும் இக் கல்விக்கூடம் அமைந்தது.

இன்று தேவரீர்க்குளம் என அழைக்கப்படும் குளத்திலிருந்து மண் எடுத்து மஞ்சள்கரைச்சான் குளத்தை மேவி, 1864 ல் திருக் குடும்பக் கன்னியர் மடத்துக்கு அத்திவாரம் இடப்பட்டது. 1870 ல் கன்னியர்களின் விடாமுயற்சியினால் கன்னியர் மடம் கட்டிமுடிக்கப் பட்டது. திருக்குடும்பக்கன்னியர்களின் பணி வாழ்வையும், அவர்களது கல்விக்கூடத்தின் வரலாற்றுச் சிறப்பையும் அக் கூடத்தின் 125 வது ஆண்டு மலரில் காணலாம். [26]

**தமிழ்த் துறவினிகள் சபை:**

யாழ் மண்ணில் தமிழ் மகள், துறவற வாழ்வு வாழ விரும்பிய போது, 1865 ஜனவரி 24 ல் புனித இராயப்பர் சபை ஆரம்பிக்கப் பட்டது. இச்சபையால் உருவாக்கப்பட்ட அருட் சகோதரிகளின் பணிகள் வடமண்ணில் பரவத் தொடங்கின.

புனித சூசையப்பர் துறவற சபை:

1864 ம் ஆண்டு மார்ச் 19 ல் புனித சூசையப்பர் தினத்தன்று இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. தொடக்கத்தில் இரண்டொருவர் மட்டுமே இச் சகோதரத்துவ சபையில் இணைந்தனர். இச்சபை

மெதுவாகவே வளர்ந்தது. ஆயர் பூலன் பொறுப்பேற்றபின், சபையின் நெறிமுறைகள் சட்ட நூல் வடிவமைக்கப்பெற்று கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வளர்ந்தது. இச்சபையின் அளப்பரிய சேவையை யாருமே இலகுவில் மறந்துவிட முடியாது. 27

அநாதர் இல்லம்:

அநாதைகட்கு ஒழுங்குமுறையான பராமரிப்பு நிலையங்கள் 1861 வரை அமைக்கப்படவில்லை. தனிநபர் முயற்சியால், சிறிய அளவில் அநாதைகள் பராமரிக்கப்பட்டனர். 1861ல் 43 கைவிடப்பட்ட ஏழைச் சிறுவருக்காக, ஆயர் இல்லத் தோட்ட வளவில் ஒரு அநாதர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. 1863ல் இவ் இல்லம் கொழும்புத்துறைக்கு மாற்றப்பட்டது.

அன்புள்ளத்துடன் தன் மந்தைகளைக் கண்காணித்த ஆயர் சமேரியா, ஐரோப்பாவில் நடைபெற்ற துறவறச்சபை சம்மேளன மாநாட்டில் பங்குபற்றிக் கொண்டிருந்தபோது (1868 ஜனவரி 23) இறைவனடி சேர்ந்தார்.

ஆயர் பொஞ்சீன் ஆண்டகையின் பணி:

வண. பொஞ்சீன் அடிகளார், யாழ் மறைமாவட்ட ஆயராகத் தெரியப்பட்டார். தம் பணியை மக்கள் மரபில் செயற்படுத்த முனைந்தார், யாழ் திருச்சபைக்கு பலம் வாய்ந்த அடித்தளத்தை இட்டவர் என்ற பெருமை ஆயரவர்கட்கே உரியது. ஆயரின் பணிகள் பலதரப்பட்டவை.

யாழ் மண்ணில் கத்தோலிக்க விசுவாசத்தை வளர்க்க, சுதேச குருக்கள், துறவியரை உருவாக்கினார். அறியாமை இருளகற்ற, கல்வித்துறையூடாக அறிவு ஒளி ஏற்றினார். சமூக வாழ்வில் ஆயர் ஆற்றிய அரும்பணி கண்டு பிற மதத்தினரும் அவரில் அன்பு கொண்டனர்.

மேய்ப்பனின் உயர் சிந்தனையும் செயலும் தான் உண்மையான, செழிப்பான மேய்ச்சலைக் கண்டடைய, தம் மந்தைகளுக்கு வழி காட்ட முடியும் என்பதை ஆயர் நன்கறிந்திருந்தார். அதனால் அவர் தம் ஆளுகையின் முதலிரு வருட காலத்துள், குருக்களை, மிசனரிகளை நெறிப்படுத்த 200 கடிதங்களை எழுதினார். ஆயரின் அஞ்சல் வழி நெறிப்படுத்தல் அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தது.

ஆயரின் ஆளுகையில், அவர் ஆளுமையால் ஊன்றப்பட்ட விசுவாச வித்துக்கள் யாழ் மண்ணில் பெரும் விருட்சங்களாயின. கல்வி,

சமூக, மறையியல் தோட்டத்தில் பூத்துக் கனிந்த இல்லற, துறவற பணியகங்கள் அவரது பணியின் வரலாற்றுப் படிவங்களாகத் திகழ் கின்றன. ஆயர் பொஞ்சீன் திருச்சபையின் நிர்வாகக் கட்டமைப் பின் சிற்பியாக அரசுகளுடன் இசைந்தும் தொடர்பு கொள்ளும் ஆற் றல்மிகு ஆசானாக, மனித மாண்பினை உயர்த்திட உரிமைக்குரல் கொடுக்கும் விடுதலை வீரனாக செயலாற்றினார். இவை எல்லா வற்றிற்கும் மேலாக 1875 ல் பரவிய பயங்கர வாந்திபேதி நோயுக் கெதிராக கிறிஸ்துவின் அன்பையே ஆயுதமாகக்கொண்டு போராடி னார்.[28]

இவ் விசபேதி நோயும், அதைத் தொடர்ந்து பரவிய பெரும் பஞ்சமும், துன்புறும் மக்கள்மீது ஆயர் பொஞ்சீன் கொண்ட அனு தாபம், காருண்ணியத்தை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்களாயின. பயங்கரமான பெருவாரியால் நலிந்தவர்களுக்கு உதவிசெய்யும்படி, அவர் பதில் விசாரணைப் பிரிவின் பணத்தைச் செலவிட்டதோடு, ஐ ரோ ப்பா வி லும் தண்டல் செய்து வழங்கினார். துன்பமும் சோதனையும் நிறைந்த அந்நாட்களில், குருமாரின் பரித்தியாகமும், ஆன்ம வாஞ்சையும் இயற்கைச் சக்திக்கு மேலானதாயிருந்தது. பிற மதத்தவர்கள் இக் காருண்ணிய செயற்பாடுகளை மெச்சிப் போற்றி னார்கள். இச் செயல்கட்காக அரசாங்கமும் பகிரங்கமாக நன்றி கூறியது.

போதக குருக்களின் பிரதிபலன் கருதாத பிறரன்பை அனுபவத் தாலறிந்து, பின்னர் திருச்சபையில் ஞான முழுக்குப்பெற்ற சுமார் ஆயிரம் இந்துக்களுக்கு இந்தப் பஞ்சம் ஒரு மறைமுகமான ஆசீர்வாத மாயமைந்தது. இம் மனந்திரும்புதல்களால் இந்துக்கள் வாழும் பகுதிகளில், மூன்று கோவில்கள் புதிதாகத் தோன்றின. சந்திர சேகரா, விற்றன் அடிகளாரின் பெயர்கள் இச் சோதனை காலங் களின் வரலாற்றில் பிரபல்யம் பெற்றன. சமூகசேவையில் ஏறத்தாள அரை நூற்றாண்டளவாக இவர்களது நற்பெயர் பிரகாசித்தவண்ண மாயிருந்தது.

சமய தாபனக் கல்வி, தேசத்தின் விவாக சட்டங்கள், வியாதிக் கும் அழிவுக்கும் காரணமாயிருந்த இந்திய கூலியாட்களை மாதோட்டமூடாகச் செல்வதை மாற்றுதல் போன்ற விவகாரங்களில் ஆயர் பொஞ்சீன், அரசாங்கத்துடன் பேனாமுனையில் போராடி னார். இப் பேனாமுனைப் போராட்டத்தால் முழு இலங்கைக்குமே நன்மைகள் பல கிடைத்தன. இச் சாதனை வீரரின் மற்றுமிரு மறக்க முடியாத முயற்சிகள் குருகுலப் பயிற்சிக்கு வித்திட்டதும், கத்தோ லிக்க அச்சகமொன்றை தாபித்ததுமாகும்.

தொடக்கத்திலிருந்தே அமலமரித்தியாகிகள் தங்கள் மரபிலமைந்த திட்டங்களுக்கமைய, தேவதாயின் பக்தியை, விசாரணைப் பங்குகளில் ஆழமாக்க முயன்றனர். தேவதாய் மேலுள்ள விசேட பக்திதான், பிறநாட்டுக் குருக்கள் சபையில் சேர்ந்திருந்த பொஞ்சீன் அடிகளை இலங்கையிலே அமலமரித்தியாகிகள் சபையில் சேரத் தூண்டியது. தேவதாய் பக்தியின் தீவிர தூதுவனாகவே இப்போது ஆயர் பொஞ்சீன் விளங்கினார். இன்று முழு இலங்கைக்கும் யாத்திரைத்தலமாக விளங்கும் மாதாவின் கேந்திரமான மடுப்பதி, சென்ற நூற்றாண்டின் மத்தியில், பல கிராமங்கள் அப்போஸ்தல பதில் ஆயரை எதிர்த்துப் பிரிந்து போனதால் மறக்கப்பட்டுக் கிடந்தது. ஆயர் பொஞ்சீன் அதை மீண்டும் பிரபலப்படுத்தினார். வருடா வருடம் பல்லாயிரக்கணக்கான பக்தர்களைக் கவரும் அழகிய ஆலயத்தின் அத்திவாரக் கல்லை ஆயர் பொஞ்சீன் 1872 ல் நாட்டினார். நான்கு வருடங்களின் பின் தனது பிள்ளைக்குரிய அன்பு மரியாதைக்கு அடையாளமாக மடுமாதாவின் புதுமையான சுருபத்தின் சிரசிலே சித்திரச் சிறப்புடன் சோபை சொலிக்கும் அரிய பல இரத்தினக் கற்கள் இழைக்கப்பெற்ற தங்கமுடியைச் சூட்டினார். 29

அன்பர் யேசுவின் உண்மையான பரித்தியாக வாழ்வில் தம்மைத் தோய்த்த ஆயரின் பணியால், பலர் கிறிஸ்துவைச் சுவைக்கவும் அறியவும் முடிந்தது. கிறிஸ்துவின் அணைகடந்த அன்பை ஆயர் ஊடாகச் சுவைத்தவர்கள் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இந்துசமயச் சகோதரரில் பலர் கிறிஸ்தவர்களில் பற்றுப்பாசம் கொண்டனர்.

கத்தோலிக்கம் களியாட்டக் கலகலப்பில் கலந்த மறையல்ல. மாறாக இறையனுபவ நிலையிலும், சிலுவையிலும் பரித்தியாகப் பண்பிலுமே கலந்து கரைந்து சுவறும் மறையாகும்.

அன்று டச்சு ஆட்சியில் சிலுவை அனுபவத்தில் ஆழ்ந்து எழுந்த கத்தோலிக்கம் 19 ம் நூற்றாண்டில் கிறிஸ்தவ பரித்தியாக அன்பு அனுபவத்தில் ஆழ்ந்து அதிசய சக்தி பெற்றது. 20 ம் நூற்றாண்டிலும் இத்தகைய சக்திபெற்ற சாட்சியங்களாக புனித மக்சிமிலியன் கொல்பேயும் அன்னை திரேசாவும் விளங்குகின்றனர்.

**காப்பரண்:**

ஆயர் பொஞ்சீன் அவர்களின் ஆளுகைக் காலத்தை வெறும் வெளிச்சாதனைகளால் மட்டும் அளவிட முடியாது. அவரது அளப்பரிய சாதனைகள் திருச்சபைக்குள்ளேயும் வெளியேயும் இழையோடியிருக்கின்றன. இதனைப் பேரறிஞர் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். ஆயரின் அரும்பெரும் பணியால் ஏற்பட்ட விளைவுகளால் கத்தோலிக்கர் மத்தியில் எழுந்த மனவெழுச்சியை

யும் தன்மான உணர்ச்சியின் நெறிப்படுத்தலையும் உற்று உணர வேண்டும்.

கத்தோலிக்க மக்களிடையே புத்துயிர் பெற்ற தன்மான உணர்ச்சிப் போக்கு, ஏனைய சமயத்தினரிடையே சில எதிர்ப்பலைகளை எழுப்பி விட்டது. இதேவேளை இது போன்ற எதிர்ப்பலைகள் தென்னிலங்கையிலும் எழுந்தன. ஆனால் மெதடிஸ்த போதகர் டேவிஸ் சில்வாவுக்கும் பௌத்த தேரருக்கும் இடையே நடைபெற்ற பகிரங்க மேடை வாக்குவாதங்கள் போன்று, கத்தோலிக்கர்களுடன் நடைபெறவில்லை. [30]

ஆனால் இங்கு பொஞ்சீன் ஆயரைப் பகிரங்க மேடை வாக்கு வாதத்திற்கு அழைத்தனர். வாதங்களோ வாய்வழி நடைபெறாமல் அச்சுவழி நடைபெற்றன. ''இந்துசாதனம்'' வழி இந்துக்கள் சொற் போர் தொடுக்க ஆயர் அவர்கள் ''சத்தியவேத பாதுகாவலன்'' வழி காப்பரண் கட்டி எதிர்த்து நின்றார்.

ஆயர் பொஞ்சீனின் தலைமையில் கல்வித்துறையிலும், சமூக சேவையிலும் ஆற்றிய பணிகளை, ஆறுமுகநாவலர், ஆரம்பத்தில் ஆதரித்தார். ஆயின் காலநகர்வில் ஏற்பட்ட விளைவுகளால், ஆயர் பொஞ்சீனை, தம் சீடன் செந்தில்நாத ஐயர் மூலம் சமயம் பற்றி பகிரங்கமாக மேடையில் விவாதிக்க சவால் விட்டார். ஆயரின் சார்பில் தமிழ் மொழியில், இத்தகைய சவால்களைச் சந்திக்க முன்வந்தவர் சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னப்பு என்பவர். இவர் ஆயரின் சார்பாக பகிரங்கக் கடிதங்கள் மூலம் சவால்களுக்குப் பதில் அளித்தார். கற்றவர் பலர் இருக்க, சாதாரண ஒரு சின்னப்பு மாத்திரமே, சவாலுக்கு முகம் கொடுத்தது ஒரு ஆச்சரிய நிகழ்வாகும். [31]

நாவலரின் சீடன் செந்தில்நாத ஐயரின் வினாக்களுக்குத் தக்க பதில் அளிக்க, 30 – 40 வருடங்கள் ஆகின. பன்மொழிப் புலவர் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரே, வரலாற்று ரீதியிலும், சைவ சித்தாந்த ஆதாரங்களுடனும் கத்தோலிக்கர் கட்சி தலை நிமிர்ந்து நிற்கச் செய்தவர்.

பிரித்தானியர் தம் ஆட்சிக்கால ஆரம்பத்தில் இத்தீவில் மத சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தினர் பௌத்தம், சைவம், கத்தோலிக்கம், இஸ்லாம் ஆகிய சமயங்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்துப் புத்துயிர் பெற்றுப் புதுவளர்ச்சி கண்டன. ஒல்லாந்தர் காலத்துக் கல்வினிசம் வலுவிழந்தது. ஆங்கில அமரிக்க மிசனரிகள், ஆங்கில அரசின் அரவணைப்பில் அதிகவளர்ச்சி கண்டனர். ஆங்கில அரசு அளித்த சலுகைகளும் பணபலமும், அவர்களை ஆங்கில

பாடசாலைகளை ஆரம்பிக்கச் செய்தன. ஆங்கில மொழி, அரச கருமமாற்றும் மொழியாயிற்று. ஆங்கிலத்தின் எல்லை விரிவடைந்தது. ஆங்கில அறிவின்றி, அரசு ஊழியத்தில் சேரமுடியாது. எனவே ஆங்கிலத்தின் மூலம் பெறக்கூடிய செல்வம் செல்வாக்கை உணர்ந்த எல்லா மதத்தினரும் ஆங்கிலம் கற்க, புரட்டஸ்தாந்த பாடசாலைக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்ப வேண்டியதாயிற்று. இப் பாடசாலைகள், மதமாற்றம் செய்யும் தளங்களாக மாறின. இதனால் புத்தர், சைவர், கத்தோலிக்கர், இஸ்லாமியர், தம் மத சுதந்திரத்தைக் காக்க முயன்றனர். மதமாற்றத்தைக் கண்டித்தனர். தத்தம் மதங்களைக் காக்க, தம் மதச்சார்பான ஆங்கில கல்விக் கூடங்களை ஆரம்பித்தனர். தென்னிலங்கையில் ஆங்கில கல்விக் கூடங்களை, சிங்கள பௌத்தர்கள் ஆரம்பிப்பதற்கு, கேணல் ஒல் கொட். பிலவற்ஸ்கி அம்மையார் போன்ற வெள்ளைக்காரர்கள் உதவினர். இங்கும் சைவப் பெரியார்கள் இந்துமத கல்விக்கூடங்களை நிறுவினர்.

கத்தோலிக்க கல்லூரிகள்:

பௌத்த, சைவ பாடசாலைகள் ஆரம்பத்தில் போர்த்துக்கேய கல்விமுறையைப் பின்பற்றி சமயகுரவர்கள் பொறுப்பில் நடாத்தப்பட்டன. டச்சு ஆட்சியின் கீழ்த்தான் இவை அரசினால் நடாத்தப்படும் பாடசாலைகள் ஆயின. ஆங்கிலேயரும் இதே முறையையே பின்பற்றினர்; நடைமுறைப்படுத்தினர்.

1812 தொடக்கம் 1818 வரை நான்கு புரட்டஸ்தாந்து சபைகள் தங்கள் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து, கல்விச்சேவை ஆற்றின. 1844 தொடக்கம் கத்தோலிக்கரும் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்தனர். [32]

அரச உதவி இல்லாததால் ஏனைய மத பாடசாலைகளை எதிர்கொண்ட பிரச்சனைகட்கு கத்தோலிக்க பாடசாலைகளும் விதிவிலக்கல்ல. புரட்டஸ்தாந்த பாடசாலைகள் மட்டுமே அரச ஆதரவுடன் சிறப்பாக நடாத்தப்பட்டன.

1860 ல் இப்பாகுபாட்டை நீக்கி எல்லா இனமத மக்களும் கல்விச் சலுகைகளை அனுபவிக்க. ஆயர் பொஞ்சீன் ஆண்டகை The Examinar என்ற பத்திரிகை ஊடாக 16 பகிரங்க கடிதங்களை எழுதி, மக்கள் மனதில் கல்விச்சலுகை சம்பந்தமான சிந்தனை அலைகளை கிளறினார். [33]

இவர் முயற்சி பயன் அளித்தது. எம் கல்விக்கூடங்கள் கல்வியறிவை மாணவர்கட்கு ஊட்டவேயன்றி மதமாற்றம் செய்வதற்காக

ஆரம்பிக்கப்படவில்லை என்பதை இவர் வலியுறுத்தினார். கத்தோலிக்க மாணவர்களுக்கு கல்வியறிவும் சமய அறிவும் ஓர் நவீன சமூகத்தில் வாழவேண்டிய தகமை உருவாக்கலும், ஆளுமை அறிவனுபவமும் அளிக்கப்படுவதையே இக் கல்விக்கூடங்கள் தங்கள் இலக்காகக் கொண்டன. ஏனைய மத மாணவரும் இவைகளைப் பெற விரும்பியபோது அவர்கட்கும் கத்தோலிக்க கல்விக்கூடங்களில் கல்வி பயிலச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. ஆயின் அவர்களுக்கு கத்தோலிக்க மறையறிவு திணிக்கப்படவில்லை. கத்தோலிக்க குருக்களின் ஆளுமையால் கவரப்பட்டு மதம் மாறியோர் தொகையும் சொற்பமானதே.

இவ்வித நோக்கங்களுடனேயே முதலில் புனித பத்திரிசியார் கல்லூரியும் பின்னர் திருக்குடும்பக் கன்னியர் ஆங்கில பாடசாலையும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, இளவாலை புனித என்றியரசர் கல்லூரி. கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, மாதகல் புனித சூசையப்பர் கல்லூரி, அனுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரி என்பன உருவாக்கப்பட்டு பல்வேறு சமய, சமூக, இன மாணவர்களை கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடைய நல்ல பிரசைகளாகவும் பயிற்றுவித்ததுடன் அவர்கள் சிறந்த கல்விமான்களாகவும் முழு ஆளுமை நிறைந்தவர்களாகவும் சமூக தலைவர்களாகவும் பல்துறை விற்பன்னர்களாகவும் நாட்டில் நடமாட வைத்தது.

இது போலவே யாழ் திருக்குடும்பக் கன்னியர் பாடசாலை தொடக்கம் யாழ் மறைமாவட்டத்தின் மூலைமுடுக்குகளெல்லாம் பெரிய சிறிய அளவிலான தமிழ்க் கல்விக்கூடங்கள் உருவாக்கப்பட்டு கத்தோலிக்கருக்கும் ஏனைய மதத்தவருக்கும் எழுத்தறிவித்தலுடன் கூடிய நற் கல்விப் போதனை அளிக்கப்பட்டது.

ஐரோப்பிய மெய்யியல், மறையியல், வழிபாட்டு, பண்பாட்டு நிர்வாக அம்சங்கள் கத்தோலிக்கத்துள் ஊடுருவிச் செயற்படத் தொடங்கின. இதனால் நவீனத்துவ கத்தோலிக்கம் யாழ் மண்ணில் உருப்பெருக்கம் கண்டது. மெதடிஸ்த பாதிரிகளின் பார்வையில் நவீனத்துவம், கத்தோலிக்கத்தை கதியிழந்த கத்தோலிக்கமாக ஆக்கிவிடவில்லை.

கிறிஸ்துவின் உயிர் விசுவாசத்தைத் தரித்த ஓர் சிறந்த வழிகாட்டி ஆயர் பொஞ்சீனைப் போன்றோரை, கத்தோலிக்கம் தன்னகத்தே கொண்டிருந்ததே இதற்குக் காரணமாகும். நாவலர் அவர்கள் ஆயர் பொஞ்சீனின் ஆளுமையை ஆரம்பத்தில் ஆதரித்தார். பின்னர் சவாலாகக் கொண்டார். மெதடிஸ்த பாசறையில் பயின்றவர்

என்ற முறையில் ஆயரின் ஆளுமை நாவலருக்கு அதிர்ச்சியாகவும் இருந்திருக்கக்கூடும்.

ஐரோப்பிய நவீனத்துவ அலையால். ஆயர் அவர்கள் அள்ளுண்டவர் அல்லர். ஐரோப்பிய பண்பாட்டு ஆதிக்கத்தால் இம் மண்ணின் கிறிஸ்தவர்களிடையே ஏற்பட்ட தாக்கங்களை ஆயர் நன்கு உணர்ந்தார். அவர் உள்ளத்தில் ஏற்பட்ட ஐயங்கள் நியாயமானவை என்பது அவரது கடிதமொன்றிலிருந்து வெளிப்படுகிறது. (ப 48. A. J)

''ஆங்கிலக் கல்விக்கு இவ்வளவு கவனம் செலுத்துவது நல்லதா என்ற கேள்வி எழுப்பப்படலாம்; இச் சந்தர்ப்பத்தில் பரவலாக சுதேச இலக்கியங்களில் அக்கறை காட்டப்படாமை மிகவும் வருந்தத்தக்கது. ஆங்கிலக் கல்விப் பரவலாக்கத்தை எவ்வளவுதான் ஆமோதித்தாலும், பொதுமக்களின் அறிவு வளர்ச்சிக்குப் பரவலாக, அது பொருத்தமான ஊடகமாக மாறாது என நம்புகிறேன். எனவேதான் சுதேச மொழிகளை வளர்த்து, அவற்றை ஐரோப்பிய சிந்தனைகளை உட்புகுத்தும் பிரயோசனமான ஊடகமாக்க முடியாதா? இப்போது இம் மொழிகள் வளர்ச்சியற்று ஸ்தம்பித நிலையிலேயே உள்ளன. சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் இம்மொழிகளைப் பாதிப்பதில்லை. உயர்ந்த எண்ணங்கள் தூய்மைப் படுத்தப்பட்ட உணர்வுகளுக்கு வளைந்து கொடுக்காத குறைபாடுகளுள்ள ஊடகங்களாகவே காணப்படுகின்றன ... சுதேச மொழிகள் வெளிநாட்டவர்களால் மாத்திரமே வளர்க்கப்படுகின்றன என்பது வருந்தத் தக்கது. ஏனெனில் ஒரு மொழியின் சிறப்பு, உயர்மதிப்பு, அதன் சொல்வளம் திரிபுபடுத்தப்படவோ முடியாது. வேற்று மனிதர்களால் சுதேச இலக்கியங்களின் கை நெகிழப்பட்ட தன்மையுடன் நுண்கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, சங்கீதம் முதலியனவும் கைவிடப்பட்டிருக்கின்றன. இத்தேசங்கள் இந் நுண்ணிய உணர்வுகளுக்குத் தகுதியற்றவையா? அவர்களின் உதரத்தில் நவீன கலைஞர்கள் மேதாவிகள் உற்பவிக்க முடியாதா?''

''எப்படி நாம் இவ்வித எண்ணங்களை, நாம் காணும் அவர்களின் பண்டைய கலாச்சார பிரமிக்கத்தக்க கலைப் படைப்புக்களின் முன் கொள்ள முடியும்? எல்லாவற்றையும் நிர்மூலமாக்கும் காலன் கூட அவற்றின் பண்புடைப் பெருமையை முற்றாக அழிக்க முடியவில்லையே!''

''நான், கலை கலாச்சாரங்கள் மட்டில் தோன்றும் கவனிப்பு அற்ற நிலைமைபற்றி வருந்துகிறேன். ஏனெனில் இந் நுண்கலைகள், வேறெதுவும் கொடுக்க முடியாத ஓர் விசேட பண்படுத்தும் பாதிப்பை மக்கள் மனதில் ஏற்படுத்துகின்றன.'' (ப 49) 34

ஆயருக்கு எம் மக்களிலும், எமது பண்பாட்டிலும், இருந்த அக்கறை ஆழமானது. இதை 70 ஆண்டுகளுக்குப் பின் வந்த இரண்டாம் வத்திக்கான் சங்கம் இன்னும் ஆழமாக்கும். கத்தோலிக்க மண்மயமாக்கல் அலைகள் எழுப்பப்படுவது மாத்திரமல்ல, இன்று தேவைப்படும் விஞ்ஞான, தொழில் நுட்ப, அறிவுக்குத் தக்கதாக தமிழ்மொழி வளர்ச்சியுறுவதை தமிழ்நாட்டிலும் அதன் எதிரொலிகளை எம் மண்ணிலும் காண்கிறோம்.

# வசந்த காலம் II

ஆயர் கென்றி யூலன்:

பேராயர் வெற்றிடத்தை நிரப்ப, ஆயர் பொஞ்சீன் ஆண்டகை, சில அமலமரித் தியாகிகளுடன் கொழும்பு சென்றார். 1880 ஜனவரி 25ல் அபிஷேகிக்கப்பட்டு, ஆயர் பொஞ்சீனுக்கு உதவி ஆயராக கடமையாற்றிய தியோபிலஸ் அன்ட்று மெலிசன் யாழ் ஆயராக பொறுப்பேற்றார். ஆயர் பொஞ்சீன் யாழ்ப்பாணத்தில் ஆழமாயும் உறுதியாயும் அத்திவாரமிட்ட அடித்தளத்தில் திருச்சபைக் கட்டிடப்பணியை ஆயர் மெலிசன் தொடர்ந்தார். 1893 ல் பேராயர் பொஞ்சீன் இறந்தபோது, ஆயர் மெலிசன், பேராயராக கொழும்புக்கு அனுப்பப்பட்டார்.

1893 ஆகஸ்ட் 24 ல் யாழ் ஆயராக, கென்றி யூலன் அடிகளார் அபிசேகம் பெற்றார். இவரின் ஆட்சிப்பணி நீண்டு வெள்ளிவிழாக் கண்டது. ஆயர் தம் 25 வருட மேய்ப்புப்பணியை மாண்புறச் செய்தார். தம் முன்னோடிகளால் உருவாக்கப்பட்ட விசுவாச விளைநிலங்களான கல்விக்கூடங்கள், பக்திச் சபைகள், துறவற சபைகள், குருமடங்கள், அச்சகம், பத்திரிகை போன்றவை, இவரின் ஆக்க நெறியில் நல்ல அறுவடை அளித்தன.

ஆயரின் அயராத உழைப்பின் உச்சமென மாதோட்ட நிகழ்வைக் குறிப்பிடலாம். ஆயரின் 15 வருட இறை அனுபவத்தின் பின் நடந்த நிகழ்வு இது. மந்தையை விட்டுப் பிரிந்து சென்றவர்களை 15 வருடங்களாக இடைவிடாது தொடர்ந்து சென்று மீண்டும் தன் அன்புக் கரத்துள் கொண்டு வந்தார். 1902 ல் மீண்டும் ஆயரின் ஆளுகைக்குள் வந்து சேர்ந்தோர் தொகை 2000, அவர்கள் திரும்பியபோது மற்றவர்கள் திகைத்தனர். மக்களின் அன்புத் தலைவர்

அக மகிழ்ந்தார். மன்னாரின் பிரிவினைத் தளமான பள்ளிமுனை யில் நடந்த இம் மாபெரும் மனமாற்றம் ''உன்னத உயர் நிகழ் வாக'' கணிக்கப்படுகிறது. [35]

யூலன் ஆயரின் அரும் பணிகளை சுவாமி ஞானப்பிரகாசர் நன்கு ஆய்வு செய்துள்ளார். அவர் தம் ஆய்வினை ''25 வருட முன்னேற் றங்கள்'' என்ற நூலாக வெளியிட்டுள்ளார். இது 274 பக்கங்களைக் கொண்டது.

இப் பணிகளை சுவாமி ஞானப்பிரகாசர் 5 தலைப்புகளில் ஆய்வு செய்துள்ளார். அவை:-

1. விசுவாசம், வாழ்க்கை முறை.
2. பங்குகளின் அபிவிருத்தியும், கோவில் கட்டிடங்களும்.
3. குருத்துவ, துறவற, சமூக நேயச் சேவைகள், அவற்றின் வளர்ச்சி.
4. கல்விப்பணி, அதன் வரலாறு.
5. அச்சகமும் எழுத்து அப்போஸ்தலமும். [36]

யூலன் ஆண்டகையின் ஆளுமைக்குப் பக்கபலமாக நின்று பங் களிப்புச் செய்த உண்மையான உழைப்பாளிகள் சிலரை இங்கு நினைவு கூர்வது எதிர்கால வளரும் பயிர்களுக்கு வளம் ஊட்ட உதவும்.

யூலன் ஆயர், மற்றும் பல பணிகளை ஆற்றியபோதும் இறை வார்த்தையை எடுத்தியம்பிய போதகப்பணியையே தன் உயிர் மூச்சாகக் கொண்டு பணியாற்றினார். அவர் ''நற்செய்தியை நான் அறிவிக்காவிடில் ஐயோ கேடு'' என்ற புனித பவுலின் வார்த்தை யைச் சிரமேற் கொண்டு, வெறும் வார்த்தை முழக்கத்தில் மூழ்கி விடாது ''கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது ஆற்றல் மிக்கது. இரு பக்கமும் கருக்கு வாய்ந்த எந்த வாளிலும் கூர்மையானது'' (எபி 4 : 12, 13) என்ற உள்ள உறுதியோடு வார்த்தையை வாழ் விப்பதிலும் உறுதியாயிருந்தார்.

ஆயர் யாழ் நகர் வந்ததும் தவக்கால ஞானவொடுக்கப் பிரசங் கங்களை சேவியர் அடிகளாருடன் இணைந்து, பேராலயத்தில் நிகழ்த்தினார். இவரது வார்த்தையும் வாழ்வும் கத்தோலிக்க மக்க ளிடையே மறுமலர்ச்சியை உண்டாக்கியது.

''யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்கரே, மகிழ்ந்து களிகூருங்கள்... ஏனெனில் இத் தவக்காலத்தை நல்ல முறையில்...'' என்று ''சத்திய

வேத பாதுகாவலன்'' 1893 மார்ச் 31 ல் தனது ஆசிரியருரையில், புதிய மறுமலர்ச்சிக்கு நல்வரவேற்பு அளித்தது.[37]

ஆயர் அவர்களின் போதனையும் சாதனையும் வன்னி, மாதோட்டப் பகுதிகளில் பற்பல இடங்களில் நல்ல அறுவடையைத் தந்தன. அப் பகுதிகளில் காடு மேடு, மழை வெய்யில் என்று பாராது அவர் ஓடியாடிப் பணியாற்றினார். ஆயர் தனது 25 வருட ஆட்சிக் காலத்திலும் இவ்விதம் மாபெரும் மனமாற்றத்தை நடத்தி வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

புதிய பாடல்கள்:

ஆயரின் ஞான ஒடுக்கப் பிரசங்கங்களுக்கு மெருகூட்டி உரம் கொடுக்க புதிய பாடல்கள் இயற்றப்பட்டன. ஆயர் அவர்கள் புதிய பாடல்களை முதலில் தாம் பங்குக் குருவாக இருந்த ஊர்காவற்றுறையில் அறிமுகம் செய்து வைத்தார்; மக்களும் இப் பாடல்களைப் பாடுவதில் ஆர்வம் காட்டினர். இப் பாடல்கள் அதிகமாக ஐரோப்பிய இராகங்களைத் தழுவியே இயற்றப்பட்டன. 1893 ம் ஆண்டில் யூர்டல் என்பவர் ஐரோப்பிய சங்கீத இசைக் குறியீடுகளுடன் இப்பாடல்களை நூல்வடிவில் அச்சிட்டார். 1894 மார்ச் திங்கள் இறுதி ஞாயிறில், யாழ் பேராலயத்தில் இப் பாடல்கள் பாடப்பட்டன. இப் பாடல்கள் கடல்கடந்து தென் இந்தியாவுக்கும் சென்றன. அங்கு இவை செல்வாக்குப் பெற்று, செழிப்புற இசைக்கப்பட்டன.

1901 ம் ஆண்டு புலோன் அடிகளாரால் இப்பாடல்கள் புதிய பதிப்பில் புத்தொளி பெற்றன. அவ்வாண்டில் நடைபெற்ற ஞான ஒடுக்கங்களில் இப் பாடல்கள் வெற்றிக் கீதமாக ஒலித்தன. மக்கள் பொருள் உணர்ந்து, உள்வாங்கி உள்ளமுருகி பயபக்தியுடன் இசைத்தனர். இதனால் இப்பாடல்கள் மக்கள் உள்ளத்தில் இறையுணர்வை நன்கு விதைத்து விட்டன.[38]

வார்த்தைப் பணி:

பிரிவினை வாதம் தலைவிரித்தாடிய பள்ளிமுனையில் ஆயர் தம் வார்த்தைப்பணியை 9, மே மாதத்தில் தொடங்கி தாழ்வுபாடு, பேசாலை, அடம்பன், போன்ற இடங்களில் கொண்டு சென்று 18, யூனில் முடிவு செய்தார். அவ்வேளையில் உறுதிப் பூசுதல் அளித்து பலரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார்.

இவ்விடங்களில் நடைபெற்ற ஞான ஒடுக்கங்கள், 30, 21, 14, 7, ஆகிய நாட்கள் கொண்டவையாக இருந்தன. இக்காலத்தில் சேமக்காலையில் நடைபெற்ற பிரசங்கங்கள், இறையுணர்வை

வித்தியாசமான பின்னணியில் உள்ளத்துள் ஊற்றெடுக்கச் செய்தன.

நற்கருணைநாதரின் நிந்தைப்பரிகார வழிபாட்டில் இசைக்கப் பெற்ற ''யக்கோமே கொன்சலாசின்'', ''சர்வதயாபர யேசுவே'' என்ற பாடல் கேட்போர் உள்ளத்தை உருக்கி, இறை இயேசுவில் பற்றுக் கொள்ளச் செய்தது. அவர்களின் வாழ்க்கைப் பாதையில் மாற்றத்தைக் கொண்டுவந்தது. ஞான ஒடுக்கங்கள் ஒப் பந்தப் பிரகடனம் என்ற சடங்குடன் முடிவுறும்பொழுது, மக்கள் மனச்சுமை குறைந்து, மனச்சாந்தியுடன் புதுவாழ்வை ஆரம்பிப் பர். யூபிலி ஆண்டுகளில் நடைபெறும் ஞானவொடுக்கத்தின்போது, ஓர் ஆலயத்திலிருந்து தொடங்கி, மற்றொரு ஆலயத்திற்குச் சுற்றுப் பிரகாரமாக மக்கள் செல்வர். இதனால் சுற்றுச் சூழல் இறை அலை யால் நிரப்பப்பட்டு வித்தியாசமான இறை அனுபவத்தை மக்கள் பெற்றுக் கொண்டனர். இப் பக்தி அனுபவங்களால் பெற்ற அறு வடையைப் பாதுகாத்துப் பாராமரிக்க, 3 நாட்களுக்கு மீளாய்வுப் பணியாக, அடுத்து வரும் வருடத்தில் ஞானவொடுக்க அனுபவம் அளிக்கப்பட்டது. 1902 லிருந்து இத்தகைய மீளாய்வு அனுபவம் அளிக்கப்பட்டது. 1909 ம் ஆண்டில் ஊர்காவற்றுறையில் இறையுணர்வுகளை ஊட்டிவிடும் எளிய வடிவமைந்த, இனிய உரை யாடல் வடிவமான தர்க்கப் பிரசங்கம் ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதலில் இதைச் செய்தோர் சுவாமி ஞானப்பிரகாசரும், சந்திர சேகரா அடிகளுமாவர். [39]

மனந் திரும்புதல் இயக்கம்:

மகாஞானவொடுக்கங்கள் கிறிஸ்தவர்கள் அல்லாத மக்கள் மன தில் கிறிஸ்தவ ஆர்வத்தை எழுப்பி விட்டது. அதனால் அம் மக்கள் மனம் மாற்றம் பெற்று, ஓர் இயக்கமாக கிறிஸ்தவத்தில் இணைந்த னர். நல்லூர், இளவாலை, மல்லாகம், அச்சுவேலி. விசேடமாக மடுப்பதி போன்ற இடங்களில் வருடா வருடம் அளிக்கப்பட்ட அரு மையான மறையுரைகளும் தர்க்கப் பிரசங்கங்களும், இறையுணர்வு இசைகளும் கத்தோலிக்கருக்கு விசுவாசத்தை உறுதியாக்கும் உர மாகவும், ஊக்கியாகவும் அமைந்தன. அதேவேளை இவைகள் மற் றோருக்குக் கத்தோலிக்கத்தைப் பற்றிய தவறான எண்ணங்களை மாற்றிக்கொள்ளவும், கத்தோலிக்க மக்களைப் புரிந்து, அன்பு கொண்டு நல்லுறவுடன் வாழவும் வழியமைத்தன இறை வார்த் தைப் பணிக்கு மேலும் உரம் ஊட்ட கத்தோலிக்க துண்டுப் பிர சுரங்கள் துணைபுரிந்தன. அதனால் கத்தோலிக்கர் அல்லாத மக் களின் மனதையும், வார்த்தை அலையும், எழுத்தலையும் ஊடுருவி உருமாற்றின; ஓர் புதிய உணர்வை உள்ளத்தில் உருவாக்கி கத்தோ லிக்க திருச்சபையில் சேரவைத்தன. [40]

சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய ''25 வருட முன்னேற்றம்'' என்ற ஆங்கில நூலில் 175 ம் பக்கத்திலிருந்து இப்பணிபற்றி பாங்குற எழுதியுள்ளார். யோசவ்வாஸ் முனிவர் காலம்தொட்டு கோவைக் குருக்கள் செய்த அரும்பணியால் பலரை கிறிஸ்துவின் இரட்சிப்புக்குள் கொண்டு வந்தனர். அவர்கள் இவர்களிடையே பல குழுமங்களை கட்டி எழுப்பினர்.

பிரித்தானியர் காலத்தில் வந்த சமேரியா, சனாவேல், பொஞ்சீன் அடிகள் போன்றோர் தம் ஞானவொடுக்க பிரசங்கங்கள் ஊடாகச் சிலரை கத்தோலிக்க அணைப்புக்குள் அழைத்து வந்தனர். விசேடமாக கத்தோலிக்கர் அல்லாத ஒருவரின் திருமணப் பந்தத்தில் ஏற்படும் சிக்கல்களை நெறிப்படுத்துவதில் வெற்றி கண்டனர்.

இத்தோடு ஆயர் சமேரியா ஆரம்பித்து ஆயர் பொஞ்சீன் தொடர்ந்து நடாத்திய அநாதை மடங்களும் கிறிஸ்துவுக்குள் புதியவர்களை ஈர்க்க உதவின. ஏழாலை, சூராவத்தை போன்ற இடங்களிலுள்ள இரண்டு ஆலயங்களைக் கட்டியெழுப்பிய கத்தோலிக்கக் குடும்பங்கள் இவ்வாறே உருவாகின. இக் கத்தோலிக்க குடும்பங்கள் ஆரம்பத்திலிருந்து கத்தோலிக்க கல்வியை நன்கு கற்று வந்தனர் இதனால் இங்கிருந்து ஆண்கள், பெண்கள் பலர் துறவிகளாக இறை பணிபுரிய வந்தனர். விசேடமாக இவர்கள் மத்தியிலிருந்து புனித வளன் துறவற சபை சகோதரர் பலரும், திருக்குடும்ப கன்னியர் சபைக் கன்னியரும் இறையரசுப் பணிக்கு தம்மை அர்ப்பணித்தனர்,

1877 ம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சம், கொள்ளை நோய் போன்ற சந்தர்ப்பங்களில் ஆயர் பொஞ்சீனும், குருக்களும் அளப்பரிய சேவை புரிந்து, மக்கள் மனதில் இடம் பிடித்தனர். 1877 – 09 – 11 இல் இரண்டு வாஞ்சையுள்ள குருக்களின் ( கோர்டன், சந்திரசேகரா ) கண்காணிப்பில் முதியோர் திருமறை ஞானஸ்நான ஆயத்த வகுப்புக்கள் தொடங்கின. ஒரு வருடத்திற்குள் 857 வளர்ந்தோர் திருமுழுக்குப் பெற்றனர். ஆனால் இவர்களில் பலர் பிறமதச்சூழலால் தம் விசுவாசத்தை இழந்தனர், [41]

விசுவாசத்தில் உறுதியாக இருந்த கால்பங்கு மக்களில் குறிப்பாக நல்லூர், சிவியாதெரு புனித பிரான்சிஸ்கா (இன்று ஆசீர்வாதப்பர்) கோவில், உடுவில் செபமாலை மாதா கோவில், நெடுந்தீவு பிரான்சீஸ் சவேரியார் கோவில் மக்கள் இன்றும் கத்தோலிக்கத்தில் நன்கு வேர் ஊன்றி வாழ்கின்றனர்.

1877 ம் ஆண்டு கிறிஸ்தவர்களாகி, கால இடச் சூழலால் விசுவாசத்தை விட்டு விலகிச் சென்றோரைத் தேடி 1904 ம் ஆண்டு ஆயர் யூலன் ஆண்டகை நல்லூர்ப் பங்கைத் தோற்றுவித்தார்.

மடுப்பதியில் ஏற்பட்ட மனமாற்றமும் வளர்ந்தோர் திருமுழுக்கும் உறுதியும், உரமும் மிக்க தனிச்சக்தி வாய்ந்தவைகளாக இருந்தன. இதற்கு அடியுரமாக, உந்துசக்தியாக மடுத்தாயின் மாட்சி அமைந்தது. இங்கு மறைப்பணி செய்ய நன்கு பயிற்றப்பட்ட, பணி வாழ்வில் பற்றுள்ள இரு ஆசிரியர்களும் அவர்களுக்குத் துணையாக சில தொண்டர்களும் ஆயரால் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கிறிஸ்துவை அறியாதோரை, கிறிஸ்துவுக்குள் ஈர்ப்பதற்காக முழு மாவட்டத்திலும் மனமாற்ற நிலையங்களை யூலன் ஆண்டகை அடியிட்டார். இந்நிலையங்கள் பெரும்பாலான கத்தோலிக்கர் வாழும் பகுதிகளில் வாழ்ந்த பிறசமய மக்களை ஈர்க்கும் நோக்கைக் கொண்டிருந்தன. இந்நிலையங்கள் கத்தோலிக்க சிறு குழுமங்களை ஏற்படுத்தி இப்பணியினைச் செய்தன.

அந்தோனி அடிகள் மடுவிலும், அநுராதபுரத்திலும் மனம் மாற்றும் நிலையங்களை உருவாக்கினார். நல்லூர்ப் பங்கின் உருவாக்கத்தின் அடித்தளமாக இவர் இருந்தார், 1898 ம் ஆண்டு யாழ் சஞ்சுவாம் கோவிலில் இருந்து கொண்டு, சிவியாதெரு புனித பிரான்சிஸ்கா கோவிலையும் பராமரித்தார், இதனூடாக தென் கோப்பாயில் பலரை மனம் திருப்பினார்:

1899 இல் கிப்பொலிற் அடிகளார் இப்பணியைத் தொடர்ந்து விரிவாக்கம் செய்தார். இதனால் கிறிஸ்தவம் நீர்வேலிக்கும் சென்றது. அங்கு கிப்பொலிற் அடிகளார் வெற்றி கண்டார். கைதடியில் அந்தோனி அடிகள் ஆரம்பித்த மனமாற்ற நிலையம் கைவிடப்பட்டது. [42]

ஆனைக்கோட்டையில் நற்செய்திப்பணி செய்ய பிரியன் அடிகள் அயராது உழைத்தார். அவருக்கு எதிராக பிறமத பெரியார் போர்க்கொடி தூக்கினர். அவரின் சிறகில் இருந்த மந்தை. இதனால் சிதறுண்டது. நெடுந்தீவு, சரவணை போன்ற இடங்களில் மீயரி அடிகளும் நற்செய்திப் பணியை மாண்புறச் செய்தனர். இப்பணியின் விளைவால் சின்னமடுத் திருப்பதி உருப் பெற்றது. சின்னமடுத் திருப்பதிக்கு இவர்களின் பணியே அடித்தளமாகியது. யாண்டல், அல்போன்சஸ், ரூவேல்க, ஒலிவ், J. பிரான்சீஸ், கில்லறி முதலிய குருக்களும் இறையேசுவின் அரசுக்கு பிறமதத்தினரை அழைத்து வரும் பணியில் அயராது உழைத்தனர். [43]

1904 ம் ஆண்டில் யூலன் ஆண்டகை பிறமதத்தினர் மத்தியில் நற்செய்தியை அறிவிக்க நற்செய்திப்பணி இயக்கத்தை ஆரம்பித்தார்.

அவ்வியக்கத்தை ஆயர் அவர்கள் இயக்கிய நெறிமுறை வருமாறு:— நற்செய்திக்கு செவிமடுக்க, ஏற்க விரும்பும் ஒரு கிராமத்திற்கு ஒரு மறை ஆசிரியரை ஆயர் அனுப்புவார். அங்கு அவருக்கு இசைந்து, இயங்கும் இடத்தில் ஒரு சிறுதுண்டு நிலம் கொடுக்கப்படும். அவ்விடத்தில் ஒரு சிறு கொட்டில் போடப்பட்டு அவ்வாசிரியர் தம் பணியை ஆரம்பிப்பார். அவ்வேளை ஒரு குருவானவர் அம் மக்களின் ஆன்மீகத் தேடலை நிறைவு செய்ய அங்கு செல்வார்.

குருவானவரின் வருகை அறிந்து, தம் மத்தியில் வாழும் அவரிடம் பலவகையில் உதவிபெற அவ்வூர் மக்கள் செல்வர்.

ஆன்மீக காரணங்களுக்காக மட்டுமல்லாது உலக லௌகீக காரணங்களுக்காகவும் அவரிடம் உதவி கேட்க, அம் மக்கள் செல்வர்; கடன் மீட்கப் பண உதவி, பிள்ளைகளின் கல்வி கற்பிக்க, ஆங்கிலப் பாடசாலையில் சேர்ப்பிக்க, கொலை வழக்குகளிலிருந்து மீள்விக்க போன்றவை அவற்றில் சிலவாகும்.

தம்மிடம் வரும் மக்கள் மத்தியில் கிறிஸ்துவைத் தேட ஆசிக்கும் மக்களை அவர் இனம் கண்டு கொள்வார். அவர்களுக்கு யேசுவின் இறையரசு உண்மைகளை மறை ஆசிரியர்களின் உதவியுடன் கற்பிக்க ஒழுங்கு செய்வார். அவர்களின் ஆன்மீக தேடலின் ஈவாக ஞான தீட்சை பெற்றவர்களில் ஆண்கள் தொகை திருப்திகரமானதாக இருந்தால் அவ்விடத்தில் நிரந்தர குருமனை அமைக்கப்படும். இங்ஙனம் குருமனை அமைக்கப்பட்ட காலகட்டத்தில்தான் பிற மதத்தினரிடமிருந்து எதிர்ப்பியக்கம் தொடங்கியது. 1901ம் ஆண்டு எதிர்ப்பலைகள் நீர்வேலியில் கிளம்பிற்று. அப்பொழுது கிப்பொலிற் சுவாமிகள் அங்கு பணியாற்றினார். குருமனைக்கு இரவுகளில் கல்லெறி, தோட்டமற்ற புதிய கிறிஸ்தவ ஏழைத் தொழிலாளிக்கு மவலை மறுப்பு போன்ற எதிர்ப்புகளை அவர் சந்திக்க வேண்டியிருந்தது. இப் புதிய ஏழைக் கிறிஸ்தவர் சாவகச்சேரி, சுன்னாகம் போன்ற இடங்களிலுள்ள சந்தைகளுக்கு வியாபாரத்திற்குச் செல்லும் வழியில் வழிமறித்து தாக்கப்பட்டனர். 11 – 08 – 1902ல் 600 பிறமதத்தினர் திரண்டு கோவிலிலுள்ள சுரூபங்களை உடைத்து நொருக்கி, கோவிலுக்கும் தீ மூட்டினர். கோவில் எரிந்து சாம்பராகியது. காவல்துறையினர் குற்றவாளிகளைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். [44]

ஆயர் அவர்கள் குற்றவாளிகளை விடுதலை செய்யும்படி காவல்துறையிடம் பணிவுடன் வேண்டினார். ஆயரின் வேண்டுதலுக்கு அவர்கள் மதிப்பளித்து குற்றவாளிகளை விடுதலை செய்தனர்.

பிறமதத்து மக்கள் அனைவரும் இத்தகைய வன்முறைப்போக்கை ஆதரிக்கவில்லை. அம் மக்கள் இத்தகைய செயல்களை தம் பத்திரிகை ( Hindu organ ) ஊடாக எதிர்த்தனர். கண்டித்தனர். [45]

1908 ம் ஆண்டு தெற்கு மட்டுவிலில் சில பிறமதக் குருக்கள் கத்தோலிக்க குருமனைக்கு தீ வைத்தனர். இத் தீவைப்பில் குருமனை சாம்பலாக அச் சாம்பலிலிருந்து பின்னர் இரு கோவில்கள் உருப்பெற்றன.

இன்னல்கள், இடையூறுகள், எதிர்ப்புகள், துன்பங்கள் போன்றவை தீமைகளாகத் தோன்றினாலும், இவைகளே சத்தியவழி செல்வோருக்கு தம் இலக்கை அடையவைக்கும் உரமும் ஊக்கிகளுமாகும். சிலுவையின் இரகசியமும் இதுவே. நீர்வேலியில் 6 உயர்குலக் குடும்பங்களும் 10 ஒடுக்கப்பட்ட குடும்பங்களும் இறையேசுவை தம் இரட்சகராக ஏற்றனர். [46]

தேசிய வாதம்:

சுவாமி ஞானப்பிரகாசரின் கூற்றுப்படி, யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்கம் பரவுவதை எதிர்ப்பதற்கு முக்கிய காரணமாக, அதுவும் யாழ்ப்பாண புத்திஜீவிகள் எதிர்த்ததற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது தமிழ் தேசிய வாதத்தை, கத்தோலிக்கம் மழுங்கடித்துவிடும் என்ற பயமே ஆகும். இப்பயம் முற்றிலும் தவறானது என்று அவர் சுட்டிக்காட்டினார். அவரின் அன்றைய கூற்று இன்று தீர்க்கதரிசனக் கூற்றாக உணரப்படுகிறது. 1970 ல் எழுந்த தமிழ் தேசிய இனத்தின் எழுச்சியில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் பங்களிப்பு ஓர் உதாரணமாகும். 80 இன் இறுதியிலும் 90 இலும் கொழும்பு வாழ் தமிழ்ப் பெரியார்கள் தமிழ் ஈழ தேசிய எழுச்சிக்கு கிறிஸ்தவர்களே உள்ளோட்டமான இரகசிய ஊக்கிகளாகச் செயல்படுகின்றனர் எனக் குற்றம் சாட்டியது, இக் கட்டத்தில் சிந்திக்கத்தக்கது. [47]

உரும்பிராய்:

1911 ம் ஆண்டில் உரும்பிராய் வாழ் நலிவுற்ற விவசாயிகள் ஒடுக்கப்பட்ட குடிமக்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்பினர். அவர்களுக்கு மறைபோதக ஆயத்தத்திற்கென இரு மறை ஆசிரியர்கள் ஆயரால் அனுப்பப்பட்டனர். இச் செய்தியை அறிந்த உயர்குலத்தோர் ஒன்று திரண்டு அம்மக்களை கல்லாலும் பொல்லாலும், தடிகளாலும் தாக்கினர். அவர்களுக்கு தொடர்ந்தும் தொல்லை கொடுத்தனர், 1916 ல் தன் மாட்டை நிலச்சுவாந்

தாருக்குக் கொடுக்க மறுத்ததினால் ஒரு ஏழை, நையப்புடைக்கப் பட்டான். இவ் ஏழை மக்கள், இயேசுவைத் தம் இரட்சகராக ஏற்றதனால், ஏற்பட்ட துன்பங்கள் சொல்லிலடங்கா. இவ்வித கொடுமைகளின் உச்சக்கட்டமாக சில தடவைகள், அடிமைகள் மரணதண்டனை கூடப் பெற்றனர். நிலச்சுவாந்தார்கட்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு சட்டம் வலுவிழந்து கிடந்தது. ஈழத்தமிழ் எழுத்தாளர் கே. டானியேல், தனது 'கானல்' என்ற நாவலில், யதார்த்தமாக இத்தகைய செயல்களை, அழகாகச் சித்தரித்துள்ளார்.

உரும்பிராயில் இவ்விதம் தாக்கப்பட்ட ஒருவரும் அவரது சகோதரர்களும் குருவிடம் வந்து ஞானதீட்சை பெற்றனர். இதையறிந்த உயர்சாதியினர், அவர்களது வீடுகள், நிலங்கட்குள் புகுந்து அட்டகாசம் செய்தனர். குருவானவர் பொலிஸ் உதவியுடன் வந்ததால், அவர்களது திட்டங்கள் நிறைவேறவில்லை. குரு அங்கேயே தங்கி குடிசை ஒன்றை அமைத்தார். சத்திய மறையில் சேர்ந்தோர் தொகை 15 மாத்திரமே.

இவர்கள் கிராமத்துக்குள் நுழையும் வழிகள் கள்ளிப்பற்றை கொண்டு அடைக்கப்பட்டன. தோட்ட நிலங்கட்குச் செல்லும் வழிகளும் தடை செய்யப்பட்டன. தோட்டப் பயிர்கள் அழிக்கப்பட்டன. கள்ள வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஞாயிறு தினங்களில் அட்டகாசங்கள் அதிகரித்தன. எனவே நீதிமன்ற உதவி நாடப்பட்டது. நீதிபதி வீரக்கோன் நேரில் வந்து அனர்த்தங்கள் அனைத்தையும் பார்வையிட்டார். 24 பேர் சிறைத்தண்டனை பெற்றனர். இவ்விதம் கத்தோலிக்கத்துள் சேர்ந்ததால் வருந்தி வாழ்ந்த மக்களுக்கு மிசனரிகளின் உதவிகளே உறுதுணையாயிருந்தன. அவ்வருடம் நவம்பரில் 107 பேர் ஞானதீட்சை பெற்றனர்.[48]

கால ஓட்டத்தில், புதிய கிறிஸ்தவர்களுக்கு எதிராக வன்முறைகள், பல்வேறு வடிவங்களில் இடம் பெற்றன. உதாரணமாக குத்தகை நிலங்களிலிருந்து குத்தகைக்காலம் முடிந்ததும் விரட்டி வெளியேற்றப்பட்டனர். இவ்விதம் எத்தகைய துன்பங்கள் எதிர்கொண்ட போதிலும் புதிய கிறிஸ்தவர்கள் அவற்றை, இயேசுவின் மேல் கொண்ட விசுவாசத்தினால் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டனர்.

வீடிழந்து, நிலமிழந்து போனதால் இம் மக்கள் சோம்பேறிகளாக மாறுவர். அல்லது கத்தோலிக்கத்தை மறுதலிப்பர் என்றெல்லாம் தப்புக்கணக்குப் போடப்பட்டது. உயர்குலமும், புரட்டஸ்

தாந்தர்களும் இத்தகைய மதிப்பீட்டையே கொண்டிருந்தனர். ஆயின் அவர்களது மதிப்பீடு எதிர்பார்ப்பு அனைத்தும் தவறு என்பதை விரைவில் கண்டுகொண்டனர்.

உரும்பிராயிலும் அயற்கிராமங்களிலும் கிறிஸ்தவ எதிர்ப்புக்குப் பின்னணியாகவிருந்த காரணி. உயர்குலத்தவருக்குத் தம் எதிர்காலம் பற்றி எழுந்த அச்சமேயாகும். தம் நிலங்களில் குடிமக்களாக இருப்பவர்கள், குத்தகைக்குப் பயிரிட்டோர் கிறிஸ்தவத்தில் சேர்ந்தால் உண்மையான உழைப்பாளிகளாக இராது, சோம்பேறிகளாக மாறி விடுவர் எனவும் அதனால் தாம் பாதிக்கப்பட நேரிடும் என்றும் எண்ணினர். இப்பயம் சரியானது எனப் பின்னர் காணப்படவில்லை மாறாக இறையேசுவை இரட்சகராக ஏற்றுக் கத்தோலிக்கரான தொழிலாளர், குடிமக்கள் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு, கடும் உழைப்பாளிகளாக பிரமாணிக்கமுள்ள பிரசைகளாக மாறினர். காலச்சக்கர சுழற்சியில், இன்று இந்நிலை மாறி வருகிறது. ஆன்பவன் அடிமை, உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதம் மாறி, ஓர் சமத்துவ சமுதாயம் துளிர்விட்டுத் தளிராகி, மரமாகி வருகிறது. 1975 ல் தேசியத்துக்காக தன்னுயிர் ஈந்த சிவகுமாரனின் பூதவுடல் இறுதிக் கிரிகைகட்காக எடுத்துச் செல்லப்பட்டபோது, உரும்பிராய், புனித மிக்கேல் ஆலயத்துக்கும் கொண்டு செல்லப்பட்டு, பின் சுடலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. தமிழ் விடுதலை உணர்வு, இளம் உள்ளங்களில் உயர்வு தாழ்வு, என்ற பேதத்தை அகற்றிவிட்டது. அதுபோல கிறிஸ்வர்களும் விடுதலை இயக்கங்களுடன் இணைந்து செயற்பட்டு கிறிஸ்துவின் விடுதலைப் போதனைக்கு சான்று பகர்ந்தன, [49]

**தர்க்கப் பிரசங்கம்:**

கிறிஸ்தவ மறைபரப்பு இயக்கத்தின் இருபெரும் தூண்களாக விளங்கியவை நவநாள் பிரசங்கங்களும், அச்சுப் பிரசுரங்களுமாகும். பிரசங்கங்களில், தர்க்கப் பிரசங்கங்கள், தனித்துவமாக விளங்கி, மறையுண்மைகளை மக்கள் மனதில் ஆழமாக விதைத்து விட்டன.

1906 ம் ஆண்டில் ஊர்காவற்றுறையில் வேர்விட்ட தர்க்கப் பிரசங்கம், கால ஓட்டத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் பல கோவில்களிலும் தனியிடம் வகிக்கத் தொடங்கியது. சந்திரசேகரா அடிகளுக்கும் சுவாமி ஞானப்பிரகாசருக்குமிடையே ஆரம்பிக்கப்பட்ட தர்க்கப் பிரசங்கங்கள் 1913 தொடக்கம் 1916 வரை, சுவாமி ஞானப்பிரகாசர், சுவாமி மருசலின் ஆகியோருக்கிடையே பல பங்குகளில் நடைபெற்றன.

மருசலின் சுவாமியார் தம்மை ஒரு இந்துவாக உருபிகரித்து, கிறிஸ் தவம், கத்தோலிக்கம் பற்றி பல வினாக்களை வினாவுவார். சந்தே கங்களை எழுப்புவார். சுவாமி ஞானப்பிரகாசர் கேட்போர் மனதில் ஐயம் தீரும் வகையில் அவ் வினாக்களுக்கு சுவையாக, விளக்கமா கப் பதில் அளிப்பார். வினாக்களுக்குரிய விடைகளுக்கு அழுத்தம் கொடுக்கவும், மக்கள் மனதில் அதன் கருவைப் பதிக்கவும் அர்த்த முள்ள இனிமையான பாடல்கள், வீணை மேளதாளத்துடன் இசைக்கப்படும். மக்கள் மனதைக் கவர்ந்த வினா விடைகளுடன் இசை இழையோடி இதயத்தில் சத்திய வேத போதனைகளை ஆழ மாக விதைத்து விடும்.

நல்லூர், வஜீரி, அச்சுவேலி, நவாலி, ஒட்டகப்புலம், கவுதாரி முனை போன்ற இடங்களிலும், யாழ்ப்பாணத்தில் ஆசனக்கோவில், அடைக்கலமாதா கோவில், பாசையூர், குருநகர், கொழும்புத்துறை, போன்ற இடங்களிலும் இசை இழையோடிய தர்க்கப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. மக்களின் உள்ள உணர்வுகளை உற்று உணர்ந்து நிகழ்த்தப்பட்ட தர்க்கப் பிரசங்கங்கள் நல்ல அறுவடையைத் தரத் தவறவில்லை. [50]

கத்தோலிக்க அச்சகம்;

திருமறையின் மறைபரப்புத் தளத்தை நன்கு விரிவுபடுத்த, மக் கள் மனதில் நன்கு பதிக்க, கத்தோலிக்க அச்சகப் பிரசுரங்கள், அரும்பணியாற்றின. அதனை சுவாமி ஞானப்பிரகாசர், செவ்வனே செழுமையுடன் பயன்படுத்திக் கொண்டார். சமஸ்கிருதமும் தமிழும் நன்கு கற்றிருந்த சுவாமிகளுக்கு, ஆயர் கொடுத்த ஆக்கமும் ஊக்க மும், இந்து கிறிஸ்தவ சிந்தனைகளை, கொள்கைகளை, நம் பிக்கைகளை நன்கு ஆய்வு செய்யத் தூண்டின. அதன் பிரதிபலிப் பாக பல பிரசுரங்கள் கத்தோலிக்க அச்சகத்திலிருந்து வெளிவந்தன.

முதலில் இவை ''சத்தியவேத பாதுகாவலனில்'' கட்டுரைகளாக பிரசுரமாயின. பின்னர் சிறிய பெரிய நூலுருவில் வெளியாகின. இவற்றுள் தர்க்க துண்டுப் பிரசுரங்கள் 10, இந்து, கிறிஸ்தவ சமய நூல்கள் 19, புரட்டஸ்தாந்த, சைவசமய வாதிகளோடு வாதிட்ட நூல்கள் 9, இத்துடன் வரலாற்று நூல்கள், ஆன்மீக நூல்கள், குடும்ப வாசிகசாலை என்ற தலைப்பில் வெளிவந்த கைக்கடக்கமான பிரசுரங்கள், புனிதர் வரலாறுகள், பக்தி முயற்சிகள், கிறிஸ்தவ அற நெறி முறைகள் போன்ற வெளியீடுகள் மக்கள் உள்ளத்தில் கிறிஸ் தவ அறிவை, ஒழுக்க நெறிமுறைகளை ஆழப்பதித்தன.

''25 வருட முன்னேற்றம்'' என்ற சுவாமி ஞானப்பிரகாசரின் நூலில் 212 வது பக்கத்திலிருந்து 230 வது பக்கம் வரை, இக்கால

கட்டத்தில் வெளியான கத்தோலிக்க நூல்களின் பட்டியல் உள்ளது. கத்தோலிக்க இலக்கியத்தின் ''பொற்காலம்'' எனப் போற்றப்படும் இக்காலத்தின் நூல்களை நான்கு கத்தோலிக்க அச்சகங்களே அச்சிட்டு வெளியிட்டன. அவை:- யாழ். புனித சூசைமா முனிவர் கத்தோலிக்க அச்சகம், கொழும்புத்துறை தொழிற் பாடசாலை அச்சகம், அச்சுவேலி ஞானப்பிரகாசர் யந்திரசாலை, மாதகல் தைரியநாதர் அச்சகம் என்பன. கத்தோலிக்க இலக்கியப்பணியின் பொற்காலத்தைஉருவாக்க இவ் அச்சகங்கள் செய்த அரும்பணி, யாழ். திருச்சபை வரலாற்றில் என்றும் நினைவு கூரப்படும்.

ஆரம்பத்தில் கத்தோலிக்க நூல்கள் கையெழுத்துப் பிரதிகளாகவேயிருந்தன. 1856 ம் ஆண்டுத் தொடக்கத்தில் அமரிக்க புரட்டஸ்தாந்து சபையினர் மானிப்பாயில் ஒரு அச்சகத்தை நிறுவினர். 1870 ல் பிரான்சிய நாட்டின் அமைச்சர் ஒருவர், யாழ். கத்தோலிக்க திருச்சபைக்கு, அச்சுயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்தார். ஆயின் சில வருடங்களாக இவ்வியந்திரம் இயக்குவாரற்றுக் கிடந்தது.

கொழும்புத்துறை சஞ்சூசையப்பர் அனாதர்மடத்தைச் சேர்ந்த இளைஞன் கார்த்திகேசு அன்ட்று அவ்வியந்திரத்தை அடிக்கடி உற்றுப் பார்ப்பதும் சிந்தனை செய்வதுமாக இருந்தான். இறுதியில் அதை இயக்கத் தொடங்கினான் இந்த அச்சு யந்திரத்திலிருந்து இளைஞன் அன்ட்றுவின் முயற்சியால் 21 – 03 – 1872 ல் ஒரு சிறிய துண்டுப் பிரசுரம் அச்சடிக்கப்பட்டு வெளியாகியது. இத்தாலியில் பாப்பரசருக்குச் சொந்தமாயிருந்த காணி நிலங்களை இத்தாலிய அரசு சுவீகரித்ததைக் கண்டித்து வெளியிடப்பட்ட பிரசுரம் அது.

யாழ் திருச்சபை அதிகாரிகள் இளைஞர் கார்த்திகேசு அன்ட்றுவை இந்தியாவுக்கு அனுப்பி அச்சுக் கலையின் தொழில் நுட்பங்களனைத்தையும் கற்கச் செய்தனர். கொழும்புத்துறையில் இருந்த அச்சுப்பொறி யாழ் நகர் ஆயர் இல்ல வளவில் 1873 ல் அமைக்கப்பட்ட கொட்டிலில் நிறுவப்பட்டு ''புனித சூசை மாமுனிவர் கத்தோலிக்க அச்சியந்திரசாலை'' என நாமகரணம் செய்யப்பட்டது. கார்த்திகேசு அன்ட்று இவ் அச்சகத்தின் முதல் நிர்வாகியானார். காலத்துக்குக் காலம் அச்சுத்தொழிலிலேற்பட்ட மாற்றங்களுக்கமைய புதிய பொறிகளுடன் நவீன மயப்படுத்தப்பட்டு ''புனித வளனார் கத்தோலிக்கஅச்சகம்'' என்ற பெயரில் வடபகுதியின் மிகச் சிறந்த அச்சகமாக இது விளங்குகிறது. [51]

இன்று காணப்படும் கத்தோலிக்க அச்சகக் கட்டிடங்கள், ஆயர் பொஞ்சீன் காலத்தில் அடியிடப்பட்டு, கட்டியெழுப்பப்பட்டு ஆயர்

பூலன் காலத்தில் நிறைவு செய்யப்பட்டன. அச்சக அலுவலக கட்டிடம் ஆயர் பூலன் காலத்தில் கட்டப்பட்டது.

கத்தோலிக்கரின் பக்தி ஆர்வத்தை நிறைவு செய்வதே இவ் அச்சகத்தின் முதுபெரும் பணியாக இருந்தது. ''படிப்பதால் மனிதன் பூரணமாக்கப்படுகிறான்'' என்ற உண்மையை அச்சக வெளியீடுகள் பூர்த்தி செய்தன. கத்தோலிக்க பாடசாலை நூல்களை அச்சகம் வெளியிட்டபோதிலும் அதிலுமதிகமாக, ஆன்மீகத் தேடலுக்கு உரமூட்டும் செபப் புத்தகங்கள், பக்திப்பாடல்கள், வாசகர் வழிகாட்டு நூல்கள், புனிதர் வரலாறுகள், கலை இலக்கிய நூல்கள், நாடகங்கள், அம்மானை, ஒப்பாரி, வியாகுல பிரசங்கம் போன்றவற்றையும் வெளியிட்டது.

சத்தியவேத பாதுகாவலன்:

யாழ் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமல்ல அனைத்திலங்கையிலுமுள்ள கத்தோலிக்கருக்கும் பணியாற்றும் வகையில் 1876ம் ஆண்டில் ''சத்தியவேதபாதுகாவலன்'' உதயமாயிற்று. ஆரம்பத்தில் இரு வாரங்கட்கொருமுறை ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ''காவலன் வெளிவந்தது. வாசகரின் உற்சாகமான வரவேற்பாலும் வேண்டுகோளின்படியும் 1894ல் Catholic Guardian ஆங்கில ஏடு தனியாக வெளியிடப்படத் தொடங்கியது. 1896ல் சுவாமி ஞானப்பிரகாசரின் ''அமலோற்பவ இராக்கினித் தூதன்'' மாத இதழ் 'காவல'னுடன் இணைக்கப்பட்டு வெளிவந்தது.

1912ல் சத்தியவேத பாதுகாவலன் வார இதழாகியது. ஆங்கில Catholic Guardian வார இதழின் முதல் ஆசிரியராக, புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் ஜேம்ஸ் எச். மார்ட்டின் பொறுப்பேற்று நடத்தினார். காவலனின் ஆசிரியராக தமிழில் நன்கு பாண்டித்தியம் பெற்ற அருளப்பா முதலியார், இந்தியாவிலிருந்து வந்து கடமையாற்றினார்.

கத்தோலிக்கத்துக் கெதிராக கண்டனங்கள் வந்த வேளைகளிலெல்லாம் ''சத்திய வேத பாதுகாவலன்'' ஊடாக தகுந்த பதில்கள் அளிக்கப்பட்டன. பிற மதத்தினரின் சந்தேகங்களைத் தீர்க்க தர்க்க நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் முதலியனவும் கத்தோலிக்க அச்சகத்தால் வெளியிடப்பட்டன. கத்தோலிக்க விசுவாச விதைப்பில் யாழ் திருச்சபை, அச்சியந்திரத்தை நன்கு பயன்படுத்தி, நல்ல அறுவடையும் பெற்றது என்பது வெள்ளிடைமலை. 52

**மடுப்பதியின் மகிமை:**

ஆயரின் அயராத உழைப்பின் சுடராக மிளிர்ந்தது மருதமடுத் திருப்பதி. மருதமடு அன்னையில் ஆயர் கொண்ட ஆழ்ந்த பக்தியின் வெளிப்பாடாக, அப்பதி இலங்கைத் தீவுக்கே திருப்பதியாக மாறியது. தீவின் அனைத்து மக்களுக்கும் மடுத்தாய், அன்னையாக விளங்கி வருகிறாள். இத்தகைய பெரும்பேறு மடுப்பதிக்கு எவ்விதம் கிடைத்ததென்பது அறியப்படவேண்டியதொன்று.

400 வருட கத்தோலிக்க தாந்தரிக சித்தமரபுகள் இழையோடி, மக்கள் உடல், உள, ஆன்மீக ஆதங்கங்களை அறிந்து செயலாற்றும் இடமாக, இன்றும் மடுப்பதி விளங்கி வருகிறது. வனத்துள் வதியும் தாய்மரி புதிய சிருஷ்டியின் ''பிராக் கிரித்தியாக'' இனமத வேறுபாடுகள் அற்று அனைவருக்கும் அருள்பாலிக்கும் அகிலாண்டேஸ்வரியாக, திரிபுர சுந்தரியாக, முடிசூடிய அரசியாகத் திகழ்கிறாள்.

மடுத் திருப்பதி கான விருட்சங்கள் நிறைந்த இடம். அங்குள்ள நீர் நிலைகள், நோய் தீர்க்கும் தீர்த்தங்களாக திகழ்ந்தன. அன்னையின் ஆலயத்துள் அகழ்ந்தெடுக்கும் மண், நோய் தீக்கும் சக்தியுடையது. மடுப்பதிக்கு வரும் மக்கள் விடுதிபோட்டு, கூடாரம் அடித்து ஒருவருக்கொருவர் உதவியாய் இருப்பர். மடுப்பதியில் வருடாந்த திருவிழாக்களுக்கு மக்கள், வெள்ளம் போல் வருவர். பக்தி பரவசமாகி அன்னையிடம் அழுது புலம்பி அருள்வேண்டி நிற்பர். தம் பாவங்களை அறிக்கையிட்டு அன்னையின் அடியில் தம் கல்வாரித் திருச்சிலுவை ஒப்பந்தத்தைப் புதுப்பித்து புத்துணர்வுடன் வீடு திரும்புவர்.

இஸ்ராயேலர் யெருசலேமுக்குத் திருயாத்திரை செல்வதுபோல் மருதமடுப்பதிக்கேகி, காணிக்கைகள் செலுத்தி நேர்த்தி வைத்து, நீண்டகால நோய்கள் தீர்ந்து, சுகம்பெற்று, பேய்பிசாசு, தொல்லை நீங்கி, இத்தீவின் மக்கள், புதிய இஸ்ராயேலராக வீடு திரும்புவர். பாதயாத்திரையாக, பல மைல்கள் தூரம் கூட்டங் கூட்டமாக அன்னையிடம் நடந்து சென்றனர். மாட்டு வண்டிகளில் செல்வோரும் வண்டித் தொடராகச் செல்வர். இன்று நவீன போக்குவரத்து வழிமுறைகள் சாதனங்களுடன் மடுப்பதியும் புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

**தவத்திரு சகோதரர் குருசோ அ. ம. தி. :**

இல்லற வாழ்வில், தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று வாழ்ந்த மக்களை, இறை இயேசுவின் பணி வாழ்வுக்கு அழைத்து வந்தவர் ஆயர் யூலன் ஆவார். இந்த நவீன யுகத்தில் ஏகப்பட்ட

சவால்களுக்கு முகங் கொடுத்து, அதனூடாக இல்லற அப்போஸ்தலர்களாகப் பயிற்றுவிக்கும் பணியைச் செவ்வனே செய்தவர்களில் சுவாமி ஞானப்பிரகாசர், சகோதரர் குருசோ ஆகியோர் மக்கள் மனதில் இன்றும் வாழும் மாமனிதர் ஆவர்.

இல்லறத்தோரை இறைவழியில் இயக்குவது இலகுவான கருமமல்ல. எவ்வளவோ தனி, குடும்ப, சமூக சிக்கல்கள், பிரச்சனைகள் நிறைந்தது இல்லறம். இல்லறத்தோர் ஒரு களத்தில் எந்நேரமும் இருப்பதில்லை. வீடு, தொழில், பொழுதுபோக்கிடம் எனப் பல்வேறு கருமங்களில் ஈடுபட்டிருக்கும் இல்லறத்தோரைத் தரிசித்தலும், அவர்களை ஒன்றுகூட்டி, ஒருமுகப்படுத்தி இறைமுனைக்கு அழைத்துச் செல்வதும் கடினமான கருமங்கள், எல்லோராலும் இலகுவில் செய்யக்கூடியதல்ல.

குருசோ சகோதரர், பீடப்பணியாளர் இயக்குனராக சிறுவர்களை அறநெறி வாழ்வில் பயிற்றுவித்தார். கடமை கண்ணியம், கட்டுப்பாடுடையவர்களாக அவர்களை நெறிப்படுத்தினார். புனித சூசையப்பர் கத்தோலிக்க அச்சக நிர்வாகியாக அவர் கடமையாற்றிய போது, அச்சக ஊழியர் சங்கத்தை உருவாக்கி, தொழிலாளிகளின் தனிப்பட்ட, சமூகப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு வழிகோலினார். தமது ஓய்வு நேரமெல்லாம் சுருட்டுத் தொழிலாளரைச் சந்தித்து அவர்களது ஆன்மீக அலுவல்கள் சிதறுண்டு போகாதிருக்க உதவினார். அவர்களில் சிலரை முதல்நன்மை, உறுதி பூசுதலுக்கும் ஆயத்தம் செய்ய வேண்டிய பணியையும் மேற்கொண்டார். தொழிலாளிகளோடு நன்கு உறவாடி அவர்கட்காகப் பொழுதுபோக்கு விளையாட்டுகளை உருவாக்கினார். இவற்றினூடாக ஆன்மீகப் பண்புகளை அவர்களில் இழையோடச் செய்தார். இவற்றால் சுருட்டுத் தொழிலாளிகளின் வாழ்வின் மறுமலர்ச்சி உண்டாகியது. தங்கள் வேலை நேரங்களில் வாசிக்கப்பட்ட நல்ல புத்தகங்களின் அறிவால் அவர்கள் புத்துயிர் பெற்றனர். அசிங்கமான வார்த்தைகளை சாதாரணமாக உச்சரித்து உரையாடும் பழக்கங்கள் குறைந்தன. நாவை அடக்கி நல்வார்த்தை கூறுவோராக அவர்கள் மாறினர். தொழிலகங்களில் அரட்டையடிப்போர், வீதிகளில் கூடி நின்று வம்பளப்போர் என்ற நிலைக்கே இடமில்லாது போய்விட்டது. சுருட்டுத் தொழிற்சாலைகள், புனித தலங்களாயின. தொழிலகங்களில் இயேசுவினது படங்கள் தொங்கவிடப்பட்டு, வேலையின் ஆரம்பத்திலும் இறுதியிலும் செபிக்கும் வழக்கம் உருவாகியது. இது பிறசமய தொழிலாளிகளின் மனதையும் தொட்டது. பலர் மனமாற்றம் பெற்றனர்.

கத்தோலிக்கத்தின் சகோதரத்துவ அன்புப் பணியை சகோதரர் குருசோ, ஒதுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் மத்தியிலும்

விதைத்தார். அவ்விதைப்பின் களநிலமாக 1910 ல் புனித அந்தோனியார் கூட்டத்தை ஆரம்பித்தார். அவர்களிடையே இப்பணி நல்ல அறுவடையைக் கொடுத்தது. இன்றும் இவர்களிடையே சீவந்தராயிருக்கும் முதியோர், ''விறதர் என்றால் குருசோ விறதர்தான்'' என்று ஆணித்தரமாகக் கூறுவதைக் கேட்கலாம். குருசோவின் அரும் பணியால் அவர்களில் சிலர் கல்வியிலும் முன்னேற்றமடைந்தனர். இவர்களில் ''கிளார்க்'' மூப்பர் ஜேம்ஸ், மேஸ்திரியார் மிக்கேற் பிள்ளை, வைத்தியர் சின்னப்பு முதலியோர் இப் பெருந்தகையால் விசுவாச வாழ்வில் நன்னெறிப்படுத்தப்பட்டதுடன் சமூக வாழ்விலும் நற்பெயருடன் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர்.

இச் சகோதரரின் ஊட்டமிகு உறுதுணையுடன் சகோதரர் மனுவேல், கடற்றொழில் புரியும் இளைஞர்கட்காக 1906 ல் கார்மேல் மாதா சபையை உருவாக்கினார் இந்த இளம் சகோதரரின் அயராத உழைப்பு இளந் தொழிலாளர்களின் மத்தியில் மட்டுமல்ல, மூத்தோரிடையேயும் நன்கு சுவறியது. இதனால் இம்மக்களின் விசுவாச வாழ்வு ஊட்டமும் உறுதியும் பெற்றது. இந்த நல்ல ஊழியர், பின் பர்மாவில் நற்செய்திப் பணியில் நற்தொண்டாற்றி 2 வது உலக மகாயுத்தத்தின்போது இறைவனடி சேர்ந்தார். கார்மேல் மாதா மண்டபத்தின் முன்னால் நிறுவப்பட்டுள்ள சகோதரர் மனுவேலின் உருவச்சிலை, அன்னாரின் நற்பணிகளை என்றும் நினைவூட்டிக் கொண்டிருக்கும். [53]

பிளஸ்ஸோ அடிகள்:

பாமர மக்கள், தொழிலாளர்களிடையே விசுவாசத்தை வித்திட்ட சகோதரர் குருசோ போன்று கல்வியறிவுள்ள மத்தியதர மக்களிடையே விசுவாச ஊழியம் புரிந்தவர், தவத்திரு பிளஸ்ஸோ அடிகளாவர். இவரது முழுப்பெயர் பிளஸ்ஸோ மைக்கல் யூலஸ் செபஸ்ரியன். பிரான்சிய நாட்டைச் சேர்ந்த இவர் 06 – 08 – 1852 ல் பிறந்தார்.

ஆண்டவனுக்கே தன்னை அர்ப்பணித்து அவருக்காக ஊழியம் புரிய இலங்கை வந்த அடிகளார் 1881 ல் அக்கரைப்பற்றுக்கு அனுப்பப்பட்டார். ஒருநாளிரவு நோயாளி ஒருவருக்கு அவஸ்தை பூசுதல் அளிக்க விரைந்து சென்றவர், இருட்டில் கிணறு ஒன்றில் தவறி விழுந்தார். இரவு முழுவதும் கிணற்றுள் கிடந்தார். காலையில் கிணற்றுள் இருந்து மீட்கப்பட்டார். ஆயின் அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. பாரிசவாதத்தால் பீடிக்கப்பட்டார். அவர் கட்டிலுடன் அறையப்பட்டார் என்றே சொல்ல வேண்டும். கட்டிலே அவரது சிலுவையாயிற்று. கல்வாரியின் செய்தி, கட்டிலிலிருந்தே பல களங்களுக்குப் பரப்பப்பட்டது. அந்த வருடத்தில் அவர் யாழ்

மண்ணுக்கு மாற்றப்பட்டார். யாழ் மண்ணில் கட்டில் சிலுவையி லிருந்தே தாந்தரிக மரபில் அடிகள் செயல்பட்டார். திருப்பீடத் தண்டை நெருங்கிநின்று குருவுக்குப் பணி புரியும் பீடப்பணி யாளரை உருவாக்க உறுதி பூண்டார்.

வாகனமின்றி, பரமனின் பணியில் ஈடுபட அங்குமிங்கும் ஓடித் திரிய இயலாது என்று கூறும் இன்றைய நவீன காலத்தில், அன்று கட்டிலில் கிடந்தபடி பீடப்பணியாளரை உருவாக்கிய பிளஸ்லோ அடிகளின் சேவையை ஆழ்ந்து அவதானிப்பது நற்பயனளிக்கும். திருப்பலிக்கு பணிபுரியும் 12 மாணவரை, புனித பத்திரிசியார் கல் லூரியிலிருந்து தெரிந்தெடுத்தார். இன்று இடிந்து கிடக்கும் பழைய பத்திரிசியார் கல்லூரிக் கட்டிடத்தின் அருகே இருந்த பழைய பேரால யத்தை நோக்கிய வண்ணம் அமைந்திருந்த அறையில் அடிகளார் கட்டிலில் படுத்திருந்தபடியே அவர்களை பீடப்பணிவிடைக்காக உரு வாக்கத் தொடங்கினார். அவர்கட்காக வாராந்தக் கூட்டங்களை நடத்தினார். அக் கூட்டங்களில் திருப்பலியின் உள்ளுறைந்திருக்கும் உன்னத உண்மைகளை, பலியின் மகத்துவம், வரலாறு, கல்வாரிப் பலி யுடன் இணைந்திருக்கும் இணைபிரியா உறவு போன்ற முக்கிய அம் சங்களை அவர்கட்குத் தெளிவுபடுத்தினார். தியாக்கோன்கள். அர சர், பிரபுக்கள் போன்றோரின் சிறப்புடன், பீடப்பணியாளரின் மகத்துவங்களை ஒப்பிட்டு விளக்கினார். சம்மனசுகள் போட்டியிட்டு அணுகமுனையும் திருப்பீடத்தண்டை பீடப்பணியாளர் நிற்பதற்கு எத்துணை பாக்கியம் பெற்றவர் என்பதனை படுக்கையிலிருந்து கொண்டே அவர் மனதில் பதியவைத்தார். பீடப்பணியாளரின் பாதுகாவலர் புனித ஞானப்பிரகாசியாரின் வாழ்வு நெறியை ஒட்டி அவரை முன்மாதிரிகையாகக் கொண்டு வாழ அவர்களை ஊக்குவித் தார்.

இப் பன்னிரு மலர்களைத் தொடர்ந்து பீடப்பணியாளர் சபை என்ற பணித்தோட்டத்தில், கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக மலர்ந்த, மலரும் ஆயிரக்கணக்கான மலர்களனைத்தும் பிளஸ்லோ அடிகளின் கட்டில் கல்வாரித் தாந்தரிகத்தின் உந்துசக்தியைப் பின் னணியாகக் கொண்டவை என்பது உண்மையன்றோ!

1894 ல் மருத்துவ சிகிச்சைக்காக அடிகளார் ஐரோப்பாவுக்குச் சென்றார். உடற்சுக நிலையில் எவ்வித முன்னேற்றமுமின்றி, இரண்டு வருடங்களின் பின் அவர் யாழ்மண்ணுக்கே திரும்பினார். கப்பல் மூலம் மண்டைதீவை வந்தடைந்த அடிகளாரை, குருநகர் யாகப்பர் ஆலய இளைஞர்கள் அலங்கரிக்கப்பட்ட வள்ளத்தில் அழைத்து வந்தனர். அடிகளை அன்போடு அழைத்து வந்த இளை ஞர்கள், இரவுப் பாடசாலை அங்கத்தவர் ஆவர்.

18

மீண்டும் கட்டில் கல்வாரியில் தம்பணியைத் தொடங்கிய பிளஸ்ஸோ அடிகள் தம் இருப்பிடத்தை இறைமகனின் நற்செய்தியை அறிவிக்கும் பிரசங்க கூடமாக்கினார். நல்வாசிப்பின் நற்பயன்களை நன்கறிந்த அடிகள் தமது அறையின் முன்பகுதியை ஒரு நூலகமாக்கினார். வாசிப்பதற்காக எடுத்துச் செல்லப்படும் நூலின் சாரத்தை, திருப்பிக் கொடுக்கும்போது கூறச் சொல்லுவார், தரமான நூல்களை வாசிக்குமாறு அறிவுரை கூறுவார்.

அவரது பணிகள் விரிவாக்கப்பட்ட போதிலும் பீடப்பணியாளர் பயிற்சியை அவர் கைவிட்டவரல்லர். அவரால் உருவாக்கப்பட்ட பீடப்பணியாளர்கள், திருப்பலிக்கு உதவி செய்வதில் மட்டுமல்ல. நல்லறிவும், பரந்த ஞானமும், புத்திக் கூர்மையும் உடையவர்களாக கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்கவர்களாக நற்பிரஜைகளாக விளங்கினர் என்பது இங்கு குறிப்பிடுதற்குரியது.

நற்கருணைப்பக்தி, தினசரித் திருப்பலி, செபமாலைப்பக்தி, திருமுகப்பக்தி முதலிய பக்திக் கிருத்தியங்கள் யாழ் மண்ணில் பரவிப் படரத் தம் சொல்லாலும் எழுத்தாலும் பணியாற்றினார். மரியன்னையின் உத்தரியத்தை மக்கள் அணிவதிலும், பக்தி கொள்வதிலும் அவர் அயராது ஊக்கமெடுத்தார்.

யாழ் திருச்சபையின் மேய்ப்புப்பணி வரலாற்றில் கட்டிலில் இருந்தபடியே, இறையரசைப் பரப்பிய பிளஸ்ஸோ அடிகளார் 1921 ஏப்ரல் 21 ல் இறைவனடி சேர்ந்தார். [54]

''இந்த மண்ணின் பாலரும் வாலரும், இளைஞரும், முதியோரும் தங்கள் கல்வி வளங்களுடன், தொழில் முறைகளுடன் ''ஒருவன் இந்த உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தன் ஆத்துமத்தை இழந்துபோனால் பிரயோசனமென்ன'' என்ற அரிய தத்துவத்தை உணர்ந்து தம்வாழ்வை அமைத்துக்கொள்ள வழிகாட்டிய குருசோ சகோதரரையும் பிளஸ்ஸோ அடிகளையும் யாழ் மண் என்றுமே மறந்து விடாது.

சஞ்சூசையப்பர் சந்நியாச சபை:

கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் கிறிஸ்தவ விசுவாசத்தை நிலைநாட்ட, புதுப்பிக்க, புத்துயிர் அளிக்க, அவ்வப்போது மகான்கள் உருவாக்கப்படுவர். புதுப்புது முயற்சிகள், தளங்கள், இயக்கங்களும் உருவாக்கப்படும்.

குருசோ சகோதரர், பிளஸ்ஸோ அடிகள், தனித்துவம் வாய்ந்த மகான்களாக யாழ் திருச்சபைக்கு உரமூட்டிய காலத்தில், யாழ்

திருச்சபை அன்னைக்கு அணிசூட்டி அலங்கரித்து அவள் பெருமையை அனைத்திலங்கையிலும் பரப்பிய பெருமை, இலங்கைச் சஞ்சூசையப்பர் சந்நியாச சபை, யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி ஆகிய இரு அமைப்புகளையே சாரும்.

ஆங்கிலத்துக்கும் உயர்கல்விக்கும் புனித பத்திரிசியார் கல்லூரி அளப்பரும் சேவையாற்றிக் கொண்டிருக்க, தமிழ் மொழிக்கும், பாமர மக்களின் கல்விக்கும், தொழிற்பயிற்சிக்கும் சஞ்சூசையப்பர் சந்நியாச சபை அருந் தொண்டாற்றியது. ஆயர் பொஞ்சீன் காலத்தில் பிறந்து, ஆயர் மெலிசன் காலத்தில் தவழ்ந்து, ஆயர் யூலன் காலத்தில் வீறுநடை போட்டு ஆயர் புறோ காலத்திலும் ஆயர் கியோமார் காலத்திலும் தொடந்து கொண்டிருந்தது.

கத்தோலிக்க தமிழ்த் திருச்சபைக்கு, அதன் தாந்தரிக ஆதிமரபிலிருந்து ஓர் உயிருள்ள விசுவாசத் தலைமுறையைத் தந்த, தந்து கொண்டிருக்கும் சபை இது. 55

1864 ம் ஆண்டில் இருவருடன் கொழும்புத்துறையில் ஆரம்பிக்கப்பட்ட இச்சபை இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் பரவியது. கொழும்புத்துறையில் சாதனா கழகம், போதனாகழகம், அச்சகப் பாடசாலை, தச்சுத் தொழிற்சாலை, நெசவுத் தொழிற்சாலை, கொல்லமால், மரக்கறித் தோட்டம், தென்னந்தோட்டம், நெல் வயல் போன்ற சுதேச உணர்வுகளை, உழைப்புகளாய் உருவாக்கிய சபை இது.

கொழும்புத்துறையில் அமைந்த இயற்கை வனப்புத் தந்தவை கடற்காற்றின் சுகம், வயல்களின் பசுமை, பரந்த பார்வை, தென்னஞ்சோலை, கற்பகச்சோலையின் குளிர்மை, இனிமை, பறவைகள் பாடும் இசை இனிமை, துண்டிப் பற்றைக் காட்டின் கனப்பு, அதனிடை இருந்த மயானத்தின் எச்சரிப்பு, கடற்கரை சொல்லும் கதைகளின் களிப்பு, கசப்பு, இது மாத்திரமா! இங்கிருந்து மேற்குப் புறமாக பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் அருள்வளம், இத்தனையும் ஒருங்கு திரண்டு, இச்சபையின் துறவிகளை அன்புக் கரம் நீட்டுபவர்களாக, இனிய இதயம் உடையவர்களாக உருவாக்கியது.

இதனால் இலங்கைத் தாயின் இனிய புதல்வர்கள் பல திக்கிலும் இருந்து இங்கு வந்து குவிந்தனர். பாலரும் வாலரும் ஏதோ ஒரு துறையில் பிற்கால வாழ்வுக்குரிய வளமான கல்வியையும் மட்டுமல்ல தொழில்வளப் பயிற்சிகளும் பெற்றனர்.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சிமுறை நிலவிய காலம்; வியாபாரம், பணம் என்பன முன்னுரிமை பெற்று, முயற்சிகளை முடுக்கி விட்ட வேளை; மலையாக நிலங்கள், வளங்கள், வளர்ச்சி என்ற வருடலால் சூறையாடப்பட்டன. இங்குள்ள தேயிலை, ரப்பர் தோட்டங்களில் மாடாக உழைக்க, தென்னிந்திய அப்பாவித் தமிழ் மககள் அழைத்து வரப்பட்டனர். காலனித்துவ செழிப்புக்காக இந்த மண் தாரைவார்க்கப்பட்டது மனித உழைப்பு உறிஞ்சப்பட்டது. இதேவேளை காலனித்துவ வணிகத்தின் வளர்ச்சிக்காக, வீதிகள், துறைகள், ஆலைகள், தோட்டத்துரைத்தனம், வணிக ஏற்றுமதி இறக்குமதி, கணக்கீட்டு வங்கிகள், போக்குவரத்து வேலைகள் போன்ற தொழில்கள் தோன்றின. இவற்றின் இயக்கத்துக்குத் தேவையான லிகிதர்கள், அரச ஊழியர்கள் ஆங்கிலம் கற்க வேண்டிய கட்டாய தேவை உருவாகியது இதனால் ஆங்கில நிர்வாகத்தின் கீழ் தொழில் புரிய, சுதேசிகள் ஆங்கில பாடசாலைகளை நாடினர்

முதலில் புரட்டஸ்தாந்த சபையினரும் தொடர்ந்து, கத்தோலிக்க, சைவ, இஸ்லாமிய, பௌத்த மதத்தவரும் தத்தம் ஆங்கில பாடசாலைகளை ஆரம்பித்தனர். புரட்டஸ்தாந்தத்தினூடாக ஊடுருவிய மேற்கத்திய கலாச்சார விழுமியங்கள், படிப்படியாக ஏனைய மதங்களினூடாகவும் உள்ளிட்டன.

இவ்வித ஆங்கில ஆதிக்க அலைக்கூடாகவே சஞ்சூசையப்பர் சபை, சுதேசியத்தை மண்ணின் மைந்தர்களிடையே இழையோடச் செய்து வெற்றியும் பெற்றது.

தமிழ் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், கலை கலாச்சாரம், மரபு வாழ்க்கைமுறை, கிராமிய மண் வாசனைகள் அனைத்தையும் அன்று எழுந்த ஆங்கில ஆதிக்க அலையிலிருந்து காத்து வாழவைத்த பெருமை, சஞ்சூசையப்பர் சந்நியாச சபையையே சாரும் இங்கிருந்து உருவாக்கப்பட்டவர்கள், தமிழ் மண்ணின் வாழ்வை, வளத்தைக் கட்டிக் காத்தனர். பலர் வழிகாட்டிகளாக வாழ்ந்தனர். இவர்களில் பலர் யாழ்ப்பாணத்தின் பண்டைய கிராமங்களான அளவெட்டி, அச்சுவேலி, நல்லூர், தும்பளை, கரவெட்டி, நாரந்தனை, இளவாலை, புங்குதீவு, கிளாலி, அல்லைப்பிட்டி, ஏழாலை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

இச்சபையிடம் இவர்கள் உள்வாங்கி, உள்ளடங்கிக்கிடந்த தாந்தரிக மரபுகள், பின்னர் இவர்களது வாழ்வில் பீறிட்டு வெளிவந்தன. இம்மனிதர்களின் உணவு, உடை, செயல், சொல், எழுத்து, அனைத்தும் சுதேசியமாகவே இருந்தன. இவர்களால் தமிழுலகுக்

குத் தரப்பட்ட கதை, கவிதை, கட்டுரை, நூல்களும் இம் மண்ணின் வாசனையையே கொண்டிருந்தன.

சஞ்சூசையப்பர் சபை, உத்தம கத்தோலிக்க ஆசிரிய மணிகளை உருவாக்கியது. மண்ணின் மைந்தர்களை, பண்பாட்டுச் செல்வங்களாக ஆக்கியது. நல்வாழ்வு வாழும் நல்ல குடிமக்களைப் பிறப்பித்தது. இம்மண்ணில் பாசம், பற்றுடைய எழுத்தாளர்கள், கவிஞர்கள், சிந்தனையாளர்களைத் தந்தது. P. M. ஞானப்பிரகாசம், கரம்பொன் 'யுவன்', பண்டிதர் க. த ஞானப்பிரகாசம், பண்டிதர் ஆசிநாதர், வித்துவான் ச. அடைக்கலமுத்து, மதுரகவி யாழ் ஜெயம், வெளியீட்டாளர் அச்சக உரிமையாளர் M. V. ஆசீர்வாதம் முதலிய பல முத்துக்களும் சஞ்சூசையப்பர் சபையால் தரப்பட்டவர்களே.

ஆங்கிலக் கல்வி கற்று, ஆங்கில உடை உடுத்தி உத்தியோகம் பார்த்தோர் கிறிஸ்துவுக்குச் சாட்சி கூறத் தயங்கி நின்றபோதும், சஞ்சூசையப்பர் சபையால் உருவாக்கப்பட்டோர், தத்தம் பங்குகளில் மக்களை வழி நடத்துவோர்களாக, விசுவாசத் தூண்களாக, தலத் திருச்சபைக்கு உதவுவோர்களாக வாழ்ந்தனர், வாழ்கின்றனர்.

சஞ்சூசையப்பர் சபையிலிருந்து புறப்பட்ட விசுவாசக்கதிர்கள், புதிய கிராமங்களைப் புத்தொளி பெறச் செய்தன. சூராவத்தை, ஏழாலை போன்ற கிராமங்களில் இச்சபையின் கதிர்களின் உள்ளீட்டால், கத்தோலிக்க ஆசிரியர்கள் நற்செய்திப்பணியை நன்கு செய்தனர். பிறசமய ஆசிரியர்கள் மனமாற்றம் பெற்றனர் இக் கதிரின் ஊடுருவலால் இளவாலைக் கன்னியர்மடம் விசுவாசத் தளமானது.[56]

புனித பத்திரிசியார் கல்லூரி:

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி கத்தோலிக்க மக்களிடையே ''இறை பற்றும் உழைப்பும்'' கொண்ட மத்தியதர வர்க்கத்தினரை, ஆங்கில அறிவுடன் உருவாக்கியது; ஐரோப்பிய மதிப்பீடுகளைக் கற்றுக் கொடுத்தது. ஆங்கிலக் கல்வியில் ஆற்றல் பெற்று, பரீட்சைகளில் திறமைச் சித்தி பெற்ற பெருங் கல்விமான்களை உருவாக்கியது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்க, நல்வாழ்வுக்குரிய, தியாக சிந்தை மிக்க சிறந்த மக்களை இந்நாட்டுக்கு அளித்தது,

தேவ அழைத்தலுக்கு அடித்தளம் இட்டு, அன்னையாம் திருச்சபைக்கு, பல குருக்களைக் கொடுத்தது. இக்கல்லூரியின் பெருமையறிந்து ஏனைய இன. மத மாணவரும், இலங்கையின் பல பகுதிகளிலிருந்து இங்கு வந்து கல்வி கற்றனர்.

இக் கல்லூரியின் அதிபர்களின் சிறப்பு மிக்க ஆளுமை, கல்லூரி மாணவர், ஆசிரியரின் உள்ளங்களை மட்டுமல்ல இந்நாட்டு மக்களின் மனதையுமே நன்கு தொட்டது. கொலின் அடிகள், கொன்சீவ சகோதரர், கியோமார் அடிகள் மத்தியூஸ் அடிகள் லோங் அடிகள் போன்ற மாமேதைகள் இக் கல்லூரியில் கற்பித்தும், முதல்வர்களாக அதை நன்கு நெறிப்படுத்தியும், இந்நாட்டின் முதன்மையான கல்லூரி அதிபர்களாகத் திகழ்ந்தனர். ஐரோப்பிய, சிறப்பாக ஐரிஷ் கத்தோலிக்க ஆழ்ந்த பக்தி, பண்புகளை யாழ் திருச்சபையில் இவர்கள் ஆழப்பதித்தனர்.

கல்லூரி மாணவரின் விசுவாசத்தை ஆழமாக உறுதிப்படுத்த தினசரி காலையில் செபமாலை ஓதுதல், முதல் வெள்ளிப்பக்தி அனுசரித்தல், ஞாயிறு காலையில் திருப்பலியும் மாலையில் நற்கருணை ஆசீர்வாதமும் வருடாந்த ஆசிரியர், மாணவர் ஞானவொடுக்கங்கள் போன்ற பலமுற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆயர் J. A. புறோ

இவரது காலம் மிகக் குறுகியது ( 1919 — 1923 ) கத்தோலிக்க கல்வி வளர்ச்சிக்காக இவர் வகுத்த திட்டங்கள் நிறைவேறாமை வருத்தத்துக்குரியது இவரது பணிகளுள் மூன்று விடயங்கள் முக்கியமாக நோக்கப்பட வேண்டியவை.

முதலாவது புறோ அடிகள், கொழும்பு பேராயரின் குரு முதல்வராக, ஆற்றிய பணி.

இரண்டாவது றோமன் கத்தோலிக்க பாடசாலைகட்காகப் போராடி அவற்றின் தரத்தை உயர்த்தியதும், பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்த T. M. F. லோங் அடிகளை கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி உயர் கல்வி பெற வைத்ததும் ஆகும்.

மூன்றாவது, 1ம் உலக மகாயுத்தத்தின் பின் ஏற்பட்ட நிதித் தட்டுப்பாடு காரணமாக மேற்கத்திய உதவிகள் குறைவுபட்டதாலேற்பட்ட நிலமையை நிவர்த்தியாக்க, இம் மறைமாவட்டத்தை தன் சொந்தக் காலில் நிற்கப் பழக்கியெடுத்ததாகும். 1922 மே 25 ல் அவர் எழுதிய ஆயர் மடலில் ''உங்கள் குருக்களின் சமய, சகோதர, அன்புச் சேவைகளுக்கு, நீங்களே உங்கள் பகுதிகட்கு உதவுங்கள்'' எனக் குறிப்பிட்டிருந்தமை இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது.

1922 ல் ஆயர் புறோ ஆண்டகையின் பணிக்காலத்தின் முக்கிய நிகழ்வுகளாக மூன்று, மூன்றாம் நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

1. புனிதர் பிரான்சிஸ் சவேரியாரின் புனிதர் பட்டமளிப்பு.
2. 1622ல் மரியன்னைக்கு யாழ் இராச்சியத்தை அர்ப்பணித்த நிகழ்வு.
3. விசுவாசப் பரப்புதல் சபை நிறுவப்பட்ட விழா.

இம் மூன்று முக்கிய நிகழ்வுகளையும் நினைவு கூருமுகமாக 1922 ஆவணி 15ல் யாழ் பேராலயத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா சொரூபம், யாழ்நகர வீதிகளில் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது.[57]

ஆயர் கியோமார்:

1950ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், ''சத்தியவேத பாதுகாவலனில்'' உள் பக்கத்தில், யாழ் ஆயர் பதவியிலிருந்து ''யோண் அல்பிரட் கியோமார்'' ஆண்டகை, இளைப்பாறுவதாகவும், அவர் ''அசாவா'' கௌரவ ஆயராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், யாழ் மறைமாவட்டத்தின் பொறுப்புகளை துணை ஆயர் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை ஏற்றுக் கொள்வார் எனவும் ஒரு உத்தியோகபூர்வமான அறிவித்தல் காணப்பட்டது.

1956ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ''சத்திய வேத பாதுகாவலனின்'' முன்பக்கத்தில் ஆயர் கியோமாரின் மரண அறிவிப்பும், கறுத்தக் கோடுகளிடையே சில அஞ்சலிக் கவிதைகள், கட்டுரைகளும் காணப்பட்டன. ஆசிரியர் தலையங்கம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. யாழ்ப்பாணத்தின் ஏழாவது ஆயர், மௌனியாகி, தான் திட்டமிட்டு, ஆரம்பித்து, முக்கால் பகுதியே கட்டி முடிக்கப்பட்டிருந்த ஆசனக் கோவிலின் பீடத்தருகே சமாதியில் வீற்றிருந்து கொண்டு, கடந்த ஆறு ஐரோப்பிய மேய்ப்பர்கள், பெற்றக்கினி, சமேரியா, மெலிசன், பொஞ்சீன், யூலன், புறோ ஆகியோரினதும் தம்முடையதுமான நூறு வருடங்களையும், (1850 — 1950) வரப்போகும் மூன்றாம் மிலேனியத்தையும் பார்த்துக்கொண்டு யேசுவில் துயில் கொள்கிறார்.

26 ஆண்டுகளை உள்ளடக்கிய அவரது மேய்ப்புப்பணி, அவருக்கு முன்னிருந்த யூலன் ஆயரின் 26 வருடங்கள் போன்று செழிப்பு மிக்கவை. யூலன் கர்மவீரர், கியோமார் தியான யோகர், கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் வரலாற்று. மொழியியல் அறிஞர்களின் கீழ் பயின்று பாண்டித்தியம் பெற்றவர் கியோமார்.

முதலாம் உலக மகாயுத்தத்தில் உதயமாகிய நவீன ஆயுதப் போரின் பயங்கரத்தையும், வரலாற்றுப் பாடங்களையும் அவற்றின் தொடர்ச்சியையும் ஊகித்துணர்ந்தவர். பத்திமாவில் தேவதாயின்

தீர்க்கதரிசனங்களை நன்குணர்ந்து ருசிய கம்மியூனிஸ்த புரட்சியையும், அதன் சர்வதேச பரவலாக்கத்தையும். ஸ்ராலின் ஆரம்பித்த சர்வாதிகாரத்தையும் ஐரோப்பிய நாஸ்திகம், பாஸீஸம் என்பவற்றின் ஊடுருவல்களையும் நற்செய்தியின் விழுமியங்களின் ஒளியில் அவதானிக்கத் தொடங்கினார்.

பத்திமாவில் தேவதாயின் தீர்கதரிசன வாக்கொளியில் வரப்போகும் 2ம் உலக மகாயுத்தத்தையும், கிட்லர் முதலியோரின் இன அழிப்பையும், ஒரு அணுக்குண்டு யுகம் எதிர்நோக்கப்படுவதையும். அதன் படுகொலைகளையும் பயங்கர அழிவுகளையும் உணர்ந்து தன்னுடன் யாழ் திருச்சபையின் ஏழு ஆயர்களின் பொற்காலம் அஸ்தமித்து, வரப்போகும் ''இறுதி'' அழிவு கால வேதனைக்கு தன்னைத் தயார் படுத்த முனைந்தார்.

இவரது இப்பார்வையின் மையம் அமல உற்பவ இராக்கினியாகும், இதனாலேதான் பத்திமாவின் காட்சிகள் பற்றி, ஒரு சுற்று நிருபமே இம்மண்ணில் எழுதிய முதல் ஆயர் இவர்தான். 1950ம் ஆண்டு மே மாதம் 4ந் திகதி ''சத்தியவேத பாதுகாவலனில்'' வெளிவந்த இந்நிருபத்தில் செபம், செபமாலை, தபம், நிந்தைப் பரிகாரம், மரியாயின் மாசற்ற இருதயத்துக்கு உலகு ஒப்புக்கொடுக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி குறிப்பிட்டுள்ளார். இந் நிருபத்தை 1950 யூன் மாதத்தில் யாழ் மறை மாவட்டத்தில் பவனி வரவிருக்கும் ''யாத்திரைக் கன்னி பத்திமாவை'' வரவேற்கும் நிருபமாக மட்டும் நாம் கருத்தில் கொள்ள முடியாது. ஆயர் கியோமாரின் மேய்ப்புப் பணியின் உச்ச நிலைச் செய்தியாகவும், பிரியாவிடைச் செய்தியாகவுமே கொள்ளல் வேண்டும்.

பத்திமா யாத்திரைக் கன்னியின் திருச்சுரூபம் யாழ் மறைமாவட்டத்தின் பல முக்கியபங்குகளினூடாகச் சென்று, இம் மண்ணுக்கு விடியப்போகும் சிலுவையின் பாதைக்கு. செபம், தபம், நிந்தைப் பரிகாரச் செபம், பரித்தியாகம் முதலியவற்றால் தயார் செய்து அன்னையின் மாசற்ற இருதயத்துக்கு ஒப்புக் கொடுக்க அவரை ஊக்குவித்தது. 58

இத் தீவில் ஐம்பதுகளிலே நாடு சுதந்திரம் பெற, மக்கள் ஐக்கிய முன்னணி (M.E.P.) 1956 களில் கொண்டு வந்த சிங்கள பேரினவாதம், தனிச் சிங்கள மசோதா ஏற்படுத்திய அலைகள். அழிவுகள். மிசனரிகள் வெளியேற்றம், பாடசாலைகள் தேசிய மயமாக்கப்படல், திருச்சபையின் போராட்டங்கள். இவற்றின் பின் அறுபதுகளில் வந்த தமிழின அறவழிப் போராட்டங்கள், எண்பது தொண்ணூறுகளில் வரும் ஆயுதப் போராட்ட அழிவுகள், கண்ணீர் இரத்த வெள்ளத்தின்

மத்தியிலும் அவர் முன்வைத்த தேவதாயின் வாக்கே, எம் மீட்பு, எம் சமாதானம்.

ஆயர் கியோமார், தன் பணிவாழ்வில் பலவற்றைச் சாதித்தார். கல்விக்கூடங்களின் விருத்தி, மருதமடுப் பகுதியின் அபிவிருத்தி, சுதேச குருக்களின் கல்வி, ஆன்ம வளர்ச்சி, அரச மருத்துவ மனைகளில் பணியாற்ற வெளிநாட்டுத் துறவினிகளை வரவழைத்தல், தோலகட்டியில் தவத்திரு தோமஸ் அடிகளூடாக செபமாலைத் தியான சபை ஆரம்பித்தல், இல்லறத்தாருக்கான மகாஞான ஒடுக்கங்கள், மறைக்கல்வி வளர்ச்சி, 1939 ல் சற்பிரசாத சமாகமம் (நற்கருணை மகாநாடு) கிறிஸ்துவை அறியாதோருக்கு நற்செய்திப்பணி, இல்லற அப்போஸ்தலிக்கத்தை வளர்க்க பல பக்திச்சபைகள், விசேடமாக மரியாயின் சேனை, தவத்திரு ஜெலான்ட் அடிகளூடாக, பண்டத்தரிப்பு பத்திமாகிரியை மையமாக வைத்து ஏற்படுத்தப்பட்ட மரியாயின் மாசற்ற இருதயப்பக்தி என அவரது பணிகளின் பட்டியல் கூறுகிறது.

26 வருட நீண்டகாலப் பணிக்கு, ''இறுதியில் என் மாசற்ற இருதயம் வெல்லும்'' என்ற தேவதாயின் (1917 பத்திமா) வாக்கில் நம்பிக்கை கொண்டு, ஆண்டவரே! நீரே என் நம்பிக்கை'' என்ற மந்திரத்தை, விருதில் பதித்து யாத்திரை செய்து, பத்திமா அன்னையின் சொரூப வருகையோடு தம்பணியை நிறைவு செய்தார், ''மெல்லெனப் பாயும் தண்ணீர் போல, அமைதியாய், சாதுரியமாய், அருமையான பல காரியங்களைச் சாதித்திருக்கிறார்'' என்று ''சத்திய வேத பாதுகாவலன்'' ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியது எவ்வளவு பொருந்தும்! [59]

மடுத் திருப்பதி:

ஆயர் கியோமாரின் பணி, தேவதாயுடன் தொடங்கி, அவளுடன் முடிவுற்றது. இரு ஆயர்கள் நிறைவேற்ற ஆசித்ததை, அன்னையின் திருச்சுருபத்துக்கு பாப்பரசரின் பிரதிநிதியைக் கொண்டு முடி புனைவிப்பதை, நிறைவேற்றி வைத்தார் 1924 யூலை 2 ல் ஒருலட்சத்து ஐம்பதினாயிரம் விசுவாசிகளும் ஐம்பதுக்கு மேற்பட்ட குருக்களும் பக்திபரவசத்துடன் இம் முடிசூட்டுவிழாவில் பங்குபற்றினர். 1948 ல் அமலமரித் தியாகிகள் இலங்கை வந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாட, இம்மறை மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு விசாரணைப் பங்கிற்கும் தபச் சுற்றுப்பிரகாரமாக மருதமடு அன்னையை மார்ச் 15 முதல் மே 5 வரை கொண்டு செல்ல வழிவகுத்து.

மக்களை மனமாற்றத்துக்கு அழைத்து இறையேசுவின் அரசில் பெருந் திரளாக இணையச் செய்தார்.

அன்னை முன் கொண்டு செல்லப்பட்ட பாடுபட்ட திருச் சிலுவையைச் சுட்டிக்காட்டி, இதிலேயே அவரது ஆயர் பணி முடிவடையும் என்றார்.

மடுப்பதியில் இன்று காணப்படும் யாத்திரிகர் வதிவிட அமைப்பு, முகப்பிலுள்ள அலங்கார மண்டபம், திருப்பீடம், மின் அமைப்பு, நிரந்தர வதிவிடங்கள், ஒலிபெருக்கி அமைப்பு, குளியல் தொட்டிகள் முதலியன அவரது நிர்வாகத்தில் அமைக்கப்பட்டவையே.

1927 மே 6 ல் இலங்கையின் முதற் கத்தோலிக்க ஆளுநரான சேர். கியூ கிலிபேட், மடுப்பதிக்கு யாத்திரையாக வந்தார். யூன் 27 ல் வண. லெகுத்தோர், வண. மோறோ ஆகியோர் மடுப்பதியில் இறைவனின் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். மகாஞான ஒடுக்கங்களும் தர்க்கப்பிரசங்கங்களும் மடுவில் மனமாற்றங்களையும மதமாற்றங்களையும் கொண்டுவந்தன.

1950 ஆவணித் திருநாளின் பின்பே கியோமார் ஆண்டகை தம் அரும்பெரும் பணியிலிருந்து விலகினார். மடுப்பதியில் ஏறத்தாழ 40,0000 மக்கள் குடியிருந்த இடத்தில் (இத் திருநாளின் போது) குளிப்பதற்குத் தண்ணீர் இல்லாமற் போனது. இரு புதிய கிணறுகள் மாத்திரம் குடிக்க நீர் தந்தன. வரப்போகும் ஆன்மீக வரட்சியின் முன் அடையாளமாக அமைந்ததோ இவ்யாத்திரை?[60]

சுதேச குருக்களின் உருவாக்கம்:

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலிருந்து திரும்பியதும் புனித பத்திரிசியார் கல்லூரியை தரம் உயர்த்தி, சர்வகலாசாலை மட்டத்துக்கு கொண்டுவர அவர் கண்ட கனவுகள் 1924 ல் ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டதனால் தடைபட்டபோதிலும், தாம் அதிபராக பணியாற்றியபோது ஆயர் புறோ ஆண்டகைக்குச் சிபார்சு செய்து. கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்துக்கு உயர்கல்வி பெற அனுப்பிய தவத்திரு லோங் அடிகள் மூலம் இக் கல்லூரி சம்பந்தமான தம் கனவுகளை நனவாக்கினார்.

பின்னர் சுதேச குருக்களான P. J. ஜீவரத்தினம், வண. L. A. சிங்கராயர், வண. S. யோசவ் ஆகியோரையும் தொடர்ந்து வண. அல்பிரட், வண. அன்ரொனைனஸ், வண. அருள்நேசன் ஆகியோரையும் இங்கிலாந்து, அயர்லாந்து முதலிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கட்கு அனுப்பி, கலைமாணி முதுமாணிப் பட்டதாரிகளாக்குவித்தார். பிலிப் பொன்னையா அடிகளை திருமறைச் சட்ட

கலாநிதியாகவும், ஆயர் இயோகுப்பிள்ளை, வண. கருணாகரர், வண. பாவிலுப்பிள்ளை ஆகியோரை இறையியல் மெய்யியல் வல்லு நர்களாகவும் ரோமையின் பல்கலைக் கழகங்கட்கு அனுப்பிப் பயிற்று வித்தார். இவ்வித உருவாக்கல்களால் தமது மறைமாவட்டம், கல்வியிலும், மறையறிவிலும் கைதேர்ந்த தன் மண்ணின் மைந்தர் காலில் ஊன்றி நிற்கச் செய்தார்.

1921ம் ஆண்டு தொடக்கம் அவர் புனித மாட்டீன் குருமட அதிபராகவும் பணியாற்றி, ஒவ்வொரு குரு மாணவனின் கல்வி யிலும் ஆன்மீக வாழ்விலும் அக்கறை காட்டினார். அவரது காலத்தி லேயே (1922) புனித பத்திரிசியார் கல்லூரி, பிரித்தானிய இராச்சி யத்திலேயே, லண்டன் ''மெட்ரிக்குலேஷன்'' பரீட்சையில் முத லிடம் பெற்றது. அவர் காலத்திலிருந்து 1950 வரை இக் கல்லூரி யின் பரிசளிப்பு விழாவில், பல குரு மாணவர்கள் முன்நின்றமை, மாட்டீனார் குருமட நூல்நிலையம் சொல்லும் கதை.

பண்டத்தரிப்புப் பத்திமாபதி :

ஈழத்து மண்ணில் தமிழ் பேசும் சமூகத்தாரிடையே மரியாயின் மாசற்ற இருதயப்பக்தி பிரபல்யமடைவதற்கு அமரர் கென்றி ஜெலான்ட் அடிகளாருக்கு உந்து சக்தியும் ஊக்கியாகவுமிருந்தவர் ஆயர் கியோமார் அவர்களே.

போர்த்துக்கேய பத்திமாபதியில் 1917 களில் மரியன்னை தந்த தரிசனங்கள் 1930 களில் திருச்சபையின் அங்கிகாரத்தைப் பெற்றன. இதைத் தொடர்ந்து குறுகிய காலத்துள் (1945 களில்) பண்டத் தரிப்பில் பத்திமா திருத்தலம் நிறுவப்பட்டு, மாசற்ற இருதயப்பக்தி, சுடர் விடத் தொடங்கியது.

பண்டத்தரிப்பு, போர்த்துக்கேயர் காலத்திலிருந்தே முக்கியத்து வம் வாய்ந்த கேந்திர நிலையமாக விளங்குகிறது. இங்கு கிழக்கெல்லை யில் கலட்டி – விளாவெளி என்றழைக்கப்பட்ட பகுதியில் போர்த்துக் கேயரின் முகாம் ஒன்றின் முற்றத்தில் இளங்கன்றாக நாட்டப்பட்ட தாக பாரம்பரியமாக கூறப்படும் இராசமுருக்கு என்ற மரம், இம் மண்ணின் முதுபெரும் விருட்சங்களுள் ஒன்றாக, பேய்பூதங்கள் உறையும் தலமாக, பண்டத்தரிப்பு மக்களால் ஒதுக்கப்பட்ட தலமாக விளங்கியது.

சில்லாலை பண்டத்தரிப்பு பங்குத்தந்தையாகப் பணிபுரிந்த அமரர் கென்றிஜெலான்ட் அடிகளை இம் ''முதிர்ந்த இராசமுருக்கு'' ஈர்த்தி ழுத்தது. மரியாயின் மாசற்ற இருதயப் பக்தியையும், பத்திமா தரி சனங்களையும் தமிழ் மண்ணில் பரப்ப போர்த்துக்கேய பத்திமாவில்

தேவதாய் காட்சி தந்தபோது அவள் திருப்பாதங்களைத் தாங்கி நின்ற கார்வாலி மரமாகவே இராசமுருக்கு, ஜெலான்ட் அடிகளின் சிந்தனையைத் தொட்டது.

ஜெலான்ட் அடிகள், ஆயர் கியோமாரின் ஆசியும் அனுமதியும் பெற்றார். கல்லும் முள்ளும் நிறைந்த கலட்டிப்பகுதி மரியன்னை யின் பக்தர்களால் திருத்தியமைக்கப்பட்டது. இராசமுருக்கு மரமும் சூழலும் அடிகளால் ஆசீர்வதிக்கப்பட்டு அப்பகுதி ''பத்திமாகிரி'' என்ற புதிய பெயரால் அழைக்கப்பட்டது. அங்கு ஒரு கொட்டிற் கோவிலும் நிறுவப்பட்டது.

1945 டிசம்பரில் லொறற்றோ அன்னையின் திருநாளில், மாசற்ற இருதயநாயகியின் சொரூபம், சில்லாலை, கதிரை அன்னை யின் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு, திருமறைச் சடங்கானுசாரப்படி புதிய கோவிலில் (பத்திமாகிரி) நிறுவப்பட் டது.

தொடர்ந்து, பத்திமா செய்திகளும் மரியன்னையின் அறிவுறுத் தல்களும் அறிவிக்கப்படும் தலமாக பத்திமாகிரி விளங்கியது. அன்னையின் அருள்வளங்களை அடியார்களுக்கு அள்ளியள்ளி வழங் கும் திருத்தலமாக அது மாறியது. போர்த்துக்கேய பத்திமாபதியில் தேவதாய் அளித்த காட்சியை, மக்கள் மனதில் பளிச்சிட வைக்க இராசமுருக்கின் பக்கத்தில் ஒரு உயர்ந்த தூபி எழுப்பப்பட்டு, அத னுச்சியில் யாழ்ப்பாணத்தின் பிரபல மேஸ்திரி ஒருவரால், கொங் கிறீற் கலவையினாலமைக்கப்பட்ட, பத்திமா அன்னையின் சொரூபம் நிறுவப் பட்டது.

முதற்சனிப் பக்தி முறைகளும் ஏனைய பத்திமா அறிவித்தல் களும் அனுசரிக்கப்படும் ஒரு திருத்தலமாக பத்திமாகிரி வளர்ந்தது. ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை, மாலை வேளைகளில், வடலிகள் பற்றைக்காடுகளூடாக, சில்லாலை, மாதகல், இள வாலை, பத்தாவத்தை, அளவெட்டி, சண்டிலிப்பாய் முதலிய சுற் றுக் கிராமங்களிலிருந்து செபமாலை செபித்த வண்ணம் வந்து வழி பாடுகளில் பங்கு கொள்ளும் அடியார் தொகை அதிகரித்த வண்ண மிருந்தது. முதற் சனிக்கிழமைகளில் யாழ்குடாநாட்டின் பல பகுதி களிலுமிருந்து அன்னையின் அடியார்கள் யாத்திரையாக வருவர்.

பத்திமா காட்சியின் முதல், இறுதித் தினங்களான மே 13, ஒக் டோபர் 13 ல் அடியார்களின் ஆன்மீக ஒப்புரவாக்கல் வழிபாடு, நற்கருணை எழுந்தேற்றப்பட்டு செபமாலையின் பதினைந்து இரக சியங்களையும் விளக்கமுடன் தியானிக்கும் திருவிழிப்பு, நள்ளிரவுத்

திருப்பலி முதலிய அம்சங்களமைந்த ஆலய விழாக்கள் இடம் பெறும். இவையனைத்தும் அன்னை மூலம் ஆண்டவனிடம் செல்லும் இலக்கை, மையமாகக் கொண்டிருந்தன.

பத்திமா பக்தியைப் பரப்புவதற்காக ''முதிர்ந்த இராசமுருக்கின் குரலொலி'' என்ற காலாண்டுச் சஞ்சிகை ஆங்கிலத்திலும் தமிழிலுமாக வெளியிடப்பட்டது. பின்னர் ''பத்திமாகிரி'' என்ற மகுடத்துடன் மாத இதழாக மலர்ந்தது. அன்னையின் அன்பர்களது செபக் கைத் துணையாக ''மரியாயின் மாசற்ற இருதய அன்பரின் பொக்ஷம்'' என்ற செபச்செண்டு ஒன்று 1947 ல் வெளியிடப்பட்டது. இச்செப நூலின் முதலாம் பகுதியில் செபமாலையின் பதினைந்து தேவ இரகசியங்களின் ''சிந்தனை விளக்கங்கள்'' உண்டு. இவை கியோமாரின் பரவச தியான யோக நிலையில் உருவான சிந்தனைகளாகும் (இச் சிந்தனைகள் பத்திமாபதி செப திருவிழிப்பு விழாக்களில் உபயோகிக்கப்பட்டன.) செப நூலின் இரண்டாம் பகுதியில் மரியாயின் மாசற்ற இருதயப் பக்திக்கான செபங்களும், மூன்றாம் பகுதியில் மாசற்ற இருதய நாயகியின் பக்தி பற்றிய நீண்டகால வரலாறும் அடங்கியுள்ளன.

பத்திமாகிரியிலிருந்து வெளியிடப்பட்ட நூல்களுள் மிகப்பெரியதும் நன்கு வரவேற்கப்பட்டதும் ''அவர்கள் மூன்று சிறுவர்கள்'' என்ற பத்திமா காட்சிகள் பற்றிய வரலாற்று நூலேயாகும். மரியன்னையின் காட்சிபெற்ற மூன்று சிறுவரதும் பரித்தியாக வாழ்க்கையை விபரிக்கும் இந்நூல், கனன் பார்த்தாஸ் அவர்களால் பிரான்சிய மொழியில் எழுதப்பட்டது. பின், அன்றைய பிரசங்க பீரங்கியான கு. ஆசீர்வாதம் அடிகளால் அழகிய தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு ஆயர் கியோமாரின் முன்னுரையுடன் 1949 ல் வெளியிடப்பட்டது.

1948 ம் ஆண்டு இறுதியில் ஜெலான்ட் அடிகளார் தம் பிறந்த நாடான பிரான்சுக்குச் சென்றார். திரும்பி வரும்போது (1949) போர்த்துக்கல் சென்று பத்திமாபதியை தரிசித்தார். அங்கிருந்து ஓர் அழகிய, ஆளுயரமான பத்திமா அன்னையின் சொரூபத்தையும் கொண்டு வந்தார். பத்திமா அன்னையின் பக்தர்கள் பெருந்திரளாக ஒன்று கூடி, இளவாலைக் கன்னியர் மடத்திலிருந்து பத்திமா அன்னையை ஊர்வலமாக அழைத்து வந்தனர். பத்திமாகிரியில் அமரர் J. A. இராசநாயகம் அடிகளார் தலைமையில் விசேட ஜெபவிழிப்பு வழிபாடு நடத்தப்பட்டது. திருப்பீடத்துக்கு மேலாக, தோலகட்டி செபமாலைத்தாசர் சபையால் உருவாக்கப்பட்ட அழகிய கண்ணாடிக் கூண்டில் பத்திமா அன்னை வீற்றிருந்து அடியார்களை ஆட்கொள்ளுகின்றாள்.

பத்திமாகிரி ஒரு பொது யாத்திரைத் தலமாக யாழ் திருச்சபை யால் அனுமதிக்கப்பட்டதும், ஏனைய பங்குக் கோவில்களில் காணப் படும் சாதி, சொந்தம், மூப்பு முறைகட்கும் கிறிஸ்தவ மதிப்பீடுகட்கு அப்பாற்பட்ட பிரச்சனைகட்கும் இடமளிக்கப்படாது அப்பழுக்கற்ற நிர்வாகமாக செயற்பட்டமைக்கும் அன்னையும், அவள் திருக்குமார னும் வரவேற்கும் எளிமை, தூய்மை முதலிய பண்புகள் நிலவியதற் கும் ஆடம்பரமற்ற பக்திமயமான திருவிழா நிகழ்வுகள் இடம் பெற்ற மைக்கும் அதன் நிறுவனர் ஜெலான்ட் அடிகளின் கடமை, கண்ணி யம், கட்டுப்பாடு மிக்க நெறிப்படுத்துகையும், அடிகளாரின் சிந்தனா சக்திக்கும் செயற்திறனுக்கும் ஆசியும் ஆதரவும் வழங்கிய ஆயர் கியோமாரின் தீர்க்கதரிசனம் நிரம்பிய கண்ணோட்டமுமே காரணங் களாகும். [61]

மகான்களின் மறைவு:

ஆயர் யூலன் காலம் தொடங்கி இம்மண்ணின் மைந்தர்கள் சிலர், குருத்துவ அபிஷேகத்துடன் யாழ் திருச்சபையில் அளப்பரிய சேவை ஆற்றினர். மௌனியான கியோமார் காலத்தில் எம்மக்க ளின் – எம் திருச்சபையின் குரல்கள் அவர்களே. 47 களிலும் தொடர்ந்தும் ஒருவர் பின் ஒருவராக சுவாமி ஞானப்பிரகாசர், A. M. பிரான்சீஸ் அடிகள், மருசலின் அடிகள், ஆசிர்வாதம் அடி கள் ஆகியோர் யாழ் திருச்சபையை தவிக்க விட்டு இறைவனடி சேர்ந்தனர். மரிசலின் அடிகள் தர்க்கப் பிரசங்கத்தால் அறியப்பட்ட வர். குடும்பவாசக சபைப் பிரசுரங்களின் பின்னணியிலிருந்து பணி யாற்றியவர். A. M. பிரான்சீஸ் அடிகள் ஆங்கிலத்தில் திறமை மிக் கவர். குருநகரின் பங்குக் குருவாகவும் ஆங்கில ''சத்தியவேத பாது காவலன்'' இதழின் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். குருநகர் சேரி ஒழிப்பும் புதிய வீட்டுத்திட்டமும் உருவாக ஆங்கில பாதுகாவலனில் தம் வன்மையான கட்டுரைகள் மூலம் வாதாடிக் கொண்டேயிருந் தார். அத்துடன் தர்க்கவியல், ஆங்கில ஆசிரியராக புனித பத்திரிசி யார் கல்லூரியிலும் கடமையாற்றினார். இவரது பிரிவு யாழ் திருச் சபைக்கு ஓர் பேரிழப்பு எனினும் ''பாதுகாவலன்'' ஆங்கில ஆசிரி யர் பதவியை அமரர் லோங் அடிகள் கையேற்று, பேரிழப்பில் ஒரு பகுதியை ஈடு செய்தார். சூ. ஆசிர்வாதம் அடிகளார் பன்மொழிப் பண்டிதர். எழுத்து வன்மையும் நாவன்மையும் படைத்தவர். நோய் காரணமாக நடக்க வியலாதபோதும் மூன்று சக்கர வண்டியிலமர்ந்து இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில், மறையுரைகள் அளித் தும், மறைக்கல்விகற்பித்தும், எழுத்து அப்போஸ்தலத்தில் பங்கு கொண்டும் இறை பணியாற்றியவர். இவர்களின் பிரிவு மௌனகுரு கியோமாரின் மனதை வெகுவாக வருத்தியிருக்கும். [62]

சுவாமி ஞானப்பிரகாசர் :

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பணி ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாகும். அவர் குருவாக 1901 ல் திருநிலைப்படுத்தப் பட்டார் 1947 ஜனவரியில் பரமபதமடைந்தார். எனவே பணிக் காலம் 46 ஆண்டுகளேயாயினும் அவர் குருமடத்தில் பயிற்சிபெற்ற இறுதியாண்டுகளில் செய்த பத்திரிகைப்பணி, மறையுரைப்பணி, இறைபணிகளையும் சேர்த்து 50 ஆண்டுக்காலப் பணியாளர் என்று கூறுவது மிகையாகாது.

1901 தொடக்கம் 1926 வரை அவர் மிகுந்த உத்வேகம் கொண்ட ஒரு மிசனரியாக விளங்கினார். இதில் கிறிஸ்துவை அறியாத மக்களிடையே ஆற்றப்பட்ட நற்செய்திப் பணி குறிப்பிடத்தக்கது. ''நற்செய்தியை அறிவிக்காவிடில் எனக்கு ஐயோ கேடு'' என்ற புனித பவுலின் வார்த்தைகளே அவருக்கு ஊக்கிகளாக அமைந்தன. கிறிஸ்துவின் அன்பு அவரை உந்தி 30 க்குமதிகமான கிராமங்களின் ஒடுக்கப்பட்ட ஏழைகளை யேசுபிரானின் விடுதலைக்குள்ளும் மகிழ்ச்சிக்குள்ளும் கொண்டு வந்தது.

அவரது தர்க்கப் பிரசங்கங்கள், மகாஞானவொடுக்க பிரசங்கங்கள், பரந்த அளவில் கத்தோலிக்க சமூகத்துக்கும், வெளியேயும் ஏற்படுத்திய பாதிப்புகள் குறிப்பிடத்தக்கவை. ஆயர் யூலன், அவரது ஆன்மவாஞ்சையைப் புகழ்ந்தார். சற்று மிகைப்படுத்தப்பட்டது என்றார். ஆயர் புறோ ''கத்தோலிக்கத்தின் மேல் அவருக்கு இருந்த வாஞ்யையும் பக்தியும் இம்மறைமாவட்டத்துக்கு அவரைப் பெருமைப்பட வைத்துள்ளது'' என்றார். இவ்வசனங்கள் எழுதப் படுவதற்குமுன், அவர் 100 க்கும் அதிக பக்தி நூல்கள். 8 கத்தோலிக்க துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டிருந்தார். யாழ்குடா நாட்டின் செம்மண் முக்கோணத்திலும் வெளியேயும் பல கிராமமக்களை கிறிஸ்தவர்களாக்கியிருந்தார்.

1914 தொட்டு 1921 வரை இறைவன், ஆன்மா, கிறிஸ்து திருச்சபை பற்றிய பிரசுரங்களும் வெளிவந்தன. சேர் பொன். இராமநாதனுடன் தங்கி இருந்த பெல்பஸ் உடன் ஞானப்பிரகாசர் சொற்போர் தொடுத்தார். கீழ்த்திசை மொழிப் புலமையாளர், இந்திய நாகரிக ஆய்வாளர் முதலியோரால் ஊக்குவிக்கப்பட்ட, மிகைப் படுத்தப்பட்ட இந்துசமய தேசீயவாதத்தின் முனைப்புகளோடு முட்டி மோதி, புதிய கிறிஸ்தவ ஊர்களில் எழுந்த சைவப் பெரியாரின் சர்சைகளைச் சாடி, இந்துசாதனத்தோடு மதசித்தாந்தங்களை வாதிட்டு தம் இறைபணி நிலையின் 25 வது ஆண்டைக் கண்டார்.

1926 ல் அவரது குருத்துவ வெள்ளி யூபிலி விழா நிகழ்ச்சி நிரல், ''தந்தாய் அவருக்கு நாம் என்ன வெகுமதி கொடுக்கப்போகிறோம்.

அவர் செய்த உதவிகளுக்கு தகுந்த கைமாறும் உண்டோ?'' என்ற தோபியாஸ் ஆகம வசனங்களுடன் ( 12 : 2 ) ஆரம்பிக்கிறது.[63]

வெள்ளி விழா நிர்வாகக் குழுவின் செயலர், புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் செவாலியர் அமரர் சூ. அருளானந்தம், சத்திய வேத பாதுகாவலனின் நீண்டகால எழுத்தாளர். தம் இடைவிடாத எழுத்து அப்போஸ்தலிக்கத்துக்காக பின்னர் பாப்பரசரின் Knighthood of St. Silvestur என்ற பட்டத்தைப் பெற்றவர்.

மக்களின் உணர்ச்சி வெள்ளம் அலைமோத, காலை, திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் நன்றித் திருப்பலி. மாலை அங்கிருந்து யாழ் புனித பத்திரிசியார் கல்லூரிக்கு மாபெரும் ஊர்வலம், கல்லூரி மண்டபத்தில் பாராட்டு வைபவம்.

மக்கள் இதயத்தில் அவர் பெற்றுவிட்ட இடம், கடந்த 25 வருட சாதனைகட்கும், சோதனைகட்கும், இறை யேசுவின் ஏற்புடைமையும், மிகுதியாயிருந்த கால் நூற்றாண்டுகட்கு திருப்புமுனையாகவும் அமைந்தது. முன்பு யேசுவின் மறை உடல் தாசனாக அரும்பணி ஆற்றி கிறிஸ்தவ மறைபரப்பில் கிராமங்களில் எதிர்ப்பைச் சந்தித்தவர். தன் தர்க்கவேகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார்.

ஆயர் கியோமார் மனதில், மக்களின் இந்த யூபிலிக் கொண்டாட்டங்கள், எதிர் மனப்பதிவை ஏற்படுத்தியிருக்கலாம்.

சுவாமி ஞானப்பிரகாசர் தம் பணிவாழ்வில் ஒரு புதிய திருப்பத்தில் இறங்கினார். அவரது பணியில் உதவ வந்த இளங்குருக்களிடம் புதிய கிறிஸ்தவர்களை ஒப்படைத்துவிட்டு அவர் ஒரு புதிய சினேக நிலைக்குள் புகுந்தார். தமிழ்மொழி, தமிழர் வரலாறு, யாழ்ப்பண வரலாறு இவற்றை ஆய்வு செய்யும் வேலைகளில் இறங்கினார். ஆயர் கியோமாருக்குப் பணக்கஷ்டம் இருந்ததனால் பொருளுதவி செய்யத் தயங்கினார். ஆயின் சில குருக்களும் (அமரர்களான மத்தியூஸ், வோங் செபஸ்தியான், அந்தோனி அடிகளார்) இல்லறத்தோர் பலரும் உதவினர்.

சுவாமி ஞானப்பிரகாசருக்கு 1935 ல் சடும் நோய் பீடித்தபோதிலும் அதற்கு முன்பும், அவரது மொழியியல் சிந்தனைகள், தமிழ் வரலாறு பற்றிய ஆய்வுகள், சொற்பிறப்பியல் அகராதி முதலியவற்றிற்கு பிறமத பெரியாரிடமிருந்து ஆதரவுகள் கிடைக்கத் தொடங்கின.[64]

1932 ல் திருப்பனந்தாள் சிறிகாஞ்சி மடத்தலைவர் அவரைக் கௌரவித்து, பண உதவியும் அளித்தார். செந்தமிழ், கலாநிதி,

ஞாயிறு, இந்துசாதனம், ஆகிய சஞ்சிகைகள் அவரது கட்டுரைகளை வரவேற்றுப் பிரசுரித்தன. மதுரைத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முதலிய முக்கிய தமிழபி விருத்தி அமைப்புகள் தங்கள் அங்கத்தவராக அவரை ஏற்று, அவரது மதிப்பு வாய்ந்த ஆலோசனைகளை செயல்படுத்தின. [64]

1940 ல் இலங்கையின் ஆளுநர் அவரை ''இலங்கை வரலாற்றுச் சுவட்டு ஆணைக்குழுவின்'' அங்கத்தவராக ஆக்கினார். 1944 பெப்ரவரியில் இலங்கைப் பல்கலைக் கழக செனட் சபையில் பணியாற்ற அழைக்கப்பட்டார். பம்பாயில் பணியாற்றிய பிரபல்யம் வாய்ந்த கெராஸ் அடிகளார் யாழ். மத்திய கல்லூரியில் உரையாற்ற வந்தபொழுது மொகஞ்சதாரோ, ஹாரப்பா, சுட்ட களிமண் முத்திரை ( Terra Kotta ) ஒன்றை அவரிடம் கொண்டுவந்து, அதன் குறியீடுகள் பற்றி ஆய்வு செய்தார். சுவாமி ஞானப்பிரகாசரின் மேற்கூறிய ஆய்வுகள் ''செந்தமிழ்'' சஞ்சிகையில் வெளிவந்தன. [65]

1945 லும் சுவாமியவர்கள் சுகவீனமுற்றும் தெய்வாதீனமாகத் தப்பினார். அவர் மட்டில் ஆயர் கொண்டிருந்த போக்கு மாறியது. சுவாமியவர்களின் அருஞ் செயல்களைப் பாராட்டினார். தாவீது அடிகள் குறிப்பிடுகிறார். ''பரீட்சை எடாத இப்பண்டிதரை, பட்டம் பெறாத இக் கலாநிதியை, சில புத்திஜீவிகள் ( கெய்கர் போன்றோர்) குறைவாக மதிப்பிட்டு, அவரது எண்ணங்களையும் கட்டுரைகளையும் பிரசுரிக்க மறுத்திருப்பினும் Anthropos போன்ற ஐரோப்பிய சஞ்சிகைகள் அவற்றைப் பிரசுரித்தமை, அவரது கருத்துச் செறிவுகளின் ஏற்புடைமையைக் காட்டுகிறது.'' [66]

மக்கள் தியான யோகன், மறைவல்லுனன் ஞானப்பிரகாச முனிவன், புனித அந்தோனி முனீந்திரனுக்கு தன் பிறப்பிடத்தில் கோயில் கட்டி, திருப்பலி நிறைவேற்றியே தன் ஆவியை மணவாளன் யேசுவிடம் 1947 ஜனவரி 22 ல் கையளித்தார்.

50 ஆண்டுகளின் முன் தனது முதல் பிரசுரமான ''அமலோற்பவ இராக்கினித் தூதனில்'' எழுதிய அவரது முதற்கவிதை அவரது முடிவுக்குப் பொருத்தமானது.

''சித்திர வேதனைப்பட்டுச் சிந்திய உதிரவெள்ளம்
சத்தியமறைக்காய் உயிர்தந்த வேதசாட்சிகள் போல்
நித்தியம் நான் உம்முடைய நேசத்துக்காக மகிழ்ந்து
எத்துணைத் துன்பத்தையும் ஏற்கவரம் அருளிரோ''

**தோமஸ் அடிகளின் மௌனசபை :**

1926 பெப்ரவரி 28 ல் 11 ம் பத்திநாத பாப்பிறை வெளியிட்ட ''திருச்சபை சார்ந்த மறை உண்மை'' என்ற சுற்றுமடலில் ''மறை பரப்புப்பணி நாடுகளில் மௌனதியான துறவறசபைகளின் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். சுவாமி ஞானப்பிரகாசரின் மறை பரப்புப் பணியின் மறுபக்க அலுவலாக, கியோமார் ஆண்டகையின் பணிப்பின் பேரில் தவத்திரு தோமஸ் அடிகள், 1928 பெப்ரவரி 2 ல் ஆறு தியானயோக சாதகர்களுடன் வசாவிளான், தோலகட்டியில் செபமாலைத்தாசர் மௌனசபையை ஆரம்பித்தார். 1939 ல் ரோமை நகரில் தோமஸ் அடிகளைச் சந்தித்து அவரது ஆன்மீக ஆளுமையால் கவரப்பட்ட, தமிழ்த்தூது தனிநாயக அடிகள், ''தோமஸ் அடிகளும் சுவாமி ஞானப்பிரகாசரும் ஆசியாக் கண்டத்தின் இரு பிரபல்லியம் வாய்ந்த மறை இயல் வல்லுநர்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார். [67]

இச் சபைக்கு, 2000 ஆண்டு தியானயோக மரபிலிருந்து, அதன் முக்கிய அம்சமான மரியாளின் பரவசத் தியான மரபு கிடைத்ததெனலாம் திருச்செபமாலை, உத்தரியம் நற்கருணை வழிபாடெல்லாம் சாமானிய கத்தோலிக்கரின் சாதாரண மக்கள் பக்தி முயற்சிகளெனினும், ஆழமான தியானயோக மரபிலிருந்து பிறந்தது. சர்வ சமய மந்திரங்கள், யந்திர மண்டலங்கள், மௌனம், தபஸ் தொடர்புபடுத்தி நோக்க வேண்டியவை. நம் மண்ணில் 500 வருட காலத்தின் திருச்சபை பாரம்பரியத்துடனும், குருசுமலை, திருமலை முதலிய இடங்களில் பரீட்சிக்கப்படும் 2000 ஆண்டுக் கேரள சீரிய, எகிப்திய வனாந்திர தியானயோக பாரம்பரியத்துடனும், அவர்கள் அறவாழ்வு விழுமியங்களாக இரக்கம், காருண்யம், பலியாக்கம், ஜீவ உற்பத்திதளம் ஆகியவற்றில் வேரூன்றியவை. இதனால்தான் அவர்கள் மௌனத்துடன், மண்ணின் அபிவிருத்தியையும், ஆசீர்வாதப்பர், ராப்பிஸ்ற் சபைகளின் மரபையும் உள்வாங்கி இணைத்து வாழப்பண்ணினார். புதிய ஏதேனின் 2 ம் ஏவாளின் மாசற்ற இருதயப் பக்தியில், தாய் மகன் பக்தியும், ஆன்ம பரிசுத்தமான இறை பக்தியும் சங்கமமாகின்றன. மாசற்ற இருதயநாயகியின் பரித்தியாக சீவியரகசியமே, தோமஸ் முனிவர் மரணிக்குமட்டும் செபமாலைத்தாசர் சபையின் இரகசியத் திறவுகோல். இம்மண்ணுக்கு ஓர் ஏதேன் தோட்டத்தின் எடுத்துக்காட்டு.

கானா ஊரின் நீரிலிருந்து பெருகிய இரசம் போன்று, இங்கிருந்து நெல்லி, திராட்சை, பனம்பழ, மாதுளை, நாவல், காமரங்காய் இரசங்கள் பெருகின. இவையெல்லாம் இம்மண்ணுக்கு அவள் இதயத்திலிருந்த நீரை, இரசமாக்கும் புதிய (சமாதான) அரசின்

குறியீடுகள், தமிழ், சிங்கள பக்தர்கள் ஒன்றுகூடும் இடமாகவும் இங்கிருந்து உபகண்டம் வரை – கன்னியாகுமரி முதல் இமயமலைச் சாரலிலுள்ள அம்பிகைப்பூர் வரை தொடும் பாலைவனத்தின் குரலொலியாகவுமே இருந்தது; இருந்துகொண்டேயிருக்கும். (தோமஸ் அடிகளார் சிந்தனைத் திரட்டு பக். 17, 18.)

அவர் மனப்பக்குவம் வளர்ந்த காலத்தில் சமாதான மண்ணாகவே இது இருந்தது. பத்திமாவின் இரகசியம் குருக்களுக்கும் பொருந்தும். தோமஸ் முனிவரிடம் உள் ஒடுங்கி, ஞானம் பெருக்கிட வந்த குருக்களின் தொகை, (விசேடமாக தென்மாவட்டங்களிலிருந்து) எத்தனையெத்தனை?

தோமஸ் அடிகள், அயர்லாந்தில் உயர் கல்வி கற்கச்சென்ற தமது அத்தியந்த நண்பர் A. S. யோசவ் அடிகளுக்கு 1930 லிருந்து 1936 வரை எழுதிய ஒன்பது கடிதங்களில் அவரது ஆளுமையும் அவர் சென்ற பாதையிலெதிர்கொண்ட சோதனைகளும் அறியக் கிடக்கின்றன. 68

1930 ல் சபை மடுவில் நிறுவப்படுகிறது. 2 கோவா துறவிகள், 18 மலையாளிகள் உட்பட 55 விண்ணப்பங்கள் உள்ளன என்கிறார். 1934 ல் துறவிகள் தொகை 33 ஆகவும், 1935 ல் 47 ஆகவும் சென்றதால் 150' × 20' அளவில் ஓர் கூடத்துக்கான அத்திவாரம் போடப்படுகிறது. இது பெல்ஜிய நாட்டு அன்பர்களின் உபகரிப்பு. 1930 லேயும் இரு அயர்லாந்துப் பெண்கள் சபையில் சேர விண்ணப்பம் செய்துள்ளனர். ''ஆயின் எமக்கு இதய பெலமுள்ள, உலக இரட்சணியத்துக்கு நைவேத்திய பலியாக ஒப்புக் கொடுப்பவர்கள் தான் தேவை'' என்கிறது தோமஸ் முனிவரின் கடிதம்.

1935 நிதி நிலை திருப்திகரமாக இல்லாமையால் கன்னியர் மடம் இப்போதைக்கு வேண்டாம் என்கிறார் ஆயர்.

23 – 5 – 35 ல் எழுதிய கடிதம் முக்கியமானது. இந்த ஏழு வருடங்களும் (1928 – 35) தேவதாயின் சொந்த அலுவலாக சபை வளர்ச்சி பெற்றுள்ளது. நான் ஒரு வெறும் கருவியே. இறைவனின் அற்புத செயற்பாட்டின் முன் பிரமித்து நிற்கும் சாட்சி. எம் இறை தந்தை பற்றிய அடிப்படை உண்மையை உணரத் தொடங்குகிறவன். இதை எப்போதோ அறிந்து விட்டேன் என, இத்தனை காலமும் நினைத்திருந்தேன். என் தாயும் இராக்கினியுமானவள் தன் தெய்வத் திருமகனின் அலுவலை நான் சீரழிக்காமல் காப்பாற்றுவாளாக'' என்று முடிக்கின்றார்.

அன்று ஆயர் கியோமார் கர்மயோகி ஞானப்பிரகாசரை ஒறுத்து, தியானயோகி தோமஸ் முனிவரையும் இல்லறத்தாரிடையே மாசற்ற இருதயப் பக்தியைப் பரப்பிய ஜெலான்ட் அடிகளையும் ஊக்குவித்தார். காரணம் ... ?

**கிராமப்புறக் கல்லூரிகள் :**

ஆயர் பொஞ்சீன் வென்றெடுத்த தனியார் கல்விக் கூடங்களுக்கான சலுகைகள், கத்தோலிக்க வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின. குரு மாணவர்கட்கான அடிப்படைக் கல்விக்கும், இம் மறைமாவட்டத்தின் நவீன கல்வியறிவுக்கும், நகர்ப்புறங்களில் மாத்திரமல்ல, கிராமங்களிலும் பரவலாக்கம் உதவியது. புனித பத்திரிசியார் கல்லூரி, ஆங்கிலக் கன்னியர் மடம் அளித்த கல்வி வசதிகள் போன்றே, இளவாலை புனித என்றியரசர் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம், கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, மாதகல் புனித சூசையப்பர் கல்லூரி, மன்னார் புனிதர் சவேரியார் கல்லூரி, அநுரதபுரம் புனித சூசையப்பர் கல்லூரி முதலியவையும் அளித்தன. நகர்ப்புறங்களில் நவீன கல்வி வசதிகளையும், கிறிஸ்தவ விழுமியங்கள் நிறைந்த தலைவர்களையும் உருவாக்கி உதவியது போன்று, கிராமப்புறங்களிலும் கத்தோலிக்கரிடையே இப்பணியை மேற்கூறிய கல்லூரிகள் அளித்தன. அநுரதபுரம் புனித சூசையப்பர் கல்லூரி தமிழ் சிங்கள உறவுக்கு ஒரு பாலமாகவும் அமைந்தது.

**ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி :**

1872 ல் தவத்திரு ஜெ. பொய்சோ அடிகளால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி தீவுப்பகுதி முழுவதினதும் கல்வி அறிவு, கத்தோலிக்க விசுவாசத்தையும் கட்டிக்காத்து பல கல்விமான்களையும் குருக்களையும் உருவாக்கியுள்ளது. 1886 ல் புனித சஞ்சூசையப்பர் சபைச் சகோதரர்கள் பொறுப்பேற்று ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலத்துக்கு திறம்பட நடாத்தினர். 1938 ல் குருக்களின் நேரடி நிர்வாகத்தில் இக்கல்லூரி இயங்கத் தொடங்கியது.

இக் கல்லூரியிலிருந்து புனித பத்திரிசியார் கல்லூரி போன்ற (Super Grade Colleges) அதியுன்னத கல்லூரிகட்கு உயர் கல்வி பெறச் சென்ற மாணவர்கள் அக் கல்லூரிகளின் தகுதிக்கும் திறமைக்கும் ஈடுகொடுத்து குருக்களாக மட்டுமல்ல, மருத்துவர்களாக, பொறியியல் நிபுணர்களாக, கலைஞர்களாக, விஞ்ஞான விற்பன்னர்களாக, வர்த்தகப் பிரமுகர்களாக விளங்குகிறார்கள்.

இக் கல்லூரியின் வரலாற்றையும் சாதனைகளையும் அண்மையில் வெளிவந்த கல்லூரியின் 125 வது ஆண்டு மலரில் காணலாம்.

**இளவாலை, புனித என்றியரசர் கல்லூரி :**

*1887 ல் இளவாலையில், பங்குக்குரவரால் ஒரு தமிழ்ப் பாட சாலை ஆரம்பிக்கப்பட்டது. இளவாலை மக்களின் வேண்டுகோளுக் கிணங்க 1904 லிலிருந்து இங்கு ஆங்கிலமும் போதிக்கப்பட்டது. இப்புதிய முயற்சிக்கு இப்பகுதி மக்கள் அளித்த அமோக ஆதரவு கண்டு, ஆலய வளவில் ஒரு ஆங்கில கல்விக்கூடம் அமைக்கப்பட்டு, புனித என்றியரசர் கல்லூரி என நாமகரணம் செய்யப்பட்டது. அமரர் றொட்றிக்கோ அடிகளார் அதிபராகப் பொறுப்பேற்றார். (1907)*

*1910 ல் ஆயர் யூலன் ஆண்டகை, புனித சூசையப்பர் சபைத் துறவிகளிடம் இக் கல்விக்கூடத்தை ஒப்படைத்தார். பீலிக்ஸ் சகோதரரின் தலைமையில் என்றியரசர் கல்லூரி வளரத் தொடங் கியது ''கொக்கட்டியான் கலடு'' என்ற மலட்டுத்தரை, சூசை யப்பர் துறவிகளின் அரும்பெரும் முயற்சியால் ஒரு கலைக்கூடமாக மாறத் தொடங்கியது.*

*1917 ல் கல்வியமைச்சு இக் கல்விக்கூடத்தை ஒரு ஆங்கில பாடசாலையாக அங்கீகரித்தது. தொடர்ந்து கல்விநெறி, விளை யாட்டு, நுண்கலைகள் பாடவிதானத்துக்குப் புறம்பான முயற்சி நெறிகளில் என்றியரசர் கல்லூரி ஏற்றம் கண்டது. உதைபந்தாட் டத்தில் யாழ் மண்ணில் முன்னணிக் கல்லூரிகளுடன் சரிநிகர் சமான மாகப் போட்டியிட்டது. தொடர்ந்து இன்று வரை உதைபந்தாட் டத்தில் ஒரு உன்னத நிலையில் இக்கல்லூரி இருந்து வருகிறது.*

*முப்பது ஆண்டுகள், கல்லூரியை சிறந்த முறையில் நெறிப் படுத்தி, கல்லூரியின் முன்னேற்றத்துக்காக அயராதுழைத்த புனித சூசையப்பர் சபையினருக்கும், யாழ் திருச்சபையின் தலைமைப் பீடத் துக்குமிடையே ஏற்பட்ட பிரச்சனைகள் காரணமாக 1939 ல் சபைத் துறவிகள் அமலமரித் தியாகிகளிடம் கல்லூரி நிர்வாகத்தை ஒப் படைத்தனர்.*

*புனித என்றியரசர் கல்லூரியின் வளர்ச்சிக்காக மட்டுமல்ல, இள வாலைப் பகுதி மக்களின் நலனோம்புப் பணியிலும் தம்மை அர்ப் பணித்து அன்பால் அவர்களை ஆட்கொண்ட சூசையப்பர் துறவி களின் பிரிவு கல்லூரியை வெகுவாகப் பாதித்ததுடன் இளவாலைப் பகுதி மக்களையும் சினங்கொள்ளச் செய்தது.*

*கல்லூரியின் புதிய அதிபராக அமரர் சாள்ஸ் மத்தியூஸ் அடிக ளார் (1939 - 43) நியமனம் பெற்றதால் கல்லூரி மீண்டும் முன் னேற்றப்பாதையில் செல்லத்தொடங்கியது. ஆயினும் துறவிகளின் பிரிவால் மக்கள் மனதிலேற்பட்ட மனக்கசப்பு, சிலகாலம் வரை*

நீடித்தது. புனித என்றியரசர் கல்லூரியின் வரலாற்றுப் பாதையை யும் அதன் வியத்தகு சாதனைகளையும் 1979 ல் வெளியான ''ஹென்றீசியன்'' ஆண்டு மலர் விபரமாகத் தருகிறது.

கரவெட்டி, திரு இருதயக் கல்லூரி :

1913 செப்ரெம்பர் 23ல் பருத்தித்துறைப் பங்குத்தந்தை அமரர் பெருசல் அடிகளின் அயராத முயற்சியால், மனுவல் அந்தோனி என்ற பெருந்தகை அன்பளிப்புச் செய்த காணியில் வதிரி றோமன் கத்தோலிக்க ஆங்கில பாடசாலையை யாழ் ஆயரின் பிரதிநிதியாக சமுமளித்திருந்த தவத்திரு சாள்ஸ் மத்தியூஸ் அடிகள், அங்குரார்ப் பணம் செய்து வைத்தார் அமரர் S. இம்மானுவேல் அடிகள் முதலாவது அதிபரானார். 29 மாணவர்களுடனும் 4 ஆசிரியர் களுடனும் பாடசாலை இயங்கத் தொடங்கியது.

பங்குத் தந்தையின் ஆதரவும், அதிபரின் அயராத உழைப்பும் ஆசிரியர்களின் தன்னலங் கருதாத சேவையும் 1915 களில் இக் கல்விக்கூடம் தரமுயர்த்தப்படக் காரணமாயிற்று. ஏறத்தாழ பதி னேழு ஆண்டுகள் இக் கல்விக்கூடத்தை அமலமரித் தியாகிகள் சிறப் பாக நிர்வகித்தபின், 1929 ல் புனித சூசையப்பர் துறவிகள் நிர் வாகப் பொறுப்பை ஏற்றனர். இவர்களது சிறப்பான நிர்வாகத்தில் இக் கல்விக்கூடம் வளர்ச்சி அடைந்தது. 1946 ல் கல்லூரி அந்தஸ் தைப் பெறுவதற்கு சூசையப்பர் துறவிகளின் தன்னலமற்ற, தரமிக்க உழைப்பே காரணமாகும்.

சாதி, சமய பேதங்களைத் தாண்டி வடமராட்சியின் முன்னணிக் கல்லூரிகட்கு ஈடு செய்யுமளவுக்கு முன்னேற்றிய சூசையப்பர் துறவி களிடமிருந்து, 1948 ல் நிர்வாகப் பொறுப்பு குருக்களிடம் ஒப் படைக்கப்பட்டது. திரு இருதயக் கல்லூரியின் வளர்ச்சியையும் சாதனைகளயும் 1988ல் வெளியிடப்பட்ட பவளவிழா மலரில் அறிந்து கொள்ளலாம்.

இளவாலை, தி. கு: கன்னியர் மடம் :

இந்த மண்ணின் புதல்விகட்கு, ஆரம்பத்திலிருந்து கத்தோலிக்க விசுவாசத்தை ஊட்டி, உறுதியளித்து, அவர்கள் கல்வியறிவும், மறுமலர்ச்சியும் பெறவைத்ததில் நாம் நன்றியுடன் நினைவில் கொள்ளவேண்டியது திருக்குடும்பக் கன்னியர்களையே. யாழ் நகரில் தி. கு. சபை அடியிடப்பட்டு, ஆங்கில பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இச்சபையின் நிர்வாகத்துக்கும், நடவடிக்கைகள் அனைத் துக்கும் இளவாலை மடமே, தலைமைத்தளம் ஆகியது.

அங்கு ஆண்டவனின் அழைப்பையேற்று துறவினிகளாக விரும்பும் சிறுமிகட்கு பயிற்சியளிக்க நவசந்நியாச மடம், கத்தோலிக்க ஆசிரியைகளை உருவாக்க ஒரு போதனாகழகம், மாணவிகள் கல்வி பெற ஒரு சாதனா கழகம், கல்லூரித் தரத்திலமைந்த ஒரு ஆங்கில கல்விக்கூடம், ஆதரவற்ற சிறுமிகளை பாரமரிக்க அநாதர்சாலை, தையற் பயிற்சிச்சாலை ஆகியன இயங்கின

அன்னை சலோமை, மறைமாவட்ட தலைவியாக பொறுப் பேற்றபின் இச்சேவைகள் மிகச்சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட் டன. யாழ் மறைமாவட்டத்தின் பிரதான பங்குகள் அனைத்திலும் வடக்கே பருத்தித்துறை முதல் தெற்கே அநுரதபுரி வரை, கிழக்கே முல்லைத்தீவு முதல் மேற்கே பேசாலை வரை திருக்குடும்ப மடங் கள் நிறுவப்பட்டன. பங்குத் தந்தைக்கு மேய்ப்புப் பணிகளில் உதவு தல், மகளிர் பாடசாலைகளை நிர்வகித்தல், மறைக்கல்விப் பயிற்சி எனக் கன்னியரின் பங்குத் தளப்பணி விரிவாக்கம் பெற்றது.

மூப்படைந்த கன்னியரின் பராமரிப்புக்காக, மயிலிட்டியில் ஒரு ஓய்வகம் இயங்கியது, நவ சந்நியாசிகளின் பயிற்சி முகாம் பின்னர் பண்டத்தரிப்பிலமைக்கப்பட்ட நவீன கட்டிடங்கட்கு மாற்றப்பட்டது.

இளவாலையிலும் கரம்பனிலும் மகளிர் ஆங்கில பாடசாலைகள் திறமையாக நிர்வகிக்கப்பட்டன. அமரர் ஜெலாண்ட் அடிகளின் ''பத்திமாகிரி''யின் பணி சிறக்க தோளோடு தோள் கொடுத்துத வியவர்கள் அன்னை சலோமையும் திருக்குடும்பக் கன்னியர்களுமே என்பது இங்கு குறிப்பிடுதற்குரியது:

அன்னை சலோமையின் ஆளுமை, பல இந்துமத மங்கையரிடம் பட்டுச்சுவறியது. அதன் பயனாக பல இந்து நங்கைகள் மனமாற் றம் பெற்றுப் பின்னர் கத்தோலிக்க ஆசிரியைகளாகவும் திருக்குடும்பக் கன்னியர்களாகவும் இறைவனின் தோட்டத்தில் பணிபுரிவோர் ஆயினர்.

அன்னை சலோமையின் காருண்ணியச் செயல்களும் ஆதரவற்ற சிறுமிகள் மட்டில் அவர் காட்டியபரிவன்பும் அவரை அன்றைய ''அன்னை திரேசா வாக உயர்த்தின. உதாரணமாக ஒரு நிகழ்வு:-

அழகிய சிறுமியொருத்தியை கடத்திச் செல்லவாலிபன் ஒருவன் முயன்றான். அவள் மறுக்கவே பலாத்காரமாக வீட்டினுள்ளிருந்து இழுத்து வந்தான் முற்றத்திலிருந்த மரத்தை அவள் பிடித்துக்கொள்ள ஆத்திரங் கொண்ட அக் கயவன் வாளினால் அவளது கரங்களைத் துண்டித்தான் அக் கயவனுக்கு கடுழியச் சிறைத்தண்டனை வழங்கிய நீதிபதி, கைகளை இழந்ததால் வளமான வருங்காலத்தையுமிழந்த இவ் இளம் சிறுமிக்கு கைகொடுப்பார் யாரென பரிதாபத்துடன்

வினாவியபோது, நூற்றுக் கணக்கான ஆதரவற்ற சிறுமிகளைக் காக்கும் தன் கரங்களை நீட்டி, அச்சிறுமியைப் பொறுப்பேற்று, பாதுகாத்த அன்னை சலோமையை புகழாதார் யாருமில்லை.

**இல்லற அப்போஸ்தலம்**

கத்தோலிக்க கல்விக்கூடங்களின் ஒரு முக்கிய நோக்கம். இல்லற அப்போஸ்தலர்களை உருவாக்குவதே. இவ்வகையில் முதலில் தோன்றியது திரு இருதயச்சபை (1863), தொடர்ந்து புனித வின்செந்தி போல் சபை (1913), மாதா கூட்டம். நன்மரணக்கூட்டம் என்பன ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயற்பட்டன.

இவற்றுள் முக்கியமானவை பின்னர் உருவாக்கப்பட்ட பிரான்சீஸ்கு அசிசியின் மூன்றாம் சபையும், மரியாயின் சேனையுமாகும். பல இல்லறத்தார் இவ்விரு சபைகளிலும் ஒரே காலத்தில் அங்கத்துவம் பெற்றிருந்தனர். இரு சபைகளும் தங்கள் சேவையாலும் பரித்தியாக வாழ்வாலும் இம் மண்ணில் கத்தோலிக்கத்தின் சிறப்புறு படையணிகளாக, அன்றிருந்து இன்றுவரை விளங்கி வருகின்றன.

1921ல் அயர்லாந்து தேச, டப்ளின் நகரில், அமரர் 'பிராங்டவ்' நிறுவிய மரியாயின் சேனை, யாழ் நகரில் பாண்டியன்தாழ்வுப் பகுதியில் 1936ல், ஆயர் கியோமாரின் ஊக்குவிப்பில், ஆரம்பிக்கப்பட்டது அமரர் சாள்ஸ் மத்தியூஸ் அடிகள் ஆலோசகராகவும். அமரர் J. A. இராசநாயகம் அடிகள் ஆன்மீக காப்பாளராகவும் வழி நடத்தினர். மரியாயின் சேனையில் அவர் கொண்டிருந்த ஆர்வமும் நம்பிக்கையும், கொழும்பில் நடந்த ஆச்சேஸ் விழாவில், அவராற்றிய உரையில் தெளிவாகிறது. ''விசுவாசத்தைப் பெற்றுத் தனக்கு மட்டும் வைத்திருக்கக் கூடாது. மற்றவர்கட்கும் கொடுக்க வேண்டும் என்ற 'பிராங்டவ்' வின் கூற்று பல கிறிஸ்தவ செயல் வீரர்களை உலகம் பூராவும், இம்மண்ணிலும் உருவாக்கியுள்ளது. ''செபம் செய்யாமல், மரியன்னையின் உதவியை நாடமல் எதுவும், செய்யாதே'' என்ற அவரின் அறிவுறுத்தல், பல பரவச தியான யோகிகளை. வேத சாட்சிகளை உருவாக்கும் வித்தாகிறது. ஆபிரிக்காவில் ஒரு எடல் குயின், செஞ்சீனாவில் பல இல்லற வேதசாட்சிகள், இதற்கு எடுத்துக்காட்டு. புனித லூயி மொன் திபேட் எழுதிய ''மரியாளின் மீது உண்மைப்பக்தி'' என்ற நூல் பல சேனையாளர் விரும்பிப் படித்த நூல்; வரப்போகும் இம்மண்ணின் விடுதலை கால கண்ணீர்களுக்குள் தேவதாயின் இப்பரவச தியான தளம். கிறிஸ்தவ ஆன்மீக வீரர், வீராங்கனைகளை உருவாக்கும் என ஆயர் எதிர்பார்த்திருப்பார். ஆகவே எல்லாப் பங்குகளிலும் இது பரவி சேவையாற்ற வேண்டுமென விரும்பி 1947 ஜனவரியில் பாரதநாட்டில், சென்னையில்

நடைபெற்ற மரியாளின் சேனை விழாவுக்கு அமரர்கள் சாள்ஸ் மத்தியூஸ், இராசநாயகம் அடிகளார் தலைமையில், 75 யாழ்ப்பாணப் பிரதிநிதிகளை அனுப்பி அவர்கள் அந்த பெற்ற அனுபவத்தை 'பாது காவலனில்' பகிரச் செய்தார் (24-1-47 காவலன்.)

ஆயரின் இறுதி நாட்கள்

ஆயர் இளவாலையில் தம் இறுதிக் காலத்தைக் கழித்தார். மாலை வேளைகளில் வலித்தூண்டற் கடற்கரைக்குச் சென்று வருவது அவர் வழக்கம். போக்குவரத்துக்காக யாழ் திருச்சபை ஆதீனத்தால் அவருக்கு ஒரு மோட்டார் வண்டி வழங்கப்பட்டது ஆயின் அங்கிருந்த சுதேச குரு ஒருவர் மேட்டார் வண்டியைத் தமது தேவைகட்காகப் பாவிக்கவே தாழ்ச்சி மிகுந்த ஆயர், தமது நீண்டகால உதவியாளர் சந்தியாப்பிள்ளை சவரிமுத்துவுடன் கடற்கரையை நோக்கி நடக்கத் தொடங்கினார். அப்பகுதி மக்கள் ஒரு மாட்டு வண்டியை ஒழுங்கு செய்து கொடுக்கவே அவர் அவ்வண்டியில் சென்று வந்தார்.

பின் உடலும் உள்ளமும் களைப்புற, அவர் வலித்தூண்டலிலேயே தம் உதவியாளருடன் தங்கிவிட்டார். மாலை வேளைகளில் பெருங்கடல் கொந்தளிக்க, பேரலைகள் ஒன்றன் பின்னொன்றாக வந்து கோவில் கரையுடன் முட்டி மோதுவதை பார்த்த வண்ணமிருப்பார். இருபத்தாறு ஆண்டுகள், ஆயர் பதவியில், மேய்ப்புப்பணியில் அவருடன் முட்டிமோதிய பேரலைகள் தான் எத்தனையெத்தனை?

ஆயரின் ஆட்சி, மருதமடு அன்னைக்கு முடிபுனைவித்கதுடன் ஆரம்பமாகியது. அவரது ஆயர் பணியின் இறுதிக்காலங்களில் இரு தடவை மரியன்னை, அவரது மறைமாவட்டத்தைச் சந்திக்க வந்தாள், ஐந்நூறு ஆண்டுகளாக தனது அடைக்கலத்துள் அணைத்துக் காப்பாற்றிய மக்களை மீண்டும் அரவணைக்க, 1948ல் மருதமடு அன்னை ஒவ்வொரு பங்குக்கும் வருகை தந்தாள் ''இரசம் தீர்ந்து போவதை'' அவதானித்தாள்.

எனவே மீண்டும் 1950ல் யாத்திரைக் கன்னியாக (பத்திமா மாதா) இந்த மண்ணில் பவனிவந்தாள், வெறுமையாகும் சாடிகளை இயேசுவின் இரசத்தால் நிரப்ப ஒரு மாற்று மருந்தையும் அறிவித்தாள், அதுதான் ''செபம், தபம், செபமாலை, பரித்தியாகம்—''

ஆயர் கடலையே பாாத்துக் கொண்டிருந்தார் ''இரவில் நான் கண்ட காட்சியில் வானத்தின் நான்கு திசைக்காற்றுகளும் பெருங் கடலைக் கொந்தளிக்கச் செய்தன (தானி 7:2)

''வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது. பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந் தார்.'' (திருவெளி: 12)

1956 .. யாழ் போதனா மருத்துவ மனையில் 'எட்டாம் வார்ட்' டில் ஒரு மூலையில் நோயாளிகளோடு நோயாளியாக, மக்களோடு தாழ்மை மிகுந்த மகனாக, ஆயர் கியோமார் படுத்திருந்தார். அவரது கைகளில் அன்னையின் செபமாலை.

மூன்று தசாப்தங்களின் பின், வரப்போகும் போரின் அனர்த்தங் களால் அங்கு வந்து குவியப் போகும், போராளிகளின்... பொது மக்களின் உடல்களை நினைத்த வண்ணம், செபமாலை சொல்லிக் கொண்டிருந்தார்.

வரலாற்று நீதியரசர் யேசுவின் காலடிச் சத்தங்கள், அவரது காதில் விழத்தொடங்கின. கண்களை மூடிக்கொண்டே தம் இறுதி மன்றாட்டை உச்சரிக்கத் தொடங்கினார்.

''ஆண்டவரே நீரே என் நம்பிக்கை''

* * *

அடிக்குறிப்புகள்

Iம் பாகம் - ஆதிகாலம்

1. Kerala And Christianity, V. Cheriyan
World Conference on Malayalam Kerala Culuture and Develoment 1977, University of Kerala, Trivandrum.
A. J B Antoninus, Chronicle of The Sanctuary of Our Lady of Madhu
2. Dr. P. Ragupathy, Early Settlements in Jaffna, P. 57
3. Vincent Smith. Oxford History of India, 1908, P. 126
In the Steps of St. Thomas, Dr. Hermon De souza P. 9
4. Ibid P. 16
5. (அதே நூல்) Ibid P. 126
6. Kerala And Christianity, V. Cheriyan. P 101
7. Baldeus Ch xx, P. 575
8. Advanced History of India, K A. Nilkanta Sastri. P. 309
9. In The Steps of St. Thomas, Hermon De souza, P. 33.
Sir. H. Yule, Marcopolo. P. 290

10. Christian Topography Bk III Cosmas Indicoplenstsu
11. கலாநிதி இந்திரபாலா, 'நண்பன்', இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக கத். மாணவர் ஒன்றியம். 1976. ஆதி இலங்கையில் கிறிஸ்தவர் பக். 28 - 30
12. Aquinas Journal, 1987 p. 133
13. S. கிருஷ்ணராசா, வரலாற்றுக் குறிப்புகள், (கைப்பிரதி)
14. Bishop Bonjean "Chr nological Table of Events" Jaffna Bishop's House Archives
15. L'osservatore Romano. 25. 9, 1996
16. Anuradhapura Cross Archaeological Survey of Ceylon 1912/13 P. 5 E. Ayrton. A. J. B. Antoninus Times of Ceylon 31-5-55
17. Dr. P. Ragupathy, Early Settlements In Jaffna P. 183
18. L'osservatore Romano. 25. 9. 1996

IIம் பாகம் – போர்த்துக்கேயர் காலம்

19. L'Osservatore Romano, 25. 9. 1996
1. Buddhism Schumann. Hans Wolfoons
2. Courier, Unesco, 1992 May p. 24
3. கூரிய , யுனெஸ்கோ வெளியீடு. 1975.
4. Arnold Toynbee, கூரியர், 1975, யுனெஸ்கோ வெளியீடு.
5. Queros, Spiritual Conquest of Ceylon, pp. 181 - 182 V. Perniola, Portugese Period, I, p. 3
6. Ibid, p. 13 Francis Xavier to Ignatius of Loyala.
7. Ibid p. 45
8. Ibid
6. Ibid p. 54
10. Ibid p. 55
11. யாழ்ப்பாண வைபவமாலை.
12. மன்னாரில் போர்த்துக்கேய நேரடி ஆட்சி 1591ல்
13. ஆறுமுக நாவலர் பிரபஞ்சத்திரட்டு, பக். 43
14. A History of Christianity P. Johnson pp. 71, 72
15. A Histoay of the Cathoiic Church in Japan, Joseph Jennes pp. 131, 139, 168
16. 3 d Millenium TMA Vol 2.
17. Endo Susuki, 'Silence'
18 Portuguese Bnrgbers of Jaffna (Un Published Notes)

19. Perniola's Portugese Period I p. 345
20. வத்திக்கான் ''நூலகத்திலிருக்கும்'' தம்பிரான் வணக்கம் தனிநாயகம் அடிகளாரால் பிரதி செய்யப்பட்டு, யாழ் ஆயர் இல்ல 'அடிச்சுவட்டுக் காப்பகத்தில்' உள்ளது.
21. யாழ். ஆயர் இல்ல 'அடிச்சுவட்டுக் காப்பகம்'
22. Perniola's Port. Period II pp 29, 30. 124, 228, 244.
23. Ibid ,, I pp. 367, 53 - 54
24. கா. சிவத்தம்பி: தமிழ் பண்பாட்டில் கிறிஸ்தவம் பக். 28
25. V Perniola's Port. Period Iintroduction XIV
26. Ibid - pp 42 - 46
27. சுவாமி ஞானப்பிரகாசர் நூலக ஏடுகள்.
28. V Perniola's Port, Period, Introduction pp. 143-147, 94-96
29. Ibid I P 322 ,, ,,
30. Queroz 54, A J B Chronicle p 12
31. Baldeus A. J. B Antoninus
32. Companion to Buddhist Commission Report Appendix II p. ii, xi
33. Nilakantasastri, Advanced History of India, pp. 341. 342 309
34. A J. V. Chanthirakanthan- Catholic Revival Impost Colonial Sri Lanka P. 55
History of the Catholic Church in Ceylon - S Gnanapirakasar P 151
35. W. O' Flaherty p. 55 58 Origins of Eivl in Hindu Mythology
36. Philosophical Saivism, S. Gnanapirakasar,
W. O. Flaherty pp. 5 , 59
37. ஆறுமுகநாவலர் பிரபஞ்சத்திரட்டு
38. கா. சிவத்தம்பி, தமிழ் பண்பாட்டில் கிறிஸ்தவம் பக். 35
39. வானாமலை பாராட்டு மலர் ''பிற்காலச் சோழர் காலங்களில் எழுந்த வரி எதிர்ப்பியக்கங்களும் அடக்கங்களும்''
40. V Perniola's Port. Period II pp. 72, 73, 388
41 Oscar Romero Quest 72. March 1985
42, Joseph Needham, ''History of Chinese Civilization
43. Debiprasad Chattopadhyava 'Indian Philosophy' p. 127
44. A History of Xtianity P. Johnson p. 404
45. Manoranjan Basu 'Tantrism'
46. Church of the Circumoision B. Bagatti p. 22, 23

47. Ibid pp. 28, 29
48. Ibid p. 63
49. Ibid – St. Joseph p. 42
50. Ibid St Michael p. 102
51. திருமந்திரம் 584, 2129
52. திருமந்திரம், சமாதி 1913 – 1922
53. Edmund Pieris – Marian Devotions in Ceylon
54. Lucia in Her Own Words — அவர்கள் மூன்று சிறுவர்கள்
55. Milaraspa, The Tibetian yogi, Evans Wents
56. அவர்கள் மூன்று சிறுவர்கள். பத்திமாகிரி, பண்டத்தரிப்பு
57. V Perinola Port. Period I p. 41
58. The First Oriental Scholar Dr. S. Rajamanicam
59. A. J. B Antoninus, Chronicle P. 11
60. V. Perniola, Portugese Period, I PP 51, 54, 125
61. திருச்செல்வர் காவியம், A. J. V. சந்திரகாந்தன், புனித வளன் அச்சகம், யாழ்ப்பாணம்
62. அதே நூல்
63. Love Meets Wisdom — Aloy Pieris
64. Butler's Lives of Saints
65. தேம்பாவணி
66. Jesuits in Ceylon – S. G. Perera

III ம் பாகம் ஒல்லாந்தர் காலம்.

1. 1988ல் கண்டி தேசிய குருமடத்தில், கரு யோசவ் ரொம்கோ, மல்கம் ரஞ்சித் அடிகள் ஆற்றிய உரை.
2. Tissa Balasuria, Mary and Human Liberation, V. Ramachandran, Recovery of Mission
3. Vidya Jyoti 1991, Clergy Monthly
4. இன்றைய உலகில் திருச்சபை எண் 22.
5. திருச்சபையின் மறைபரப்புப்பணி, எண். 1
6. Catholic Church in Sri Lanka. Dutch Period V. Perniola p. 19 vol. I
7. Ibid .................... p. 2 8. Ibid .................... p. 19,
9. Ibid .................... p. 23, 10. Ibid .................... p. 23,
11. சாங்கோபாங்க சுவாமிகள், நல்லூர், சுவாமி S. ஞானப்பிரகாசர்.

12. பட்டினத்தார் பாடல், 15, 20, 25
13. Perniola's C. C. I Sri Lanka, Dutch Period I pp 147 – 154
14. Ibid .................. p. 95
15. Ibid .................. p. 204.
16. Ibid .................. p. 209
17. Ibid .................. p. 226
18. Ibid .................. p. 498
19. Ibid .................. p. 500
20. Ibid .................. p. 171
21. Ibid .................. p. 171
22. Omnis Terra p. 491 (1994)
23. Gul Tianjue
24. சாங்கோபாங்க சுவாமிகள் – நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்
25. Perniola's pp 290 – 295, Dutch Period I
26. Ibid p 265 ,,
27. South Asian Studies (Magazine) 1993
28. வியாகுலப் பிரசங்கம் "வழிகாட்டி" 1987
29. தேவ அருள்வேதபுராணம்
30. சாங்கோபாங்க சுவாமிகள் — சுவாமி ஞானப்பிரகாசர்
31. V. Perniola's Dutch Period V III, P. 282
32. Ibid P 281
33. Ibid V 2, PP 84 — 99
34. Ibid PP 95 — 96
35. தாந்தரிகம்
36. V. Perniola's II P. 262
37. I bid III p. 345
38. Ibid P 348
39. Ibid III Introduction xi, 3
40 Ibid P. 227
41. Ibid PP, 38, 17, 13
42. Ibid P. 18
43. Ibid p. 77
44. Ibid P. 117
45. Ibid P. 137
46. Ibid PP, 147, 148
47. Ibid P. 187
48. Ibid PP 196 — 200
49. Ibid P. 198
50. Ibid P. 404
51. Ibid P. 427
52. Ibid PP. 482, 483


IV ம் பாகம் ஆங்கிலேயர் காலம்


1. Catholie Church in Sri Lanka
British period, V. Perniola Vol. I
The Life and Times of Orazio Bettachin
N. M. Savearimuthu P. 13

2. Ibid p. 15
3. தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம். சந்திரகாந்தன் பக். 62
4. Orazio Bet achini, N. M. Saverimuthu P. 18
5. Ibid P. 19
6. Ib d P. 20
7. Ibid p 27
8. Ibid P. 46
9. Ibid Pp. 55, 56
10. ibid P. 56
11. Ibid P. 57
12. Ibid P. 67
13. Ibid P. 70
14. Ibid P. 71
15. Ibid p. 75
16. Ibid p. 78
17. Ibid p. 93
18. Ibid p, 95
19. Ibid p. 106
20. V. Perniola, British period, Vol I Report of 1800
21. Ibid
22, Anton Mathias, Catholic Church in Jaffna p. 28
23. Ib d p. 29
24. Ibid p. 29
25. St. Patrick's College, Jaffna 125 th Anniversary Souvenir.
26. Holy Family Convent Jaffna th *125* Anniversary Souvenir p. 20
27. XXV Years of Progress p. *144*
28. A. Mathias Catholic Church in Jaffna P. 30
29. A J B Antoniaus' Chronicle p. *162*
30. நாவலர் பணிகள், தனம் ஜெயராஜசிங்கம். பக். 42
31. ஆறுமுக நாவலர் பிரபஞ்சத்திரட்டு பக். 43, 44
32. Companion to Buddhist Commission Report
33. V. Perniola. British. Period II P. 119
34. யாழ் ஆயர் இல்ல அடிச்சுவட்டுக் காப்பகம்.
Letters of Bishop Bonjean P. 39
35. XXV Years of Progress S. Gnanapragasar – P. 20

36. Ibid P. 9

37. Catholic Guardian 1893 – 3 – 31
பாதுகாவலன் 1893 – 3 – 31 ஆசிரியர் உரை

38. XXV Years of Progress P. 12

39. Ibid P. 17

40. Ibid P. 175

41. Ibid P. 176

42. Ibid PP. 178 — 179

43. Ibid. P. 181

44. Ibid. P. 184

45. Ibid. P. 184

46. Ibid P. 184

47. Ibid. P. 185

48. Ibid PP. 188 – 191

49. Diary of The Officiating Priest

50. XXV Years P. 17. 193

51. Ibid P. 206

52. Ibid P. 210, 211

53. Ibid PP. 40 – 41, 246,

54. Rev. Fr. M. Blachot
A Souvenir of The Golden Jubilee of The Confraternity of St. Aloysius Gonzaga D. James 1934

55. சகோ பேதுருப்பிள்ளை இன்னாசிமுத்து நினைவு மலர்

56. சாமுவேல் பெனடிக்ற் அவர்களின் குறிப்புகளிலிருந்து

57. Anton Mathias. Catholic Church in Jaffna pp. 34, 35

58. சத்திய வேத பாது காவலன், 1950 யூன்

59. சத்திய வேத பாதுகாவலன், 1956 மார்ச்

60. A. J. B. Antoninus. Chronicle p. 308

61. சத்தியவேத வேத பாதுகாவலன் 1947 Fatima

62. சத்திய வேத பாதுகாவலன் பெப்ரவரி 1947

63. Gnanapragasar's Jubilee Invitation Card, Valan Ashram Library

64. சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழா மலர்

65. சுவாமி ஞானப்பிரகாசர், கெராஸ் அடிகள்
சத்திய வேத பாதுகாவலன் 3. 2. 1947, 14. 2, 1947

66. சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டு விழா மலர் கட்டுரை

அன்னை அச்சகம், குருநகர், யாழ்ப்பாணம்.

விலை : ரூபா 50/-